மொழியியல்

தொகுதி 9 ஜனவரி - ஜூன் எண் 3 & 4

பதிப்பாசிரியர்கள்
ச. அகத்தியலிங்கம்
வி. பெருமாள்
சு. பாலு

சிறப்புப் பதிப்பாசிரியர்
க. முருகையன்

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின்
காலாண்டு இதழ்
1986

T13397
R005A07

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம்

பதிவு எண் 2 (1977)

அண்ணாமலைநகர்

செயற்குழு

தலைவர்	:	டாக்டர் செ.வை. சண்முகம் (அண்ணாமலைநகர்)
துணைத் தலைவர்	:	டாக்டர் கி. ரங்கன் (தஞ்சாவூர்)
செயலாளர்	:	டாக்டர் ச. அகத்தியலிங்கம் (அண்ணாமலை நகர்)
பொருளாளர்	:	டாக்டர் ந. குமாரசாமி ராஜா (அண்ணாமலைநகர்)
உறுப்பினர்கள்	:	டாக்டர் கே. திலகவதி (மலேசியா)
		டாக்டர் .என் இராமசாமி (மைசூர்)
		டாக்டர் டேனியல் தேவசங்கீதம் (திருப்பதி)
		டாக்டர் எம்.ஆர் பூபதி (பாண்டிச்சேரி)
		டாக்டர் ச. இராதாகிருட்டினன் (அண்ணாமலை நகர்)

மொழியியல்

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின்

காலாண்டு இதழ்

கட்டணம்

	உள்நாடு	வெளிநாடு
ஆயுள் கட்டணம்	ரூ 300-00	US $ 75-00
ஆயுள் கட்டணம் (நிறுவனங்களுக்கு)	ரூ 450-00	US $ 112-00
ஆண்டுக் கட்டணம்	ரூ 30-00	US $ 7-50
ஆண்டுக் கட்டணம் (நிறுவனங்களுக்கு)	ரூ 45-00	US $ 10-50
ஆண்டுக் கட்டணம் (மாணவர்களுக்கு)	ரூ 15-00	

இக்காலத் தமிழில் கூட்டுவினைகள்

முத்துச்சண்முகன்
மதுரை

தமிழில் புறவடிவில், கூட்டுவினைகள் பல செயல்படுகின்றன. இவைகளில் இரண்டிலிருந்து அய்ந்து உருபுகள் வரையிலும் இணைந்து வரலாம். முதலில் நிற்பது முதல்வினை எனப்படும். அது ஒரு செயலையோ, நிகழ்ச்சியையோ, நிலையையோ குறித்து வரும். அது செய்தென் எச்சமாகவோ, செயவென் எச்சமாகவோ இருக்கும். அடுத்து வருகின்ற உருபுகள் - துணைவினைகள் (auxiliaries) முதல் வினையிலிருந்து வேறுபட்ட செயலையோ, நிகழ்ச்சியையோ, நிலையையோ குறிப்பிடுவதில்லை. ஆனால் முதல் வினையின் பொருளில் சில வேறுபாடுகளைத் தரும். முதல்வினையை அடுத்து வருகின்ற இவைகளையே துணைவினைகள் என்கிறோம்.

முதல்வினையும், துணைவினையும் ஒரே நோடில்(node) அடங்கும்,



இதில் n என்பது, துணைவினைகள் ஒன்றிற்கு மேற்பட்டு வரலாம் என்பதைக் குறிக்கும். இவற்றில் சில கட்டிலா உருபுகளாகவும் வரும். கடைசி துணைவினை, அது வினைப் பொருண்மையாக (mood) இல்லாத பொழுது, திணை, பால், எண் உருபேற்றும் வரும். இடையில் செய்தென் எச்சங்கள் வரும. இறுதி உருபுக்கு முன்னையது, அவ்வினைக்குப் பொருந்திய செயவென் எச்சமாகவும் வரலாம். எனவே கூட்டுவினையில் செய்தென் எச்சம் அல்லது செயவென் எச்சம் முதல் வினையாகவும், அதனைத் தொடர்ந்து ஒன்று முதல் நான்குவரை துணைவினைகளும் இருக்கும். துணை வினைகள், முதல் வினையின் பொருளில் சில வேறுபாடுகளைத் தரும். துணைவினைகள் செய்தென் எச்சமாகவும், இறுதி வினை வினைப்பொருண்மையாக உள்ளவிடத்து (கூடாது) அதற்கு முன்னையது இறுதி வினைக்கேற்ற செயவென எச்சமா கவும் வரலாம். இறுதிவினை வினைப் பொருண்மையாக இல்லாதவிடத்து, அவ்வினை திணை, பால், எண் உருபுகள் ஏற்று வரலாம்.

பெரும்பாலும் முதல்வினையோடு ஒன்று அல்லது இரண்டு துணைவினைகளே வருகின்றன. ஆனால் நான்கு துணை வினைகள் வரையிலும் வரமுடியும்.

1. அவன் கத்திக்கொண்டிருக்கக்கூடாது
கத்தி-கொண்டு–இருக்க-கூடாது

2. அவன் கத்திக்கொண்டிருந்துவிடக்கூடாது
கத்தி-கொண்டு-இருந்து-விட-கூடாது

துணைவினைகள், முதல்வினையின் பொருளில் சில மாற்றங் களைத் தரும் என்று கூறினோம். இத்தகைய மாற்றங்களை மூன்றாகப் பிரிக்கலாம்.

1. நோக்குத் துணைவினைகள் (aspectual auxiliaries)

2. நோக்கிலாத் துணைவினைகள். இவை பல்வேறு பொருண்மைகளில் வரும். விருப்பத் துணிவாற்றல் (volition); சினமூட்டல் (irritation); நம்பிக்கை இன்மை (disbelief); பிறர்நலம் (alterbenefaction); முயற்சி (attempt); பழிகூறல் (accusation); செயப்பாட்டுத் தன்மை (passive) முதலிய பொருளில் வரும்.

3. வினைப்பொருண்மைத் துணைவினைகள் (modal auxiliaries)

துணைவினைகளாக வருவன தனிவினைகளாகவும் வரும். ஆனால் தனிவினைகளாக வரும்பொழுது அவை தரும் பொருள் வேறு; துணைவினைகளாக வரும்பொழுது அவை தரும் பொருள் வேறு. தனிவினைகளாக இயக்கம், நிலை, செயல் முதலிய பல பொருள்களில் வரும். இப்பொருள் அவை துணைவினைகளாகச் செயற்படும்பொழுது வருவதில்லை. அப்பொழுது முதல்வினையின் பொருளில் சில மாற்றங்களைத் தருகின்றன. இதனால் கூட்டுவினையில், துணை வினையின் முன்பு, அல்லது துணைவினைகளின் இடையே வாக்கியக்கூறுகள் எதுவும் புக முடியாது. சில கிளிட்டிக்சுகள் (clitics) மட்டுமே இடையில் வரமுடியும். அதாவது துணைவினைகள் அடைகள் பெற்று வரமுடியாது. ஆனால் வினையெச்சத்தை அடுத்துவரும் வினை எச்சங்கள், துணைவினைகளாக இல்லாமல் தனிவினைகளாக வரும்பொழுது, இடையில் அடைகள் பெற்று வர முடியும். அப்பொழுது அவைகள் துணைவினை ஆகா; தனிவினைகளே. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் எடுத்துக்காட்டுகளைக் காண்க.

3. நான் நகையை எடுத்துப்பார்த்தேன்

இவ்வாக்கியம் நகையைக் கையில் எடுத்து அதன் அழகைப் பார்த்ததையோ, கனத்தைப் பார்த்ததையோ குறிக்கும். இங்குப் பார் என்பது try, check போன்ற பொருளைத் தருகிறது. அதற்கு முன்பு எத்தகைய அடையும் வருதல் இயலாது. ஆனால் 4-வது வாக்கியத்தில் பார் என்பது துணைவினையன்று; அது

தனிவினை. அங்கு அது அடை பெற்று வருவதைக் காண்க. அதில் பார் என்பது அதன் உரிமைப் பொருளாகிய see என்பதைத் தருகிறது.

4. நான் நகையை எடுத்து ஆசையாகப் பார்த்தேன்

விடு என்பது துணைவினையாகவும் தனிவினையாகவும் வருவதைக் காண்க.

5.1 துணைவினை; 5.2 தனிவினை; 5.3 தனிவினை, அடை பெற்று வந்தது.

5.1 அவன் தோசையைச் சாப்பிட்டு விடவில்லை
5.2 அவன் என்னை வெளியே போக விடவில்லை
5.3 அவன் என்னை வெளியே போகக் கட்டாயம் விடவில்லை

மற்ற துணைவினைகளும் இவ்வாறு வருகிறதா என்பதைப் பொருத்திக் காண்க. மேலே கூறியவற்றைத் துணைவினையின் விளக்கமாகக் கொள்ளலாம்.

தமிழில் துணைவினைகளாக வருவனவற்றைக் கீழே கொடுத்திருக்கிறோம்.

1. நோக்குத் துணைவினைகள் (aspectual auxiliaries)

1.1 செய்தென் எச்சத்தோடு வருவன

துணைவினைகளாக வரும்பொழுது அவை தரும் பொருளை அடுத்துக் கொடுத்திருக்கிறோம். ஏகதேசம் தொடர்புடைய பொருள்களைத் தரும் துணைவினைகளை அடுத்தடுத்துக் கொடுத்திருக்கிறோம்.

1. இரு — நிலைபேறு - **Stativity; Supposition**
உளதாதல் - **Existence**
மறைமுக அறிவு - **Indirect knowledge**

2. கொண்டிரு — தொடர்ந்து நிகழ்தல் - **Progression**

3. கொண்டுவா — காலநீட்சி - Duration
இடையிட்டு நிகழுதல் - Iteration
இயல்பு - Habituality

4. விடு — முடிதல் - Completion
நிச்சயம் - Definiteness

5. ஆயிற்று — எதிர்பார்த்தது முடிதல் - Completion of expected event

6. போயிற்று — நிலைமாற்றம் முடிதல் - Completion of change of state

7. தீர் — முடிதல் - Completion

8. கட்டு — முடிதல் -Completion

2. நோக்கிலாத் துணைவினைகள்

2.1 செய்தென் எச்சத்தோடு வருவன

1. கொள் — விரும்பிச் செய்தல்; அறிந்து செய்தல் - Volition

2. அழு — இயல்பாக நிகழுதல்; விருப்பமின்மை- Non-Volition

3. தொலை — கோபக்குறிப்பு - Irritation

4. வை — எதிர்கால விளைவு - Future consequence

5. போடு — முற்றுப்பெறுதல்; பொறுப்பற்ற நிலை - Carelessness

6. கிட — ஏற்றுக்கொள்ளா நிலை; ஒத்துக் கொள்ளா நிலை-Disapproval of state

7. கொடு/விடு — பிறர் நலனுக்கு - Alterbenefaction

8. தள்ளு — பெருக்கம் - Augmentation; உற்பத்தி- generate

9. கழி — நம்பிக்கை இன்மை - Disbelief

10. பார் — நிகழ்ந்த முயற்சி - Realized attempt

2.2 செயவென் எச்சத்தோடு வருவன

11. பார் — விரும்பிய முயற்சி - Intentional attempt

12. போ — நோக்கம் - Intention
முன்னறிவிப்பு - Prediction

13. வா — நோக்கம் - Intention

14. இரு — திட்டம் - Plan; நோக்கம்-Intention

15. வை — காரணம் - Causation

16. அடி — காரணம் - Causation

17. படு — செயப்பாடு - Passive

3. வினைப் பொருண்மைத் துணை வினைகள் (modal auxiliaries)

3.1 செயவென் எச்சத்தோடு வருவன

1. வேண்டும்
வேண்டி இருக்கிறது } — கடப்பாடு - Obligation
— விருப்பம் - Desideration
— ஊகக் கடப்பாடு - Inference

2. ஆம் - நிகழக்கூடும் — Possibility
அனுமதி — Permission

3. கூடு - நிகழ வாய்ப்புண்மை- Possibility
எதிர்மறை - Prohibitive

4. அட்டும் - வியங்கோள்-Speaker's hortative wish
ஆலோசனை நாடுதல்- Request for advice

5. முடி - ஆற்றல் - Ability; Possibility

1. நோக்குத் துணைவினைகள் (aspectual auxiliaries)

ஒரு வினையின் காலத்தைக் கூறும்பொழுது, ஒன்றைப் பற்றிப் பேசப்படும் நேரத்தை மையமாகக் கொண்டு, வினையின் முன் பின் நிகழ்ந்த காலத்தை வரையறுத்துக் கூறுகிறோம். ஆனால், நோக்கு, பேசுபவனை மையமாகக் கொண்டு நிகழ்ச்சியின் கால எல்லையை வரையறுக்கும். பேசுபவன் எவ்வாறு கருதுகிறான் என்பதுவே அது. அதாவது, நோக்கு, முதல் வினையின் நிலைபேறு (stativity), தொடர்ச்சி (progressive), உடன்நிகழ்வு (durative), திடீர் நிகழ்ச்சி (momentary), முடிவு (completive) போன்றவற்றை விளக்கிக் கூறும்.

1.1 செய்தென் எச்சம் + இரு

துணைவினை இரு (1) நிலைபேறு (stativity) (2) உளதாகல் (existence) (3) ஊகம் (supposition) (4) மறைமுக அறிவு (indirect knowledge) ஆகிய பொருள்களில் வரும்.

1.1.1 நிலைபேறு (stativity)

செய்தென் எச்சத்தோடு இணைந்த இரு, நிலைபேறு பொருளைச் சுட்டி வரலாம். நிலைபேறாவது, செய்து முடித்த செயலின் பயன் பேசுவது வரையிலும் அல்லது மற்றொரு நிகழ்ச்சி அல்லது செயல் வரையிலும் நிலையாக நீடித்திருப்பது.

இரு என்பது நிகழ்கால வடிவில் வரும்பொழுது, முடிந்த செயலின் பயன் பேசுவது வரையிலும் நீடித்திருப்பதைக் குறிக்கும்.

6. அவன் சென்னைக்குப் போயிருக்கிறான்

அவன் சென்னைக்குச் சென்றிருக்கும் நிகழ்ச்சி, இன்றும், இப்பொழுதும்-பேசுவது வரையிலும் நீடித்திருக்கிறது. அவர் இப்பொழுதும், அவன் பேசும்பொழுதும் சென்னையில்தான் இருக்கிறான்.

7. பெண் படித்திருக்கிறாள்

இங்குப் பெண் படித்து முடித்துவிட்டாள். அப் படிப்பின் பயன் இதுவரையிலும் தொடர்ந்து நீடித்திருக்கிறது. அதனையே இரு காட்டுகிறது.

8. நான் ஒரு புதுசட்டை வாங்கி இருக்கிறேன்

இதில் சட்டை வாங்கியதன் பயன் அதனை உடைமையாகக் கொள்ளல். அப்பயன் இதுவரையிலும் தொடர்ந்து நீடித்திருக்கிறது.

கீழே உள்ள 9-வது வாக்கியம் இலக்கணப் பொருத்த மற்றது. அதில் இரண்டாவது வாக்கியம், முதல் வாக்கியப் பொருளை மறுக்கிறது. முதல் வாக்கியத்தில் இரு என்பது, நிகழ்காலத்தில் இத்தகைய நிலைமை, அல்லது வினை, அல்லது வினையின் பயன் இதுவரை நீடித்திருக்கும் பொருளைத் தந்து நிற்றல் விளங்கும். அவ்வாறு நீடித்திருப்பதை இரண்டாவது வாக்கியம் மறுப்பதால், அது இலக்கணப்பொருத்தமற்றதாகி விடுகிறது.

9. *என் வீட்டுக்காரர் ஊருக்குப் போயிருக்கிறார். இப்பொழுதுதான் திரும்பி வந்தார்.

இவ்வாறு நிலைபேறு அல்லது பயன் நீடித்திருப்பது எழுவாயினுடையதாகவே இருக்க வேண்டுமென்பதில்லை. அது செயப்படுபொருளினுடையதாகவும் இருக்கலாம்.

10. டாக்டர் மூன்றுவேளை மாத்திரை சாப்பிட வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்.

இங்குச் சொல்லி இருக்கிறார் என்பதன் செயப்படுபொருள் மூன்று வேளை மருந்து சாப்பிடவேண்டும் என்பது. அது இப்பொழுதும் தொடர்ந்து நடைபெறுகிறது.

இரு என்பது இறந்த காலத்தில் வரும்பொழுது இறந்த காலத்தில் நிகழ்ந்த வினையின் பயன் அல்லது வினை, இறந்த காலத்தில் நிகழ்ந்த வேறொரு வினையின் நிகழ்ச்சிவரை நீடித்திருப்பதைக் குறித்து வரும்.

11. நான் வந்தபொழுது அவன் வெளியே போயிருந்தான்

இரு, எதிர்காலத்தில் வரும்பொழுது இறந்த காலத்தில் சந்தேகமான நிகழ்ச்சியை, உத்தேசமான ஒன்றைக் குறித்துவரும்.

12. நான் தீபாவளியின்போது ஆயிரம் ரூபாய் சம்பாதித்திருப்பேன்

இரு, அஃறிணையில் மாற்றத்தைக் குறிக்கும் வினையுடன் வரும்பொழுது, மாறிய புதிய நிலையைக் குறித்து வரும்.

13. கடை மூடி இருக்கிறது

14. சந்தை திறந்து இருக்கிறது

15. பானை உடைந்து இருக்கிறது

இரு, மற்றொரு நிலைபேறு வினையுடன் வரும் பொழுது, அந்நிலை தொடர்ந்து நிலைபெறுவதைக் குறிககும்.

16. அவன் நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறான்

17. அவன் எங்கள் வீட்டில் தங்கி இருக்கிறான்

தெரி, புரி, பிடி என்பன போன்ற குறைவினைகள், இரு என்பதனோடு வரும் பொழுது, அந்நிலை இச்செயல் தொடர்ந்து நிகழ்வதைக் குறிக்கும்.

18. இந்தப் புடவை எனக்குப் பிடித்திருக்கிறது

19. எல்லோருக்கும் இது தெரிந்திருக்கிறது

இரு, எப்பொழுதும் வினை முடிந்த நிலையையே குறித்து வரும். இதனாலேயே கீழே உள்ள வாக்கியம் இலக்கணப் பொருத்தமுடையதாக இல்லை.

20. *அவர் டாக்டருக்குப் படித்திருக்கிறார் (படித்திருந்தார்). ஆனால் படிப்பை முடிக்கவில்லை.

1.1.2 உளதாந்தன்மை (existence)

இரு துணைவினையாக இணையும்பொழுது உளதாந்தன்மைப் பொருளைத் தருகிறது. உளதாந்தன்மையாவது, ஒரு

நிகழ்ச்சி அல்லது செயல் முன்பு ஒருதடவை நிகழ்ந்தது அல்லது செய்து முடிக்கப்பட்டது ஆகும். அது இப்பொழுதும் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதில்லை. இரு, முன்பு ஒன்று இருந்தமை, அல்லது ஒரு நிகழ்ச்சியின் உண்மை ஆகிய பொருளைத் தரும்.

21. நான் திருக்குறள் படித்திருக்கிறேன்
22. நான் மகாத்மாவைப் பார்த்திருக்கிறேன்
23. நாங்கள் சங்க இலக்கியங்களைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறோம்

1.1.3 ஊகம் (supposition)

இரு துணைவினையாக எதிர்காலத்தில் வரும்பொழுது ஊகப் பொருளைத் தருகிறது. இறந்த காலத்தில் ஒரு வினை நிகழ்ச்சி நடந்திருக்கலாம் என்று ஊகித்துக் கூறும் பொருளைத் தருகிறது.

24. நேற்று அவன் சினிமாவிற்குப் போயிருப்பான்
25. அங்கு ஒரு விபத்து நடந்திருக்கும்
26. நீங்கள் முன்னாடியே வந்திருக்க முடியும்
27. அவள் அந்தப் புடவையை எடுத்திருக்கலாம்
28. கணவன் அவளை அடித்திருக்கலாம்

ஊகப் பொருள் தரும் இரு, நிபந்தனை நிகழ்ச்சியுடனும் வருகிறது. அந்த நிபந்தனையின் கீழ் அது நடந்திருக்கலாம் என்று ஊகித்தலை அது குறிப்பிடும்.

29. நீங்கள் என்னைக் கேட்டிருந்தால், நான் உங்களிடம் அதைச் சொல்லி இருப்பேன்.

1.1.4 மறைமுக அறிவு (indirect knowledge)

இறந்தகால நிகழ்ச்சி, நேரடியாக இல்லாமல் மறைமுக மாகப் பேசுபவனுக்குத் தெரிந்திருப்பதை நிகழ்கால வடிவில் இது குறித்து வரும். இதனால் இது தன்மையில் வராது-ஒரு அணிவகையால் தன்மையிற் கூறப்பட்டால் ஒழிய.

30. அவன் அப்பொழுது வீட்டிற்கு உள்ளேதான் இருந்திருக்கிறான். எனக்குத் தெரியாமல் போயிற்று.

1.2 செய்தென் எச்சம் + கொண்டு + இரு

செய்தென் எச்சம், கொண்டு, இரு இவைகளை முறையே ஏற்று, அத்தொடர் ஒரு செயல் தொடர்ந்து நிகழுகின்றதனைக் (progressive) குறித்து வரும். இதனைத் தொடர்கால நோக்கு என்போம். இது, ஒரு செயல் அல்லது நிகழ்ச்சி குறிப்பிட்ட கால எல்லைக்குள், இறந்த காலத்திலோ, நிகழ்காலத்திலோ, எதிர் காலத்திலோ நிகழ்வதனைக் குறித்து வரும்.

31. அவன் தூங்கிக்கொண்டிருக்கிறான் (-இருப்பான்) (-இருந்தான்)

இக்கூட்டு வினையில் *முதல்வினை + துணைவினை + துணைவினை என்ற மூன்றும் ஒன்றுபோல் ஒரே நிலையில் இணைந்தன என்று கருதமுடியாது. அதாவது இங்கு, மு.வி, து.வி, து. வி., என்ற முறையில் இணைந்து செயற்படுகின்றன என்றே கூறவேண்டும். முதல்வினையும் **கொண்டு** என்பதும் முதலில் ஒன்றாக இணைந்து, அவை ஒரு கூறாக நின்று இரு என்பதனோடு அடுத்து இணைந்திருக்கிறது. இதற்கு 32-வது வாக்கியம் சான்றாகிறது.

32. அவன் பேசிக்கொண்டும் சிரித்துக் கொண்டும் இருக்கிறான்

இங்கு முதலில் பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் என்று இணைந்து, பின்னர் பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் இருக்கிறான் என்றாயிற்று. **கொண்டு** என்பது உம் பெற்று, அதுவும் முதல்வினையும் ஒரு தொடராகச் செயற்படுகின்றன.

தொடர் காலம் மூன்று காலத்திலும் வரும்.

33. நான் ஒரு கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறேன்

34. அவன் தன் பையனைத் திட்டிக்கொண்டிருந்தான்

35. அவர்கள் வேலை செய்துகொண்டிருப்பார்கள்

இரு நிகழ்காலத்தில் வரும்பொழுது, பேச்சு நிகழும் சமயத்தில் அவ்வினை நிகழ்வதனைச் சுட்டி வரும். இரு இறந்த காலத்தில் வரும்போது இறந்த காலத்தில் ஒரு குறிப்பிட்ட கால எல்லையிலோ அல்லது வேறொரு நிகழ்ச்சியின்போதோ தொடர்ந்து நிகழ்ந்த நிகழ்ச்சியையே கூறும். அந்நிகழ்ச்சி மேலும் தொடர்ந்து நிகழலாம்.

36. எட்டு மணிக்கு அவன் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்

37. நான் வரும்பொழுது அவன் படித்துக் கொண்டிருந்தான்

36-ல், எட்டு மணிக்கு முன்பே தொடங்கிய சாப்பிடும் செயல், எட்டு மணியின் பொழுதும், அதற்குப் பின்பும் நிகழ்ந்து கொண்டிருப்பது சுட்டப்படும். 37-ல் வருவதற்கு முன்பு தொடங்கியசெயல் படித்தல்; அது வந்தபொழுதும் நிகழ்ந்து கொண்டிருந்ததை உணர்த்தும். அதற்குப் பின்பும் அது தொடரலாம்.

இரு எதிர்காலத்தில் வரும்பொழுது, எதிர்காலத்தில் தொடர்ந்து நிகழும் வினையை ஊகித்துக் கூறுவதையோ, அல்லது இயற்கையாக-இயல்பாக நிகழும் ஒன்றையோ குறித்து வரும்.

38. சாயங்காலம் அவர் கூட்டத்தில் பேசிக்கொண்டிருப்பார்

கொண்டு என்ற வினையெச்சம், ஏகார உருபேற்றும் வரும். அவ்வாறு வரும் பொழுது தொடர்கால வினையைப்பற்றிப் பேசுபவருடைய வெறுப்பையோ, கோபக் குறிப்பையோ அது காட்டும்.

39. அவர் ஏன் பேசிக்கொண்டே இருக்கிறார்

40. அவன் என்னை முறைத்துப் பார்த்துக் கொண்டே இருக்கிறான்

இறுதியாக **கொண்டு** + இரு, நிலைவினைக் கூறும் வினைகளோடு வரும்பொழுது அந்நிலை தொடர்ந்திருப்பதையே அது உணர்த்தும். அதுவே அதன் தொடர்காலம்.

41. அவன் விடுதியில் தங்கிகொண்டிருக்கிறான்

1.3 செய்தென் எச்சம் + கொண்டு + வா இவற்றை முறையே பெற்று வரும் பொழுது (1) கால நீட்சி (duration) (2) இடையிட்டுச் செய்ததைச் செய்தல் (iteration) ஆகியபொருள்களில் வரும்.

1.3.1 காலநீட்சி (duration)

கொண்டிரு என்பதைப் போல் **கொண்டுவா** என்பதும் ஒரு வினை அல்லது நிகழ்ச்சி தொடர்ந்து நிகழ்வதைக் குறிக்கும் கொண்டிரு குறிப்பிட்ட கால எல்லைவரை/ எல்லையில், அல்லது மற்றொரு நிகழ்ச்சிவரை அல்லது நிகழ்ச்சியின்பொழுது, ஒரு செயல் அல்லது நிகழ்ச்சி தொடர்ந்து நிகழ்வதைக் குறிக்கும். அதாவது தொடர்ந்த நிகழ்ச்சி ஒரு எல்லையோடு தொடர்புடையது என்ற குறிப்பு இருக்கும். அது நிகழ்ந்தது மிகக் குறுகிய காலமாகவே இருக்கும். **கொண்டுவா** என்பது நீண்டகால எல்லைக்குள் தொடர்ந்து நிகழ்வதைக் குறிக்கும். பரமசிவம் **கொண்டுவா** ஒரு காலப்பகுதியில் (a period of time) தொடர்ந்து நிகழும் தொழிலை வெளிப்படுத்தும் என்பார் (பரமசிவம். 1983: 225). குறுகிய காலம், நீண்ட காலம் என்று வேறுபடுத்துவது பொருந்தும் போலும். கீழே உள்ள எடுத்துக் காட்டுகளைக் காண்க.

42. 14, 15-வது நூற்றாண்டுகளில் மதுரையை நாயக்கர்கள் ஆண்டு வந்தார்கள்

43. பகல் பத்து மணிக்கு அவன் தூங்கிக் கொண்டிருந்தான். இதில் 42இல் கொண்டிரு வருதல் இல்லை. 43-இல் **கொண்டுவா** வர முடியாது.

44. அவன் என்னை ஏமாற்றிக் கொண்டு வருகிறான்

45. அவன் என்னை ஏமாற்றிக்கொண்டிருக்கிறான்

44-இல் கூறப்படுவது நெடுநாள் நிகழ்ந்து வருவது. 45-இல் கூறப்படுவது சில நாட்களே நிகழ்ந்து வருவது.

1.3.2 இடையிட்டுச் செய்ததைச் செய்தல் (iteration)

வா என்பது இடையிட்டு அடிக்கடித் தொடர்ந்து நிகழும் வினை அல்லது நிகழ்ச்சியைக் குறித்து வரும். அது இயல்பாக, இயற்கையாக நிகழும் நிகழ்ச்சியையும் உணர்த்தலாம்.

46. அந்தக் காலத்தில் மக்கள் விறகால் எரிமூட்டிச் சமையல் செய்துகொண்டு வந்தார்கள்

47. வெகுநாட்களுக்கு முன்பு இந்த ஊரில் ஒரு அரசன் ஆண்டுகொண்டுவந்தான்

மேலே 46, 47 வாக்கியங்கள் பெரும்பாலும் கொண்டு இல்லாமலே செய்து வந்தார்கள், ஆண்டு வந்தான் என்றே வரும். பேச்சுத்தமிழில் கொண்டு பெறறு வருவதே பெரும்பான்மை வழக்கு. சமையல் செஞ்சிட்டு வந்தாங்க, அரசன் ஆண்டுட்டு வந்தான் என வருதல் காண்க.

1.4 செய்தென் எச்சம் + விடு

விடு துணைவினையாக வரும் பொழுது இறந்த காலத்தில் வினைமுடிந்த நிகழ்ச்சியை உணர்த்தும். நிகழ்காலத்திலும் எதிர்காலததிலும், நிச்சயமாக நிகழும் அல்லது நிகழப்போகும வினையையோ அல்லது நிகழ்ச்சியையோ குறித்து வரும்.

1.4.1 முடிந்தது (completive)

இறந்த காலத்தில் வரும்பொழுது நிகழ்ந்து முடிந்த செயல் அல்லது நிகழ்ச்சியைக் குறிக்கும்.

48. அவன் சாப்பிட்டுவிட்டான்

விடு என்பதன் சொற்பொருளிலிருந்துதான் முடித்தல் பொருள் வந்திருக்கிறது. சாப்பிடுதலைச் செய்த பின்பு அதனை விட்டுவிட்டான். இரு என்ற துணை வினையைப் போல இதுவும் குறையாது முற்றுப்பெற்ற வினையையே சுட்டும். இதனால் 49-வது வாக்கியம் பொருத்தமற்றதாகப் போய்விடுகிறது.

49. நான் ஒரு நாவலைப் படித்துவிட்டேன். இன்னும் 50 பக்கங்கள் படிக்கவேண்டும்.

ஆனால் இரு என்பதைப் போல, விடு நிலைபேறு தன்மையைச் சுட்டாது (stativity). அன்றியும் விடு பெரும்பாலும் எதிர்பாராத, விரும்பாத இயல்பினைக் குறித்து வரும். கீழே உள்ள வாக்கியங்களைக் காண்க.

50. அவன் இங்கே உட்கார்ந்துவிட்டான்

51. அவன் ஒரு வாரமாக இங்கே தங்கிவிட்டான்

மேலே உள்ள வாக்கியங்களில் உட்காருவதையோ, தங்குவதையோ, பேசுபவன் எதிர்பார்க்கவில்லை; விரும்பவில்லை.

மறக்க (மற) போன்ற வினைகள் பெரும்பாலும் விடு பெற்றே வரும.

மறந்தான் என்பதைவிட, மறந்துவிட்டான் என்பதுவே பெரும்பான்மை வழக்கு.

52. அவன் என்னை மறந்துவிட்டான்

1.4.2 நிச்சயம் (definiteness)

விடு நிகழ்காலம் அல்லது எதிர்காலம் அல்லது ஏவலில் வரும்பொழுது, ஒரு செயல் அல்லது நிகழ்ச்சி நிகழ்வதில் அல்லது நிகழாததில் நிச்சயப் பொருளைத் தரும். பெரும்பாலும் இது பேசுவோரால் எதிர்பார்த்த ஒன்றாகவே இருக்கும்.

53. நாளைக்கு வந்துவிடு

54. அவன் அதைச் சொல்லிவிட மாட்டான்

55. நான் உங்களைக் கூப்பிட்டுவிட்டேன்

1.5 செய்தென் எச்சம் + ஆயிற்று (ஆச்சுது)

ஆகு என்ற வினையின் இறந்தகால அஃறிணை வினைமுற்று ஆயிற்று (ஆச்சுது) என்பது. இது தனிவினையாக வரும்பொழுது ஒன்றன் முடிந்த - முற்றுப்பெற்ற நிலையை உணர்த்தும்.

56. நான் இங்கு வந்து அய்ந்து ஆண்டுகள் ஆயிற்று (ஆயின).

(இலக்கணப்படி ஆயின என்றே இருக்கவேண்டும். எனினும் ஆயிற்று என்றே பலரும் எழுதுகின்றனர்.)

அஃறிணை வினைவடிவே துணைவினையாக வரும். அது ஒன்றன் முற்றுப் பெற்ற நிலையை உணர்த்தும். வினைமுற்று அஃறிணையாக இருப்பதால், இது செய்தென் எச்ச (செய்தல்) வாசகப்பொருள் முழுவதையும், அதாவது செயல் என்பதைவிட நிகழ்ச்சி முடிந்த நிலையை உணர்த்தும் எனலாம்.

57. மாணவர்கள் வந்தாயிற்று (வந்தாச்சு), (வந்தது ஆயிற்று), (வருதல் ஆயிற்று).

இங்கு வினையின் முற்றுப்பெற்ற நிலை என்பதைவிட நிகழ்ச்சியின் முற்றுப் பெற்ற நிலையை (மாணவர்களின் வருகை) உணர்த்துகிறது எனலாம். விடு என்பது இவ்வினை, முற்றுப் பெறுவதையும், ஆயிற்று நிகழ்ச்சி முற்றுப் பெறுவதையும் உணர்த்துகின்றன எனலாம். கீழே உள்ள வாக்கியங்களைக் காண்க.

58. நீங்கள் சாப்பிட்டுவிட்டீர்களா?

59. நீங்கள் சாப்பிட்டாயிற்றா?

59-வது வாக்கியம் நிகழ்ச்சியைக் குறிக்கிறது என்பதை, 60-வது வாக்கியத்தோடு ஒப்பிட்டுக் காண்க. 59-வது வாக்கியத்தை, 60-வது வாக்கியமாக மாற்றியும் கூறலாம்.

60. நீங்கள் சாப்பிடுதல் ஆயிற்றா?

ஆனால் 58-வது வாக்கியத்தை இவ்வாறு மாற்றிக்கூற முடியாது. ஆயிற்று, பேசுபவர் எதிர்பார்த்த நிகழ்ச்சி முற்றுப் பெறுவதனையும் உணர்த்தும்.

61. கடிதம் வந்தாயிற்று

கடிதத்தின் வருகை எதிர்பார்த்திருந்ததொன்று.

1.6 செய்தென் எச்சம் + போயிற்று

போயிற்று என்பது துணைவினையாக வரும்பொழுது பெரும்பாலும் நிலைமாற்றத்தை உணர்த்தும். பெரும்பாலும் இது இறந்தகால அஃறிணை வினைமுற்றுவடிவில் வருகிறது. அப்பொழுது இது இயங்குவினை (affective verb) யுடனேயே வரும்.

இது ஒரு நிகழ்ச்சி முற்றுப்பெற்று அதனால் நிலைமாறிய ஒன்றை உணர்த்தும். இது **ஆயிற்று** என்பதைப் போல முற்றுப் பெற்ற நிகழ்ச்சியை உணர்த்தாது. அது உடன் வருகின்ற இயங்கு வினைகளுக்கு ஏற்றதாய் இருக்கும். **போயிற்று** என்பது எதிர்பாராத வேண்டாத நிலை மாற்றத்தை உணர்த்தி வரும்.

62. பானை உடைந்துபோயிற்று

63. சாப்பாடு ஆறிப்போயிற்று

64. கால்சட்டை கிழிந்துபோயிற்று

மற்ற வினைகளோடு, **போயிற்று** என்பது மாறுபாட்டினைத் தந்து செயல் முற்றுப் பெற்றதை உணர்த்தும்.

65. துணி காய்ந்துபோயிற்று

66. வேலை முடிந்துபோயிற்று

67. அவனுக்கு அந்தக் குழந்தை பிடித்துப்போயிற்று

62-67 வாக்கியங்களை 'பானை உடைதல் போயிற்று' என்பது போலக் கூற முடியாது.

1.7 செய்தென் எச்சம் + தீர்

இயக்கு வினையாகிய (effective verb) **தீர்** என்பது துணை வினையாக வரும்பொழுது, ஒரு வினை முடிந்ததனால் ஏற்பட்ட மனநிறைவை உணர்த்திவரும். **இரு, விடு** என்பனவும் வினை முடிவினை உணர்த்திவரும் என்பதை முன்பே கண்டோம்.

ஆனால் முடிந்ததனால் ஏற்பட்ட ஒரு மனநிறைவை அவை உணர்த்தா. செயல் முடிந்து அதனால் அவனுக்கு ஒரு ஈடுபாடு கிடைத்த மனநிலையைத் **தீர்** உணர்த்தி வரும். பெரும்பாலும் இது, **விடு** பெற்றே வரும்.

68. அவன் பேசித் தீர்த்துவிட்டான்

69. அவன மனதிற்குள் திட்டித் தீர்த்துவிட்டான்

70. அவன் அழுது தீர்த்துவிட்டான்

1-8 செய்தென் எச்சம் + கட்டு

கட்டு என்பது துணைவினையாகச் சில வினைகளுடனேயே வரும். **ஒழி, தீர்** என்பன போன்ற வினைகளுடன், இது கோபக் குறிப்போடு முடித்தலை அல்லது அழித்தலைக் குறிக்கும்.

71. அவனை ஒழித்துக்கட்டு

72. நாங்கள் அவனைத் தீர்த்துக்கட்டிவிட்டோம்

இறந்த காலத்தில் வரும் **இரு, விடு** என்பனவும், **ஆயிற்று போயிற்று, கட்டு** என்பனவும் ஒரு வினை அல்லது நிகழ்ச்சி முற்றுப் பெறுதலை உணர்த்தும். எனினும், ஒவ்வொன்றும் அதற்கு மேலும் சிலபொருள்களைத் தருகின்றது. **இரு** நிலை பேற்றுத் தன்மையையும், **விடு** வினையின் முற்றுப் பெற்ற தன்மையையும், **ஆயிற்று** நிகழ்ச்சி முற்றுப் பெற்ற தன்மை யையும், **போயிற்று** நிலைமாற்றத்தையும், **தீர்** ஈடுபாட்டையும் **கட்டு** கோபக்குறிப்பையும் தரும்.

2. நோக்கிலாத் துணைவினைகள் (non-aspectual auxiliaries)

தமிழில் அதிகமான துணைவினைகளை நோக்கு (aspect) வினைப்பொருண்மை (mood) இரண்டிலும் அடக்க முடிவ

தில்லை. இவைகளுக்குத் தனியாகப் பெயர் இன்மையால் எதிர் மறையாக நோக்கிலாத் துணைவினைகள் எனக்குறிப் பிடுகிறோம்.

2.1 செய்தென் எச்சம் + கொள்

கொள் துணைவினையாக வரும் இயல்பினை விளக்குமுன், அதன் தனி வினைப் பயன்பாட்டைச் சிறிது காண்போம். அப் பொழுதுதான் தனி வினையாகச் செயற்படும் பொருளுக்கும், துணைவினைப் பொருளுக்கும் உள்ள தொடர்பு தெளிவாக விளங்கும்.

கொண்டு என்ற செய்தென் எச்சம் **வா, போ** என்பனவற் றோடு இணைந்து **கொண்டுவா, கொண்டு போ** என வரும்.

73. அவன் இட்டிலி கொண்டுவருகிறான்

74. அவன் சாப்பாடு கொண்டுபோனான்

கொண்டுவா என்பதில் இரண்டு நிகழ்ச்சிகள் இருப்பதை மேலே உள்ள எடுத்துக் காட்டுகள் விளக்கும். ஆனால் ஆங்கிலத்தில் கொண்டுவா என்பது ஒரே நிகழ்ச்சி (bring). பெப்ரு சியஸ், பிரிட்காப்ட் இவர்கள் இதனை விளக்கியுள்ளார்கள். (பரமசிவம், 1979:32) தமிழில் ஒவ்வொரு கூறுபாடும் ஒவ்வொரு செயலாகக் கூறப்படுகிறது. கொள்ளுதல் ஒரு தொழில்; வருதல் மற்றொரு தொழில். மேலும் ஒரு தொடரில் **bring-brought** என்பதை

75. அவன் ஒரு குடையை எடுத்துக்கொண்டு வந்தான்

எடுத்து + கொண்டு + வா என்பதால் விளக்குகிறோம். எடுத்தல் + கொள்ளுதல் + வருதல் ஆகிய மூன்று தொழிற் கூறுகள் இதில் அடங்கி இருக்கின்றன. இதைப்போன்ற வேறு தொடர்களாவன - வாங்கிக்கொண்டு வா, தூக்கிக்கொண்டு வா/போ (carry) என்பன.

மற்றொரு வகையில், கொள் என்பது செய்தென் எச்சத் தோடு வரும்பொழுது அவ்வினையில் எழுவாய் அப்பொருளை உரிமையாகக் கொள்வதை உணர்த்தி வரும்.

கீழே உள்ள 76, 77 இரண்டு வாக்கியங்களையும் ஒப்பிட்டுக் காண்க.

76. அவன் ஒரு பேனாவை எடுத்தான்

77. அவன் ஒரு பேனாவை எடுத்துக்கொண்டான்

76-வது வாக்கியம் பேனாவைக் கையால் எடுத்ததை மட்டும் குறிக்கும். அதனை அவனுக்கே உரியதாக்கிக் கொண்டதைக் குறிக்காது. 77-வது வாக்கியம் அது அவனுக்கே உரியதாக்கிக் கொண்டதை உணர்த்தும். அவ்வாறு அவன் உரியதாக்கிக் கொண்டதை, 78-வது வாக்கியம் பொருந்தாமையாலும் உணரலாம்.

78. அவன் என்னைக் கூப்பிட்டுக் கொண்டான். நான் போகவில்லை.

கூப்பிட்டுக்கொண்டான் என்பது அழைத்தலை உணர்த்தும். அவ்வாறு அழைக்கப்பட்ட என்னை அவன் உடைமையாகக் கொள்கிறான். ஆனால் அடுத்த வாக்கியம் அதனை மறுக்கிறது. இதனால் இது பொருத்தமற்ற வாக்கியமாகிவிடுகிறது.

இதுவரையிலும் **கொள்** தனிவினையாகச் செயற்படுவதைக் கண்டோம். இனி அது துணைவினையாகச் செயற்படுவதைக் காண்போம்.

கொள் துணைவினையாக வரும்பொழுது ஒன்றனைச் செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் பொருளைத் தருகிறது. அப்பொறுப்பினை அவனாக விரும்பி ஏற்றுக் கொள்கிறான் (volition). எதிர்பாராமல் அது அவனை வந்து அடைவதன்று (பரமசிவம், 1979: 33, 1983:247-251).

79. அவன் தன் சட்டையைக் குப்பைத் தொட்டியில் போட்டுக்கொண்டான்

இங்கு, அவன் சட்டையை வேண்டுமென்றே குப்பைத் தொட்டியில் போட்டுக் கொள்கிறான். அது தெரியாமல் நிகழ்வதன்று. **கொள்** வரவில்லை என்றால் இப்பொருள் வராது. இதனால் **கொள்**, தப்பித்தவறி என்பதனோடு பொருந்தி வராது.

ஆனால் **கொள்** இல்லாமல் அவ்வாக்கியம் பொருந்திவரும். 79-வது வாக்கியம் **வேண்டுமென்று** என்பதனோடு பொருந்தி வரும்.

80. 1. *அவன் தப்பித்தவறி உடைந்து**போ**ன நாற்காலியில் உட்கார்ந்துகொண்டான்

80. 2. அவன் தப்பித்தவறி உடைந்துபோன நாற்காலியில் உட்கார்ந்தான

80. 3. அவன் வேண்டுமென்றே உடைந்துபோன நாற்காலியில் உட்கார்ந்துகொண்டான்

கீழே உள்ள வாக்கியங்களில் எழுவாய், பிறர் தூண்டுதலின்றித் தானே செய்வதைக் குறித்தலைக் காண்க.

81. நீ உன் சட்டையைக் கழற்றிக்கொள்

82. நானே நடந்துகொள்வேன் (சிறு குழந்தைகள் இவ்வாறு கூறும்).

83. குழந்தை விழித்துக்கொண்டது

84. பஸ் நிற்பதற்கு முன்பே இறங்கிக்கொண்டான்

85. ஜன்னல் திறந்துகொண்டது

கொள் அறிந்து செய்யும் இந்தப் பொருளில் எல்லா வினைகளுடனும் வருவதில்லை. தற்சுட்டுப்பொருள் எனக் கருதப்படும் பல இடங்களில் **கொள்** அப்பொருளில் வருவதில்லை. **கொள்,** தெரி, புரி என்ற குறை வினைகளுடன் வரும்பொழுது (இவ்வினைகளின் செய்வோன் கு வேற்றுமையில் வரும்) அதில் வருகின்ற பெயர் செயலின் அனுபவத்தை ஏற்கும். இவ்வினைகளுடன் **கொண்டு** வரும்பொழுது எழுவாய்ப்பெயர் எழுவாய் வேற்றுமை வடிவிலேயே வருகிறது. இதனால் எழுவாய் பயனிலை உடன்பாடும் பொருத்தமாகிறது.

86. எனக்கு அந்தச் செய்தி தெரிந்தது

87. நான் அந்தச் செய்தியைத் தெரிந்து கொண்டேன்

88. நான் அந்தச் செய்தியைப் புரிந்து கொண்டேன்

2.2 செய்தென் எச்சம் + அழு

அழு செய்தென் எச்சத்தோடு துணைவினையாக வரும் பொழுது, ஒரு நிகழ்ச்சியைப் பற்றிய விருப்பமின்மையை உணர்த்தும். கொண்டு விரும்பி நிகழ்வதைக் குறிக்கும் என்பதை முன்பு கண்டோம்.

89. அவளிடம் பணத்தைக் கொடுத்து அழுதேன்.

2.3 செய்தென் எச்சம் + தொலை

தொலை இயங்கு வினையாகவும் செயற்படும். இவ்வகை வினைகள் துணைவினைகளாகவும் செயற்படுகின்றன. துணை வினையாக வரும்பொழுது ஒருசெயலில் ஈடுபட்டிருப்பவனைப் பற்றிய, அல்லது ஒரு நிகழ்ச்சியைப் பற்றிய கோபக் குறிப்பை, வெறுப்பை உணர்த்தும். இது முக்காலத்திற்கும் பொருந்தும்.

90. எப்பொழுது பார்த்தாலும் அவன் லேட்டாகவே வந்து தொலைகிறான்/தொலைக்கிறான்
(தொலைந்தான், தொலைத்தான், தொலைவான் தொலைப்பான்)

91. அவன் ஏன் அதைச் சொல்லித் தொலைந்தான் (தொலைத்தான்)

92. மறுபடியும் மழை வந்து தொலைக்கும்

93. நாம் அவரிடம் பணம் கொடுத்துத் தொலைக்க வேண்டும்

94. போய்த்தொலை

2.4 செய்தென் எச்சம் + வை

செய்தென் எச்சத்தோடு துணைவினையாக வை வரும் பொழுது, எதிர்காலத்தில் எதிர்பார்க்கும் வினை அல்லது நிகழ்ச்சியை நோக்கிச் செயற்படுதலை உணர்த்தும் (அண்ணா மலை, 1982). இவை எதிர்கால ஏற்பாடு, நன்மை, முன்னெச் சரிக்கை முதிலியவற்றை குறித்து வரும். இதனால் இதன் எழுவாய், பெரும்பாலும் மக்கட் பெயராகவே இருக்கும்.

95. கதவைத் திறந்து வை.
96. அவன் நிறைய பணத்தை மறைத்து வைத்தான்.
97. நான் அவனிடம் இந்தப் புத்தகத்தைக் கொடுத்து வைக்கிறேன்.
98. நாயைக் கட்டி வை.

2.5 செய்தென் எச்சம் + போடு

போடு இரண்டு விதமாகத் துணைவினையாகச் செயற்படுகிறது, ஒன்று, வினை அல்லது நிகழ்ச்சி முற்றுப்பெறுதலைக் குறித்து வருதல். மற்றொன்று, அது பொறுப்பற்றுச் செய்த நிகழ்ச்சியை உணர்த்திவருதல் (அண்ணாமலை, 1982). இதனால் இது, வை என்ற துணைவினையோடு மாறுபட்டு வருகிறது. இது இயக்கு வினையுடன் இப்பொருளில் வரும்.

போடு என்ற வினை செய்தென் எச்சமாக நின்று, விடு என்ற துணை வினையை ஏற்றும் வரும். விடு உறுதிப்பாட்டைக் குறிக்கும்.

99. அவன் பஸ்ஸை நிறுத்திப்போட்டான் (நிறுத்திப் போட்டுவிட்டான்)
100. அவன் வண்டியை உடைத்துப் போட்டான் (உடைத்துப் போட்டுவிட்டான்)
101. பையன்கள் அவனை அடித்துப்போட்டார்கள் (அடித்துப் போட்டுவிட்டார்கள்)

2.6 செய்தென் எச்சம் + கிட

கிட, துணைவினையாக வரும்பொழுது, ஒத்துக்கொள்ளாத, உடன்படாத, ஏற்றுக்கொள்ளாத நிலையினை உணர்த்தும். இரு என்பதைப் போலக் கிட என்பதும் நிலைபேற்றினை உணர்த்தினாலும், அந்நிலையினை ஏற்றுக்கொள்ளாத, உடன்படாத குறிப்பினைக் கிட என்பது தரும். 102, 103 வாக்கியங்களை ஒப்பிட்டுக் காண்க.

102. எனக்கு நிறைய வேலை இருக்கிறது.

103. எனக்கு நிறைய வேலை கிடக்கிறது

103-ல் பேசுபவர் நிறைய வேலை கிடப்பதைக்கண்டு சலிப் பெய்திக் கூறும் குறிப்பு இருக்கிறது. இக்குறிப்பு 102-ல் இல்லை. மேலும் சில எடுத்துக்காட்டுகளைக் காண்க.

104. அந்த அறை பூட்டிக்கிடக்கிறது

105. அவனுக்கு ஏன் திருமணம் பண்ணவேண்டி கிடக்கிறது

106. நான் குழம்பிக் கிடக்கிறேன்

2.7 செய்தென் எச்சம் + கொடு/விடு

கொடு/விடு துணைவினையாக வரும்பொழுது பிறருக்கு உதவுதல், பிறர்நலம் நாடுதல் (alterbenefaction) போன்ற பொருளைத் தருகிறது. பிறர் நன்மைக்காக அவ்வினை செயல் படுகிறது. அப்பிறர் தொக்கி நிற்கும்பொழுது சூழ்நிலையையே அவரை உணர்த்தும். **விடு** வினை முற்றுப்பெற்ற பொருளில் வருதலை முன்பு கண்டோம். அப்பொழுது அது பேச்சுத் தமிழில் வந்துட்டு, வந்திடு என **ட்டு, டு** என வரும். ஆனால் இதுவோ பேச்சுத் தமிழிலும் **விடு** எனவே வரும்.

107. எனக்கு இந்த அறையைப் பெருக்கிக் கொடு/ விடு

108. வேலைக்காரன் பசுமாட்டைக் கறந்து கொடுத் தான/விட்டான்

109. இந்த நாயைக் கட்டிக்கொடு/ விடு

110. அவன் அவருக்குக் கதவைத் திறந்து கொடுத் தான்/ விட்டான்

இதன் பலன் மற்றவருடைய உடலைப் பொறுத்ததாயின், அப்பொழுது **கொடு.** வராது; **விடு** என்பதே வரும். அப் பொழுது பயன் பெறுபவர், கு வேற்றுமையில் வருதல் இல்லை. அப்பெயர் இன் (உடைமை) வேற்றுமையிலேயே வரும்.

111. அம்மா என் முடியைப் பின்னிவிட்டாள்

112. அவள், அம்மாவின் நகத்தை வெட்டிவிட்டாள்

2.8 செய்தென் எச்சம் + தள்ளு

தள்ளு துணைவினையாக வரும்பொழுது ஒரு செயலின் பெருக்கத்தை, மிகுதியை உணர்த்தும். இது இயக்கு வினையுடனேயே வரும். அதிலும் உற்பத்திப் பொருளைத் தரும் வினையுடன் மிகுதியும் வரும். விடு என்ற வினையோடு வரும் பொழுது நிறையப் பேசி அலுத்த நிலையில் வெறுப்போடு முடிக்கக் கூறும்.

113. அவன் நாவலாக எழுதித்தள்ளுகிறான்

114. அவன் சித்திரம் வரைந்துத்தள்ளுகிறான்

115. என் மருமகள் குழந்தைகளைப் பெற்றுத்தள்ளு கிறாள்

மற்ற வினைகளோடு வருதல்

116. அவன் கடன் வாங்கித்தள்ளுகிறான்

117. சனியனை விட்டுத்தள்ளு

2.9 செய்தென் எச்சம் + கிழி

கிழி துணைவினையாக வரும்பொழுது ஒரு செயல் அல்லது நிகழ்ச்சியைப் பற்றிப் பேசுபவனுடைய நம்பிக்கை இன்மை, அச்செயல் நிகழ முடியாத நிலை இவைகளை உணர்த்தும். கிழி பெரும்பாலும் இறந்த காலத்திலும் எதிர்காலத்திலுமே வருகிறது. அன்றியும் இது ஒரு கூற்றினைத் தொடர்ந்து அதைப்பற்றிய நம்பிக்கை இன்மையைக் கூறுவதாய் வரும்.

118. அவள் அந்த வேலையைச் செய்துகிழித்தாள்

119. நீ அமெரிக்காவுக்குப் போய்க்கிழிப்பாய்

ஒரு கூற்றினைத் தொடர்ந்து, அதில் நம்பிக்கை இன்மையைத் தெரிவிக்கும் முறையில் இத்துணைவினை தனியாகவும் வரும். அப்பொழுது மற்ற வாக்கியக்கூறுகள் தொக்கிநிற்கின்றன எனல் வேண்டும். சில சமயம் இது போ என்பதுடனும் வரும்.

120. குமாருக்கு வேலை கிடைத்தாயிற்று

121. கிழிந்தது (கிடைத்துக் கிழிந்தது)

122. கிழிந்தது போ

2.10 செய்தென் எச்சம் + பார்

செய்தென் எச்சத்தோடு **பார்** வரும்பொழுது வெற்றி பெறுமா, முடியுமா என்று காண செயல்படுகின்ற வினையின் முயற்சியை உணர்த்தும்.

123. நான் இந்தப் பெட்டியைத் தூக்கிப்பார்த்தேன்

124. நான் கடன் கேட்டுப்பார்த்தேன்

125. அவன் இந்த வண்டியை ஓட்டிப்பார்த்தான்

126. அவன் சமையல் செய்துபார்த்தான்

மேலே உள்ள வாக்கியங்களில் எல்லாம் வினை நிகழ்ந்திருக்கிறது. முடியுமா, கிடைக்குமா என்பதைக் காண இவ்வினைகள் சோதனையாகச் செய்யல்பட்டன. அவை வெற்றி பெற்றிருக்க வேண்டும், நிறைவு பெற்று முடிந்திருக்கவேண்டும் என்பதில்லை. பெட்டியைத் தூக்கினான். அதனைத் தூக்க முடியாமல்கூட போயிருக்கலாம். ஆனால் முயற்சி நிகழ்ந்திருக்கிறது.

2.11 செயவென் எச்சம் + பார்

செயவென் எச்சத்தோடு **பார்** வரும்பொழுது, ஒரு செயல் செய்யத் தோன்றிய எண்ணம், அதற்குப் பிறசெயல்களால் ஏற்பட்ட முயற்சி இவைகளை உணர்த்தும். இங்கு வினை நிகழவில்லை. அதற்குரிய எண்ணம் தோன்றியிருக்கிறது. முயற்சியில் விருப்பம் ஏற்பட்டிருக்கிறது. செய்தென் எச்சத்தோடு வரும்பொழுது வினை நிகழ்ந்திருக்கிறது. 127, 128 இரண்டு வாக்கியங்களையும் ஒப்பிட்டுக் காண்க.

127. அவன் திருக்குறள் படித்துப்பார்த்தான்

128. அவன் திருக்குறள் படிக்கப்பார்த்தான்

127-இல் படிக்கும் வினை நிகழ்ந்திருக்கிறது. 128-இல் படிக்கும் வினை நிகழவில்லை. படிக்க எண்ணத்தாலும், பிறசெயல்களாலும் முயன்றிருக்கிறான்; அவ்வளவே. மேலும் சில எடுத்துக் காட்டுகளைக் காண்க.

129. நான் நாளை வரப்பார்க்கிறேன்

130. அவன் என்னிடம் பேசப்பார்த்தான்

131. அவள் இந்த நகையை வாங்கப்பார்த்தாள்

2.12 செயவென் எச்சம் + போ

இது இரண்டு பொருள்களில் வருகிறது.

2.12.1 செயவென் எச்சத்தோடு **போ** துணைவினையாக வரும் பொழுது நோக்கப் பொருளைத் தரும். நோக்கப் பொருளானது எதிர்காலத்தில் செய்யத் திட்டமிடும் செயல். பெரும்பாலும் அச் செயல் நிறைவேறும். இது, எழுவாய் செய்யப்போகும் வினை.

132. நான் ஒரு வீடு கட்டப்போகிறேன்

133. நான் தமிழ் படிக்கப்போகிறேன்

134. அவள் உனக்கு ஒரு கதை சொல்லப்போகிறாள்

135. நான் ஊருக்குப் போகப்போகிறேன்

2.12.2 இது முன்னறிவிப்புப் பொருளிலும் வரும். இது மிக விரைவில் எதிர்காலத்தில் நடக்கப்போகும் செயலை உணர்த்தும்.

136. அமைச்சர் இங்கே உட்காரப்போகிறார்

137. இப்பொழுது மழை பெய்யப்போகிறது

138. இந்த நாற்காலி உடையப்போகிறது

2.13 செயவென் எச்சம் + வா

செயவென் எச்சத்தோடு **வா** துணைவினையாக வந்து, **போ** என்பதைப்போல நோக்கப்பொருளைத் தரும். ஆனால் இது குறிப்பிட்ட சில வினைகளுடனேயே வரும். *ஒரு வீடு கட்ட வருகிறான் (122) என்று துணைவினையாக வராது.

139. நீ என்ன சொல்லவருகிறாய்?

140. அவன் ஒரு கேள்வி கேட்கவருகிறான்

2.14 செயவென் எச்சம் + இரு

செயவென் எச்சத்தோடு இரு துணைவினையாக வந்து எதிர்காலத்திட்டம் அல்லது நோக்கத்தை உணர்த்தும். **போ**

அத்தகைய திட்டத்தை நிச்சயக்குறிப்புடன் உணர்த்தும். இரு வரும்போது அதில் அவ்வளவு நிச்சயம் இருக்காது. போகப் போகிறேன், வாங்கப்போகிறேன் என்னும்போது நிச்சயப் பொருள் கிடைப்பதைக் காண்க.

141. நான் அமெரிக்காவிற்குப்போக இருக்கிறேன்.

142. அவன் ஒரு தொலைக்காட்சி பெட்டி (டி.வி) வாங்க இருக்கிறான்.

2.15 செயவென் எச்சம் + வை

செயவென் எச்சத்தோடு வை துணைவினையாக வரும் பொழுது எழுவாய் அவ்வினைக்குக் காரணமாக இருப்பதை உணர்த்தும்.

143. நான் அவனை உண்மையைச் சொல்லவைத்தேன்

144. பணம் அவனைப் பெருமைப்பட வைத்தது

145. அவன் என்னை அழவைத்தான்

2.16 செயவென் எச்சம் + அடி

செயவென் எச்சத்தோடு **அடி** துணைவினையாக வரும் பொழுது, வினைக்கு எழுவாய் காரணமாக இருப்பதை உணர்த்தும். வை என்பதோடு ஒப்பிடும்பொழுது **அடி** அச் செயலில் பேசுபவனுக்கு விருப்பமின்மையையும், மகிழ்ச்சியையும் உணர்த்தும். எனவே பேசுபவனுக்கு அச்செயலில் உடன்பாடில் லாதபொழுது -- அதைப்பற்றிய தனது வெறுப்பைக் காட்டும் பொழுதும், வெற்றியடைந்த பூரிப்பைக் காட்டும்பொழுதும் இதனைப் பயன்படுத்துகிறான். **அடி** சில குறிப்பிட்ட வினை களுடனேயே வரும்.

146. அவர்கள் அவனை பட்டினிபோட்டு சாகஅடித் தார்கள்

147. உஷா அனைவரையும் தோற்கடித்தாள்

2.17 செயவென் எச்சம் + படு

செயவென் எச்சத்தோடு **படு** துணைவினையாக வரும் பொழுது, எழுவாய் அவ்வெச்ச வாசகத்தின் செயலின் பயனை அடைவதை உணர்த்தும். **படு** ஆங்கிலத்தில் கூறப்படுகின்ற **passive** என்பதற்கிணையான பொருளைத்தருகிறது. இத்தகைய வாக்கியங்கள் தமிழில் அருகியே காணப்படுகின்றன.

148. பையன் அப்பாவால் அடிக்கப்பட்டான்

செய்வினைத்தொடர் (**active construction**) செயப்பாட்டு வினைத் தொடராக (**passive construction**) மாற்றப்படும் பொழுது, செய் வினைத் தொடரில் வருகின்ற நேரடிச் செயப் படுபொருள், செயப்பாட்டு வினைத் தொடரில் எழுவாயாகச் செயற்படுகிறது. அதாவது அது தனது அய் வேற்றுமை உருபை இழந்துவிடுகிறது. செய்வினைத் தொடரின் எழுவாய் - செய் பவன், செயப்பாட்டு வினைத் தொடரில் ஆல் வேற்றுமை உரு பேற்று வரும். ஆங்கிலத்தைப் போல இடமாற்றம் இங்குத் தேவை இல்லை. செய்வினைத்தொடரின் வினைமுற்று, **படு** என்ற துணைவினை பெற்று செயவென் எச்சமாக மாறுகிறது. துணைவினை செயப்பாட்டு வினைத்தொடரில் வருகின்ற எழுவாய்க்கேற்ற திணை, பால், எண் உருபுகளையும் பெற்று வரும்.

149. ஒரு திருடன் அவனைக் கொன்றான்

150. அவள் ஒரு திருடனால் கொல்லப்பட்டாள்

151. அந்தத் திருடனால் நீங்கள் கொல்லப்பட்டிருப் பீர்கள். தப்பியது பெருங்காரியம்.

செயப்பாட்டுத் தொடர் பேச்சுத் தமிழில் மிகுதியாக வருவ தில்லை என்றாலும், *151* போன்ற வாக்கியங்கள் பேச்சுத் தமிழிலும் காணப்படுகின்றன.

3. வினைப்பொருண்மை

ஒட்டு என்பதைத் தவிர, வினைப்பொருண்மையில் துணை வினையாக வரும் வினைகள் எல்லாம், படர்க்கை, அஃறிணை

ஒருமை விகுதியினை ஏற்று வரும். எனவே வினைப்பொருண்மையில் எழுவாய்க்கும் பயனிலைக்கும் விகுதியில் உடன்பாடு இல்லை. இதனை வினைப்பொருண்மையின் இயல்பாகவும் கூறலாம். ஆம் என்பதைத் தவிர மற்ற எல்லா துணைவினைகளும் வினைப்பொருண்மையில் செயவென் எச்சத்துடனேயே வரும். இதனால் செயவென் எச்சத்தில் எழுவாய், வினைப்பொருண்மை துணைவினைக்கும் எழுவாயாக இருக்கவேண்டும் என்பதில்லை. வினைப்பொருண்மை துணைவினை, செயவென் எச்சத் தொடருக்குப் பயனிலையாக வருகிறது எனலாம். இதனால் அது அஃறிணை விகுதி பெற்று வருகிறது. ஆ துணைவினையாக வரும்பொழுது, பெயர்த்தொடர் வாசகம் எழுவாயாக வருகிறது. செயவென் எச்சத்தொடரை அல், தல், த்தல் விகுதி பெற்ற பெயர்த் தொடர் (Rangan, 1970) வாசகமாகக் கூற முடியும். புறவடிவில் வினைப் பொருண்மை துணைவினைகளாக வந்தாலும், புதைவடிவில் வாக்கியத்தை எழுவாயாகக் கொண்ட முதல்வினையாகவே கொள்ள வேண்டும். அவன் வரவேண்டும் என்பதற்கு, அவன் வரல் வேண்டும் என்பதைப் புதை வடிவமாகக் கொள்ள வேண்டும்.



மேலே உள்ளது போல பெயர்த்தொடரில் ஒரு வாக்கியம் மட்டும் புகுத்தப்படும் பொழுது, அது பெயர்த்தொடராகவோ செயவென் எச்சத்தொடராகவோ இருக்க வேண்டும். எல்லா துணைவினைகளும், புதைவடிவில் பெயர்த்தொடர்களையே எழுவாயாகப் பெறும். ஆனால் வினைப்பொருண்மை வினை

களும், ஆயிற்று, போயிற்று என்ற வினைகளும் மட்டுமே இதற்கு அறிகுறியாக அஃறிணை விகுதி பெற்று வருகின்றன.

3.1 செய்தென் எச்சம் + வேண்டும்/வேண்டி இருக்கிறது.

வேண்டும் தனிவினையாக வரும்பொழுது, தேவை, விருப்பம் போன்ற பொருள்களில் வருகிறது. அது துணைவினையாக வரும் பொழுது (*1*) கடப்பாடு (**obligation**) (*2*) விருப்பம் (**desideration**) (*3*) ஊகக்கடப்பாடு (**inference, must**) ஆகிய பொருள் களில் வரும். துணைவினையாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இலக்கண வடிவங்களில் வரும்.

வேண்டும் — படர்க்கை எதிர்கால அஃறிணை வினை முற்று.

வேண்டி — செய்தென் எச்சம். இது இரு என்பதோடு வேண்டி இருக்கிறது, வேண்டி இருந்தது, வேண்டி இருக்கும் என்று வரும்.

வேண்டியது — தொழிற்பெயர்.
வேண்டிய — இறந்தகாலப் பெயரெச்சம்.
வேண்டாத — எதிர்மறை பெயரெச்சம்.
வேண்டியவன் — வினையாலணையும் பெயர்.
வேண்டாதவன் — எதிர்மறை வினையாலணையும் பெயர்.
வேண்ட — செயவென் எச்சம்.
வேண்டாம் — எதிர்மறை வினைமுற்று.

இவற்றில் வேண்டும், வேண்டாம், வேண்டியதிருக்கிறது, வேண்டியதில்லை இவ்வடிவங்களே மிகுதியாக வருகின்றன.

3.1.1 அகக்கடப்பாடு

பேசுபவர் திணிக்கின்ற கடப்பாட்டினை உணர்த்தும். தன்மை, முன்னிலை, படர்க்கை மூவிடத்திலும் இது வரும்.

152. நான் வீட்டிற்குப் போகவேண்டும்

153. நீங்கள் எனது திருமணத்திற்குக் கட்டாயம் வரவேண்டும்

154. அவன் இந்த மாத்திரையைச் சாப்பிட வேண்டும் எதிர் மறைக் கடப்பாட்டில் வேண்டாம் என வரும்.

155. நீங்கள் மேலே படிக்கவேண்டாம்

கடப்பாட்டின் மிகுதியைக் குறிக்க, செய்தென் எச்சத்தோடு ஆக வேண்டும், தீரவேண்டும் என்பனவற்றையும் பயன்படுத்துகின்றோம். இங்குச் செய்தென் எச்சம தேற்றேகாரம் பெற்றும் வரும்.

156. நான் அங்கே போய் ஆகவேண்டும் (போயே ஆகவேண்டும்)

157. அவன் இங்கே வந்து தீரவேண்டும் (வந்தே தீரவேண்டும்)

3.1.2 புறக்கடப்பாடு

அகக்கடப்பாட்டில் பேசுபவர் கட்டுப்பாட்டை விதிக்கின்றார். புறக்கடப்பாட்டில், பேசுபவருக்கும் புறம்பான சில சூழல்கள் கட்டுப்பாட்டை விதிக்கின்றன. **வேண்டியதிருக்கிறது, வேண்டியதிருந்தது (வேண்டி இருந்தது) (வேண்டி இருக்கும்)** என்பன இப்புறக்கடப்பாட்டை உணர்த்தும்.

158. இன்றைக்குச் சாயங்காலம் ஒரு கூட்டத்திற்குப் போகவேண்டி இருக்கிறது

159. சைக்கிள் இல்லாமல் நேற்று மூன்று கிலோ மீட்டர் நடக்க வேண்டி இருந்தது

160. நீ இன்று இரவு சென்னைக்குப் போக வேண்டி இருக்கும்

வேண்டி இருக்கிறது/ இருந்தது/இருக்கும் என்று முடியும் வாக்கியங்கள், **வேண்டும்** என்பதால் முடியும் வாக்கியங்களிலிருந்து அமைப்பில் வேறுபட்டன. அவன் வரவேண்டும் என்ற வாக்கியத்தில் புதைவடிவில், செயவென் எச்ச வாசகம் வேண்டும் என்பதற்கு வாக்கிய செயப்படுபொருளாக இருக்கிறது (அவன் வருதல் வேண்டும்). அவன் வரவேண்டி இருக்கிறது என்னும்

வாக்கியத்தில், அவன் வரவேண்டி என்பது, இருக்கிறது என்ற பயனிலையைப் பெறுகிறது (வரவேண்டியது இருக்கிறது). இங்கு வாக்கிய எழுவாய்க்குள் வாக்கிய பயனிலை அமைந்திருக்கிறது (அவன் வர என்ற எழுவாய், வேண்டு என்று பயனிலை பெற்றது). இருக்கிறது என்பதற்குப்பதில், வரும் என்ற அஃறிணை வினைமுற்று வருவதாலும் இதனை உணரலாம்.

161. அவன் வேலைக்குப் போகவேண்டி வரும்.

இங்குப் போகவேண்டி என்பது, போக வேண்டியது எனவும் வரலாம். அதனால் அது பெயர் வாசகமாக அமைதலை உணரலாம்.

3.1.3 விருப்பம் (desideration)

இது பேசுபவர் விரும்புகின்ற செயலையோ அல்லது நிகழ்ச்சியையோ உணர்த்தும். ஆனால் அது அவன் சொந்த விருப்பமன்று. சமூகக் கட்டுப்பாடுகள், நேர்மை, முன்பே வகுத்துக்கொண்ட உடன்பாடு ஆகிய இவைகளால் இக்கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. பேசுபவன் இத்தகைய கட்டுப்பாடுகளைக் கூறுகிறான்-அவ்வளவே.

162. நீங்கள் உங்கள் கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்

163. அவன் கொஞ்சம் ஓய்வு எடுக்க வேண்டும்

164. நீ படிக்க வேண்டியதுதானே

3.1.4. ஊகம் (inference)

பேசுபவருடைய ஊகத்தை உணர்த்தும்

165. இப்பொழுது வண்டி வரவேண்டும்

166. அவன் இருப்பத்துநான்கு மணிநேரம் தூங்கி இருக்க வேண்டும்

வேண்டும் என்பது துணைவினையாக, உடன்பாடு எதிர்மறை பெயரெச்சமாகவும் வினையாலணையும் பெயராகவும் வரும்.

167. கொடுக்கவேண்டிய பணத்தைக் கொடுங்கள்
168. கொடுக்கவேண்டாத பணத்தைக் கொடுக்க வேண்டாம்
169. நீ படிக்க வேண்டியது முக்கியம்
170. சொல்ல வேண்டியதைச் சொல்லுங்கள்
171. இங்கே வரவேண்டாதவர்கள் வந்தார்கள்

வேண்ட என்ற செயவென் எச்சம். தேற்றேகாரம் பெற்றும் வரும்.

172. அவன் வர வேண்டவே வேண்டாம்

3.2 செயவென் எச்சம் + அல் + ஆம்

செயவென் எச்சத்தோடு அல் என்ற பெயராக்க உருபு இணையும்பொழுது கிடைக்கும் தொழிற்பெயர், ஆம் உரு பேற்று வரும். ஆம் என்பது ஆகும் என்ற வினையின் குறுகிய வடிவமே ஆகும். எனவே இது இத்தொழிற்பெயரின் பயனிலையாகச் செயற்படுகிறது. அவன் கொடுக்கலாம் என்பது அவன் கொடுக்கல் ஆகும்--என்பதன் திரிந்த வடிவே ஆகும், ஆனால் துணைவினையாக வரும்பொழுதுவேறு பொருளைத் தருகிறது. (1) நிகழவாய்ப்பு (possibility) (2) உடன்பாடு தெரிவித்தல் (permission) (3) வியங்கோள் (hortative) 4) அறிவுரை (suggestion) என்ற பொருள்களில் வரும்.

3.2.1 நிகழ வாய்ப்பு (possibility)

இதனைச் சூழ்நிலையால் நிகழ வாய்ப்பும், ஊகத்தால் நிகழ வாய்ப்பும் என இரு வகையாகக் காணலாம்.

3.2.1.1 சூழ்நிலை வாய்ப்பு

ஒரு செயல் நிகழலாம் என்பதற்கு அங்கு அப்பொழுதுள்ள சூழ்நிலை வாய்ப்பாக இருப்பதால், நிகழ வாய்ப்பினைக் கூறுவதாய் அமையும்.

173. நீங்கள் இங்கே தூங்கலாம்

இங்கு, இப்பகுதிக் கடலில் கொடிய மீன்கள் எதுவும் இல்லாமையால் நீஞ்சுவதற்குச் சூழ்நிலை வாய்ப்பாக இருப்பதை உணர்த்தும்.

174. இந்தக் கடையில் நல்ல பட்டுப்புடவை கிடைக்குமாம்

175. நீங்கள் மொட்டை மாடிக்கு ஏறலாம்

இறந்த கால வாய்ப்பையும் இது உணர்த்தும்

176. பத்து ஆண்டுகளுக்கு முன்பு இந்த ரோட்டில் சாவகாசமாக நடந்து போகலாம்

3.2.1.2 ஊகத்தால் நிகழ வாய்ப்பு

ஆம் ஒப்பு நிகழ வாய்ப்பிருப்பதை ஊகத்தால் கூறுவதையும் உணர்த்தும்.

177. அவன் உனக்குக் கடன் கொடுக்கலாம்

178. அவன் இப்பொழுது தூங்கலாம்

3.2.2 உடன்பாடு தெரிவித்தல்

அல் ஈற்றுத் தொழிற்பெயரோடு வரும். ஆம், ஒரு செயலுக்கு உடன்பாடு கிடைத்ததை உணர்த்தும். இது ஆ என்ற வினா உருபோடு வந்தும் இப்பொருளைத் தரும்.

வினாவில் தன்மை எழுவாயாக வரும்பொழுது, தன்மை உடன்பாடு கேட்பதையும், முன்னிலையில் செய்த குற்றத்தைச் சுட்டிக்காட்டுவதையும், படர்க்கையில் படர்க்கையானுக்காக உடன்பாடு கேட்பதையும் உணர்த்திவரும். உடன்பாட்டில் தன்மையில் அவன் பெற்ற உடன்பாட்டையும் முன்னிலையிலும் படர்க்கையிலும் பேசுபவன் உடன்பாட்டையோ அல்லது அவன் இவர்களுக்காகப் பெற்ற உடன்பாட்டையோ உணர்த்துவதாகவும் அமையும்.

179. நான் இங்கே உட்காரலாமா?

180. நீ இங்கே உட்காரலாமா?

181. அவர்கள் இங்கே உட்காரலாமா?

182. நான் இங்கே உட்காரலாம்

183. நீ இங்கே உட்காரலாம்

184. அவர்கள் இங்கே உட்காரலாம்

3.2.3 வியங்கோள் (hortative)

உளப்பாட்டுத்தன்மை பன்மையை எழுவாயாகக் கொண்டு ஆம் வரும்பொழுது, பேசுபவன் வரும் அச்செயலில் கேட்பவனும் ஈடுபட வேண்டியதைக் குறிக்கும்.

185. வாருங்கள்; நாம் போகலாம்

3.2.4 அறிவுரை (suggestion)

தன்மையில் வரும்பொழுது தனக்குத்தானே அறிவுரை கூறுவதாக அமையும். பிற இடங்களில் எழுவாய்க்கு அறிவுரை கூறுவதாக அமையும்.

186. நான் ஆசிரியரிடம் கேட்கலாம். ஆனால்...

187. நீ அதைக் கொடுத்துத் தொலைக்கலாம்

188. அவன் டாக்டரிடம் பேசிப்பார்க்கலாம்

3.3 செயவென் எச்சம் + கூடு

கூடு என்பது துணைவினையாக வரும்பொழுது, நிகழ வாய்ப்பினை (possibility) உணர்த்தும் (பரமசிவம், 1983, ப. 253). இது கூடிய என்ற பெயரெச்ச வடிவிலும், கூடும் என்ற அஃறிணை எதிர்கால வினைமுற்று வடிவிலும் மிகுதியும் வருகிறது.

189. நாளை காலை அவன் வரக்கூடும்

190. இது உடையக்கூடிய சாமான்

கூடிய என்பதை அடுத்து மட்டும், வரைக்கும், சீக்கிரம் இவை வரும்பொழுது, கூடிய என்பதன் முன்னின்ற செயவென் எச்சம் மறைந்ததாகல் வேண்டும். கூடிய என்பது துணை வினைப் பொருளிலேயே இங்கு வருகின்றது.

191. நான் ϕ கூடிய மட்டும் (வரைக்கும்) கேட்டுப் பார்த்தேன்

191ல் φ என்பது, மறைந்து நிற்கும் கேட்க என்ற செய வென் எச்சத்தைக் குறிக்கும்.

192. அவன்φ கூடிய சீக்கிரம் இந்த வேலையைச் செய்து முடித்துவிடுவான்

192–ல் φமுடிய என்ற தொக்கி நிற்கும் செயவென் எச்சத்தைக் குறிக்கும்.

கூடு என்பது துணைவினையாக எதிர்மறையில் மிகுதியாக வரும். **கூடாது, கூடாதது, ஆனால், இவை,** நிகழக்கூடாது என்ற முன்னிலை எதிர்மறை ஏவற்பொருளை, தடுத்தல் பொருளைத் தரும். கூடும் என்பதற்கு கூறிய **வினைப்பாங்கு** பொருளினின்றும் இது சிறிது வேறுபட்டது. இவ்வாறு வருகின்ற எதிர்மறை பொருளை மூன்றாகக் கூறலாம்.

(1) எதிர்மறை கடப்பாடு - must not
(2) எதிர்மறை விருப்பு - should not
(3) உடன்பாட்டை மறுத்தல் - be not allowed to

3.3.1 எதிர்மறை கடப்பாடு

கூடாது, பேசுபவன் கேட்பவனை ஏவுவதாக அமையும். கேட்பவன் கட்டாயம் அதைச் செய்து ஆக வேண்டும்.

193. நீங்கள் இங்கே காரை வேகமாக ஓட்டக்கூடாது

194. இந்தக் கோயிலுக்குள் சட்டை போடக்கூடாது

3.3.2 எதிர்மறை விருப்பு

கூடாது, பேசுபவனுடைய அறிவுரை, தகாத செயலைச் செய்வதைத் தவிர்க்கக் கூறுவது ஆகிய பொருள்களில் வரும்.

195. பொய் சொல்லக்கூடாது

196. சின்னப்பையன்கள் சிகரெட் பிடிக்கக்கூடாது

197. நீ அவன்கூடப் பேசக்கூடாது

3.3.3 உடன்பாட்டை மறுத்தல்

கூடாது, பேசுபவனுடைய உடன்பாட்டை மறுத்துக்கூறும் பொருளிலும், மற்றவர் மறுத்த உடன்பாட்டை எடுத்துக்கூறும் பொருளிலும் வரும்.

198. உங்கள் பையை உள்ளே எடுத்துக்கொண்டு போகக்கூடாது

இது எதிர்மறை பெயரெச்சத்திலும், எதிர்மறை வினையாலணையும் பெயரிலும் வரும்.

199. செய்யக்கூடாத வேலையை நீ ஏன் செய்தாய்?

200. வரக்கூடாதவர்கள் வந்தார்கள்

சிலபொழுது, கூடாது என்ற துணைவினை, முதல்வினை இல்லாமலும் வரும்.

201. அவனுக்கு இவ்வளவு திமிர் கூடாது

201-ல் இரு என்ற முதல்வினையின் செயவென் எச்சம் இருக்க என்பது மறைந்து நிற்கிறது (இருக்கக்கூடாது).

குரலிசை இறுதியில் எழும்பி முடியும் (rising intonation) வாக்கியங்களில் கூடாது என்பது, செய்திருக்கலாம் என்று விரும்பியதைச் செய்யாத பொழுதும், கோபிக்கும் பொருளிலும் (shouldn't you) வரும்.

202. நீ இப்பொழுது பள்ளிக்கூடத்திற்குப் போயிருக்கக்கூடாது

இத்தகைய வாக்கியம், இறுதியில் உயர்ந்து முடியும். ஒருவன் செய்யவேண்டிய செயலைச் செய்யாதபொழுது அதனைக்கண்டு ஆத்திரமடையும் சூழ்நிலையில் இது வரும்.

3.4 செயவென் எச்சம் + அட்டும்

பரமசிவம் இதனை ஓட்டும் என்பார் (பரமசிவம், 1981 ப 129). நீ வரல் ஓட்டும், நான் வரல் ஓட்டும் என ஓட்டும் தன்மை முன்னிலையில் வரும். ஆனால் அட்டும் இவ்விடங்களில்

வராது. இதனால் இரண்டினையும் தொடர்புபடுத்துதல் பொருந்ாது, எனவே நாம் அது தோன்றும் வடிவில் அட்டும் என்றே கொள்கிறோம். இதனால் பரமசிவம் கேட்பவர், பேசுபவர், கூற்றுக்குச் செயவென் எச்சம் குறித்திடும் வினைக்கு ஒத்துக் கொள்ளும் பொருளைத் தருகிறது என்பார். அட்டும் துணை வினையாக இரண்டு பொருள்களில வருகிறது (1) படர்க்கை ஏவல் அல்லது வியங்கோள் (2) கேட்பவர் விருப்பத்தை வினாவுதல்.

3.4.1 படர்க்கை ஏவல்/வியங்கோள்

அட்டும் உடன்பாட்டேவலில் செயவென் எச்சத்தோடு வரும் பொழுது, செயவென் எச்ச.வாசகம் உணர்த்தும் வினை அல்லது நிகழ்ச்சிக்கு, கேட்பவர் இணங்கும்படிப் பேசுபவர் வேண்டுவதைக் குறிக்கும். இத்தகைய இணக்கத்தினைத் தன்னைத் தானே கேட்டுக்கொள்ள இயலாததாகலின் தன்மைப்பெயர் எழுவாயாக வராது. முன்னிலைப் பெயரும் எழுவாயாகவராது. ஆனால் அதற்கு இத்தகைய காரணம் எதுவும் கூற முடியவில்லை. படர்க்கையில் அட்டும், பேசுபவனது ஏவல் அறிவுரை (suggestion) விருப்பம் இவற்றைத் தெரிவிக்கும். இது நேராகப் படர்க்கைக்குச் செல்வதில்லை. மற்றொருவர் மூலம் படர்க்கைக்குச் செல்லும்.

203. அவன் வரட்டும்

204. அவர்கள் இன்றைக்கு விளையாடட்டும்

205. வேறு ஒரு ஆள் இதனைச் செய்யட்டும்
அடுத்த வாக்கியம் பேசுபவருடைய விருப்பத்தை உணர்த்துகின்றது.

206. அவர்கள் மகிழ்ச்சியாக வாழட்டும்.

3.4.2 கேட்பவர் விருப்பத்தை வினாவுதல்

அட்டும் வினா உருபு ஆ என்பதை ஏற்று வரும்பொழுதோ, அல்லது வினாப்பெயர் வினாப்பெயரடை இவற்றுடன் வரும் பொழுதோ, பேசுபவர், கேட்பவர் விருப்பத்தைப் பணிவுடன் வேண்டி நிற்றலை உணர்த்தும். இதன் தொடர்பாக ஒரு

நிகழ்ச்சி அல்லது செயல் இவற்றின் நிகழ்ச்சியைப் பற்றிக் கேட்பவர் விருப்பத்தை வினாவுவதாகவும் இது வரும். பேசுபவன், கேட்பவருடைய கட்டளை, அறிவுரை இவற்றை வேண்டி நிற்பான். இது முன்னிலைப் பெயரை எழுவாயாக ஏற்று வராது. *நீ வரட்டுமா எனவராது.

207. நான் போகட்டுமா?

208 அவன் வரட்டுமா?

209. உனக்கு ஒரு டீ போடட்டுமா?

210. நாங்கள் இப்பொழுது என்ன செய்யட்டும்?

211. அவன் எங்கே போகட்டும்?

212. அவன் எப்பொழுது வரட்டும்?

3.5 செயவென் எச்சம் + முடி

முடி துணைவினையாக வரும்பொழுது (1) இயலுதல் (ability) (2) சூழ்நிலையால் நிகழ வாய்ப்பு (circumstantial possibility) என்ற இருவகைப் பொருளிலும் வரும். முடி கீழே கொடுக்கப்பட்டுள்ள இலக்கண வடிவுகளில் வரும்.

படர்க்கை அஃறிணை நிகழ்கால வினைமுற்று	:	முடிகிறது
படர்க்கை அஃறிணை இறந்தகாலவினைமுற்று	:	முடிந்தது
படர்க்கை அஃறிணை எதிர்கால வினைமுற்று	:	முடியும்
எதிர்மறை வினைமுற்று	:	முடியவில்லை
படர்க்கை அஃறிணை எதிர்கால எதிர்மறை வினைமுற்று	:	முடியாது
நிகழ்காலப் பெயரெச்சம்	:	முடிகிற
இறந்தகாலப் பெயரெச்சம்	:	முடிந்த
எதிர்காலப் பெயரெச்சம்	:	முடியும்
எதிர்மறைப் பெயரெச்சம்	:	முடியாது
வினையெச்சம்	:	முடிந்தது
எதிர்மறை வினையெச்சம்	:	முடியாமல்
தொழிற்பெயர்	:	முடிந்தது
வினையாலணையும் பெயர்	:	முடிகிறவன்
		முடிந்தவன்
		முடிபவன்

நிபந்தனை	முடிந்தால்
எதிர்மறை நிபந்தனை	முடியா விட்டால்
செயவென் எச்சம்	முடிய

3.5.1 இயலுதல் (ability)

முடி துணைவினையாக இயலுதல் பொருளைக் குறித்து வரும். முக்காலத்திலும் அஃறிணை வினைமுற்றாக வரும். இதன் எழுவாய், எழுவாய் வேற்றுமையிலும், ஆல் வேற்றுமையிலும், கு வேற்றுமையிலும் வரும்.

213. அவன் (அவனால்) (அவனுக்கு) இப்பொழுது மறுபடியும் சைக்கிள் ஓட்ட முடியும்
214. நேற்று என்னால் நன்றாக வேலை செய்ய முடிந்தது
215. இப்பொழுது உங்களால் நடக்க முடிகிறதா?
216. நாளை அவனால் நடக்க முடியும்

எதிர்காலப் படர்க்கை அஃறிணை முற்றாக வரும்பொழுது, பழக்கமாக, இயல்பான இயலுதல் பொருளைத் தரும்.

217. என்னால் அய்ம்பது கிலோ தூக்க முடியும்

எதிர்மறை இயலுதல், முடியவில்லை, முடியாது என்ற இரண்டு வடிவிலும் வரும். முடியவில்லை என்பது இறந்த காலம், நிகழ்காலங்களிலும், முடியாது எதிர்காலம், பொது வான இயல்பு இவற்றை உணர்த்தியும் வரும்.

218. நேற்று (இன்றைக்கு) கடைக்குப் போகமுடிய வில்லை
219. பத்து இட்லி என்னால் சாப்பிட முடியாது

3.5.2 நிகழவாய்ப்பு (possibility)

இது சூழ்நிலை, புற நிகழ்ச்சிகளால் ஒரு செயல் நிகழ வாய்ப்புண்மையை உணர்த்தும்.

220. நேற்று சப்தமில்லை. நன்றாகத்தூங்க முடிந்தது

221. இப்பொழுது மழை பெய்கிறது. நீ வெளியே விளையாட முடியவில்லை.

முடி எச்சமாகவும், பெயராகவும் வருவதைக் காண்க.

222. நான் கடைசியில் தூங்க முடிந்தபொழுது குழந்தை கத்திற்று

223. என்னால் கொடுக்க முடிந்ததைக் கொடுத்தேன்

224. அவர்கள் வரமுடியாவிட்டால் பரவாய் இல்லை

225. அவனால் வர முடியவே முடியவில்லை

இதன் செயவென் எச்சம் ஏ ற்றேகாரத்தோடுதான் (முடியவே 225) வரும். இதன் செய்தென் எச்சம் உம் பெற்றே வரும்.

226. அவனால் செய்ய முடிந்தும் பயன் இல்லை

துணை நூற்பட்டியல்

Annamalai, E. 1979. *Dynamics of Verbal Extension in Tamil.* IJDL Trivandrum

Arokianathan, S, 1981, *Tamil Clitics, Dravidian Linguistics Association*, Trivandrum.

Paramasivam, K. 1979, *Effectivity and Causativity in Tamil*, Dravidian Linguistics Association, Trivandrum.

———————— 1981, *Why permissive is not permissive.* Proceedings of the Fifth International Conference Seminar of Tamil Studies.

பரமசிவம், கு. *1983*, இக்காலத் தமிழ் மரபு. அன்னம் (பி) லிட், சிவகங்கை.

மொழியியல் 9. 3 & 4 (1986)

மொழியும் ஒலியும்: உயிரல்லா ஒலிகள்*

க. முருகையன்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

1. இருபெரும்பிரிவு

பேச்சொலிகளை அவற்றின் பிறப்பு அடிப்படையில் பகுக்கப்புகின் அவற்றை உயிர், உயிரல்லாதவை என்ற இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். உயிரொலிகளின் பாகுபாடு பற்றிய கட்டுரை மொழியியல் இதழ் (1&3 (78) ப. 47-55) இல் வந்துள்ளது. அதன் தொடர்ச்சியாக ஈண்டு மெய்யொலிகளின் பாகுபாடு பற்றிக் காண்போம்.

1.1 மெய்யொலி

மெய்யொலிகள் பொதுவாக வாயறையில் மூச்சுக்காற்றுக்கு விளைக்கப்படும் தடையால் பிறப்பவை. எனவே இவ்வொலிகளை வாயறையில் மூச்சுக்காற்றுக்குத் தடை இழைக்கப்படும் இடம், முறை ஆகியவற்றின் அடிப்படையில் பிரிக்கலாம். இவை முறையே பிறப்பிடம் (place of articulation), பிறப்பாக்கம் அல்லது முயற்சி (manner of articulation) எனப்படும்.

* மொழியியல் தொகுதி 1 & 3 (1978) இதழில் வந்துள்ள "மொழியும் ஒலியும்" என்ற கட்டுரையின் தொடர்ச்சி.

1.1.1 பிறப்பிடம்

மெய்யொலிகளில் p,t,k என்பவை பிறக்கும் இடங்கள் அடிப்படை பிறப்பிடங்களாகும். பொதுவாக உலக மொழிகள் அனைத்திலும் இவை இன்றியமையா ஒலிகளாக உள்ளன. இவை வாயறையின் மூன்று முக்கிய இடங்களில் பிறக்கின்றன. எனவே இவைத்தம்முள் அதிக அளவு வேறுபாடு உடையவை. வாயறையை முற்பகுதி, பிற்பகுதி என்று பிரித்தால் p,t இரண்டும் முற்பகுதியிலும் k பிற்பகுதியிலும் பிறப்பதாகக் கொள்ளலாம்.

இவ்வடிப்படையில் p,t-வை முன்வாயொலிகள் என்றும் k வைப் பின்வாயொலி என்றும் கொள்ளலாம். இவற்றுள் t முன் நா முன் அண்ணத்தை உறப் பிறப்பதால் இது முன்நா ஒலி யாகும். c பின்வாயில் பிறப்பது. முன்நா வல்லண்ணத்தை உற இது பிறக்கின்றது. எனவே இந்நான்கு ஒலிகளையும் பிறப்பிட அடிப்படையில் முறையே p,t வை முன்வாய் ஒலி என்றும் c,k வை பின்வாய் ஒலி என்றும் t,c வை முன்நா ஒலி என்றும் p,k வை முன்நா அல்ஒலி என்றும் வகைப்படுத்தலாம். இந் நான்கு ஒலிகளையும் [முன்வாய்] (anterior), [முன்நா] (coronal) என்ற இரு கூறுகளையும் கொண்டு வேறுபடுத்தலாம். இக்கூறு களே இவற்றோடொத்த ஏனைய ஒலிகளையும் வேறுபடுத்தும் கூறுகள்.

p, b, m, ɸ, β, f, v, t, d̪, n̪, θ, x, t, d, n, s, z, l, r ஆகியவை முன்வாயில் பிறப்பவை. ṭ, ḍ, ṇ, ṣ, ẓ, ḷ, c, ɟ. č, ǰ, ň š, ž, ň, j, k, g, ś, x, r ஆகியவை பின்வாயில் பிறப்பவை. இவற்றுள் ṭ முதல் j வரை உள்ளவை முன்நாவால் பிறப்பிக் கப்படுபவை. k முதல் r வரை உள்ளவை உகரம் பிறக்கும் இடத்தில் பிறப்பவை. எனவே இவை மேல் பின்னொலிகள். ṭ முதல் j வரை உள்ளவை இகரம் பிறக்கும் இடத்தில் பிறப் பவை. எனவே அவை மேல்' முன்னொலிகள். q, G, ʀ, h, H, R ஆகியவை மேல் தொண்டையில் பிறப்பவை. அதாவது பின் வாயில் பின்நா உறப் பிறப்பவை. எனவே இவை கீழ் பின் னொலிகள்.

நாம் இதுவரை கண்ட பிறப்பிடக் கூறுகளைக் கொண்டு மெய்யொலிகளை வகைப்படுத்த உதவும் கூறுகளைப் பற்றிச் சிந்திப்போம். p முதல் r வரை உள்ளவை முன்வாயில் பிறப்பவை. ṭ முதல் R வரை உள்ளவை பின்வாயில் பிறப்பவை. ṭ முதல் j வரை உள்ளவை முன்நாவால் பிறப்பவை. k முதல் R வரை உள்ளவை பின்நாவால் பிறப்பவை. c முதல் r வரை உள்ளவை நா வாயறையில் உயர்ந்தமையும்போதும் q முதல் R வரை உள்ளவை நா வாயறையில் தாழ்ந்தமையும்போதும் பிறப்பவை. பிறப்பு ஒற்றுமை, வேற்றுமைகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஆறு தொகுதிகளையும் முன் வாய், முன்நா, பின், கீழ் என்ற நான்கு கூறுகளைக் கொண்டு வேறுபடுத்தலாம். இவ்வொலிகளை மேலும் முயற்சி அடிப்படையில் வகைப்படுத்துவதன் மூலம் அவற்றைத் தனித்து வேறுபடுத்த இயலும். ஒலியுறுப்புகள் நெருங்கி அமையும் போது வாயறையில் முழு அடைப்பு, நெருங்கிய சிறு வழி, மருங்குவழி ஒலியுறுப்புகளின் அதிர்வு ஆகியவை விளையும். மூச்சுக் காற்றிற்கு விளைவிக்கப்படும் இவ்வகை மாற்றங்கள் முயற்சி எனப்படும்.

1.1.2 முயற்சி

அடைப்பி, உரசி, அடைப்புரசி ஆகியவை மூச்சுக்காற்றிற்கு விளைவிக்கப்படும் தடையால் பிறப்பவை. எனவே இவற்றைத் தடையி (obstruct) கள் எனலாம். இவற்றுள் உரசி தொடரி (continuant) ஆகும். எஞ்சியவற்றில் அடைப்புரசி தாமத விடுப்பி (delayed release) ஆகும்.

மருங்கி, அதிர்வி ஆகியவை ஒழுகி (liquid) கள். இவை r, l போன்றவை. y, w, ?, h போன்றவை உடம்படு மெய்கள். பிறப்பிடம் முயற்சி ஆகியவற்றின் அடிப்படையில் நோக்கும் போது இவை உயிர், மெய் ஆகிய இருகுணங்களும் இல்லாது அமைவதாகும். y, w ஆகிய இரண்டும் தத்தம் உயிரோடொத்த இடத்தில் பிறப்பவை. ஆனால் இவை அசை கரு ஆகா. எனவே இவற்றை அரை உயிர் என்பர். ?, h ஆகிய இரண்டும் தொண்டையில் பிறப்பவை. வாயறையில் உண்டாகும் தடையிகளே

மெய்யொலிகள் என்ற பாகுபாட்டிற்கு உரியனவாதலால் இவற்றை உயிரும் மெய்யும் அல்லாத ஒலி எனலாம். வாயறையில் உயிர் பிறக்கும் ஒலிப்பமைப்போடு பிறக்கினும் உயிர் போன்று அசையாகாமையின அரை உயிர்களும் ஒலிகளே. இந்நான்கு ஒலிகளும் பிறப்பிடம், முயற்சி ஆகியவற்றால் வேறுபடுத்தப்பெறும்.

மூக்கிகள், ஒழுகிகள், அரைஉயிர்கள் ஆகியவை முழங்கி (sonorant) கள் ஆகும். இக் கூறு உயிரல்லாத ஒலிகளைத் தடையிகளினின்றும் வேறுபடுத்துவதாகும்.

1.1.3 பொதுக் கூறு

இதுவரை ஒலிகளின் அடிப்படைப் பிறப்புத்தன்மையும் அவற்றின் அடிப்படையில் வகைப்படுத்த உதவும் கூறுகளும் பற்றிய விளக்கம் கண்டோம். இனி அவற்றின் பொதுத்தன்மைகளின் அடிப்படையில் அவற்றை உளப்படுத்திப் பெரும் பிரிவுகளாகப் பகுக்க உதவும் கூறுகள் பற்றிக் காண்போம். இக் கூறுகள் சொல்லியலில் விளையும் ஒலிமாற்றங்களின் பொதுத் தன்மையை அறியவும் அவற்றை உளப்படுத்தி எளிமையாகவும் சிக்கனமாகவும் வாய்பாடு செய்யவும் ஒலிமாற்றங்களைக் காரணப்படுத்திக் காட்டவும் உறுதுணையாகின்றன.

மூச்சுக்காற்று பேச்சுக்குழலின் வழியே தடையின்றி செல்லும் போது உண்டாகும் ஒலிகள் முழங்கிகள். இவை இசைத் தன்மை உடையவை. மூக்கு (மூக்கறை வழியே காற்று தடையின்றி செல்வதால் பிறப்பது) ஒழுகி, அரை உயிர் ஆகியவை முழங்கிகள். இவை ஒரேவழி அசைக்கருவாக வருந்தன்மை பெற்றவை. அடைப்பி, உரசி, அடைப்புரசி, தொண்டை, உடம்படு மெய் ஆகியவை தடையிகள். அடைப்பி, உரசி, அடைப்புரசி, ஒழுகி, மூக்கி ஆகியவை மெய்யொலிகள். உடம்படு மெய்கள் ஒலிகள். தடையிகள் குரல் (voicing) வேறுபாடு உடையவை. முழங்கிகள் பெரும்பாலும் குரல்கள். குரல்கள் பிறக்கும் போது பிறப்புறுப்புகளின் தசை நார்கள் தவிர்ந்த நிலையில் இருக்கும். எனவே இவை வீசுவலிகள். குரலிலிகள் பிறக்கும் போது பிறப்புறுப்புகளில் தசை நார்கள் விசுவாக

இருக்கும். எனவே இவை விசுவி (tense) கள். ஈரொற்று, ஈருயிர், நெட்டுயிர் ஆகியவையும் விசுவிகளே.

1.1.4 இணைக் கூறு

பிறப்பிடம், முயற்சி ஆகியவையே அன்றி வேறுவகையிலும் ஒலிகள் வேறுபடும். இத்தகு வேறுபாடு ஒலிகள் ஒன்றிற்கு மேறபட்ட பிறப்பிடத்தையோ முயற்சியையோ ஏற்பதால் உண்டாகும். இந்நிலையால் உயிர்கள் மூக்குச்சார்பும் மெய் யொலிகள் இதழ் சார்பு, அண்ணச் சார்பு, குரல்வளை சார்பு, உயிர்ப்பு (aspiration) ஆகியவையும் பெறும்.

உயிர், மெய் ஆகிய இருபிரிவு ஒலிகளும் தம்மிடையே நேர் மாறான பண்புகளைப் பெற்றிருப்பினும் இவற்றிடையேயும் பொதுத்தன்மை உண்டு. அவை முழக்கம், அசைத்தன்மை, தடையளவு, பிறப்பிடம் ஆகியவையாகும். இவ்வடிப்படையில் உயிர்ப்பண்பு கொண்ட மெய்கள், மெய்ப்பண்புகொண்ட உயிர்கள் என்று மெய்களையும் உயிர்களையும் வகைப்படுத் தலாம்.

அசையில் அதிக முழக்கம் உடைய ஒலியே கருவாக அமையும். எனவே உயிரொலி இல்லாத அசையில் முழங்கிகள் அசைக்கருவாக வரும். இவை அசைப்பண்பிகளாகும். அசையில் முன்னி (onset), முடிப்பி (coda) யாக வருபவை மெய்யொலிகள். எனவே அசைக்கருவாக வாரா. உயிர்கள் மெய்ப்பண்பிகளாகும். பொதுவாக மேலுயிர்கள் மெய்ப்பண்பிகளாகவும் முழங்கிகள் உயிர்பண்பிகள், அதாவது அசைப்பண்பிகளாகவும வரும்.

1.1.5 உயிரும் மெய்யும் அல்லாத ஒலி

வாயறையில் உண்டாகும் தடையே மெய்யொலித் தோற றத்திற்குக் காரணம். தடைகள் பிறப்புறுப்புகளின் நெருக்கத் தால் அமைபவை. மெய்யொலி பிறக்கும் போது உண்டாகும் உறுப்பு நெருக்கம் உயிரொலி உண்டாகும்போது ஏற்படும் உறுப்பு நெருக்கத்தை விட அதிகமாக இருக்கும். வாயறையில் தடையும் உராய்வும் உண்டாகும் போது பிறப்பவை, மெய்ப்

பண்புடையவை. அடைப்பி, ஒழுகி ஆகியவை வாயறையில் தடையால்பிறப்பவை. உரசி வாயறையில் உராய்வால் பிறப்பது. அடைப்புரசி தடையாலும் உராய்வாலும் பிறப்பது. வாயறையில் உண்டாகும் உறுப்பு நெருக்கம் மெய்யொலியை உடம்படுமெய், உயிர் ஆகியவற்றினின்றும் வேறுபடுத்துகிறது. வாயறையில் உண்டாகும் நெருக்கக்குறைவு உயிர், அரை உயிர், தொண்டை உடம்படுமெய் ஆகியவற்றை மெய்யொலிகளிலிருந்து வேறுபடுத்துகிறது.

1.1.6 விடுபட்டக் கூறுகள்

உரசிகளில் சில அதிக அளவு உரத்துக் கேட்கும் தன்மையுடையவை. இவை உரப்பி (strident) எனப்படும். வாயறையில் உரசி எழும் மூச்சுக்காற்று மேற்பல், உள்நா ஆகியவற்றை எதிர்த்தெழும் போது உண்டாகும் உரசிகள் உரப்பு மிகுதியோடு தோன்றும். இக்கூறு பிறப்பிடம் முயற்சி ஆகியவை ஒன்றாக உள்ள உரசிகளைப்பகுக்க உதவுகிறது. f, s, š, b ஆகியவை உரப்பிகள். ϕ, θ, ç, x ஆகியவை உரப்பிலிகள். இவ்வாறே ṭ,t,ṭ, ஆகியவையும் ḷ, l ஆகியவையும் பிறப்புறுப்பால் ஒன்றானவை. முன்னதில் ṭ நாநுனி பரந்தமையும்போது பிறப்பது. எனவே இது பரத்தி (distributed) ஆகும். பின்னதில் ḷ மருங்குச்சார்பு ஒலியாதலால் இது மருங்கொலியாகும்.

1.1.7 மீக்கூறு

நெடுமை, அழுத்தம், இசை ஆகியவை மீக்கூறு (suprasegmental feature) கள். இவை உயிரொலிகளின் பண்புகளாக வந்து அவற்றை வேறுபடுத்தும்.

1.2 பின்னல் அட்டவணை

மேலே விளக்கப்பட்ட வேறுபாட்டுக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு மொழியொலிகளை வகைப்படுத்திப் பின்னல் அட்டவணை (matrix table) யில் அமைப்பது பற்றி இனிக் காண்போம். ஒரு குறிப்பிட்ட பண்பு ஒரு ஒலிக்கு உண்டா? இல்லையா? என்ற வினாவின் அடிப்படையில் அதனோடு ஒத்த மற்ற ஒலிகளுடன் அதைச் சேர்த்து வகைப்படுத்துவது

இரு கூற்றுப் பிரிவு (binary feature division) எனப்படும். இவ் வடிப்படையில் ஒரு ஒலிப்பண்பை அதன் + பண்பு அல்லது (—) பண்பு எனலாம். காட்டாக தமிழ் மொழியில் /n/ மெய்த்தன் மையை + பண்பாகவும் அசைத்தன்மையை — பண்பாகவும் கொண்டு உள்ளது எனலாம். எனவே இதை [+ மெய்], [(—) அசை] எனக் குறிக்கலாம்.

1.2.1 பெரும் பிரிவு

[அசை], [முழக்கம்], [மெய்] என்பவை ஒலிகளைப் பெரும் பிரிவுகளாகப் பிரிக்கும் கூறுகள். [தொடரி], [தாமதவிடுப்பு], [உரப்பு], [மருங்கி] ஆகியவை முயற்சிக் கூறுகள். [முன்வாய்], [முன்நா] ஆகியவை இடக் கூறுகள். [மேல்], [கீழ்], [பின்] என்பவை நா அமைப்புக் கூறுகள். [குவி] இதழமைப்புக் கூறு. விசுவு, குரல், உயிர்ப்பு, தொண்டைச்சார்பு ஆகியவைத் துணைக்கூறுகள். அழுத்தம், நெடுமை, இசை ஆகியவை மீக் கூறுகள்.

1.2.1.1 பெரும்பிரிவுக்கூறு

அசை, முழக்கம், மெய் என்பவை முயற்சிக் கூறுகள். இவை ஒலிகளை முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கின்றன. அடியில் உள்ள அட்டவணை இதனை விளக்கிக்காட்டுகிறது.

கூறு	வாய்த் தடை	மூக்கி/ ஒழுகி	அசை மூக்கி/ அசை ஒழுகி	தொண்டை உடம்படு மெய்	அரை உயிர்	உயிர்
அசை	—	—	+	—	—	+
முழக்கம்	—	+	+	—	+	+
மெய்	+	+	+	—	—	—

1.2.2 முயற்சிக் கூறு

முழக்கமில் ஒலிகளை வகைப்படுத்தும் அட்டவணை

கூறு	t	t^{θ}	t^{s}	θ	s	?	h
முழக்கம்	−	−	−	−	−	−	−
மெய்	+	+	+	+	+	−	−
தொடரி	−	−	−	+	+	−	+
தா.விடுப்பு	−	+	+				
உரப்பு		−	+	−	+		

1.2.3 முழங்கி

முழங்கிகளை வகைப்படுத்தும் அட்டவணை

கூறு	y	n	l	r
முழக்கம்	+	+	+	+
மெய்	−	+	+	+
மூக்கி		+	−	−
மருங்கி			+	−

1.2.4 பிறப்புக் கூறு

வாயறையில் ஒலிகள் பிறக்கும் இடத்தை அடிப்படையாகக் கொண்டு அவற்றைப் பிரிக்க உதவும் கூறுகள் [முன்வாய்] [முன்நா] ஆகியவையாகும்.

கூறு	p	t	c	k
முன்வாய்	+	+	−	−
முன்நா	−	+	+	−

1.2.5 நாவமைப்புக் கூறுகள்

நா வாயறையில் திரண்டமையும் இடத்தையும் நாவின் உயரத்தையும் ஒட்டி ஒலிகளை [பின்], [மேல்], [கீழ்] எனப்பிரிக்கலாம். இதனோடு இதழமைப்பையும் இணைத்தால் உயிர்களையும் இணை ஒலிப்பு ஒலிகளையும் பிரிக்க ஏதுவாகும். இக்கூறு [குவி] யாகும்.

1.2.6 நாவின் கிடையமைப்பு

கூறு	i	ü	u	ɨ
பின்	—	—	+	+
குவி	—	+	+	—

1.2.7 நாவின் உயர் அமைப்பு

கூறு	i	e	a	o	u
மேல்	+	—	—	—	+
கீழ்	—	—	+	—	—
குவி	—	—	—	+	+

அரை உயிர்கள், இணை உச்சரிப்பொலிகள் ஆகியவற்றை நா, இதழ் இவற்றின் அமைப்புகளால் வேறுபடுத்தலாம்.

கூறு	i	y	ü	ẅ	u	w
அசை	+	—	+	—	+	—
மெய்	—	—	—	—	—	—
மேல்	+	+	+	+	+	+
பின்	—	—	—	—	+	+
குவி	—	—	+	+	+	+

கூறு	p	p^y	p^w	t	t^y	t^w	k	k^y	k^w
முன்வாய்	+	+	+	+	+	+	−	−	−
முன்நா	−	−	−	+	+	+	−	−	−
மேல்	−	+	+	−	+	+	−	+	+
பின்	−	−	+	−	−	+	+	−	+
குவிவு	−	−	+	−	−	+	−	−	+

நா வாயறையில் வல்லண்ணம், மெல்லண்ணம், உள்நா ஆகிய இடங்களில் உற்றமையும்போது பிறக்கும் ஒலிகளை பிரிக்கும் வகையினை அடியில்உள்ள அட்டவணை விளக்குகிறது.

கூறு	வல்லண்ணம்	மெல்லண்ணம	உள்நா
முன்வாய்	−	−	−
முன் நா	+	−	
மேல்	+	+	−
பின்	−	+	+

1.2.8 துணைக்கூறுகள்

[விசுவு], [குரல்], [உயிர்ப்பு], [தொண்டைச்சார்பு] ஆகியவை உபரிப்பண்புகளையும் [அழுத்தம்], [நெடுமை], [இசை] ஆகியவை மீக்கூறுகளையும் குறித்து எஞ்சிய ஒலிப்பண்புகளை வகைப்படுத்த உதவுகின்றன.

1.3 முடிவு

இதுகாறும் நாம் கண்ட ஒலிக்கூறுகள் வேற்றுமைக் கூறு (distinctive feature) கள். இக்கூறுகள் மொழியொலிகளைத் தனித்து விளக்கவும் அவற்றின் பிறப்பு, முயற்சி ஆகியவற்றைக் கொண்டு ஒருங்கிணைக்கவும் எழுத்தியல், சொல்லியல் ஆகியவற்றில் அவை செயற்படும் முறைக்கு ஏற்பப் பொதுப்படுத்திக் கூறவும் தக்க வகையில் தொகுத்தும் வகுத்தும் காட்டற்கு எளிமையாகவும் சிக்கனமாகவும் திகழும் முகத்தான் அமைக்கப் பட்டுள்ளன.

துணை நூல்கள்

Chomsky, N. and Halle, M. 1968 *Sound Pattern of English*, New york, Harper & Row.

Shane, S.A. 1973 *Generative Phonology*, New york, Prentice-Hall.

மொழியியல் 9. 3 & 4 (1986)

தமிழ்த் தொடரனில் உள்வினைகள்

இரா. கோதண்டராமன்
திருவனந்தபுரம்

இப்பகுதியில் கோப்புத் தொடரனில் அமையும் உள்வினைகள் பற்றிச் சிந்திக்கப்படும். கோப்புத் தொடரன் என்று இங்கே நாம் குறிப்பிடுவது ஆங்கிலத்தில் குறிக்கப்பெறும் **complement clause** என்பதையாகும். இத்தொடரனுடன் இணைந்து நிற்கும் சவலை வினைகளாகிய என்று/என, என்ற, என்பது ஆகியவை உள்வினைக் குடும்பத்தைச் சேர்ந்தவையாக நமது ஆய்வில் கொள்ளப்படுகின்றன. இந்தச் சவலை வினைவடிவங்களைச் சொல்லியல் ஆய்வுக்கு உட்படுத்த முடியாது. ஆகவே இவ்வடிவங்களை என் என்னும் உள்வினையின் மாற்றுருபுகளாகக் கொள்வது பொருந்தும். இந்த மாற்றுருபுகளின் நிகழ்ச்சி தொடரனியற் சூழல்களால் கட்டுப்படுத்தப்படுகின்றது. மேலே குறிக்கப்பெற்றுள்ள என்று, என்ற, என்பது ஆகிய மூன்றனுள், இறுதியாக உள்ள உள்வினை சிறப்பு உள்வினையாகவும் அமையலாம். அவ்வாறு அமைகையில் அவ்வடிவம் பின்வரும் கிளவியாக்க விதியின்மூலம் வருவிக்கப்பெறும்.

(55) ஆகு +[+இருப்பு, +ஒருமை] > எனபது/— ஆவான், ஆவாள் முதலான சிறப்பு உள்வினைகள் சொல்லியல் ஆய்வுக்கு உட்படாதது போன்றே, (55)-இல் நிகழும் என்பது என்ற சிறப்பு உள்வினையும் சொல்லியல் ஆய்வுக்கு உட்படாது.

பொதுவாக ஆகு, என் இவற்றின் வழிப்பட்ட உள்வினைகளின் நிகழ்ச்சி தமிழ்த் தொடரனில் சிலவரையறைகளுக்கு உட்பட்டதாகவே தோன்றுகின்றது. ஆகு என்பது தனித் தொடரன்களைச் சார்ந்தும், என் என்பது கோப்புத் தொடரன்களைச் சார்ந்தும் நிகழ்வனவாகக் கருதலாம். இவற்றின் நிகழ்ச்சி வரையறைகள் பற்றி நாம் இங்கே முனைப்பாகச் சிந்திக்கப் போவதில்லை. என்று, என்ற, என்பது ஆகியவற்றை உள்வினைகளாகக் கொள்வதற்கான சான்றுகளைக் குறிப்பிடுவதே இந்தப் பகுதியின் முதன்மைக் குறிக்கோளாகும். இந்த வகையில் மூன்று சான்றுகள் இங்கே சிந்திக்கப்படுகின்றன.

முதல் சான்று

பின்வரும் எடுத்துக் காட்டுகளைக் கருத்தில் கொள்க.

(56) முருகன் என்ற மாணவன

(57) மாணவன் ஆகிய முருகன்

(58) மாதவி ஓர் நடிகை என்ற செய்தி

முதல் இரண்டு எடுத்துக்காட்டுகளில் என்ற, ஆகிய இரண்டும் சிதறிய வழக்கினவாய் (complementary distribution) அமைந்துள்ளன. இவற்றுள் ஆகிய என்பது உள்வினையாதலால், அதனுடன் சிதறிய வழக்கில் இருக்கும் என்ற என்னும் பெயரெச்ச வடிவமும் உள்வினையாகக் கொள்ளப்படும் தகுதியைப் பெறுகின்றது. இந்த உண்மை (58)-இல் காணப்படும் கோப்புத் தொடரனில் நிகழும் என்ற என்னும் பெயரெஞ்சு கிளவிக்கும் பொருந்தும். சான்று (3)-இல் இது மேலும் விளக்கம் பெறும். உருவகத் தொடர்களில் (எ-டு: அன்பு என்ற / ஆகிய வெள்ளம்) என்ற ஆகிய இரண்டும் செம்மை வழக்கில் (free variation) நிகழும் நிலை காணப் படுகின்றது. இத்தகைய நிகழ்ச்சியானது என்ற என்பது உள்வினை என்பதை மேலும் உறுதிப்படுத்துகின்றது.

இரண்டாவது சான்று

தனித் தொடரன்களில் பெயர்ப்பயனிலைகளையடுத்து நிகழும் ஒருவகை உள்வினை, மேற்படி தொடரன்கள் கோப்புத் தொடரன்களாகச் செயல்படும் போது தவிர்க்கப்பட்டு, பிறிதொரு வகை உள்வினை நிகழும் போக்கினைப் பின் வரும் எடுத்துக் காட்டுகள் மூலம் விளக்கலாம்.

(59) (அ) மாதவி ஓர் நடிகை (ஆவாள்)

(ஆ) மாதவி ஓர் நடிகையும் பாடகியும் ஆவாள்

இந்த எடுத்துக்காட்டுகளில முந்தியதில் நிகழும் உள்வினை அசைநிலை (optional)-த் தன்மையதாகவும், பிந்தியதில் அமைந்த உள்வினையானது உயிர்நிலை (obligatory)த் தன்மை யதாகவும் அமைந்தவையாகும்.

(60) (அ) [மாதவி ஓர் நடிகை {என்று / *ஆவாள்} [எல்லோருக்கும் தெரியும்

(ஆ) [மாதவி ஓர் நடிகையும் பாடகியும் {என்று / *ஆவாள்}] எல்லோருக்கும் தெரியும்

(59)-இல் தனித் தொடரன்களாக அமைந்த வாக்கிய அமைப்புக்கள் (60)-இல் கோப்புத் தொடரன்களாகின்றன. எடுத்துக் காட்டுகளில் நிகழும தனித்தொடரன்களிலும், கோப்புத் தொடரன்களிலும் காணப்படும் ஆவாள், என்ற ஆகிய இரண்டு சவலை வினைகளும் சிதறிய வழக்கினவாகின்றன. இவற்றுள் ஆவாள் எனபது உள்வினையாதலின், அதனுடன் சிதறிய வழக்கில் நிகழும் எனறென் கிளவியும் உள்வினையாகக் கொள்ளத் தக்கதாகின்றது. இரண்டிற்கும் இடையில் உள்ள ஒரே ஒரு வேறுபாடு முந்தியது சிறப்பு உள்வினையாக அமைய, என்றென் கிளவி பொது உள்வினையாகத் திகழ்கின்றது. இந்த இரு உள்வினைகளும் பின்வரும் கிளவியாக்க விதிகள்மூலம் வருவிக்கத் தக்கனவாகும்.

(61) (அ) ஆகு + [+இருப்பு, ·ஆண்பால்] > ஆவாள்/—[+.]

(ஆ) ஆகு + [+இருப்பு] > /என்று/—[.]

தனித் தொடரன்கள் கோப்புத் தொடரன்களாக நிகழ்கையில், மேற்படி தொடரன்களின் வலப்புறம் அமைந்த வாக்கிய எல்லை தவிர்க்கப்படுகின்றது. (61) (அ) -வில் [—.] வாக்கிய எல்லை இன்மையைச் சுட்டுவதாகும்.

மூன்றாவது சான்று

கோப்புத் தொடரன்கள் அமைந்த பின்வரும் பெயரெச்சத் தொடர் அமைப்புக்கள் பெரிதும் சிந்தனைக்குரியனவாகும்.

(62) (அ) அமைச்சர் வந்தார் என்ற செய்தி

(ஆ) அமைச்சர் வந்தார் என்பதாகிய செய்தி

(இ) அமைச்சர் வந்த செய்தி

(ஈ) அமைச்சர் வந்ததாகிய செய்தி

மேலே (62)-இல் அமைந்த நான்கு பெயரெச்சத் தொடர்களும் ஒரே பொருண்மையினவாகும். இப்பெயரெச்சத் தொடர்களில் நிகழும் உள்வினைகளைப் பின்வரும் அமைப்புக்களின்மூலம தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

(63) (அ) [[அமைச்சர் வந்தார்] என்ற] செய்தி

(ஆ) [[அமைச்சர் வந்தார் என்பது] ஆகிய] செய்தி

(இ) [[அமைச்சர் வந்து] அ] செய்தி

(ஈ) [[அமைச்சர் வந்தது] ஆகிய] செய்தி

இந்த அமைப்புக்களில் என்ற, ஆகிய, அ என்று மூன்று வகையான பெயரெச்ச வடிவங்கள் உள்ளன. இம்மூன்றும் சிதறிய வழக்கில் அமைந்துள்ளது கருத்தில் கொள்ளத்தக்கதாகும். இவற்றுள் ஆகிய என்பது பெயரெச்சமாய் அமைந்த உள்வினையாதலால், இதனுடன் சிதறிய வழக்கில் நிகழும் என்ற, அ ஆகிய இரண்டும் உள்வினைகளாகக் கொள்ளத் தக்கனவாகின்றன.

(63)-இல் உள்ள பெயரெச்சத் தொடர்கள் பின்வரும் அண்மை வாக்கியங்களுடன் தொடர்புடையனவாகும்.

(64) (அ) செய்தி [[அமைச்சர் வந்தார்] என்பது]

(ஆ) செய்தி [[அமைச்சர் வந்தார் என்பது] ஆகும்]

(இ) செய்தி [[அமைச்சர் வந்து] அது]

(ஈ) செய்தி [[அமைச்சர் வந்தது] ஆகும்]

இந்த நானகு அமைப்புக்களிலும் வாக்கியமாய் அமைந்த பெயர்ப் பயனிலைகளை அடுத்து நிகழும் **என்பது, ஆகும், அது** ஆகிய மூன்றும் சிதறிய வழக்கினவாய் அமைகின்றன. இவற்றுள் ஆகும் என்பது செய்தி என்னும் எழுவாயுடன் இயைபு கொண்ட சிறப்பு உள்வினையாதலால், அதனுடன் சிதறிய வழக்கில் நிகழும் **என்பது, அது** ஆகிய இரண்டும் சிறப்பு உள் வினைகளாகக் கொள்ளத் தக்கவையாகின்றன. இந்த உள் வினைகளும், இவற்றுக்கு நிகராக (63)-இல் நிகழும் பெயரெச்ச உள்வினைகளும் பின்வரும் கிளவியாக்க விதிகளின் மூலம் வரு விக்கற்பாலனவாகும்.

(65) ஆகு+[+இருப்பு, +ஒன்றன் பால்]> [என்பது / ஆகும் / அது] / [வந்தார் {வந்தார் / என்பது / வந்தது} வந்து] —

(66) ஆகு+ [+இருப்பு] > [என்ற / ஆகிய / அ] / [வந்தார் {வந்தார் / என்பது / வந்தது} வந்து] —செய்தி

மேலே (64) (ஆ)-வில் கோப்புத் தொடரனில் நிகழும் **என்பது** (64) (அ)-வில் நிகழும் **என்பது** என்பதினின்றும் வேறுபட்டதாகும். ஆனால் பிந்தியது உள்வினையாதலின் முந்தியதும் உள்வினையாகவே கொள்ளப்பெறும். இரண்டும் உள்வினைகள் என்ற போதிலும் (ஆ)-வில் உள்ளது பொது சிறப்பு உள்வினை **(impersonal copula)**ப் பயனிலையும், (அ)-வில் உள்ளது சிறப்பு

உள்வினை (personal copula)ப் பயனிலையும் ஆகும். முந்தியது கோப்புத் தொடரனுக்கு உரிய உள்வினைப் பயனிலை. இதன் பயனிலைத் தொடர் [வந்தார்+என்பது] என்பதாகும். (அ)-வில் உள்ள என்பது என்னும் உள்வினை [அமைச்சர் வந்தார்] என்பதனைப் பயனிலையாகக் கொள்கின்றது. (ஆ)-வில் உள்ள கோப்புத் தொடரனில் அமைந்த என்பது என்னும் உள்வினையின் நிகழ்ச்சியைக் கருத்தில் கொண்டு, (64)-இல் நிகழும் கோப்புத் தொடரன்களின் உள்வினையமைந்த பயனிலையமைப்பினைப் பின்வருமாறு சுட்டலாம்.

(67) (அ) அமைச்சர் [[வந்த்] ஆர்]

(ஆ) அமைச்சர் [[வந்தார்] என்பது]

(இ) அமைச்சர் [[வந்து] φ]

(ஈ) அமைச்சர் [[வந்து] அது]

இந்த அமைப்புக்களில் என்பது உள்வினையாதலால், அதனுடன் சிறிய வழக்கில் இருக்கும் ஆர், அது இரண்டும் உள்வினைகளாகக் கொள்ளத்தக்கனவாகின்றன. 67(இ)-யில் இந்த உள்வினை உருவிலி (unmarked)-யாக உள்ளது. (67)-இல் உள்வினைகளாக நிகழும் ஆர், என்பது, அது ஆகியவற்றுள் ஆர் என்பதைத் தவிர ஏனைய இரண்டும் பொது உள்வினைப் பயனிலைகளாகும்.

மேலே (64) - இல் குறிக்கப் பெற்றுள்ள வாக்கியங்கள் (63) - இல் அமைந்துள்ள பெயரெச்சத் தொடர்களுடன் தொடர்புடைய அண்மை வாக்கியங்கள் என்பது முன்னர் சுட்டப் பெற்றது. இந்த அண்மை வாக்கியங்களின் வேர் பின்வரும் சேய்மை வாக்கியங்களாகும்.

(68) (அ) [அமைச்சர் வந்தார் என்பது] செய்தி

(ஆ) [அமைச்சர் வந்தார் என்பது] செய்தியாகும்.

(இ) [அமைச்சர் வந்தது] செய்தி

(ஈ) [அமைச்சர் வந்தது] செய்தியாகும்

இந்த அமைப்புக்களில் கோப்புத் தொடரன்கள் எழுவாயாகச் செயல்படுகின்றன. முதல் இரண்டு கோப்புத் தொடரன்களில்

என்பது பொது உள்வினைப் பயனிலையாக நிகழ்கின்றது. இவ்வாறே பிந்திய இரண்டிலும் வந்தது என்பதில் உள்ள அது என்னும் வடிவம் பொது உள்வினைப் பயனிலையாக அமைகின்றது. இதனைக் கருத்தில்கொண்டு (68) - இல் நிகழும் கோப்புத் தொடரன்களின் பயனிலைத் தொடர் அமைப்பினைப் பின்வருமாறு விளக்கலாம்.

(69) (அ) அமைச்சர் [[வந்தார்] என்பது]
(ஆ) அமைச்சர் [[வந்து] அது]

இந்த அமைப்பில் என்பது, அது இரண்டும் சிதறிய வழக்கில் நிகழ்வதால் அது என்பது உள்வினையாகக் கொள்ளத் தக்கதாகின்றது. இந்த இரண்டு உள்வினைகளும் பின்வரும் கிளவியாக்க விதியின் மூலம் வருவிக்கத் தக்கவையாகும்.

(70) ஆகு + [+இருப்பு] > [என்பது / அது] / [வந்தார் / வந்து] —

கோப்புத் தொடரன்கள் பொருந்திய சேய்மை வாக்கியங்கள் அண்மை வாக்கியங்களாக மாற்றப்படும்போது முந்தியவற்றில் உள்ள பயனிலை அமைப்புக்கள், பிந்தியவற்றில் போற்றப் படாமல் போகின்றன. காரணம், அண்மை வாக்கியங்களில் புதிதாக ஓர் பெயர்நிலைக் கிளவி தோன்றி எழுவாயாகச் செயல்படுவதுதான். இந்தப் புதிய எழுவாய் தனக்கு வேண்டிய உள்வினைகளைச் சேய்மை வாக்கியங்களில் அமைந்த பயனிலைத் தொடரின் அமைப்புக்களை மாற்றியமைப்பதன் மூலம் பெற்றுக் கொள்கின்றது. எடுத்துக்காட்டாக (68) (அ), (இ) இவற்றில் கோப்புத் தொடரனில் அமைந்த என்பது, அது ஆகிய இரு உள்வினைப் பொதுப் பயனிலைகளும் பிரிக்கப்பட்டு, 64 (அ), (இ)-யில் புதிய எழுவாய்க்குரிய சிறப்பு உள்வினைப் பயனிலைகளாக மாற்றப்படுகின்றன. இதன் விளைவாக 64 (அ), (இ)-யில் பயனிலைத் தொடர் அமைப்பில் மாறுபட்ட இரண்டு கோப்புத் தொடரன்கள் இடம் பெறுகின்றன. சேய்மை வாக்கியங்கள் அண்மை வாக்கியங்களாக மாறும்போது கோப்புத் தொடரனில் நிகழும் இந்த மாற்றத்தைப் பின்வருமாறு புலப் படுத்தலாம்.

சேய்மை வாக்கியம்		அண்மை வாக்கியம்
(71) (அ)	அமைச்சர் [[வந்தார்] என்பது] >	அமைச்சர் [[வந்த்]ஆர்] என்பது
(ஆ)	அமைச்சர் [[வந்த்] அது] >	அமைச்சர் [[வந்த்] ϕ] அது

சேய்மை வாக்கியங்களில் நிகழும் என்பது, அது ஆகிய இரண்டு பொது உள்வினைகளும், அண்மை வாக்கிய அமைப்பில் செய்தி என்னும் எழுவாய்க்குரிய சிறப்பு உள்வினைப் பயனிலைகளாக மாறியமையும் நிலையையே (71) - இல் விளக்கப் பெற்றுள்ளது.

பகுதி-3

மிகச் சுருக்கமாய் அமையும் இப்பகுதியில் வினை முற்றுக்களில் உள்வினையின் சேர்மானம் பற்றி ஓரளவு சிந்திக்கப் பெறும்.

எவற்றை மரபிலக்கணங்கள் முற்றுவிகுதிகள் என்ற சுட்டு கின்றனவோ அவற்றை நாம் உள்வினைகள் என்று முதல் இரண்டு பகுதிகளிலும் நிகழ்த்திய ஆய்வின்மூலம் நிறுவியுள் ளோம். மலையாளத்துக்கும் தமிழுக்கும் உள்ள வேறுபாடு உள்வினைகளாகிய முற்று விகுதிகளை முந்தியது தவிர்க்க, அவற் றைப் பிந்தியது விடாமல் பற்றிக்கொண்டது. பற்றிக்கொண்ட தோடு மட்டுமல்லாமல் அவற்றை விகுதி நிலைக்கும் தமிழ் மாற்றியமைத்துக் கொண்டுவிட்டது. இதன் விளைவு, முற்று விகுதிகள் உள்வினைகள் என்ற உண்மை மறக்கப்பட்டது.

செய்யும் வாய்பாட்டு வினைகளைப் பொறுத்தவரையில், தமிழ் மலையாளத்துடன் இசைந்து செல்கின்றது. இந்த வாய் பாட்டு வினைகளில் மலையாளத்தைப் போலவே தமிழிலும் உள்வினை நிகழ்ச்சி தவிர்க்கப்பட்டுள்ளது.

உள்வினைத் தன்மை பொருந்திய முற்று விகுதிகளை வினை முற்றுக்களினின்றும் பிரித்து எடுத்துவிட்டால், திராவிட வினை முற்றுக்கள், அடிப்படையில் பொது வினைமுற்றுக்கள் **(imper sonal finite verbs)** என்ற உண்மை தெள்ளிதின் விளங்கும். கோப்புத் தொடரன்கள் மீது நாம் நிகழ்த்திய ஆய்வு இந்த

உண்மையை மேலும் தெளிவுபடுத்துகின்றது. (63) (இ), (64) (இ) ஆகியவற்றில் நிகழும் வந்து என்னும் பொது வினை முற்றினை இந்தவகையில் கருத்தில் கொள்ளவும். 67(இ)-யில் உள்ள வினைமுற்றும் இதைப்போன்றதே.

உள்வினையானது பெயரைச் சார்ந்தே நிகழும் தன்மைய தாகும். வினைமுற்று விகுதிகள் உள்வினைகளாக இந்த ஆய்வில் நிறுவப் பெற்றுள்ளதால் மேற்படி விகுதிகள் சார்ந்து நிற்கும் வினையமைப்புக்கள் பெயர் நிலைக்கிளவிகளாகக் கொள்ளத் தக்கவையாகின்றன. உள்வினை நிகழ்ச்சியால் வினைமுற்றுக்கள் பெயர்களாக மாறவில்லை, மாறாக வினைமுற்றுக்கள் பெயர் நிலைக்கிளவிகளாக இருப்பதால்தான் அவற்றையடுத்து உள்வினைகள் நிகழ்கின்றன. இதன்மூலம் வினைமுற்றுக்களின் பகுதிகளாகிய வினையடிகள் பெயராகக் கொள்ளப்படும் தகுதியைப் பெறுகின்றன. இதனைக் கருத்தில் கொண்டால், பெயராக்க விதிகள் (nominalization rules) என்று மொழியியல் அறிஞர்களால் குறிக்கப் பெறுவன பொய்ம்மைத் தன்மையனவாகிய விதிகள் என்பது புலனாகும்.

துணை நூல்கள்

கோதண்டராமன், இரா. 1979, ''மள்ளர் கையதை கூர்வாள்'' மொழியியல், தொகுதி 2, எண் 4. மொழியியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.

1979-80 ''அறிந்த முகங்களில் அறியாத முகங்கள்'' மொழியியல், தொகுதி 2, எண் 2&3, மொழியியல் துறை, அண்ணா மலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.

1980, ''பயனிலை: அகமும் புறமும்,'' மொழியியல் தொகுதி 4, எண் 1&2, மொழியியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர்.

மொழியியல் 9. 3 & 4 (1986)

விவசாயத் தொழில் கலைச்சொற்கள் - ஓர் ஒப்பாய்வு

மு. முருகேசன்

அட்டவணை - 3

3. பாண்டிச்சேரி பகுதிக்கே சிறப்பாக உரிய சொற்கள்

3.1 இயற்கைத் தொடர்புடைய சொற்கள்

1. ஏரி	மிகப் பெரிய நீர்நிலை
2. கறெண்டு (current)	குழாய்க்கிணறு
3. காணி	11/3 ஏக்கர் அளவுள்ள நிலத்தின் அளவு
4. கொல்லிமேடு	புன்செய் நிலம்
5. தாவாய்க்கா (தாய் வாய்க்கால்)	குழாய்க்கிணற்றிலிருந்து தண்ணீர் வரும் பெரிய வாய்க்கால்
6. பூஞ்சி	சிறுபாத்தி வரப்பு
7. மஞ்சி	சிறுபாத்தி வரப்பு

8.	மானாவாரி (நிலம்)	மழையை நம்பிப் பயிர் செய்யப்படும் (நிலம்)
9.	முக்கா	நிலத்தின் பிரிவு தனி வயல்
10.	தத்தி	தனி வயல்

3.2 கருவிகள்

3.2.1 ஏற்றம்

11.	அலெகும் (அலகம்)	ஏற்றத்தின் குத்துக்கல்லின் மேல் இருக்கும் இரண்டு மரப்பலகைகள்
12.	ஏத்தக்கோல் (ஏற்றக்கோல்)	ஏற்றத்தில் சால் இணைக்கப் பட்டிருக்கும் கோல் (கழி)
13.	ஏர்க்கவெளெ (ஏர் கவளை)	கவளை என்கின்ற ஒருவகை ஏற்றம்
14.	கண்ணெட (கண்ணடை)	ஏற்றத்தின் குறுக்குமரத்தையும் ஏற்றக்கோலையும் இணைக்கும் இடம்
15.	குத்துக்கல்லி (குத்துக்கல்)	ஏற்றம் தயார் செய்ய செங்குத்தாக நிறுத்தப்படும் கருங்கல். இதன் மீது அலகம் வைக்கப் படும்
16.	கூழெ (கூழை)	ஏற்றத்தின் குறுக்குமரத்தின் பின்பகுதியில் பளு இருக்கும் இடம்
17.	சுல்லாணி	அலகத்தின் இடையே செல்லும் மரம்
18.	சுத்துக்கவளெ (சுற்றுக்கவளை)	மாடுகட்டிச் சுற்றிவரும் ஏற்றம்
19.	திரிக்குச்சி	குறுக்குமரத்தையும் நெடுமரத்தையும் இணைக்கும் பகுதியில் இருக்கும் மரக்கட்டை

20.	தொட்டி ஏத்தம்	ஏற்றத்தில் ஒருவகை (சிறிய ஏற்றம்)
21.	தொட்டி ஓடுறெது (தொட்டி இறைக்கிறது)	தொட்டி ஏற்றம் இறைப்பதைக் குறிப்பிடுவது
22.	தொட்டி கட்டெ (தொட்டி கட்டை)	தொட்டி ஏற்றத்திற்குப் பயன் படும் மரம்
23.	நீர் பானை	ஏற்றத்தின் சால்
24.	படி	பெரிய ஏற்றத்தின் மீது ஆள் நடப்பதற்காக மரத்தின் மீது வைக்கப்பட்டிருக்கும் படி
25.	பனுசுகல்லி (பனுசுகல்)	இக்கல்லின் மீது சாலை வைத்து சாய்த்து நீரை ஊற்று வர்
26.	பிலிமொகம் (புலிமுகம்)	குறுக்குமரம் - இதன்மீது படிகள் இருக்கும் (இதன்மீது ஆள் நடப் பர்)
27.	புலீச்சானிக்கழி	ஏற்றத்தின் ஆள் நடந்து செல லும்போது அவர் கைப் பிடிப்ப தற்காகக் கட்டப்பட்டுள்ள கழி
28.	பெரிய ஏத்தம் (பெரிய ஏற்றம்)	ஏற்றத்தில் ஒருவகை (மிகப் பெரிய ஏற்றம்)
29.	முக்காணி	சாலின் குறுக்காக இருக்கும் இரும்புக்கம்பி
30.	மின்னூசி (முன்ஊசி)	ஏற்றக்கோலையும் குறுக்குமரத் தையும் (புலிமுகம்) இணைக்கும் பகுதியில் உள்ள குச்சு
31.	மெரிக்கல்லி (மிதிகல்)	நீரை இறைக்கக் கிணற்றுக்குள் ஆள் நிற்பதற்காகக் கிணற்றின் குறுக்கே போடப்பட்டிருக்கும் கருங்கல்

3.2.2 மற்றவைகள்

32.	ஒண்டி	கலப்பையில் கொழுவை வைத்து வடிக்கப்படும் வளைவான ஆணி
33.	ஒரெ (உரை)	தானியங்களைச் சேமித்துவைக்க உதவும் மண்ணாலான கொள் கலன்
34.	கவெனெ (கவளை)	மாட்டைக்கட்டி ஓட்டித் தண் ணீர் இறைக்கும் ஒருவகை ஏற்றம்
35.	முத்திரெதட்டு (முத்திரைதட்டு)	நெற்குவியல்மீது அடையாள முத்திரை இடும் தட்டு (முத்திரை இட்ட நெற்குவியலை பட்டறை என்பர்)

3.4 பயிர்

36.	அசம்பு	பயிரினூடே வளரும் சிறுபுல் (களை)
37.	கட்டெ போடுறெது (கட்டை போடுதல்)	விதை மற்றும் செடி போடுவதற் காகச் சிறுகுழி வெட்டுதல்
38.	கண்ணி	மணிலாக்கொட்டையில் காய் விடும் வேர்ப்பபகுதி
39.	கால் இழுக்குறெது (கால் இழுத்தல்)	விதை மற்றும் செடி போடுவதற் காகப் வெட்டப்பட்டிருக்கும் சிறுவாய்க்கால் போன்ற பகுதி
40.	குருவெகாரு (குருவை கார்)	குறைந்த நாட்களில் விளையும் சிகப்பு நிறமுள்ள ஒருவகைநெல்
41.	சம்பாகாரு (சம்பா கார்)	அதிக நாட்களில் விளையும் சிகப்பு நிறமுள்ள ஒருவகை நெல்
42.	சீட்ட கதிரு (சீட்டை கதிர்)	பருவம் முடிந்தபின் விடும் சிறு கதிர்

43.	சோலெ உரிக்கிறெது (சோலை உரித்தல்)	கரும்பு, சோளம் இவைகளுக்கு எடுக்கப்படும் களை (கரும்பு, சோளம் இவற்றில் காய்ந்து தொங்கும் சோலை உரித்துச் சுத்தம் செய்தல்)
44.	பயிறு ஏத்தெறெது (பயிர் ஏற்றுதல்)	பயிர் வளர்த்தல்
45.	பயிறு வழி	பயிர்த்தொழில் செய்தல்
46.	விட்டம் கட்டுறெது (வீட்டம் கட்டுதல்)	கரும்பு, சோளம் இவைகள் விழாமல் இருக்க அவற்றை ஒன்றோடு ஒன்று சேர்த்துக் கட்டுதல்

3.5. அறுவடை

47.	அடி அறப்பு	பயிரை அடியோடு அறுவடை செய்தல்
48.	அம்பாரம்	களத்தில் நெல்லைக் குவித்து வைத்தல்
49.	கதிர் அறுப்பு	கதிரை மட்டும் அறுவடை செய்தல்
50.	கத்தபோரு (கத்தைப்போர்)	அறுவடை செய்த கதிர்களைக் கட்டி வந்து களத்தில் போராக வைத்தல்
51.	குடுக்கெ (குடுக்கை)	பருத்திக்காயின் மேல் ஓடு
52.	சவலக்கொட்டெ (சவலக்கொட்டை)	தரமில்லாத தானியக்கொட்டைகள்
53.	சலங்கெ (சலங்கை)	எள்ளை பிரித்தெடுத்தப்பின்பு உள்ள எள்ளுச்செடி
54.	சூடு	நெற்கதிர் தண்டு சேர்ந்த தொகுதி
55.	பூட்டெ (பூட்டை)	மணி இல்லாத (சோடை) கதிர்

56.	வாட்டபோரு (வாட்டப்போர்)	நெல்லை வைக்கோலிலிருந்து பிரித்து எடுத்தபின்பு வைக் கோல்தாளை நீளவாக்கில் போராக போடுதல்

3.6 பழக்க வழக்கங்கள்

57.	அருநீரு (அருநர்)	கிணற்றில் நீர் ஆழத்தில் இருப் பதைக் குறித்தல்
58.	தொட்டி எறெக்கி றெது- (தொட்டி இறைத்தல்)	தொட்டி ஏற்றம் இறைத்தல்
59.	தொட்டி ஓடெறெது (தொட்டி இறைத்தல்)	தொட்டி ஏற்றம் இறைத்தல்
60.	பயிர் வழி	பயிர் செய்தல்
61.	மேல் நீரு (மேல் நீர்)	கிணற்றில் நீர் மேல்பகுதியில் இருப்பதைக் குறித்தல்
62.	வட்டம்	500 சால் நீரை ஏற்றம் மூலம் இறைப்பதைக் குறிக்கும் சொல்
63.	ஏத்தப்பாட்டு (ஏற்றப்பாட்டு)	ஏற்றம் இறைக்கும்போது பாடப் படும் பாட்டு

அட்டவணை - 4

4. காரைப்பகுதிக்கே சிறப்பாக உரிய சொற்கள்

4.1 இயற்கைத் தொடர்புடையன

1.	ஊர்ச்சமுதாயம்	வயல்களுக்கு இடையே அல்லது ஆற்றின் கரைப்பகுதியில் உள்ள மேட்டு நிலம். இது அப்பகுதி யில் நிலம் உள்ளவர்களுக்கு மட்டுமே சொந்தமாகும். இங் குக் கட்டுஅடித்தல், போரடித் தல், வைக்கோல் போர் போடு தல் போன்ற வேலைகள் நடை பெறும்

2.	கட்டெள (கட்டளை)	வயல்கள் சேர்ந்த ஒரு பகுதி
3.	கவெணெ (கவணை)	வாய்க்காலின் குறுக்கே போடப் படும் அணை
4.	கண்ணிக்கா (கன்னிக் கால்)	சிறுவாய்க்கால்
5.	குண்டு	தனித்தனி வயலைக் குறிக்கும் சொல்
6.	தாக்கு	வயல்கள் சேர்ந்த ஒரு பகுதி
7.	படுவெ (படுகை)	ஆற்றங்கரையின் இருமருங்கி கிலும் இருக்கும் மேட்டுநிலம்
8.	பயிர்ச்செலு (பயிச்சல்)	குத்தகை சாகுபடி
9.	மா	நிலத்தின் அளவு (1/3 ஏக்கர்)
10.	வயலு (வயல்)	நெல் பயிரிடப்படும் இடம்
11.	வாறெ (வாறை)	நீளவாக்கில் உள்ள தனிவயல்
12.	வாமடெ குண்டு (வாய்மடைகுண்டு)	வாய்க்காலிலிருந்து நீர் முதலில் பாயும் வயல்
13.	வேலி	நிலத்தின் அளவு (63/4 ஏக்கர்)

4.2 கருவிகள்

14.	ஆடுகால் மரம்	கவையுள்ள ஒதியமரம். இது ஏற்ற மரத்தின் செங்குத்து மர மாக பயன்படுத்தப்படும் மரம்
15.	ஏத்தமரம் (ஏற்றமரம்)	குறுக்காக உள்ள நீண்ட பெரிய மரம்
16.	பத்துக்கோல் (பற்றுகோல்)	சால் இணைக்கப்பட்டிருக்கும் கோல்
17.	பாலாடக்கட்டெ (பாலர்டைக்கட்டை)	பனைமரத்தின் அடிப்பகுதியை வெட்டிநீர் ஓட வாய்க்கால் போல் பயன்படுத்தப்படும் மரம்

18.	மிதியடி	கிணற்றுக்குக் குறுக்காகப் பொருத்தப்பட்டிருக்கும் மரம். இதன் மீது ஆள் நின்றுகொண்டு தண்ணீர் இறைப்பர்

4.2.2 மற்றவைகள்

19.	அறெப்பருவா (அறுப்பு அரிவாள்)	நெல் அறுவடை செய்ய உதவும் அரிவாள்
20.	எறக்கூடெ (இறைக்கூடை)	தண்ணீர் இறைக்கப் பயன்படும் மூங்கிலால் செய்யப்பட்ட கூடை
21.	கிட்டி	வயல்களில் எலி பிடிக்க உதவும் சாதனம்
22.	குறிமொந்தெ (குறிமொந்தை)	நெற்குவியல் மீது அடையாளம் போடஉதவும் சாதனம். (இதில்) சாணத்தைக் கரைத்து ஊற்றி அதனால் அடையாளக் குறி இடுவர்

4.3 நாற்று

23.	குப்பெ (குப்பை)	ஐந்து நாற்று முடிகள் கொண்ட தொகுதி
24.	கூலியாள் முடி	கூலியாள் பறிக்கும் நாற்றுமுடி (அளவில் சிறியதாக இருப்பது)
25.	கொக்கு நோவு (கொக்கு நோய்)	நாற்றைப் பாதிக்கும் ஒருவகையான நோய் (பூச்சி)
26.	கோட்டெ கட்டுறெது (கோட்டைகட்டுதல்)	விதை நெல்லைச் சேகரித்து வைக்க வைக்கோலால் கோட்டை கட்டுதல்
27.	கோட்டை போடுறெது (கோட்டை போடுதல்)	விதை தெளிக்கும் முன்பு விதையை ஊறவைக்கும் பொருட்டு கோட்டையைத் தண்ணீரில் போட்டு ஊறவைத்தல்

28.	கோட்டை மெழுவ றெது (கோட்டை மெழுகுதல்)	கட்டிய கோட்டையைச் சாணத் தால் மெழுகுதல்
29.	கோடெ புழுதி (கோடைபுழுதி)	கோடைக்காலத்தில் மழை பெய்த உடன் உழும் உழவு
30.	கொழப்படி	நாற்றங்காலில் விதை பள்ளத் தில் போய் ஒன்றாய் சேர்தல் (நாற்றங்கால் சமமில்லாமல் இருத்தல்)
31.	தட்டடி	விதை தெளிக்கும் நாற்றங் காலைக் கால் அடிவைத்து பாத்தி போலப் பகுதி பகுதி யாகப் பிரித்தல்
32.	தோண்டிக்கா (தோண்டிக்கால்)	விதை தெளித்து மறுநாள் நாற்றங்காலிலிருந்து தண் ணீரை வடிகட்டப் போடப் படும் சிறுவாயக்கால்
33.	தோண்டிக்கா போடுறெது (தோன்டிக்கால் போடுதல்)	விதை தெளித்த மறுநாள் நாற் றங்காலிலிருந்து தண்ணீரை வடிகட்ட சிறுவாய்க்கால் போடுதல்
34.	பொணெயெ (பிணையல்)	பத்து நாற்று முடிகள் கொண்ட தொகுதி
35.	விதெப்பகெ (விதைப்பகை)	விதை தெளித்த அன்று இரவு பெய்யும் மழை (மழையினால் விதை பாதிக்கப்படுதல்)

4.4 பயிர்

36.	ஒட்டடெ (ஒட்டடை	முதல் போகத்தில் விதை விடும் போது ஒட்டடை நெல்விதையும் கலந்து விதைவிட வேண்டும். பின்பு முதல் போகம் அறு வடை செய்து முடிந்தவுடன்

		இரண்டாவது போகத்திற்கு அதுவாகவே வளர்ந்திருக்கும். புதியதாக நடவேண்டியது இல்லை. (இவ்வகை நெல்லால் ஒருமுறை நட்டு இரண்டு முறை அறுவடை செய்யலாம்)
37.	சமஞ் சாலு (சமன் சாலு)	நடவு போட சமமாக உழும் உழவு
38.	தரிசு வெட்டு	தரிசு நிலத்தை வெட்டுதல்
39.	நடவு சேறு	நடவு போட உழும் சேறு
40.	பவண்டெ (பவண்டை)	ஒருவகை களைப்பூண்டு
41.	கலெப்பு (கலப்பு)	மற்றவகை நெல்களில் கலப்பு (ஐ.ஆர். 20 நெல்லில் சம்பா, ஐ.ஆர். 8 மற்றும் டி.கே.எம். 9 போன்ற பல நெல்கள் கலந்தது)
42.	மூணடிப்பட்டம்	மூன்று அடி அகலத்திற்குப் பட்டம் பட்டமாக நட்டுக் கொண்டு செல்லுதல்

4.5 அறுவடை

43.	கண்ட கூலி	அறுவடை செய்த நெல்லுக்குத் தகுந்தவாறு கொடுக்கப்படும் கூலி (ஒரு மூட்டை நெல் அறுவடை செய்தால்)
44.	கண்டு மொதெ (கண்டு முதல்)	அறுவடை செய்து கிடைத்த தானியம் (விளைந்த விளைவு)
45.	கும்புட்டம்	அறுவடை செய்யும் ஆட்கள் யாருடைய அறுவடை என்று தெரிந்துகொள்ள வைக்கப்படும் அடையாளம் (இது அறுவடை செய்த கதிரை (×) பெருக்கல் குறி அல்லது (+) கூட்டல் குறி போல் வைப்பதாகும்.

46.	கோட்டு	இரண்டு மூன்று அரிகளின் சேர்க்கை
47.	புதிர் அறெக்குறெது (புதிர் அறுத்தல்)	புதியதாக விளைந்ததில் முதன் முதலாக அறுவடை செய்தல்
48.	மறுகளெம் பாயிறெது (மறுகளம் பாய்தல்)	கட்டு அடிக்கும்போது சிந்து தல்/ சிதறுதல்
49.	மேனி	விளைச்சலின் விழுக்காடு
50.	வீதம்	விளைச்சலின் விழுக்காடு

4.6 பழக்க வழக்கங்கள்

51.	அத்துக்கூலி ஆளு	தினக்கூலி ஆள்
52.	எராங்கடெசி (எராங்கடைசி)	(அந்த) ஆண்டின் கடைசி அறுவடை
53.	கிடெ கட்டுறெது (கிடை கட்டுதல்)	ஆடு அல்லது மாடுகளின் கூட்டங்களை இரவு நேரங் களில் வயலில் சாணி இடுவதற் காக மறைத்து (அடைத்து) வைத்தல்
54.	கூலி பிச்சை (கோட்டை)	வெட்டியானுக்கு அறுவடை களத்தில் கொடுக்கப்படும் நெல். (இது நில உரிமையாளர் கூலிக்கு அறுவடை செய்யும் வேலையாட்களுக்குக் கொடுப் பது)
55.	கோட்டெ	விதை நெல்லைச் சேமித்து வைக்கும் பொருட்டு வைக் கோலால் கட்டப்படும் கூடை போன்ற அமைப்பு
56.	கோட்டை கட்டுரெது (கோட்டை கட்டுதல்)	கோட்டை கட்டுதல்

57.	கோட்டெச் சேரு (கோட்டைச்சேர்)	கட்டியகோட்டைகளை ஒன்றாக அடுக்கி (சுமார் 50 அல்லது அதற்கு மேற்பட்ட) பாதுகாக்க வைக்கோலால் கட்டப்படும் சிறுவீடு போன்ற அமைப்பு
58.	சாவுடி (சாகுபடி)	பயிர்த்தொழில் - குத்தகை சாகுபடி
59.	சுதந்தெரம் (சுதந்திரம்)	கிராம வேலையாட்களுக்குக் கொடுக்கப்படும் கூலி
60.	தசுக்கூலி நெல்லு (தசுக்கூலி நெல்)	கூலிக்காக கொடுக்கப்படும் நெல்
61.	திட்டி	வேலைக்கு வராத நாட்கள்
62.	பண்ணெக்கு நிக்கிறெது (பண்ணைக்கு நிற்றல்)	ஒரு ஆண்டிற்கு வேலை செய்ய ஒப்பந்தம் செய்து வேலை செய்தல்
63.	பொனனேரு கட்டுறெது (பொன்னேர் கட்டுதல்)	ஆண்டின் முதன் முதலில் படைத்துச் சேற்றில் கட்டப் படும் ஏர்
64.	மனக்கொல்லெ (மனக்கொல்லை)	வயலில் வேலை செய்யும் ஆட்களுக்கு இலவசமாகக் கொடுக்கப் படும் நிலம் (தொடர்ந்து வேலை செய்யும் ஆட்களுக்கு மட்டும் மிகவும் அதிகம் நிலம் உள்ள நிலக்கிழார்கள் கொடுப்பது) அந்த நிலத்தில் அந்த ஆள் உழுது பயிரிட்டு எடுத்துக் கொள்ளலாம். (சுமார் 1 ஏக்கர் ஆள் ஒன்றுக்கு)
65.	விரெ மூர்த்தம் (விதை முகூர்த்தம்)	விதை தெளிப்பதற்கு முன்பு விதைதெளிப்பதற்காக நடத்தப் படும் சடங்கு

66. மாலெ வக்கிறெது (மால் வைத்தல்)	கோடைக்காலத்தில் வயலில் மேடான பகுதியில் எடுக்கப் படும் மண் (3 அடி அகலத்திற்கு தேவையான நீளத்தில் மண் எடுத்தல்)

துணை நூல்கள்

இராஜகுமாரி, கே.வி. 1980. "மீனவர் தமிழில் கலைச் சொற்கள் - ஓர் ஒப்பாய்வு", **மொழியியல்** 4.1 & 2.

சீனிவாசவர்மா, கோ. 1979. "வட்டார வழக்கில் வேளாண்மை கலைச் சொற் கள்," **மொழியியல்** 3.2 & 3.

மகேசுவரன், சி. 1981. "கள் இறக்குவோர் பேச்சில் கலைச்சொற்கள்" **மொழி யியல்** 5:2.

Srinivasavarma, G. 1973. "Technical Vocabularies in a Tamil Dialect", *A:yvukko: vai* 5, Madras.

மொழியியல் 9. 3 & 4 (1986)

மொழியியலும் மொழிப்பொதுமைகளும்

கி. அரங்கன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

மொழியை நாம் இருவிதங்களில் அணுகலாம். மொழியைப் புறநடத்தைகளில் (BEHAVIOUR) ஒன்றாகப் பார்ப்பது ஒருவித அணுகுமுறை; இன்னொரு அணுகுமுறை அதை அறிவாகப் (KNOWLEDGE) பார்ப்பது. மொழியை ஆராயும் மொழியிய லாளர்கள் இவ்வணுகுமுறைகளில் வேறுபட்டு வித்தியாசமான கோட்பாடுகளை நிறுவுகிறார்கள். அமைப்பு மொழியிய லாளர்கள் (STRUCTURAL LINGUISTS) புற நடத்தைகளில் ஒன்றாக மொழியைக் கருதுகிறார்கள். பலவகையான பழக்கங் களுள் (HABITS) ஒன்றாகப் பேச்சையும் இவர்கள் கருதுகிறார் கள்.[1] 'செந்தமிழும் நாப் பழக்கம்' என்று நம் பெரியவர்கள் குறிப்பிட்டதை நாம் இப்பொழுது நினைவுகூரலாம். அமைப்பு மொழியியலாளர்கள் 'மொழியை வாய்மொழிக் குறியீடுகள்

. தமிழ்ப் பல்கலைக்கழகப் புதன் வட்டக் கருத்தரங்கில் இக்கட்டுரை படிக்கப்பட்டது. விவாதத்தில் பங்குகொண்ட பேராசிரியர்களுக்கும், ஆய்வாளர் நண்பர்களுக்கும் நன்றி.

என்றும் இவற்றின் மூலம் ஒரு சமுதாயக் குழு ஒத்துழைக்கிற தென்றும் இக்குறியீடுகள் இடுகுறித் தன்மையன என்றும் குறிப் பிடுகிறார்கள்.[2]

மொழியை அறிவாகப் பார்ப்பது மேலே குறிப்பிட்ட அணுகுமுறைக்கு முற்றிலும் மாறானது. ஒரு மொழியைப் பேசுகின்ற மக்களது மொழி அறிவை விளக்குவதுதான் மாற்றிலக் கணம் என்பது இவர்கள் கூற்று.[3] மாற்றிலக்கணம் (TRANSFORMATIONAL GENERATIVE GRAMMAR) மொழியை முற்றிலும் மாறுபட்ட இக்கோணத்திலிருந்து பார்க்கிறது. மொழி என்பது எண்ணிறந்த வாக்கியங்களைக் கொண்டது. இவ்வாக்கியங்கள் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள் அடங்கும் விதிகளைக் கொண்டு உருவாக்கப்படுகின்றன. புதிய புதிய சூழலில் புதிய புதிய வாக்கியங்களை நாம் படைக்கிறோம். அதேபோல் புதிய புதிய வாக்கியங்களைப் புதிய புதிய சூழல் களில் கேட்கும் பொழுது அவற்றைப் புரிந்துகொள்ளவும் செய்கிறோம். இந்த ஆற்றலைதான் மொழியின் படைப்பாற்றல் (CREATIVE POWER) என்று மாற்றிலக்கணக்காரர்கள் (TRANSFORMATIONALISTS) குறிப்பிடுகிறார்கள். இந்த ஆற்றல்தான் மொழியின் தனித்தன்மையாகவும் மற்றைய செய்திப் பரிமாற்ற முறைகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிற தன்மையாகவும் விளங்குகிறது.

மாற்றிலக்கணப் போக்கில் மொழியின் தன்மையை ஆராய்ந்து அது எழுப்புகிற பிரச்சனையைக் குறிப்பிடுவோம். மொழியில் எண்ணிறந்த வாக்கியங்கள் உள்ளன என்று நாம் முன்பே கூறினோம். இக்கருத்தை மேலும் ஆராய்வோம். மொழி அமைப்பைப் பற்றிப் பேசுபவர்கள் மொழியில் உள்ள வாக்கியங்களைச் சில அமைப்பு வரைகளாகப் (PATTERNS) பிரித்துவிடலாம் என்று கூறுவார்கள். வாக்கியத்தின் நீளத்தை நிர்ணயம் செய்தால்தான் வாக்கியங்களைச் சில அமைப்பு வரைக்குள் அடக்க முடியும். மொழியில் எந்த ஒரு வாக்கியத் தையும் சுட்டி இதுதான் மொழியில் நீளமான வாக்கியம் என்று கூற முடியாது. அந்த வாக்கியத்தை நீட்ட மேலும் முடியும். வாக்கியம்(1) ஐ எடுத்துக்கொண்டு இக்கருத்தை விளக்க முயற்சி செய்வோம்.

(1) கண்ணன் நேற்று என்னைப் பார்த்தான்

இதை,

(2) சென்ற தேர்தலில் வெற்றி பெற்ற கண்ணன் என்னைப் பார்த்தான்

என்றும்,

(3) சென்ற தேர்தலில் வெற்றி பெற்ற கண்ணன் வீட்டில் சோகமாயிருந்த என்னைப் பார்த்தான்

என்றும் நீட்ட முடியும். இவ்வாறு நீட்டிப்பதற்கு ஒரு வரன் முறை கிடையாது. இதை நாம் ஆங்கிலத்திலும் பார்க்கலாம்

(4) **Chomsky opposed Skinner**

(5) **Chomsky who revolutionised linguistics opposed Skinner**

(6) **Chomsky who revolutionised linguistics opposed Skinner the author of Verbal Behaviour**

இதுபோன்று வாக்கியத்தை நீட்டிக்கொண்டே செல்லலாம் ஆனால் நாம் இயல்பாக பேசும்பொழுது பயன்படுததுகின்ற வாக்கியங்களின் நீளத்தையும் எழுதுகின்ற வாக்கியங்களின். நீளத்தையும் குறிப்பிட்டுக் கூறி விடலாம். நீண்ட வாக்கியங்களை நாம் நினைவில் இருத்தி, பொருள் கொள்வது கடினமாகையால் சிறு சிறு வாக்கியங்களை நாம் பேசுகிறோம். ஆனால் எழுதும்பொழுதும் பேசும்பொழுதும் தோற்றுவிக்கிற வாக்கியங்களின் நீளத்தைவிட நீண்ட வாக்கியங்களை உருவாக்குகிறோம். நினைவாற்றலின் தன்மையைக் கருதி நாம் மிக நீண்ட வாக்கியங்களை உருவாக்குவதில்லை. வாக்கியத்தின் அளவை நாம் நினைக்கும் அளவிற்கு நீட்ட முடியும். ஒரு முழுநூலைக் கூட ஒரே வாக்கியத்தில் எழுத முடியும். வாக்கியங்களை உருவாக்க வேண்டியிருக்கிற திறனை நாம் முதலில் பிரித்தறிய வேண்டும். இம்மொழித் திறனை (LINGUISTIC COMPETENCE) வாக்கியங்களைப் பயன்படுத்தும் மொழியின் செயலோடு (LINGUISTIC PERFORMANCE) குழப்பக் கூடாது. இவை இரண்டும் வெவ்வேறானவை.

மொழியியல் மொழித்திறனை ஆராய வேண்டும். ஒரு மொழியைப் பேசும் மக்களின் மொழி அறிவை விளக்குவது தான் மொழியியலின் மையப்பொருள். மொழி அறிவு அல்லது மொழித்திறன் என்பதை முதலில் நாம் விளக்குவோம். மொழியில் எண்ணிறந்த வாக்கியங்கள் உள்ளன என்று நாம் முன்பே சுட்டினோம். ஒரு மொழியைப் பேசும் மக்கள் அம்மொழியில் உள்ள வாக்கியங்களைப் படைக்கும் திறன் படைத்தவர்கள். மொழிக்கு எழுதப்படும் இலக்கணமும் இத்தன்மை உடையதாயிருக்க வேண்டும். வாக்கியங்களுக்கிடையே உள்ள தொடர்பை அம்மொழி பேசும் மக்கள் உணர்கிறார்கள். இத்தொடர்பையும் இலக்கணம் சுட்ட வேண்டும். கவர் பொருள் உணர்த்துகின்ற வாக்கியங்களையும் அம்மொழி பேசும் மக்கள் உணர்கிறார்கள். இத்தகைய வாக்கியங்களுக்கும் இலக்கணம் விளக்கம் அளிக்க வேண்டும். வாக்கியத்திற்கும் அதன் உறுப்புகளுக்குமிடையே உள்ள தொடர்பையும் அவ்வாக்கியத்தின் உறுப்புக்களுக்கிடையே காணப்படும் தொடர்பையும் இலக்கணம் விளக்க வேண்டும். மொழி பேசும் மக்கள் இத்திறன் அனைத்தையும் பெற்றிருக்கிறார்கள். மொழியியல் -குறிப்பாக மாற்றிலக்கணக் கோட்பாடு - மொழி பேசும் மக்களின் இம்மொழித் திறனை முழுமையாக விளக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறது.[4]

உலகின் பல்வேறு மொழிகளை ஆராய்ந்த மாற்றிலக்கணக் காரர்கள் மொழிகளில் பல பொதுமைகளைக் கண்டார்கள். குறிப்பாக மாற்று விதிகள் (TRANSFORMATIONAL RULES) பின்பற்றும் கட்டுப்பாடுகள் (CONDITIONS) பல்வேறு மொழிகளின் தொடரியலையும் ஆராயும்போது தெரிய வருகின்றன. நீக்கல்விதி (DELETION RULE) வாக்கியத்தின் உறுப்பை நீக்கும்பொழுது அத்தகைய உறுப்பு அக அமைப்பில் உள்ளதா என்பதை அடிப்படையாக வைத்துதான் செயல்படுகிறது. சான்றாக வாக்கியம் (7) ஐ எடுத்துக்கொள்வோம்.

(7) நேற்றுப் பாடிய பாட்டு நன்றாக இருந்தது

இதன் அக அமைப்பைப் படம் (8) காட்டுகிறது.

(8)



X பாட்டு பாடினார்

புதை வாக்கியத்தில் உள்ள **பாட்டு** என்ற பெயர்த்தொடரை (NOUN PHRASE) நீக்கல்விதி முதல் வாக்கியத்தில் உள்ள **பாட்டு** என்ற பெயர்த்தொடரை அடிப்படையாகக் கொண்டு நீக்கு கிறது. இது தமிழ் மொழிக்கு மட்டுமின்றி மற்ற மொழி களுக்கும் இது பொருந்தும். இன்னொரு முக்கிய விதி பெயர்ச்சி விதி (MOVEMENT RULE). இவ்விதியும் பல்வேறு கட்டுப்பாடு களைப் பின்பற்ற வேண்டியிருக்கிறது. இவற்றுள் ஒன்றை நாம் இங்கு விளக்குவோம். இணைவாக்கியக் கட்டுப்பாட்டை (CO-ORDINATE STRUCTURE CONSTRAINT) எடுத்துக் கொள்வோம். உறுப்பு வாக்கியங்களுக்குள் இருக்கும் எந்த உறுப்பையும் இயக்குவிதி அவ்வாக்கியங்களின் பரப்பைத் தாண்டி நகர்த்த இயலாது என்பது இக்கட்டுப்பாடு.[5] வாக்கி யங்கள (9,10) ஐ எடுத்துக்கொள்வோம்.

(9) அமிர்தலிங்கமும் **அவருடைய தோழர்களும்** இந்திரா காந்தியுடன் பேசினார்கள்

(10) தி.மு.க.வும் **அ.தி.மு.க.வும்** கடை அடைப்பில் கலந்து கொண்டன

மேலே கூறிய கட்டுப்பாட்டை மீறியதால் வாக்கியங்கள் (11)உம் (12)உம் வழுவாகின்றன.

(11) *அமிர்தலிங்கமும் இந்திரா காந்தியுடன் **அவரு டைய தோழர்களும்** பேசினார்கள்

(12) *தி.மு.க.வும் கடை அடைப்பில் **அ.தி.மு.க.வும்** கலந்து கொண்டன,

(13) John was taking *bread and butter*

(14)* *what* was John taking?

(15)* w*hat* was John taking bread and——?

இதுபோன்ற கட்டுப்பாடு பல்வேறு மொழிகளிலும் செயல்படுவதை மாற்றிலக்கணக்காரர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

இப்பிரச்சனையை மேலும் தொடர்வதற்குமுன் கோட்பாட்டின் தன்மையைப் பற்றிய வேறுபாட்டைக் குறிப்பிடுவோம். கோட்பாடு என்பது ஒரு பொருளை அல்லது நிகழ்வைப் (PHENOMENON) புரிந்துகொள்ளப் பயன்படும் கருவிமட்டும் தான என்று பார்ப்பது ஒரு பார்வை; கோட்பாடு என்பது ஒரு பொருளை அல்லது நிகழ்வை அறிந்துகொள்ளப் பயன்படும் கருவி மட்டுமல்ல; இது மனத்தோடும் தொடர்புடையது என்பது மற்றொரு பார்வை. மாற்றிலக்கணம் விளக்கும் கோட்பாடு மனத்தோடு தொடர்புடையது. வேறு முறையில் சொன்னால் நாம் மேலே குறிப்பிட்ட கட்டுப்பாடுகள் எல்லாம் மனதோடு சம்பந்தப்பட்டவை. நம்முடைய மொழி அறிவைப் பிரதிபலிப்பவை மாற்றிலக்கண விதிகளும் கோட்பாடுகளும்.

அமைப்பு மொழியியலாளர்களுள் சிலர் தங்கள் மொழியின் அமைப்பை விவரிக்கப் பயன்படுத்தும் மொழியியல் கருத்துக்களும் கோட்பாடுகளும் கருவி போன்றவை என்று கருதுகிறார்கள். மொழியின் அமைப்பைப் புரிந்துகொள்ளப் பயன்படுபவை இவை.[6] இவற்றிற்கு இதற்கு மேல் எவ்வித உளவியல் முக்கியத்துவமும் இல்லை என்பது இவர்கள் வாதம். ஆனால் மாற்றிலக்கணக்காரர்கள் இக்கருத்தை ஏற்றுக்கொள்வதில்லை. மாற்றிலக்கணத்தின் கோட்பாடுகளும் கண்டுபிடிப்புகளும் உளவியலோடு தொடர்புடையவை என்று இவர்கள் வாதிடுகிறார்கள். சோம்ஸ்கி ஒருபடி மேல் சென்று மொழியியலை உளவியலின் (COGNITIVE PSYCHOLOGY) ஒரு பகுதி என்றே குறிப்பிடுகிறார். மொழியியலுக்கும் உளவியலுக்கும் உள்ள உறவை இது தெளிவுபடுத்துகிறது.

சோம்ஸ்கியின் கருத்தை நாம் முழுமையாக ஏற்றுக் கொண்டால் ஏற்ப ...வுகளை நாம் இப்பொழுது பார்ப்போம். மாற்றிலக்கணக்காரர்கள் சில பொதுமையான கட்டுப்பாடுகளை (UNIVERSAL CONSTRAINTS) மாற்றுவிதிகள் பின்பற்றுவதாக உலகின் பல்வேறு மொழிகளை ஆராய்ந்து, சுட்டிக்காட்டிக்கொண்டிருக்கிறார்கள். மாற்றிலக்கணம் சுட்டுகின்ற பொதுமைகளையும் இப்பொதுமைகள் மனதோடு தொடர்புடையவை என்ற கருத்தையும் நாம் ஏற்றுக்கொண்டால் ஏறபடும் விளைவுகளை இப்போது விளக்குவோம். அனுபவ அடிப்படையில் நாம் மொழியைக் கற்கிறோம் என்ற கருத்தை ஏற்றுக் கொண்டால் சில பிரச்சனைகளுக்கு விளக்கம் கொடுப்பதில் சிக்கல் ஏற்படும். உலகில் பல்வேறு மொழிகளிலும் பொதுவாகக் காணப்படும் கட்டுப்பாடுகளை நாம் எப்படிக் கற்றோம்? ஆங்கில மொழியைக் கற்கின்ற குழந்தையும் தமிழைக் கற்கின்ற குழந்தையும் ஜப்பானிய மொழியைக் கற்கின்ற குழந்தையும் எவ்வாறு சில பொதுமைக் கட்டுப்பாடுகளைக் கற்றன? ஒவ்வொரு மொழியைக் கற்கின்ற குழந்தைக்கும் ஒவ்வொரு வித சூழ்லும் அனுபவமும் கிடைக்கின்றன. இருப்பினும் காணப்படுகின்ற பொதுமக்களுக்கு மொழியியல் அளிக்கும் விளக்கம் என்ன? இப்பொதுமைகளைக் குழந்தைகளுக்கு யாரும் கற்றுக் கொடுப்பதில்லை. பல்வேறு சூழல்களிலும் அனுபவத்திலும் பல வகைப்பட்ட மொழ்களைக் கற்றவர்களுக்கிடையே காணப்படுகின்ற மொழிப் பொதுமைகளுக்கு நமக்கு கிடைக்கும் விளக்கம் என்ன?

அமைப்பு மொழியியலாளர்கள் ஒவ்வொரு மொழியும் அதற்கதற்கென்று ஓர் அமைப்பைக் கொண்டுள்ளது என்று கூறுகிறார்கள். இரு மொழிகளுக்கிடையே ஒற்றுமை சில காணப்பட்டால் அவற்றைப் பின்வரும் இரு முறைகளில் ஏதேனும் ஒன்றின்மூலம் விளக்கலாம். சான்றாக, பர்ஜி (PARJI) என்ற மொழிக்கும் கோயா (KOYA) என்ற மொழிக்கும் சில மொழியியல் கூறுகள் ஒன்றாக இருந்தால் அவற்றை மொழி இன அடிப்படையில் விளக்க இயலும். இவ்விரு மொழிகளும் திராவிட இனத்தைச் சார்ந்ததால் இவற்றின் இடையே ற்றுமை காணப்படுகின்றது. மொழிகள் ஓர் இனத்தைச் சார்ந்த

வையாக இருக்கும்பொழுது சில பொதுமைக் கூறுகளை அவை பெற்றிருக்கும் என்பது இதனால் தெளிவாகும். ஒரே இனத்தைச் சாராத மொழிகளுக்கிடையேயும் சில மொழியியல கூறுகள் ஒனறாக இருப்பதை நாம் பார்க்க முடியும். கனனட மொழிக்கும் மராத்தி மொழிக்கும் சில மொழியியல் கூறுகள் ஒன்றாக இருப்பதை நாம் காணலாம். இவ்வாறே தமிழுக்கும் சௌராட்டிர மொழிக்கும் ஒற்றுமைகள் இருப்பதை மொழியியலாளர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்[7]. கன்னடமும் மராத்தியும் ஒரே இன மொழிகள் அல்ல. தமிழும் சௌராட்டிர மொழியும் வெவ்வேறான இனத்தைச் சேர்ந்தவை. தமிழும் கன்னடமும் திராவிட இனத்தையும் மராத்தியும் சௌராட்டிர மொழியும் இந்தோ ஆரிய இனத்தையும் சேர்ந்தவை. இம் மொழிகளுக்கிடையே காணப்படும் மொழிக் கூறுகளில் காணப்படும் ஒற்றுமையை விளக்குவது எப்படி?

இருவேறு இனத்தைச் சேர்ந்த மொழிகளைப் பேசும் மக்கள் அருகருகே வாழ்வதை நம் நாட்டின் பல்வேறு இடங்களில் காணலாம். கர்நாடக மாநில எல்லைப்புறத்தில் கன்னட மொழி பேசுகின்ற மக்களும் மராத்தி மொழி பேசும் மக்களும் அருகருகே வாழ்கிறார்கள். அவாகளிடையே தொடர்புண்டு. தமிழகத்தில் சௌராட்டிர மொழி பேசும் மக்கள் தமிழ் பேசும் பெரும்பான்மை மக்களுடன் வாழ்கிறார்கள். ஆகையால் அவர்கள் பேசும் சௌராட்டிர மொழியில் தமிழ் மொழியின் கூறுகள் சில காணப்படுகின்றன. மொழிகள் வெவ்வேறு இனத்தைச் சார்ந்தவையாக இருப்பினும் அவற்றைப் பேசுமக்கள் ஒரே நிலப்பரப்பிலோ அருகருகே வாழும் பொழுதோ ஒரு மொழியின் கூறுகள் இன்னொரு மொழியில் காணப்படுவதுண்டு என்பது இதனால் தெளிவாகும். மொழிகள் பேசும் மக்களின் தொடர்பால் மொழிக் கூறுகள் ஒரு மொழியிலிருந்து இனனொரு மொழிக்குச் செல்வதுண்டு. மொழிகள் ஒவ்வொன்றும் அதற்குரிய அமைப்பை உடையவாயினும் இரு மொழிகள் அருகருகே பேசப்படும்போது ஒரு மொழியின் கூறுகள் இன்னொரு மொழியில் காணப்படுவதுண்டு. அமைப்பு மொழியியலின் கோட்பாட்டு வரம்பிற்குள் இவ்வொற்றுமைகளுக்கு விளக்கம் அளித்து விட முடியும்.

மாற்றிலக்கணத்தின் விதிகள் சில பொதுவான கட்டுப்பாடுகளை எல்லா மொழிகளிலும் பின்பற்றுகின்றன என்று குறிப்பிட்டோம். தமிழும் ஆங்கிலமும் இணை வாக்கியக் கட்டுப்பாட்டைப் பின்பற்றுவதை முன்பு குறிப்பிட்டோம். தமிழ் திராவிட இனத்தைச் சேர்ந்த மொழி. ஆங்கிலம் இந்தோ ஐரோப்பிய இனத்தைச் சேர்ந்த மொழி. இன அடிப்படையில் இம்மொழிகளுக்கிடையே ஒற்றுமை இருப்பதாகக் கூற முடியாது. தமிழ் பேசும் மக்களும் ஆங்கிலம் பேசும் மக்களும் நிலப்பரப்பால் அருகருகே இல்லை. இவ்விரு மொழிகளும் பின்பற்றும் பொதுவான கட்டுப்பாட்டை அமைப்பு மொழியியல் கோட்பாட்டு வரம்பிற்குள் விளக்குவது எப்படி? தமிழும் பிரெஞ்சு மொழியும் பொதுவான கட்டுப்பாட்டைப் பின்பற்றுவதை எப்படி விளக்குவது?

அமைப்பு மொழியியலின் கோட்பாட்டு வரம்பிற்குள் விளக்கம் அளிப்பது கடினமாக அமைகிறது. மொழிகளைப் பல்வேறு சூழல்களில் பல்வேறு சமுதாயப் பின்னணியில் கற்றுக் கொள்ளும் குழந்தைகள் பொதுவான கட்டுப்பாடுகளைக் கற்றுக் கொள்வது எப்படி? மொழி கற்றல் என்பது பிறவற்றிலிருந்து வேறுபடுகிறது. குழந்தை மொழியைக் கற்பதற்கு எவ்விதச் சிரமமும் மேற்கொள்வதில்லை. அது எந்தச் சமுதாயத்தில் வளர்கிறதோ அச்சமுதாயத்தின் மொழியை எளிமையாகக் கற்றுக்கொள்கிறது. குழந்தை தனது ஒன்றரை வயதில் மொழி கற்பதைத் தொடங்கி ஐந்து வயதில் மொழியைப் பெரும்பாலும் கற்றுவிடுவதாகச் சில உள மொழியியலாளர்கள் கருதுகிறார்கள். ஐந்து வயதை எட்டுகிற குழந்தை கற்ற மொழிமூலம் தான் உணர்த்த விரும்புவதைத் தங்கு தடையின்றி வெளியிடுகிறது. தன்னைச் சுற்றியுள்ள தன் வயதை ஒத்த குழந்தைகளிடமோ தன்னோடு சம்பந்தப்பட்ட பெரியவர்களிடமோ மொழிமூலம் தான் நினைப்பதை உணர்த்துகிறது. அதுபோல் அவர்கள் வெளியிடுகின்ற கருத்தை எளிதில் புரிந்துகொள்ளவும் செய்கிறது. அச்சூழலில் குழந்தைக்கு மொழி இயற்கையாக வருகிறது. மற்ற அறிவுத்துறைகளைக் கற்பதிலிருந்து மொழி வேறுபடுகிறது.

குழந்தைகள் மொழி கற்பதில் ஓர் ஒழுங்குமுறை இருப்பதாக உள மொழியியல் அறிஞர்கள் (PSYCHO LINGUISTS) ஆராய்ந்து கூறியிருக்கிறார்கள். மொழியைக் கற்பது என்பது மொழியின் சொற்களைக் கற்பது என்பதல்ல பொருள். குழந்தை மொழியைக் கற்கிற ஒவ்வொரு நிலையிலும் ஒரு இலக்கணம் உருவாகிறது. குழந்தையின் மொழி கற்றல் வளர வளர இவ்விலக்கணமும் மாற்றம் அடைகிறது. ஐந்து வயதை நெருங்குகிற குழந்தையின் இலக்கணம் பெரியவர்களின் இலக்கணத்தோடு பெரும்பகுதி ஒத்திருக்கிறது. பல்வேறு மொழிகளில் பல்வேறு நிலைகளில் குழந்தைகள் உருவாக்குகின்ற இலக்கணங்களுக்கு இடையே ஒற்றுமைகள் காணப்படுவதாக உளமொழியியல் அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். இதை ஏற்றுக்கொண்டால் பல்வேறு மொழிகளை பல்வேறு சூழல்களில் கற்ற குழந்தைகளின் இலக்கணங்களிலும் இலக்கண வளர்ச்சிகளிலும் காணப்படுகின்ற பொதுமைகளுக்கும் கொடுக்கும் விளக்கம் என்ன? அமைப்பு மொழியியல் அடிப்படையில் இங்கு விளக்கம் கொடுப்பது கடினமாக ஆகிவிடுகிறது.

மாற்றிலக்கணக்காரர்கள் இதற்கு உளளுறை அறிவை (INNATE KNOWLEDGE) அடிப்படையாகக் கொண்டு விளக்கம் அளிக்கிறார்கள். மொழிப் பொதுமைகளாகக் (LANGUAGE UNIVERSALS) காட்டப்படுபவை சூழல் அடிப்படையில் கற்கப்பட்டவை அல்ல என்று நாம் முன்பு கூறினோம். இதை விளக்க எவ்வகையான கருதுகோளை முன் வைப்பது? மாற்றிலக்கணக்காரர்கள் மனித உடலமைப்பை அடிப்படையாகக் கொள்ளலாம் என்று கூறுகிறார்கள். குழந்தை பிறக்கும் பொழுதே இம்மொழிப் பொதுமைகளை அறிந்திருக்கிறது என்று இவர்கள் கூறுகிறார்கள். நரம்பியல் அடிப்படையிலான விளக்கத்தைத் தேடுவதோ மூளையின் அமைப்போடு இவற்றைத் தொடர்புபடுத்தி ஆராய்ச்சியை மேற்கொள்வதோ பயனுள்ளதாக அமையும் என்று மாற்றிலக்கணக்காரர்கள் நம்புகிறார்கள். இங்கு மொழியியல் மட்டும் எவ்வித முடிவுகளையும் அறுதியிட்டுக் கூற முடியாது. மொழி வழியே உடலியல் (PHYSIOLOGY) சம்பந்தப்பட்ட கருதுகோள் விளக்கமாக அமையலாம். இக்கருதுகோள் சரியா தவறா என்பதை மொழியியல்

மட்டுமின்றி உளவியலும் உடலியலும் (குறிப்பாக மூளையின் அமைப்போடும் நரம்பியலோடும் தொடர்புடைய உடலியல்) தங்களுடைய ஆராய்ச்சியை இப்பக்கம் திருப்பிப் பார்க்க வேண்டும். இங்கு மொழியை மையப்படுத்தி மொழியியலாளர் களும் உளவியலாளர்களும் உடலியலாளர்களும் ஆராய்ச்சியை மேற்கொள்ளலாம்.

குறிப்புகள்

1. A language is a complex system of habits (Hockett, 1958:137)
2. A language is a system of arbitrary vocal symbols by means of which a social group co-operates (Bloch and Trager, 1942:5)
3. ...... a generative grammar attempts to specify what the speaker actually knows ...... (Chomsky, 1965:8)
4. It attempts to characterize in the most neutral possible terms the knowledge of the language that provides the basis for actual use of language by a speaker - hearer (Chomsky, 1965:9)
5. Co-ordinate structure constraint: No conjunct in a co ordinate structure may be moved, nor may any element in a conjunct be moved (quotated from Newmeyer, 1980:178)
6. எல்லா அமைப்பு மொழியியலாளர்களும் இக்கருத்தைக் கொண்டிருக்கவில்லை. ஹேரிஸ் (HARRIS) போன்ற வர்கள்தான் இக்கருத்தைக் கொண்டிருந்தார்கள்
7. Pandit (1974)

துணை நூல்கள்

Bloch, B. and Trager G, L. 1942 *Outline of linguistic analysis,* Waverly Press, Baltimore.

Chomsky, N.	1965	*Aspects of the theory of syntax,* MIT Press, Cambridge, Mass.
Hockett, C. F.	1958	*A course in modern linguistics,* The Macmillan company, New York.
Newmeyer, F. J.	1980	*Linguistic theory in America,* Academic Press, New York.
Pandit, P. B.	1974	"Bilingual's grammar" a case study of Tamil-Saurashtri number names" in *International Journal of Dravidian Linguistics.* 3.1. p.p 181-197.

மொழியியல் 9. 3 & 4 (1986)

தமிழில் புதுச் சொல்லாக்கம்

கி. கருணாகரன் & திருமதி. வ. ஜெயா
பாரதியார் பல்கலைக்கழகம்

1. முன்னுரை

தமிழில் புதுச் சொல்லாக்கம் என்ற இக்கட்டுரையின் நோக்கம் இன்றைய மொழிப் பயன்பாட்டில் வழக்கில் இருந்துவரும் புதுச் சொற்களை ஓரளவிற்கு ஆய்வு செய்து அதன் மூலம் அவை ஆக்கப்பட்டுள்ள நெறிமுறைகள், சொல்லாக்க முறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, சொல்லாக்கத்தின் தேவை, அவை பயனபடும் துறைகள், சொல்லாக்க முறை மொழி வளர்ச்சிப் பணியில் பெறும் பங்கு போன்றவற்றைத் தெளிவாக விளக்குவதேயாகும்.

'சொல்லாக்கம்' அல்லது 'புதுச்சொற்படைப்பு' என்பதை அடிப்படையில் ஓர் இலக்கண விளக்க முறையாக எடுத்துக் கொண்டு, பின்னர் அம்முறையானது எவ்வாறு மொழி வளர்ச்சிக்கு ஏற்ற முறையாக, சமுதாய வளர்ச்சிக்கு ஏற்றதொரு முறையாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதை இக்கட்டுரை ஓரளவிற்கு விளக்கிச் செல்கிறது.

2. சொல் - சொல்லமைப்பு: விளக்கம்

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்ற மரபிலக்கண விதிப்படி ஒரு மொழியிலே பொருளோடு வழங்கும் சிறு கூறுகள் சொற்களேயாகும். இன்றைய மொழியியல் விளக்கம் "A morpheme is the minimum meaningful unit of a language" என்று சொல்லப்படுவது ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும்.[1] ஒரு மொழியில் அதிக எண்ணிக்கையில் காணப்படும் மொழிக்கூறு சொல்லேயாகும். அதிக எண்ணிக்கையில் காணப்படுவது மட்டுமின்றி, அதிக மாற்றங்களுக்கு உள்ளாவதும் சொற்களேயாகும். இவ்வாறு ஏற்பட்டுவரும் சொல் மாற்றங்கள் ஒரு வகையில் பழையன கழிதலையும் புதியன புகுதலையும் காட்டி நிற்கின்றன என்று கூறின் அது மிகையாகாது. பழைய சொற்களில் சில வழக்கிழந்து வருவது வேறுசில. ஓரளவு வடிவ மாற்றம் பெற்று வருவது, இன்னும் சில சொற்கள் பொருள் மாற்றம் பெற்று வருவது. இவை எல்லாமே ஒரு வகையில் மாற்றத்தைக் காட்டியும் புது வழக்குகளுக்கு இடம் கொடுத்து வருவதையும் நம்மால் நன்கு காண முடிகிறது.

எ.கா. 1. ஆநின்று - என்ற இடைநிலைப் பயன்பாடு வழக்கிழந்த நிலை.

2. உண்ப, உண்குவன் என்ற சொல்லமைப்புகள் வழக்கிழந்த நிலை.

3. எண்ணெய் 'gingile oil' 'நல்லெண்ணெய்' என்ற பொருள் குறிக்கப் பயன்பட்டு வந்தது. பின்னர் எல்லாவகையான எண்ணெய் வகைகளையும் குறிக்கும் பொதுச்சொல்லான நிலை.

4. நாற்றம் தற்போது 'கெட்ட மணம்' என்ற பொருளைத் தந்து மட்டுமே வழங்கி வரும் நிலை.

1. Nida, E. A. (1946) *Morphology*, Ann Arbor: Michigan University Press.

இன்னொரு வகையான மாற்றம் புதிதாக வழக்கிற்கு வந்துசேரும் சொற்களால் ஏற்படுவதாகும். இவ்வகையில் இரண்டு பிரிவுகள் உண்டு. ஒன்று: பிறமொழிகளிலிருந்து தாமாக ஒரு மொழியில் வந்து வழக்கில் இடம்பெற்று வழங்குபவை. மற்றொன்று: புதிதாக மொழியில் உருவாக்கப்படுபவை.

ஒரு சொல்லை அடிச்சொல்லாக வைத்து உருவாக்கப்படுவது சொல்லமைப்பாகும். மொழியில் பெயர், வினை போன்றவற்றை அடிச்சொற்களாகக் கொண்டு பல்வேறு சொல்லமைப்புக்கள் உருவாக்கப் படுகின்றன. பெயரிலிருந்து வேற்றுமை அமைப்பு உருவாகிறது; வினையிலிருந்து வினைமுற்று என்ற அமைப்பு உருவாகிறது. இவ்வாறு உருவாக்கப்படும் அமைப்புக்கள் தொன்றுதொட்டே மொழியின் வழக்கில் இருந்து வருபவையே. இவ்வமைப்புக்கள் தொன்றுதொட்டு வழக்கில் இருந்து வந்தாலும் முற்றிலும் வேறுபட்ட மாற்றங்களுக்கு உள்ளாவது குறைவே எனலாம். வேற்றுமை அமைப்புகளிலோ வினைமுற்று அமைப்புகளிலோ ஒருசில மாற்றங்களையே நாம் பார்க்க முடிகிறது. ஆனால் மொழியில் அதிகமாகப் பயன்பட்டு வரும் சொற்களில், 'அதிக எண்ணிக்கையில் வழங்கப்படும் மொழிக் கூறான சொற்களில், மாற்றங்கள் பெருகியே வந்துள்ளதை மொழி வரலாறுகள் நமக்குக் காட்டுகின்றன.

தமிழ் மொழியை - அதன் இலக்கணத்தை எடுத்து ஆராயும் போது மரபிலக்கண ஆசிரியர்கள் இரு இலக்கண முறைகளைப் பயன்படுத்தி, தமிழ் மொழியின் அமைப்பை விளக்கிச் சென்றுள்ளதைக் காண்கிறோம். இன்றும் மொழியியல் விளக்கத்தில் வெளிப்படைக் கொள்கைகளாக இரு இலக்கண விளக்க முறைகள் (grammatical processes) சொல்லப்பட்டு வருகின்றன. இவற்றில் ஒன்று **சொல் திரிவு** (inflection) என்பது; மற்றொன்று **சொல்லாக்கம்** (derivation) என்பது. இவ்விலக்கண விளக்கமுறைகள் உலக மொழிகள் அனைத்திலும் காணப்படும் பொது முறைகளாகும். சொல் திரிவு என்பது ஒரு அடிச்சொல்லோடு (base form) சில ஒட்டுக்கள் (affixes) சேரும் நிலையில் ஓரளவு திரிந்து இலக்கணப்பிரிவில் எந்தவித மாற்றத்தையும் காட்டாமல் அமையும் சொல்லமைப்பாகும். அதாவது

இந்த வகையான சொல்லமைப்பில் இடம்பெறும் அடிச் சொல் சார்ந்து நிற்கும் இலக்கணப் பிரிவும் (grammatical category) அதன் மூலம் பெறப்படும் சொல்லமைப்பு (resultant form) சார்ந்துள்ள இலக்கணப்பிரிவும் ஒன்றாகவே இருக்கும்.

எடுத்துக்காட்டாக, தமிழில்

படி என்ற வினைச் சொல்லோடு **-த்த்-** (இறந்த கால இடைநிலை), **-ஆன்** (படர்க்கை ஆண்பால் ஒருமை விகுதி) என்ற இரண்டு ஒட்டுக்கள் சேர்க்கப்பட்டு **படித்தான்** என்ற வினைமுற்று பெறப்படுகிறது. இதில் அடிச்சொல்லான **படி** என்பதும் இதிலிருந்து திரிந்து வழங்கும் அமைப்பான **படித்தான்** என்பதும் 'வினை' (verb) என்ற ஒரே இலக்கணப் பிரிவைச் சார்ந்தவையே. இங்கு, அடிப்படை இலக்கணப் பிரிவில் எந்தவித மாற்றமும் காணப்படவில்லை. இது போன்றே தமிழில் பல்வேறு சொல்லமைப்புக்கள் அமைந்திருக்கக் காண்கிறோம்.

இன்னொரு வகையான சொல்லமைப்பில் ஒரு அடிச்சொல்லோடு சில ஒட்டுக்கள் சேரும் நிலையில், அடிச்சொல் சார்ந்து நிற்கும் இலக்கணப் பிரிவும் அதன் வாயிலாகப் பெறப்படும் சொல்லமைப்பும் வெவ்வேறு இலக்கணப் பிரிவுகளைச் சார்ந்தவையாக இருக்கும். எடுத்துக்காட்டாக, **படி** என்ற வினைச் சொல்லோடு **-பு** என்ற விகுதி சேர நமக்கு **படிப்பு** என்ற சொல்லமைப்பு கிடைக்கிறது. இதில் அடிச்சொல்லான **படி** என்பது **வினை** என்ற இலக்கணப் பிரிவையும், **படிப்பு** என்ற சொல்லமைப்பு **பெயர்** என்ற இலக்கணப்பிரிவையும் சார்ந்தவையாக இருக்கின்றன. அதாவது இரண்டும் இரு வேறுபட்ட இலக்கணப்பிரிவைச் சார்ந்தவை. அதே போன்று 'அழகு' என்ற பெயரடியோடு **ஆக** என்ற ஒட்டு சேர **அழகாக** என்ற சொல்லமைப்பு கிடைக்கிறது.

அது **அழகாக** இருக்கிறது

இதே பெயரடியோடு **-ஆன** என்ற ஒட்டு சேர்க்கப்படும் போது **அழகான** என்ற சொல்லமைப்பு கிடைக்கிறது.

அது **அழகான** படம்

ஓர் அமைப்பில் அடிச் சொல்லான பெயருடன் ஒட்டு சேர்ந்த பின் வினையடையாகவும் (அழகாக) இன்னொரு அமைப்பில் அடிச்சொல்லான பெயருடன் ஒட்டு சேர்ந்தபின் பெயரடையாகவும் (அழகான) மாறுவதைக் காண்கிறோம். அதாவது, இரண்டாவது இலக்கண விளக்க முறை புதுச் சொற் படைப்புக்கும் புது இலக்கணப் பிரிவுகள் தோன்றவும் வாய்ப்பு ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. இதுபோன்ற முறை ஒரு மொழியின் ஆற்றல் மிக்க பயன்பாட்டிற்கும் சீரான வளர்ச்சிக்கும் மிகவும் தேவையான ஒன்றாகும். அதனால்தான் **சொல்லாக்கம்** என்ற இலக்கண முறையை நாம் இன்றும் புதுச் **சொல்லாக்கத்தில்** பெருமளவில் கடைப்பிடித்து வருகின்றோம்.

3. சொல்லாக்கம் ஏன் தேவை?

மேலே விளக்கப்பட்ட இரண்டுவகை இலக்கணமுறைகளில் சொல்லாக்கம் (derivation) என்ற முறை மிகவும் தேவையானதாகும். அதாவது மொழியின் பரந்த நிலைப் பயனபாட்டிற்கு எண்ணிறந்த சொற்கள் இன்றியமையாததாகிறது. சொற்கள் தான் அதிக அளவிலே மையக் கருத்துக்களை (central concepts) வெளிப்படுத்துவனவாக அமைகின்றன. இவற்றை வைத்தே நாம் தேவையான சொல் திரிவுகளை ஏற்படுத்திக் கொளகிறோம.

ஒரே வினையடி கூட பல்வேறு ஆக்க ஒட்டுக்களை எடுத்துக் கொள்ளும் நிலையும் இன்று வழக்கில் உள்ளது. ஆக்க முறை மிகவும் எளிதானதும் கூட. அதாவது ஒரு அடிச் சொல்லோடு நேரடியாக நாம் இவற்றைச் சேர்த்து இன்னொரு சொல்லை உருவாக்க முடியும்.

எடுத்துக்காட்டாக

படி - பு	— படிப்பு
எழுது	— எழுத்து
பாடு	— பாட்டு
வாழ் - கை	— வாழ்க்கை
பழு – அம்	— பழம்
எண் - இக்கை	— எண்ணிக்கை
காதல் - இ	— காதலி

விவசாயம் - இ — விவசாயி
அழகு - ஆன — அழகான
வேகம் - ஆக — வேகமாக
ஓடு - அம் — ஓட்டம்
போன்றவை.

ஆனால் சொல்திரிவு முறையில் ஒட்டுக்களைச் சில இடங்களில் நேராக அடிச் சொல்லுடன் இணைக்கமுடியும் என்றாலும் அம்முறையில் சில இடங்களில், இடையே இணைப்பு உருபன்கள் (link morphemes - சாரியை போன்றவை) வந்தமைந்தே சொல்லமைப்பு நமக்குக் கிடைக்கும் நிலை ஏற்படுகிறது.

எ. கா.

அவன் - ஐ → அவனை
மரம் – அத்து - ஐ → மரத்தை
அது - அன் - ஐ → அதனை
காடு – இின் – கு → காட்டிற்கு போன்றவை.

ஆகவே சொல்லாக்க முறை அமைப்பில் எளிதான முறை; புதுச்சொல் (அ) இலக்கணப் பிரிவு பெறும் முறை; இன்றைய நிலையில் மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும் முறை: அதனால் இம்முறை மொழிப் பயன்பாட்டிற்கு இன்றைய சூழ்நிலையில் மிகவும் தேவை என்றே சொல்ல வேண்டும்.

4. புதுச்சொல் – அதன் தேவை

'புதுச்சொல்' என்பது இதுவரை மொழியில் இடம் பெறாத வழக்கில் இல்லாத சொல். அதாவது புதிதாக வழக்கில் ஈடுபடுத்தப்படும் சொல்லாகும். புதுச்சொல் என்பது காலத்தின் தேவையையும் சமுதாயத்தின் தேவையையும் கருத்திற்கொண்டு ஒரு மொழியில் ஆக்கப்படும் - தோன்றும் சொல் வகையாகும். எந்தவொரு மொழியின் வரலாற்றை எடுத்துப் பார்த்தாலும் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் சமுதாயத்தில் அவ்வப்போது ஏற்பட்ட மாற்றங்களின் அடிப்படையில் அதைச் சார்ந்த மொழிகளிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்தே வந்துள்ளதைக் காணமுடியும்.

இக்காலச் சமுதாய வளர்ச்சியானது பல்துறை வளர்ச்சியால் உந்தப்பட்டு, மிகவேகமான முன்னேற்றத்தை நாளும் ஏற்படுத்தி வருவது கண்கூடு. இதன் விளைவாக மொழி வளர்ச்சியும், அதன் பின்னணியில் மொழி மாற்றங்களும் (linguistic changes) ஏதேனும் ஒரு வகையில் தோன்றிய வண்ணம் உள்ளன.

4.1 புதுச்சொற்களின் தேவை

புதுச்சொற்கள் ஒரு மொழியின் தேவையல்ல; சமுதாயத்தின் தேவையேயாகும். சமுதாயத்தில் இன்று புதுமையாக்கம் பல முறைகளில் பல நிலைகளில் தோன்றி வருகிறது. தொழில் துறை, அறிவியல் துறை, கல்வித்துறை, ஆட்சித்துறை. செய்தித்துறை, சமூகவியல் துறை, போன்றவற்றிலெல்லாம் இன்று பல புதிய கருத்துக்கள், கொள்கைகள், கோட்பாடுகள், கண்டுபிடிப்புக்கள் ஏற்பட்டு வருகின்றன. இது போன்ற பலவும் சமுதாயத்தில் வந்து இடம் பெறும்போது அவை சமுதாயம் பயன்படுத்தி வரும் மொழியின் வாயிலாகவே (அ) மொழிகளின் வாயிலாகவே மக்களுக்குச் சென்று சேரமுடியும். ஆதலால் சமுதாயங்கள் தங்களது மொழி வழக்குகளில் இது போன்ற புதுமைகளை வெளியிட/வெளிப்படுத்த சொற்களையும் சொல்லமைப்புக்களையும் ஏதேனும் ஒரு முறையில் ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்றன. இதன் விளைவே புதுச்சொற்கள் - சொல்லமைப்புக்கள் ஆகியவை இன்று பெறுவதாகும். இவ்வாறு உருவாக்கப்படும் நிலையில் சமுதாயம் சிலவற்றை ஏற்றுக்கொண்டும் (social acceptance) சிலவற்றை ஒதுக்கியும் (social rejection) வருவதைக் காண்கிறோம். ஒரு காலக்கட்டத்தில் கேட்பதற்கு/பயன்படுத்துவதற்குப் புதுமையாக இருந்த **வேட்பாளர்** (candidate) **தேர்தல்** (election), **தேர்தல் அறிக்கை** (election manifesto), **சட்டப்பேரவை** (assembly) **சட்டமேலவை** (council), **மாவட்டம்** (district), **வட்டம்** (taluk), **அமைச்சர்** (minister) போன்ற புதுச்சொற்கள் சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பரவலாகப் பயன்படுத்தப் பட்ட நிலையில் (செய்தித்தாள்கள், அறிவிப்புக்கள், அறிக்கைகள், மேடைப் பேச்சு போன்றவற்றில்) அவை இன்று முழுமையான நிலைபேறாக்கம் (complete standardisation) பெற்று

வழக்கில் இடம் பெற்றுள்ளதைக் காண்கிறோம். அதே நேரத்தில் அக்காலக் கட்டத்தில் உருவாக்கப்பட்ட சில சொற்கள் குறிப்பாக, அஞ்சலகம் (post office), பேருந்து நிலையம் (bus stand). ஈருருளி (cycle) போன்றவை சமுதாயத்தின் ஒப்புதல் பெற முடியாத நிலையில் இன்று எழுத்தளவில் மட்டுமே பயன்பாட்டில் இடம் பெற்று நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

புதுச்சொல் உருவாக்கப் பணியில் பலர் பல நிலைகளில் இன்று ஈடுபட்டு வருகின்றனர். அறிவியலார், கல்வியாளர், ஆட்சித்துறையினர், சட்டத்துறையினர், செய்தித்தொடர்புத் துறையாளர், இலக்கியவாதிகள், பத்திரிக்கையாளர் போன்றோர் பலரும் தங்களது எழுத்துக்களில் புதிய கருத்துக்கள், கண்டுபிடிப்புக்கள் போன்றவற்றை வெளிப்படுத்த கலைச் சொற்களை உருவாக்கிக்கொள்கின்றனர். சில சமயங்களில் அரசு வெளியிட்டுள்ள கலைச்சொற்களைப் பயன்படுத்துகின்றனர். அது போலவே இத்துறைகளைப் பயன்படுத்தி வருவோரும் தங்களுக்குத் தெரிந்த பழக்கமான கலைச்சொற்களையும் எடுத்தாண்டு வருகின்றனர். அரசும் அறிவிப்புக்கள், அறிக்கைகள், ஆணைகள், வெளியீடுகள் போன்றவற்றின் மூலம் உருவாக்கப்பட்ட கலைச்சொற்களை மக்களிடையே பரப்பி வருகிறது. ஆகவே இதுபோன்ற பல முறைகளிலும் இன்று புதுச்சொற்களின் பயன்பாடு நடைமுறைக்குக் கொண்டு வரப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

5. ஆரம்பகாலப் புதுச் சொல்லாக்கப்பணி

புதுச் சொல்லாக்கம் தொன்றுதொட்டே நடைபெற்று வருகிறது. தொல்காப்பியர் தமது இலக்கணத்தில் சொற்களைப் பற்றிப் பேசும் நிலையில் திசைச் சொல், திரி சொல் என்றெல்லாம் குறிப்பிடுவதைக் காண்கிறோம். புதுச்சொற்கள் உருவாக்கம் தொடங்கிய ஆரம்ப காலத்தில் இரண்டு வகையான சொல்லாக்க முறைகள் பயன்படுத்தப்பட்டு வந்தன. அவையாவன:

1. ஒலி பெயர்ப்பு முறை (transliteration method)
2. மொழி பெயர்ப்பு முறை (translation method)

இதில் பெரும்பாலும் முதல் முறையே அதிக அளவில் வழக்கத்தில் இருந்து வந்தது எனலாம். அன்று ஆரம்ப நிலையில் உருவாக்கப்பட்ட அறிவியல் மற்றும் பிற துறைச் சொற்களை எடுத்துப் பார்க்கும்போது ஒலி பெயர்ப்பு முறையே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டிருப்பது தெளிவாகத் தெரியவரும். எடுத்துக்காட்டாக கீழ் வரும் சொற்களைக் குறிப்பிடலாம்.

பிற மொழிச் சொல்		தமிழில் உருவாக்கப்பட்ட சொல்
1. Oxygen	→	ஆக்ஸிஜன்
2. Nitrogen	→	நைட்ரஜன்
3. Pitch	→	பிட்சு
4. Algebra	→	அல்ஜீப்ரா
5. Hospital	→	ஹாஸ்பிடல்/ஆஸ்பிடல்
6. Government	→	கவர்மெண்ட்
7. Office	→	ஆபீஸ்
8. Collector	→	கலெக்டர்
9. District	→	ஜில்லா
10. Taluk	→	தாலுக்கா
11. Record	→	ரெகார்டு/தாஸ்தாவேஜீ
12. Justice	→	ஜஸ்டிஸ்
13. Court	→	கோர்ட்டு
14. Munsiff	→	முன்சீப்
15, Gas	→	வாயு

போன்றவை.

இவ்வெடுத்துக்காட்டுக்களில் பல ஒலிபெயர்க்கப்பட்டும் சில ஓரளவிற்குத் தமிழாக்கம் (partial tamilisation) செய்யப்பட்டும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இம்முறையோடு ஒலிபெயர்க்கப்படுவதற்கு ஆதாரமான சொல்லையும் அடைப்புக்குள் அது சார்ந்துள்ள மொழியில், அது பெற்றுள்ள வடிவத்தையும் கொடுத்து எழுதும் முறையும் வழக்கத்தில் இருந்து வந்தது. இன்றும் கூட இம்முறை ஓரளவிற்குத் தொடர்ந்து இருந்து வருவதைக் காண முடிகிறது.

எ. கா.

ஆக்ஸிஜன் (oxygen)
ஜில்லா (district)

கலெக்டர் (collector)
ரெவென்யூ (revenue)
பிட்சு (pitch)
போன்றவை.

இதனையடுத்து, முழுமையான தமிழாக்கம் (**complete tamilsation**) என்ற பெயரில் ஒரு முறை பயன்படலாயிற்று. அதாவது கடன் வாங்கப்பட்ட சொல் வெளிப்படுத்தும் பொருளை (**meaning**) வெளியிட மொழி பெயர்ப்பு முறையில் சொற்கள் அமைக்கப்பட்டன.

எ.கா.

தொலைபேசி → **Telephone**
தொலைக்காட்சி → **Television**
போன்றவை.

கருத்தை அடிப்படையாகக்கொண்டு அதை வெளிப்படுத்தச் சரியான சொல் கிடைக்காத நிலையில் புதுச்சொற்கள் உருவாக்கப்பட, மொழியில் ஏற்கனவே வழக்கில் இருந்து வரும் சொற்களைக் கொண்டே புதுச்சொல் உருவாக்கப்பட்ட முறையும் குறிப்பிடத் தக்கதாகும்.

எ.கா.

Photo → நிழற்படம்/புகைப்படம்
Graph → வரைபடம்
Camera → புகை/நிழற்படக் கருவி
Police Station → காவல் நிலையம்
University → பல்கலைக் கழகம்
Syndicate → ஆட்சிக்குழு
Parliament → பாராளுமன்றம்/நாடாளுமன்றம்
போன்றவை.

இம்முறையில் ஒரு கருத்தை வெளிப்படுத்த ஒன்றுக்கு மேற்பட்ட தமிழ்ச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதைப் பார்க்கிறோம். கடன் கொடுத்த மொழியில் காணப்படும் சொல்லோடு ஒப்பிட்டு, சொல் நீளமாக இருப்பதைப் பார்க்கிறோம். இதற்குக் காரணம் தனிச்சொல் கிடைக்காமையேயாகும். இது போன்ற நீண்ட சொற்கள், தொடரில் அமைந்து வழங்கும்

நிலையில் பயன்பாட்டில் அவற்றின் எளிமை கருதி அவை **எளிமையாக்கம் (simplification)** செய்யப்படும் முறையும் ஓரள விற்குப் பயன்படலாயிற்று.

எ.கா.

ஆட்சித்தலைவர் → ஆட்சியாளர் → ஆட்சியர்
கோட்ட ஆட்சித் தலைவர் → கோட்ட ஆட்சியாளர்
→ கோட்ட ஆட்சியர்
முதலமைச்சர் → முதல்வர்
அஞ்சல் நிலையம் → அஞ்சலகம்
தலைமை நிலையம் → தலைமையகம்
செயலாளர் → செயலர்

போன்றவை.

5.1 வரலாற்று அடிப்படையில் சொல்லாக்கமுறை

வரலாற்று அடிப்படையில் புதுச்சொல் படைப்பைப் பார்க்கும் போது ஒருவகையில் சீரான தமிழாக்கம் காணப் படுகிறது என்றே சொல்ல முடியும். எடுத்துக்காட்டாக, தொடக்கத்தில் ஆங்கிலச் சொல்லான **'Oxygen'** என்பது ஒலி பெயர்ப்பு முறையில் தமிழில் **ஆக்ஸிஜன்** என்றே எழுதப்பட லாயிற்று. இம்முறையில் எழுதப்படுவதை மாற்ற எண்ணிய நிலையில், ஒரு கால கட்டத்தில் இதற்குப் பதிலாக இரண்டு வடமொழிச் சொற்களை இணைத்து ஒரு அமைப்பு உருவாக்கப் பட்டது. அதாவது **பிராண**, வாயு என்ற சொற்கள் சேர **பிராண வாயு** என்ற சொல்லமைப்பு ஆக்ஸிஜன் என்பதற்குப் பதிலாகப் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது. இதில் இடம் பெற் றுள்ள சொற்கள் இரண்டும் வடமொழிச் சொற்களாக அமைந்து விட்டதைக் கண்ட நிலையில் மேலும் தமிழாக்கம் செய்யப்பட வேண்டும் என்று எண்ணி இவற்றில் ஒன்றை மாற்றி **உயிர் வாயு** என்ற சொல்லமைப்பு, 'பிராண வாயு' என் பதற்குப் பதிலாகப் படைக்கப்பட்டதைக் காண்கிறோம். இதில் வரும் வாயு என்ற சொல் வடசொல் என்பதால் இதுவும் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக ஒரு தமிழ்ச்சொல் பயன்படுத் தப்படுவது நல்லது என்று கருதப்பட்ட நிலையில் மேலும் தமிழாக்கம் (முழுமையான) செய்யப்பட வேண்டியதாயிற்று. இம்முறையால் பழைய தமிழ் இலக்கிய இலக்கணங்களில்

பயன்பாட்டில் காணப்பட்ட வளி (*முந்து வளி) என்ற சொல் எடுத்தாளப்பட, நமக்கு உயிர் வளி என்ற முழுமையான தமிழ் அமைப்பு கிடைக்கலாயிற்று. இவ்வமைப்பு பரவலாக கல்வி, செய்தித்தொடர்பு போன்ற துறைகளில் பயன்படத் தொடங்கிய நிலையில் இதன் பயன்பாடு அதிகரித்தது. இவ்வகைப் பயன்பாட்டிற்குச் சமுதாய ஒப்புதலும் அதன் வாயிலாக செம்மையான நிலைபேராக்கமும் ஏற்படலாயிற்று. இவ்வாறு பயன்பாட்டில் பல்வேறு காலகட்டங்களில் தொடர்ந்து நடைபெற்று வந்த புதுச் சொல்லாக்கப்பணி தமிழ் வளர்ச்சிக்கும் அமைப்புக்கும் ஏற்ற வகையில் அமைந்து வந்துள்ளதைக் காண முடிகிறது.

விளக்கம். கருத்துக்கடன்

சொல்	
ஆக்ஸிஜன்	ஒலிபெயர்ப்பு முறை (transliteration)
பிராண வாயு	மேல் நிலையாக்கம் (sanskritisation)
உயிர் வாயு	ஓரளவு தமிழாக்கம் (partial tamilisation)
உயிர் வளி	முழுமையான தமிழாக்கம் (complete tamilisation)
(இன்றைய வழக்கு)	

6. சொல்லாக்க முறைகள் - அன்றும் இன்றும்

6.1 பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்கலும் சொல்லாக்க முறைகளும்

புதுச்சொற்கள் ஏன் தேவைப்படுகின்றன என்பதை முன்பே பார்த்தோம். இங்கு, புதுச்சொற்கள் உருவாக்கப்படும்போது

*"உந்தி முதலா முந்துவளி தோன்றி
நெஞ்சினும் மிடற்றினும் தலையினும்
....
பன்னீருயிரும் தன்னிலை திரியா
மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்"

தொல். எழுத்து. 83

பிறமொழிக்கருத்துக்களை, சொற்களின் அமைப்புக்களை எவ்வாறு நம்மொழியில் எடுத்துப் பயன்படுத்தி வருகிறோம் என்பதை விளக்கமாகப் பார்க்கலாம்.

கருத்தோடு சொல்லையும் சேர்த்துக் கடன் பெறுவது ஒரு வகை மொழிப்பயன்பாடு. கருத்தை மட்டும் கடன் பெற்று அதற்கான சரியான தாய்மொழிச் சொல்லை (அமைப்பை) உருவாக்குவது இன்னொரு வகை மொழிப்பயன்பாடு. கடன் வாங்கப்படும் சொற்கள் தாய்மொழியின் மொழியமைப்பிற்கேற்பவே (ஒலியன் - உருபன் அமைப்பிற்கேற்ப) பெரும்பாலும் அமைந்திருக்கக் காண்கிறோம்.

'கடன் வாங்கல்' பண்பு சமுதாயத்தில் காணப்படுவது போலவே மொழிகளில் கூட அக்காலத்தில் பிறமொழிக்கூறுகளின் தாக்கம் ஓரளவிற்கு இருந்து வந்துள்ளதை அறிகிறோம்.

> ''இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்லென்று
> அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே''
>
> (தொல். சொல். 397).

ஆனால் இன்று 'ஒரு மொழி' நாடே உலகில் இல்லை என்று சொல்லும் அளவிற்கு மொழித் தொடர்புகள் ஏற்பட்டு வருகின்றன. எந்தவொரு நாடும், மொழியும், சமுதாயமும் தனித்து இயங்குவது என்பது இன்றைய நிலையில் முடியாததாக உள்ளதைப் பார்க்கிறோம். ஏதேனும் ஒரு வகையில் ஒரு சமுதாயத்தோடு இன்னொரு சமுதாயமும், ஒரு மொழியோடு மற்றொரு மொழியும், ஒரு நாட்டோடு மற்றொரு நாடும் தொடர்பு கொண்டேயாக வேண்டியுள்ளது. இவ்வகைத் தொடர்புகள் இன்றைய நிலையில் மொழி வளர்ச்சிக்கும், நாட்டு வளர்ச்சிக்கும் மிகவும் தேவையானவையே. இந்தச் சூழ்நிலையில் **மொழித்தாக்கம்** (linguistic impact) ஏதேனும் ஒரு நிலையில் ஏற்படவே செய்யும். இத்தகைய தாக்கத்தால் ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு வந்து சேரும் கூறுகளையே **'கடன் வாங்கல்'** முறையில் விளக்குகின்றோம். இதன் உட்பிரிவுகளைப் பின்வருமாறு விளக்கலாம்.

1. கடன் சொற்களை அப்படியே பயன்படுத்துதல் (loan adoptions)

(ஒலிபெயர்ப்பு விதிகளின் அடிப்படையில்)

1.1	ஆங்கிலத்தில்	தமிழில்
	wicket	விக்கெட்(டு)
	pronote	புரோ நோட்டு
	boiler	பாய்லர்
	order	ஆர்டர்
		போன்றவை.

1.2	வடமொழி	தமிழில்
	duṣprayo:	துஷ்பிரயோகம்
	gho:ṣa	கோஷம்
	abhinaya	அபிநயம்
		போன்றவை.

1.3	பெர்சே-அராபிக்	தமிழில்
	bina:mi	பினாமி
	dasta:ve:j	தஸ்தாவேஜு
	ja:min	ஜாமீன்
	va:pas	வாபஸ்
	a:jar	ஆஜர்
		போன்றவை.

2. கடன் சொற்களை மொழி பெயர்த்தல் (loan translations)

கடன் பெறப்பட்ட சொற்களை அப்படியே நேரடியாக மொழிபெயர்த்துப் புதுச்சொற்களாகப் பயன்படுத்துதலே இம்முறையாகும்.

எ.கா.

ஆங்கிலத்தில்		தமிழில்
Sudden call	→	திடீர் அழைப்பு
Black money	→	கறுப்புப் பணம்
Rehabilitation work	→	நிவாரணப் பணி
First round talk	→	முதல் சுற்றுப் பேச்சு

Indira wave → இந்திரா அலை
Internal assessment → உள் மதிப்பீடு
First batch → முதல் அணி
World bank → உலக வங்கி
Continous strike → தொடர் மறியல்
போன்றவை.

3. கடன் கலப்பு (loan blends)

இந்த வகையான சொல்லமைப்பு தாய்மொழிக் கூறையும் பிற மொழிக்கூறையும் ஒன்றாகச் சேர்த்துப் பெறப்படுவதாகும். இது ஒருவகையில் ஒருவகை தன்னினமாக்கமேயாகும் (nativisation). தமிழில் இம்முறை அதிக அளவில் பயன்பட்டு வருவதைக் காண்கிறோம்.

பிற மொழி வடிவத்தோடு தமிழ் மொழியில் உள்ள முழுச் சொற்களும், சில சமயங்களில் ஒட்டுக்களும் சேர்ந்து இவ்வமைப்பு உருவாக்கப்படுகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட பிற மொழிக்கூறுகள் கூட தமிழ் மொழி அமைப்போடு சேர, கடன் கலப்பு முறையில் புதுச்சொற்கள் தமிழில் உருவாகின்றன. தமிழோடு ஆங்கிலம், வடமொழி, பெர்சோ - அராபிக் மொழிகள் போன்றவற்றின் சொற்களும் ஒட்டுக்களும் சேர பல்வேறு புதுச்சொற்கள் நமக்குக் கிடைக்கின்றன.

3.1 ஆங்கிலம் - தமிழ்க் கலப்பு

3.1.1 ஆங்கிலச் சொல் + தமிழ்ச்சொல்

(civil) சிவில் + உரிமை > சிவில் உரிமை
(railway) ரயில்வே + நிலையம் > ரயில்வே நிலையம்
(scheduled) ஷெட்யூல்டு + வகுப்பு > ஷெட்யூல்டு வகுப்பு
போன்றவை.

3.1.2 ஆங்கிலச் சொல் + தமிழ் ஒட்டு

(run) ரன் + கள் > ரன்கள்
(wicket) விக்கட்டு + கள் > விக்கட்டுகள்
(police) போலீஸ் + ஆர் > போலீஸார்

3.1.3 ஆங்கிலச் சொல் + தமிழ்ச் சொல்

(இரண்டும் ஒரே பொருளைக் கொடுக்கும் சொற்கள்)

(paper) பேப்பர் + தாள் > பேப்பர் தாள்
(wire) ஒயர் + கம்பி > ஒயர் கம்பி
(ditch) டிச்சு + குழி > டிச்சு குழி
போன்றவை.

3.2 தமிழ் - வடமொழிக் கலப்பு

3.2.1 தமிழ்ச்சொல் + வடமொழிச்சொல்

துணை + பிரதமர் > துணைப்பிரதமர்
பொது + காரியதரிசி > பொதுக்காரியதரிசி
போன்றவை.

3.2.2 வடசொல் + தமிழ்ச்சொல்

பிரதம + அலுவலகம்
உப + தலைவர்
அவசர + சட்டம்
போன்றவை.

3.3 ஆங்கிலம் - வடமொழிக் கலப்பு

3.3.1 ஆங்கிலச் சொல் + வடமொழிச் சொல்

மாஜிஸ்ட்ரேட் + விசாரணை
பிலிம் + உத்ஸவம்
போன்றவை.

3.4 பெர்சோ - ஆராபிக் + தமிழ்க் கலப்பு

தஸ்தாவேஜு + கள் > தாஸ்தாவேஜுகள்
குமஸ்தா + கள் > குமாஸ்தாக்கள்
ஜில்லா + கள் > ஜில்லாக்கள்
தாலுக்கா + அலுவலகம் > தாலுக்கா அலுவலகம்
வாபஸ் + வாங்கு > வாபஸ்வாங்கு
போன்றவை.

4. பிறமொழிச் சொற்களின் தமிழாக்கம்

4.1 ஓரளவு தமிழாக்கம்

4.1.1 மொழி முதலில்

ர, ல போன்ற எழுத்துக்கள் தமிழில் மொழி முதலில் வாரா என்பதனால் அவற்றைத் தமிழாக்கம் செய்யும்போது அ, இ, உ என்ற உயிரெழுத்துக்களை இணைத்து வடிவமைத்தல் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையாகும்.

எ.கா.

லாபம் > இலாபம்
லாக்கா > இலாக்கா
ராஜ்யம் > இராஜ்யம்
லோகம் > உலோகம்
ரோமம் > உரோமம்

4.1.2 மொழி இடையில்

மொழியிடையில் சில மெய்மயக்கங்களைத் தவிர்க்க (பிற மொழி அமைப்பில் இடம் பெறுபவை) மயக்கத்தில் இடம் பெற்றுள்ள மெய்களுக்கிடையே உயிரெழுத்து சேர்க்கப்பட்டு எழுதப்படுவதைப் பார்க்கிறோம். இதுவும் 'ஓரளவு தமிழாக்கம்' என்ற பிரிவைச் சார்ந்ததேயாகும்.

எ.கா.

மான்ய > மான்யம் > மானியம்
பிரச்னை > பிரச்சினை
வாட்ச்மேன் > வாட்சுமேன்

போன்றவை.

4.1.3 மொழி இறுதியில்

மொழியிறுதியில் பிற மொழிச் சொற்கள் வல்லெழுத்துக்களில் முடியும்போது அவற்றுடன் உகரம் சேர்த்து எழுதுதல் என்பதும் ஓரளவு தமிழாக்க முறையில் வரும். ஏனெனில் தமிழில் வல்லெழுத்துக்கள் இறுதியில் வாரா.

எ.கா.

ரிகார்ட்	—	ரிகார்டு	(record)
செக்	—	செக்கு	(cheque)
பெஞ்ச்	—	பெஞ்சு	(bench)
கப்	—	கப்பு	(cu)
சோவியத்	—	சோவியத்து	(soviet)

போன்றவை.

4.1.4 சில ஒலியன் மாற்றங்கள்

சில ஒலியன்கள் (பிற மொழிச் சொற்களின்) தமிழில் இடம் பெறாதபோது, அவற்றை நிரப்ப, தமிழில் உள்ள ஓரளவு ஒலியொற்றுமை (partial phonetic similarity) கொண்ட ஒலியன்களைப் பயன்படுத்துதலும் ஓரளவு தமிழாக்க முறையில் இடம் பெறுவதே.

இது போன்ற ஒலியன இடம் பெற்று வழங்கும் சொற்களில் ஓரினமாக்கல் (assimilation) நடைபெறுவதைப் பார்க்கிறோம்.

4.1.4.1 h - (புத்தொலி) என்பது நீக்கப்பெறுதல்

கடன் வாங்கும் போது சொற்களில் பயின்று வரும், அதே நேரத்தில் தமிழுக்கு ஒவ்வாத (தமிழில் இல்லாத) ஒலியனை நீக்கி, சொற்களை ஏற்றுக்கொள்ளும் முறையும் தமிழாக்கத்தின் ஒரு பகுதியேயாகும்.

எ.கா.

Hotel	(ஹோட்டல்)	→	ஓட்டல்
Hospital	(ஹாஸ்பிடல்)	→	ஆஸ்பிடல்
Homeopathy	(ஹோமியோபதி)	→	ஓமியோபதி
Head clerk	(ஹெட் கிளர்க்)	→	எட் கிளர்க்

போன்றவை.

4.1.4.2 மெய் மயக்கங்கள் ஓரினமாதல்

பிறமொழிச் சொல்		தமிழாக்கம்
புஸ்தக்(ம்)	→	புத்தகம்
புஷ்ப(ம்)	→	புட்பம்

போன்றவை.

4.1.4.3 தமிழ் ஒலியனைப் புத்தொலியனாக ஏற்றல்

உலக மொழிகளில் உள்ள பல்வேறு ஒலிகளையும் குறிக்கத் தக்க வகையில் வழக்கில் உள்ள தமிழ் எழுத்துக்களைப் புத் தொலியாக ஏற்று வழக்கில் ஈடுபடுத்துவதே இம்முறையாகும்.

எ.கா.

File → ஃபைல்
(f> ஃப)

தமிழில் 'f' என்ற உரசொலி இல்லாததால், தமிழில் சார் பெழுத்தாகச் சொல்லப்பட்டுள்ள ஃ(ஆய்தம்) என்பதனை வல் லெழுத்துக்கு முன்னர் எழுதி உரசொலியின் பண்பு அதன் வாயிலாக வெளிப்படுமாறு செய்தல்.

தொல்காப்பிய விதிப்படி ஆய்தம் வல்லெழுத்துக்களின் முன்னர் வரும்போது, ஒலிப்பில் அவற்றின் சாயல் பெற்றே அமையும் என்பதால் இது போன்ற எழுத்து முறை ஏற்புடைய தாகும்.*

எ.கா.

Faculty → ஃபெகல்டி
Factory → ஃபேக்டரி போன்றவை,

மேலே குறிப்பிட்ட தமிழாக்க முறைகளோடு வேறு சில முறைகளும் புதுச் சொல்லாக்கத்தில் இன்று பயன்படுவதைக் காண முடிகிறது.

1. கடன் வாங்கப்பட்ட சொல்லின் பொருள் மாறி வழங்குதல்

ஆங்கிலத்தில் 'petty shop' என்ற ஒரு சொல்லமைப்பு சிறு சிறு பொருள்களை விற்பனை செய்வதற்காக ஆங்காங்கே தெருவில் அமைக்கப்பட்டுள்ள சிறு கடைகளைக் குறிக்க மேலை நாட்டில் பயன்படுத்தப்படுகிறது.

---

* "குறியதன் முன்னர் ஆய்தப்புள்ளி உயிரொடு
புணர்ந்த வல்லாறன் மிசைத்தே" (தொல். எழுத்து, 38)

ஆங்கிலத்தில் மற்றும் ஆங்கிலேயரின் சமுதாயத் தாக்கத்தால் இந்த 'petty shop' என்ற சொல் தமிழ் வழக்கிற்கு வந்தது என்பதில் யாருக்கும் ஐயமிருக்க முடியாது. இவ்வாறு வந்த இந்தச் சொல் இன்று தமிழ் வழக்கில் அது ஆங்கிலத்தில் குறிக்கும் பொருளைக் குறிக்கப் பயன்படுத்தப்படாமல், பெட்டி போன்ற வடிவில்அமைக்கப்படும் கடையைக்குறிக்கவே பயன்படுகிறது. Petty என்ற ஆங்கிலச் சொல் தமிழில் அப்படியே வழங்கப்பட்டாலும் அதன் பொருள் இன்று மாறிவிட்டது. மேலும், folk etymology யாக petty என்ற ஆங்கிலச் சொல் நிகரானதாகக் கருதப்பட்டு **பெட்டிக் கடை** (பெட்டி வடிவில் அமைந்த கடை) என்று வழக்கில் இடம் பெற்றுள்ளதைக் காண்கிறோம்.

2. சுருக்கக் குறியீட்டு முறையில் புதுச் சொல்லாக்கம்

மொழிகளில் குறிப்பாக ரோமன் எழுத்து முறையில் குறிக்கப்படும் சில உலகப் பொது சுருக்கக் குறியீடுகள் (abbreviations) இன்று வழக்கில் குறியீடுகளாக அல்லாமல் சொற்கள் போலவே பயன்படுத்தப்படுவதைப் பார்க்க முடிகிறது.

மற்ற சொற்களைத் தொடர்களில் அமைத்து எழுதுவது போலவே இவற்றையும் தொடர்களில் அமைத்து வாக்கியங்கள் உருவாக்கப்படுகின்றன.

எ.கா.

1. இது ஒரு **யுனெஸ்கோ** வெளியீடு
2. **ஏசியாட்** விளையாட்டுக்கள் சியோலில் நடைபெற்று முடிந்தன
3. **பி.எல்.ஓ.வினர்** விமானத்தைக் கடத்தினர்
4. இலண்டனில் உள்ள **ஒய்.எம்.ஸி.ஏ.** மாளிகையில் தங்கினேன்

3. கூட்டு வினையமைப்புகள்

தமிழில் புது வினைச்சொற்கள் கூட்டு வினைகள் என்ற பெயரில் தற்போது அமைவதைப் பார்க்க முடிகிறது. இதில் ஆங்கில மொழிச் சொல்லும் தமிழ் மொழியில் உள்ள இரண்டு

மூன்று வினைகளும் சேர்கின்றன. பண்ணு, செய், வை போன்ற வினைகளே பெருமளவில் சேர்கின்றன.

ஆங்கிலத்தில் அந்தந்த வினைச்சொல் மட்டும் பயன்படுத்தப்பட, தமிழில் இவ்வினைகளைப் பெயராக எடுத்துக்கொண்டு அதனோடு பண்ணு, செய், வை, போடு போன்ற வினைகளைச் சேர்த்து நாம் கூட்டு வினைகளை உருவாக்குகிறோம்.

3.1 கூட்டு வினை$_1$ = ஆங்கில வினை + தமிழ் வினை

எ.கா.

(strike)	*ஸ்ட்ரைக்	+ பண்ணு/செய்
(work)	வொர்க்	+ பண்ணு/செய்
(like)	லைக்	+ பண்ணு/செய்
(help)	ஹெல்ப்	+ பண்ணு/செய்
		போன்றவை.

இன்றைய தமிழில் இவை தவிர வேறு சில கூட்டு வினைகளும் புதிதாக உருவாக்கப்படுகின்றன. இவ்வமைப்பில் முதல் வினையின் எச்சத்தோடு துணைவினை ஒன்று சேருகிறது.

3.2 கூட்டு வினையமைப்பு$_2$ = முதல்வினையின் இ.கா.வி.எ. + துணை வினை

எ.கா.

'teach' சொல்லி + கொடு/தா

> சொல்லிக்கொடு/சொல்லித்தா

இதே போன்று முதல வினையின் செயவென் எச்சத்தோடு துணைவினை சேர ஒருவகையான கூட்டு வினையமைப்பு உருவாகிறது.

3.3 கூட்டு வினை$_3$ = முதல் வினையின் செ. எ. + துணை வினை

எ. கா.

'educate' படிக்க + வை

* In English, the words *strike*, *work*, *like*, *help*, etc., function both as noun and verb.

3.4 கூட்டு வினை$_4$ = பெயர் + துணை வினை

பெயரோடு ஒரு துணை வினை சேரும்போது ஒரு வகை யான கூட்டு வினையமைப்பு நமக்குக் கிடைக்கிறது.

எ.கா.

குறும்பு + பண்ணு/செய்
அதிகாரம் + பண்ணு/செய்
போர் + இடு > போரிடு
ஆசை + படு > ஆசைப்படு
அச்சு + அடி > அச்சடி
தந்தி + அடி/கொடு > தந்தியடி/தந்திகொடு
போன்றவை.

இவ்வகைக் கூட்டுவினையமைப்பில் இடம்பெறும் வினைகள் மிகச் சிலவேயாகும். மேலும் இவ்வினைகளில் சில துணை வினைகளாகப் (auxiliary verbs) பயன்படுபவையாகும்.

6.2 புதுச் சொல்லாக்கத்தில் வினைகள்

வினைப்பயன்பாட்டில் புது வினைச்சொற் பயன்பாடும் காணப்படுகிறது. பாரதியாரது மொழியமைப்பில், 'தர்க்கம்' என்ற வடமொழிச் சொல் தமிழாக்கம் செய்யப்பட்டு, பின்னர் அதன் வாயிலாக **தர்க்கி** என்ற வினைச்சொல் ஆக்கப்படுகிறது.

எ.கா.

தர்க்கித்தார் (தர்க்கம் செய்தார் என்ற பொருளில் பயன்படுகிறது)

பத்திரிக்கைத் தமிழில் சிலரது எழுத்துக்களில் வினைச் சொற் பயன்பாடு காணப்படுகிறது.

எ.கா.

தமிழில் ஒப்பு என்ற வினை 'கொள்' என்ற துணைவினை யுடன் சேர்ந்தே வழங்கும்.

ஒப்புக்கொள்
ஒப்புக்கொண்டான்
ஒப்புக் கொண்டு சென்றான்

சிலரது பயன்பாட்டில் இது ஒப்பினான், ஒப்பினார்கள் என்றெல்லாம் இடம் பெற்று வழங்குகிறது.

6.3 பேச்சு வழக்கிலிருந்து பெறப்படும் புதுச்சொற்கள்

இன்றைய தமிழ்ப் பேச்சு வழக்குகளிலிருந்தும் (dialects) புதுச் சொற்கள் நடைமுறை வழக்கிற்குக் கொண்டு வரப்படுகின்றன. கள ஆய்வு வாயிலாகப் பல்வேறு தமிழ்க் கிளை மொழிகளை ஆய்வு செய்யும் நிலையிலேயும், பல்வேறு தொழில்களைச் செய்வோருடைய தமிழ்ப்பயனபாட்டினைக் கண்டறியும் போதும் நமக்கு சில நல்ல தமிழ்ச் சொற்கள் வெளிக்கொணரப்படாமல் புதைந்து கிடப்பது தெரியவருகிறது. தமிழகத்தில் இன்று நூற்றுக்கும் மேற்பட்ட தொழில்களைச் செய்வோரது மொழிப் பயன்பாட்டில் இடம் பெற்று விளங்கும் தொழிற்சொற்களைச் சேகரித்துப் பார்க்கும் போது எழுத்து வழக்கில் இடம் பெறாத புதுச் சொற்களாகக் குறைந்தது 10 லிருந்து 15 விழுக்காடு சொற்கள் இருப்பதைக் கண்டறிய முடிகிறது. இத்தகைய தொழிற் சொற்களைக் கண்டு பிடிப்பதன் மூலமும் புதுச்சொல்லாக்கம் சட்டத்துறை மொழியாக நடைபெற்றே வருகிறது எனலாம்.

தமிழ் மொழி ஆட்சிமொழியாக, கல்வி மொழியாக செய்தித் தொடர்புக்கான ஆற்றல் மிக்க மொழியாக, அறிவியல் மொழியாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறவேளையில், இன்று இத்துறைகளுக்காகப் பல்வேறு சொற்கள் மேற்கூறப்பட்ட சொல்லாக்க முறைகளில் ஆக்கப்பட்டு வரும் நிலையில் புதுச்சொல்லாக்கம் மிக வேகமாக நடைபெற்று வருகிறது என்பதில் ஐயமில்லை. எனினும இதுபோன்ற சொற்கள் ஆக்கப்பட்ட பின் அவற்றைப் பயன்பாட்டில் ஆற்றல் மிக்க வகையிலும் அனைவரும் பயன்படுத்த எளிமையாக இருக்கும் வகையிலும், கருத்துப் பரிமாற்றத்திற்கு ஏற்ற வகையிலும் சீராகவும் செம்மையாகவும் ஆக்க வேண்டியது இன்றியமையாத மொழித் திட்டமிடுதற் பணியாகும். ஆகவே புதுமையாக்கம் மொழியிலே நடைபெறும்போது நிலைபேறாக்கம் பற்றியும் நாம் சிந்தித்துச் செயல்பட வேண்டியதாகிறது. புதுச் சொற்கள் ஆக்கப்பட்டால் மட்டும் போதாது; அவை நிலை

பேறாக்கம் செய்யப்பட்டு, மொழிப் பயனபாட்டில் ஈடுபடுத்தப் பட்டால்தான் மொழிப் பயன்பாட்டின் வளம் பெருகும்; அதன் மூலம் சமுதாயப் பணிகளைச் சிறப்பாக நிறைவேற்ற வழி ஏற்படும்.

கலைச்சொல் பயன்பாட்டில் 'ஒரு சொல்லுக்கு ஒரு பொருள்' என்ற நிலை ஏற்படும் வகையில் சொல்லாக்கம் எதிர் காலத்தில் அமையவேண்டும். தற்போது ஒரு சொல் - இரண் டிற்கும் மேற்பட்ட கருத்துக்களை வெளியிடும் முறையில் பல கலைச்சொற்கள் ஆக்கப்பட்டுள்ள நிலையைக் காண்கிறோம். கலைச்சொல் சிறு சொல்லாக இல்லாமல் தொடராக அமைந் துள்ளதையும். பல்துறைச் சொற்களைப் பார்க்கும் போது அறிந்து கொள்ள முடிகிறது. மிகைச் சொற்களை (அல்லது) கூறுகளை சில சொல்லமைப்புக்களில் காணமுடிகிறது. இவ்வா றெல்லாம் புதுச்சொற்கள் அமைந்தால் அதன் மூலம் ஏற்படும் செய்தித்தொடர்பு ஆற்றல் ஏமிக்க வகையில் அமையாது. ஆகவே எதிர்காலத்தில் கலைச்சொல்லாக்கம் மேற்கொள்ளும் நிலையில் இது போன்ற குறைகள் தொடரா வண்ணம் மொழித் திட்டமிடுதல் நடைபெறுவது மொழியின் சிறப்பான வளர்ச்சிக்கு மட்டுமல்லாது, அம்மொழிச் சார்ந்துள்ள சமுதா யத்தின் சீரான வளர்ச்சிக்கும் உரமிடுவதாக அமையும் என நாம் நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

துணை நூல்கள்

கருணாகரன், கி. *1978.* 'மொழித் திட்டமிடுதல்' அ.த. மொ. கழகம், அண்ணாமலை நகர்.

———— *1982.* மொழி வளர்ச்சி, மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.

———— *1984.* 'பத்திரிக்கைத் தமிழில் கலைச் சொல்லாக்கம்' தமிழ் நேசன் மணிவிழா மலர், கோலாலம்பூர்.

தொல்காப்பியர் *1967.* தொல்காப்பியம், கழகப் பதிப்பு, சென்னை.

மணியன், தங்க. 1986. பத்திரிக்கை மொழி நடை, மாணிக்கப் பதிப்பகம், பரணம்.

——— 1978. பத்திரிக்கைத் தமிழ், மாணிக்கப்பதிப்பகம், பரணம்.

முருகரத்தனம், தி. 1980. தமிழ் எழுத்தியல் இன்றும் அன்றும், நாவலர் புத்தக நிலையம், மதுரை.

Annamalai, E. 1980. 'Simplification as a process of Language Modernization In *Sociolinguistics and Dialectology* (ed.) S. Agesthialingom & K. Karunakaran, AU, Annamalai nagar.

Ferguson, C.A. 1972. *Language structure and Language use* (ed.) A.S. Dil, SUP, Stanford.

Karunakaran, K. 1984. 'Modernisation of Tamil in News Media' In *Modernisation of Indian Languages* in News Media, (ed.) Bh. Krishnamoorti & A. Mukherjee, OU, Hyderabad.

Nida, E.A. 1946. Morphology, MUP, Ann Arbor.

Shanmugam Pillai, M. 1982. 'English Borrowings in Educated Tamil'. In *Collected Papers-I*, Muthu Pathippagam, Madurai.

Udhaya Shankar, P.N. & Karunakaran, K. 1986. 'Sociolinguistic Study of Tamil in Mass Media' *Journal of the Bharathiar University (Arts)*, BU, Coimbatore.

மொழியியலும் இடப்பெயர் ஆய்வும்*

எஸ். ஆரோக்கியநாதன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

முன்னுரை

மனித இனம் ஒன்றிலிருந்து ஒன்றினை வேறுபடுத்திக் காட்டவும், குறிப்பிட்ட ஒன்றினை மட்டுமே குறிக்கவும், ஒரு குறியீட்டை-ஒலிக்கூட்டை-சொல்லை பயன்படுத்திப் பெயர்ச் சொற்களைக் காலந்தோறும் தொடர்ந்து தோற்றுவித்த வண்ணமிருக்கிறது. தனி மனிதர்கள், ஊர்கள், இடங்கள் முதலியன பெயர் வைத்து அழைக்கப்படுகின்றன. இப்பெயர்கள் வெறும் குறியீடாக மட்டும் அமையாமல் அவை குறிப்பிடும் ஆள், பொருள், இடம் சார்ந்த பண்பு நலன்களையும் நமக்குப் புலப்படுத்துகின்றன. ஒரு பெயர் தோன்றக்காரணம், அதனோடு தொடர்புடைய அக்காலத்திய வரலாறு, அரசியல் போக்குகள்,

---

* 22—2—86 அன்று புதுவை இடப்பெயர் ஆய்வுக் கழகம் நடத்திய இடப்பெயர் ஆய்வுக் கருத்தரங்கில் படிக்கப் பட்ட-தன் திருந்திய வடிவம்

அக்காலச் சமூக அமைப்பு, பண்பாடு, மொழி மாற்றங்கள் முதலியவற்றையும் பெயராய்வு மூலம் நாமறியலாம். 'இடப் பெயர்களின் தொன்மை காரணமாகப் பண்டைய வரலாறு மௌனம் சாதிக்கின்ற இடங்களிலெல்லாம் இடப்பெயர்கள் வாய்திறந்து சான்று பகருகின்றன' என்று ஆளவந்தார் (1984) குறிப்பிடுகிறார்.

பெயராய்வு (onomastics) தனிமனிதப் பெயராய்வு (anthroponomy) இடப்பெயராய்வு (toponymy) என இருவகைப்படும். தனிமனிதப் பெயராய்வு வாழும் தலைமுறையினரின் பெயர்களைக் கொண்டு, பெயர் வைத்த முந்தைய தலைமுறையினரின் சமூக, அரசியல் சார்புகளை அறிய உதவும். சிலர் தாமே புனைப்பெயர்களை வைத்துக் கொள்வதுண்டு. இவைகளால் சமகால சமூக அரசியல் நிகழ்வுகளைக் காணமுடியும். சுதந்திரப் போராட்ட காலத்தில் தேசியத் தலைவர்களின் பெயர்கள் அதிகமாகப் பெயரிடப்பட்டதையும், பின்னர் திராவிட இயக்கம் தோன்றியதால் பண்டைத் தமிழ்ப் பெயர்களையும் தூய தமிழ்ப் பெயர்களையும் புனைப்பெயராகத் தாமும், இயற்பெயராக தம் குழந்தைகளுக்கும் பெயரிடப்பட்டதையும் காணலாம். சான்றுகள்: சூரியநாராயண சாஸ்திரியார்-பரிதிமாற் கலைஞர், நாராயணசாமி-நெடுஞ்செழியன், இராமசாமி-தமிழ்வாணன், முத்தையா-கண்ணதாசன், சுப்புரத்தினம்-பாரதிதாசன், சுப்புரத்தினதாசன்-சுரதா'. தனிமனிதப் பெயர்கள் ஒருவரின் வாழ்நாளோடு தொடர்ந்து வருவது. அவருக்குப்பிறகு அப்பெயரும் பேச்சுவழக்கிலிருந்து அருகிவிடும். தலைமுறைக்குத் தலைமுறை தனி மனிதப் பெயர்கள் மாறிக்கொண்டே வருகின்றன. தனி மனிதப் பெயர்கள் ஒரு தலைமுறையினைக் கால எல்லையாகக் கொண்டு வழக்கில் 'வாழ்ந்து' வருகின்றன. சென்ற தலைமுறையில் அதிகமாக வழங்கப்பட்டு வந்த ராஜராஜேஸ்வரி, கிருஷ்ணவேணி, ஜெகதாம்பாள் போன்ற பெயர்களை இன்றைய தலைமுறையில் காண்பதரிதாக உள்ளது. இவ்வாறு ஒரு குறிப்பிட்ட கால எல்லையை, வாழ்நாளை, கால வரம்பாகக் கொண்ட தனிமனிதப் பெயர்கள் ஒரு சில தலைமுறைகளுக்குப் பின் முழுதும் புதியனவாக மாறியிருக்கக் காணலாம்.

தனிமனிதப் பெயர்கள் ஆண், பெண், பால் வேறுபாடுகளை நமக்குத் தெளிவுபடுத்துகின்றன. பெரும்பாலும் தனிமனிதப் பெயர்கள் அவர்கள் சார்ந்துள்ள மதத்தினை, அரசியல் இயக்கத்தை, சாதியை, சிற்சில சமயங்களில் அவர்கள் வாழும் வட்டாரத்தை நமக்கு உணர்த்துகின்றன. லதா, கண்ணாம்பாள் முதலியன பெண்பால் பெயர்கள். ராஜன், ரவி முதலியன ஆண்பால் பெயர்கள். ராதா, பாரதி போன்றவை இருபாலார்க்கும் உரியன. சூசை, அப்துல்காதர், சீனுவாசன் முதலியன இப்பெயர் கொண்டவர்களின் சமயங்களை அறிய உதவும். இராம. நாராயணன், சேஷாத்திரி, ரங்கசாமி நாயுடு, சுப்பராயலு முதலியன இப்பெயருடையோரின் சாதியினைத் தெளிவாகக் குறிக்கின்றன. வெள்ளைச்சாமி எனும் பெயர் மதுரைப் பக்கத்திலும், நாச்சிமுத்து எனும் பெயர் கோயம்புத்தூர் பகுதிகளிலும், சென்னியப்பன் எனும் பெயர் ஈரோடு பகுதிகளிலும் அதிகமாகக் காணப்படும் வட்டாரப் பெயர்களாகும்.

இவ்வாறு தனிமனிதப் பெயர்கள் பல்வேறு செய்திகளை உள்ளடக்கி ஒரு தலைமுறையின் வரலாற்றுக் கருவூலமாக விளங்குகின்றன. பண்டைக் காலத்தில் ஒருவரின் பெயரோடு அவர் பிறந்த ஊரின் பெயரையும் இணைத்துக் கூறும் வழக்கமிருந்தது. இன்றும் அப்பழக்கம் ஓரளவு வழக்கிலிருப்பதைக் காணலாம். கடியலூர் உருத்திரங்கண்ணனார் எனும் சங்க காலப் புலவரின் பெயரில் தொடங்கி திருவாரூர் வி. கலியாண சுந்தரம் (திரு. வி. க) எனும் பெயர் வரை பல்வேறு சான்றுகள் நம்மிடை உள்ளன. சில நேரங்களில், இயற்பெயர் நீங்கி ஊர்ப் பெயர்களே ஆள்பெயராக மாறுவதை அதிகமாக இசைக் கலைஞர்களுக்கிடையே காணலாம். நாமகிரிப்பேட்டை, சீர்காழி, சிக்கல் போன்ற சில சான்றுகளை இங்கே கூறலாம்.

ஒரு தலைமுறையோடு வழக்கிழந்து போகின்ற தனிமனிதப் பெயர்களைப் போலல்லாது இடப்பெயர்கள் பல தலைமுறைகள் தொடர்ந்து வழங்கப்படுகின்ற தன்மையுடையனவாகும். இவ்வாறு காலகாலமாய் இடப்பெயர்கள் நிலவுவதால் அவைகளை வரலாற்றின் காலப்பெட்டகம் (time capsule of history) என்று நாச்சிமுத்து (1983) குறிப்பிடுகிறார். இடப்பெயர்கள் நீண்ட

கால அரசியல் மாற்றங்களை, சமூக வளர்ச்சியினை, மொழி வரலாற்றை நமக்கு உணர்த்தும் வல்லமையுடையன. இதனால், மொழியியல், சமூகவியல் மற்றும் வரலாற்று ஆய்வாளர்கள் ஒன்று சேர்ந்து இடப்பெயர் ஆய்வினை மேற்கொள்ளுதல் நல்லது.

தனிமனிதப் பெயராய்வு ஒரு தலைமுறைக்கான நிகழ்ச்சிகளை அச்சமூகத்தின் அரசியல் ஈடுபாட்டைப் பிரதிபலிக்கும். இடப்பெயராய்வு பல தலைமுறைகளுக்கு நீண்டு, சமூக அரசியல் மாற்றங்களைத் தொடர்ச் சங்கிலிப்போல தொடர்ந்து நமக்கு உணர்த்துகின்றன. வடஆற்காடு பகுதியினைச் சார்ந்த விக்கிரமசோழன் சதுர்வேதி மங்கலம் எனும் ஊர் முகமதியர் காலத்தில் அலியாபாத் என்று பெயர்பெற்றுப் பின்னர் களமூர் என்று வழங்கப்பட்டு தற்போது களம்பூர் என்று அழைக்கப்படுகிறது (பரமசிவம், 1981). கம்போடியா எனும் நாடு கம்பூச்சியா என்றும், கிழக்குப் பாகிஸ்தானம் பங்களா தேஷ் என்றும், சென்னை மாநிலம் தமிழ்நாடு என்றும் வழங்கப்படுவதற்கு அரசியல் மாற்றங்களே காரணம் என்பதை நாம் அறிவோம். புதுச்சேரியிலுள்ள டூப்ளேக்ஸ் தெரு நேரு வீதி என்றும், சென்னை மவுண்ட் ரோடு அண்ணா சாலை என்றும் அழைக்கப்படுவதற்கு சமூக மாற்றங்களே காரணம் ஆகும். பீகிங் நகரை பீஜிங் என சீன மக்களும், பீகிங் என்று ஏனையவர்களும் அழைக்கின்றனர். அவ்வாறே ஜப்பான் நாட்டைசப்பானியர் நிப்போ என்று அழைக்கின்றனர். இவை அந்நாட்டு மக்களின் நாட்டுப்பற்றினை, மொழியுணர்வை பிரதிபலிப்பதாக உள்ளன. சிலோன் எனும் நாவலந் தீவினை ஸ்ரீலங்கா என சிங்கள அரசும், சிங்களவர்களும், பிற அரசுத் துறையினரும் அழைக்கின்றனர். அதனை ஈழம் என்றும் (தமிழ் ஈழம் என்றும்) இலங்கைத் தமிழர்களில் பலரும், சிலோன் என்று நடுநிலையாளர்களும், இலங்கை என்று தமிழக மக்களும் அழைப்பதை நாம் காணலாம். இந்தியாவை பாரதம் என்றும், ஜனாதிபதியை ராஷ்டிரபதி என்றும் இந்திய வானொலி மற்றும் அரசுத்துறைகள் குறிப்பிடுகின்றன. ஏனையவர்கள் இந்தியா, ஜனாதிபதி, என்றே குறிப்பிடுகின்றனர். தூய தமிழில் ஈடுபாடுடைய சிலர் ஸ்ரீரங்கத்தை திருவரங்கம்

என்றும் லெக்ஷ்மாங்குடியை இலக்குமாங்குடி என்றும் குறிப்பிடு கின்றனர். சில இடப்பெயர்கள் குறிப்பிட்ட பண்பு நலன்களை உணர்த்தும் சொல்லாகவும் வழங்கப்படுவதுண்டு. சான்றாக, அய்யம்பேட்டை வேலை, கும்பகோணத்தான், திருப்பதி வேலை முதலியன உணர்த்தும் பொருள்கள் அனைவரும் அறிந்தன வாகும். இவ்வாறு வரலாற்றுக் காலப் பெட்டகமாகவும் மொழி யியல் ஆய்வுக்களமாகவும் சமூகவியல் ஆய்வுத்தரவுகளாகவும் விளங்குகின்ற இடப்பெயர்கள் தம்மைப் பயன் படுத்துவோரின் சமூக, அரசியல் பின்னணிகளையும் மொழி ஈடுபாட்டையும் நமக்கு உணர்த்தவல்ல கருவூலமாக அமைந்துள்ளன.

ஊர்ப்பெயர்களை பொருள் அடிப்படையிலும் (content) சொல்லமைப்பு (structure) அடிப்படையிலும் இருவகைப்படுத் தலாம். பொருளடிப்படையில் ஊர்ப்பெயர்களை ஆற்றுப்பெயர் பெற்றன, விலங்கு, பறவை பெயர் பெற்றன, ஆட்களின் பெயர் பெற்றன என பல்வகைப்படுத்தி பொருள் பகுப்பாய்வு (content analysis) செய்யலாம். சொல்லமைப்பு அடிப்படையில் ஊர்ப் பெயர்களை வேற்றுமைத் தொகையாய் வருவன (சாத்தமங் கலம், காஞ்சி வயல்); பண்புத்தொகையாக அமைவன (மூதூர், சித்தூர், நல்லூர்); வினைத்தொகையாய் இருப்பன (உறையூர், செல்லூர்) என்று பலவாறு வகைப்படுத்தி சொல்லமைப்பு ஆய் வினை (structural analysis) மேற்கொள்ளலாம். ஊர்ப்பெயர் களை துறை, ஊர் போன்ற பின்னொட்டுகள் பெறுவன வென்றும், திரு, சிறு போன்ற முன்னொட்டுகள் பெறுவன வென்றும் வகைப்படுத்தலாம். சில வட்டாரங்களில் மட்டுமே சில சொற்கள் ஒட்டுகளாக (affixes) வருவதையும் நாம் சுட்டிக் காட்ட இயலும். பொருள் பகுப்பாய்வு சமூக, அரசியல் வரலாற் றையும், சொல்லமைப்பாய்வு மொழியியல் கூறுகளையும் நமக்குத் தெளிவுபடுத்துகின்றன.

சிற்றூரும் பேரூரும்

இடப்பெயராய்வில் பேரூர்களையும் சிற்றூர்களையும் வகைப்படுத்த நிலப் பரப்பளவு, மக்கட்தொகை இவைகளை அடிப்படையாகக் கொள்வர். ஆயினும், மொழியியல் சார்ந்த சில பொதுநிலைக் கூறுகளைக் கொண்டு இவைகளை இரு

வகையாக வகைப்படுத்துவது மொழியியல் ஆய்வுக்கு பேருத வியாக அமையும். பேரூர்களின் பெயர்கள் பிறநாட்டு வரலாற்றுக்குறிப்பிலும், பயணக்குறிப்பிலும் இடம் பெற்றிருக்கக் கூடும். கலை, கலாச்சாரம், வாணிபம் தொடர்பாக சிறப்பிடம் பெற்றிருக்கலாம். சில புராணச் செய்திகளுடன் தொடர்பு கொண்டிருக்கலாம். இலக்கியங்கள், கல்வெட்டுக்கள் ஆகியவைகளில் இடம் பெற்றிருக்கலாம். ஆனால் சிற்றூர்களின் பெயர்கள் இத்தகைய சிறப்பு பெற்றுத் திகழ வாய்ப்பில்லை.

பேரூர்களின் பெயர்கள் வேற்று மொழிப் பெயரையோ அல்லது பாதிப்பையோ பெற்றிருக்கலாம். சிற்றூர்களின் பெயர்கள் பெரும்பாலும் தமிழ்ப் பெயர்களாகவே அமைந்திருக்கும். பேரூர்களின் பெயர்கள் உயர்வழக்கில் இடம்பெற்றிருப்பதால், நிலைபேறடைந்த எழுத்துவழக்கில் ஒருவிதமாகவும் பேச்சு வழக்கில் வேறுவிதமாகவும் (முழையூர்/நுழையூர்) அயல் மொழி பாதிப்பால் இன்னொரு விதமாகவும் அமைகின்றன. சிற்றூர்களின் பெயர்கள் பேச்சுவழக்கில் மட்டுமே நிலவுவதால் அவைகளின் எழுத்து வடிவம் பேச்சுவழக்கினையொட்டியே அமைகின்றன. பேரூர்கள் அந்நியர்களின் ஆட்சிக்கு உட்பட்டும், அவர்களின் வாழ்விடங்களாகவும் இருந்தமையால், பிற மொழியாளர்களின் ஒலிப்பு முறைக்கு ஏற்ப அயல்மொழியில் எழுதப்படுகின்றன (திருச்சிராப்பள்ளி/trichinopoly; தூத்துக்குடி tuticorin). சில சமயங்களில் அயல் மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு வழங்கப்படுவதுமுண்டு (பொன்மலை / golden rock; திருமறைக்காடு/வேதாரண்யம்). அயல்மொழி பேசும் ஆட்சியாளர்களின் காலத்தில் உருவாக்கப்பட்ட ஊர்ப்பெயர்கள் தமிழ் ஒலியியலமைப்புக்கு ஏற்ப மாறி வழங்கப்படுவதையும் காணலாம் (மகுடஞ்சாவடி/mc donald choultry; அம்பட்டன் வாராவதி/hamilton bridge). பேரூர்கள், அரசு கணக்கேட்டில் ஒருவிதமாகவும் பேச்சுவழக்கில் வேறுவீதமாகவும் வழங்கப்படுகிறது. அதிக அசைகளைக் கொண்ட பேரூர்களின் பெயர்கள் பெரும்பாலும் மரூஉப் பெயரொன்றையும் பெற்றிருக்கும். அவை குறைந்த அசைகள் உடையனவாக விளங்கும் (புதுச்சேரி/புதுவை, புதுக்கோட்டை/புதுகை; திருநெல்வேலி/நெல்லை; கோயம்புத்தூர்/கோவை). இவ்வாறு உருவாகும்

சில மரூஉப் பெயர்கள் இரு ஊர்களுக்கும் பொதுவானதாக அமைவதுமுண்டு. தாராபுரம் தாரை என்றும் தாராமங்கலம் தாரை என்றும் வழங்கப்படுகிறது.

சிற்றூர்களின் பெயர்கள் அயல்மொழிப் பாதிப்பின்றியும் உயர் வழக்கின் தாக்குதலின்றியும் பேச்சுவழக்கிலேயே பன்னெடுங்காலமாய் நிலவி வந்து பேச்சு வழக்கின் அடிப்படையில் எழுத்து வடிவம் பெற்று விளங்குகின்றன. இதன் பயனாய் சிற்றூர்களின் பெயர்கள் மொழியியல் ஆய்வுக்கு மிகவும் ஏற்றதாகவும், ஒலியியல் மாற்றங்களையும் சொல்லமைப்பு முறையினையும் கண்டறிய உதவும் கருப்பொருளாகவும் அமைகின்றன. பேரூர்களின் பெயர்கள் அயல்மொழி பாதிப்பினையும் உயர் வழக்கின் தாக்கத்தையும் பெற்றிருப்பதால், இயல்பாக நிகழ்கின்ற ஒலியியல் மாற்றங்களை துல்லியமாகக் கண்டறிய முடிவதில்லை.

ஊர்ப்பெயர் ஆய்வு என்பது ஒரு வகையில் பொதுப்பெயராக அமைதல் பொருத்தமாயினும் தெளிவும் நுணுக்கமும் கருதி இடப்பெயர் ஆய்வு அல்லது இடப் பெயரியல் என்பதே விரும்பத்தக்கது, என நாச்சிமுத்து (1983) குறிப்பிடுகிறார். ஊர்ப்பெயர் ஆய்வு என்பது மலை, குன்று, தெரு, வீதி வெளியிடங்கள், மேய்ச்சல் நிலம் ஆகிய பகுதிகளையும் உள்ளடக்கியதாகும். ஒவ்வொரு ஊரிலும் மக்கள் வாழும் மையப்பகுதியினையடுத்து குடியேற்றமில்லாத புறநகர்ப் பகுதிகள் இருக்கும். அப்பகுதிகளும் ஏதாவதொரு பெயர் கொண்டு விளங்கி வரும். கோயிலைச் சுற்றியமைந்த பகுதிகளை கோயிலடி என்றும் ஊர்க்குளத்தை யொட்டிய பகுதிகளை குளத்தங்கரை யென்றும் அழைக்கப்படுவதைக் காணலாம். அவ்வாறே முட்டங்குளம் நெல்லித் தோப்பு, சவுக்குத் தோப்பு முதலிய பெயர்கள் வழக்கிலிருப்பதை அறிவோம். கால வளர்ச்சியில் மக்கள் இப்பகுதிகளில் குடியேற அதுவரை இடப்பெயர்களாக இருந்தவை மக்கள் வாழும் ஊர்ப்பெயர்களாக மாறுகின்றன. நகர்ப்புறப் பகுதிகளில் இடப்பெயர்கள் மக்கள் வாழுமிடங்களாக மாறியதும் காலத்திற்கேற்ப புதுப்பெயர்களைப் பெறுவதுமுண்டு. ஆயினும் கிராமப்புறங்களில் இடப்பெயர்களால் சுட்டப்படும் பகுதிகள் ஊரிங்கு சற்று ஒதுங்கியிருக்கின்றன. அப்பகுதிகளில்

தான் பெரும்பாலும் அரிசன மக்களின் குடியிருப்புகள் காணப் படுகின்றன. அரசரடி, ஒத்தத்தெரு, தேர்முட்டி, கேணிப் பள்ளம் முதலியன கிராமங்களில் காணும் சில இடப்பெயர்க ளாகும். இவைகளே அரிசன மக்களின் வாழிடங்களாகும். சமூகவியல் ஆய்வாளர்கள் ஊர்ப்பெயர்களையும் இடப்பெயர் களையும் தெளிவாக வேறுபடுத்தி சாதியடிப்படையில் மக்கள் வாழ்கின்ற கிராமத்தின் அமைப்பினை ஆராய்தல் நலம் பயக் கும் என்பதில் ஐயமில்லை.

ஊர்ப்பெயரும் இடப்பெயரும்

இவ்வாறு இடப்பெயர் ஆய்வில் ஊர்ப்பெயர்களையும் இடப் பெயர்களையும் வகைப்படுத்தி பின்னர் ஊர்ப்பெயர்களைப் பேரூர்களின் பெயர்கள் சிற்றூர்களின் பெயர்கள் என்று பகுத் தாய்தல் ஏற்புடையதாகும். அயல்மொழிச் சொற்களை மொழி பெயர்ப்பு செய்கின்ற போக்கையும், தமிழ்மொழியின் ஒலியிய லமைப்புக்கு ஏற்ப மாற்றிக் கொள்கின்ற நிலையையும் தனி மனிதப் பெயர்களிலும் ஊர்ப்பெயர்களிலும் காணமுடியும். தமிழ்மொழியின் பேச்சுவழக்கில் திரிந்து வழங்குகின்ற சொற் களை அவ்வண்ணமே எழுத்து வழக்கில் எழுத அறிஞர்கள் மனம் ஒப்பார். பேச்சுவழக்கில் காணப்படும் மவன், எலெ, படிச்சான், ராஜன் எனும் சொற்களை மகன், இலை, படித் தான், இராசன் என்று 'செம்மை' படுத்தி உயர்வழக்கில் எழுத வும் பேசவும் பயன்படுத்துவர். ஆனால் ஆதிச்சநல்லூர், இடையாத்தி மங்கலம், குடவாயில், எட்டூர் போன்ற இடப் பெயர்களை ஆதித்தநல்லூர், இடையாற்றி மங்கலம், குட வாயில், இடையூர் என உயர்வழக்கு படுத்தி யாரும் வழங்கு வதில்லை. எழுத்து வழக்கில் பேச்சுவழக்கின் தாக்கம் ஏற்பட இடப்பெயர்கள்தான் முன்னோடிகளாக நுழைவாயில்களாக அமைந்திருக்கின்றன என்பதில் ஐயமில்லை. மேலும் சோழகப் பட்டி, சோளகப்பட்டி என்று வழங்கப்படுவது போல வட்டார வழக்கு வேறுபாடுகளோடு இடப்பெயர்கள் இருந்தாலும் அவைகளைக்கூட ஆட்சேபமின்றி உயர்வழக்கு ஏற்றுக் கொள் கின்ற அளவிற்கு இடப்பெயர்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இடப்பெயர்களில் காணும் மொழியியல் கூறுகளும், இடப்

பெயர்களுக்கு உயர்வழக்கு வழங்குகின்ற சிறப்பான சலுகைகளும் மொழியியல் ஆய்வாளர்களை வியப்புறச் செய்கின்றன.

மொழியியல் கூறுகள்

தமிழில் லகர ரகர எழுத்துக்கள் மொழி முதலில், குறிப்பாக எழுத்து வழக்கில், வருவது தவிர்க்கப்படுகின்றன. தனி மனிதப் பெயர்களும் இவ்விதிகளுக்கு பெரும்பாலும் உடன்படுவதைக் காணலாம். ராஜன், ராபர்ட், லட்சுமணசாமி எனும் பெயர்கள் இராசன், இராபர்ட்டு, இலக்குமணசாமி என்று உயர் வழக்கில் எழுதப்படுகின்றன. இலுப்பைக்குடி எனும் ஊர்ப்பெயர் லெப்பைக்குடி என்று திரிந்து வழங்கப்படினும், லெப்பைக்குடி என்றே உயர்வழக்கிலும் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறே ரெட்டியார்பாளையம், லெட்சுமாங்குடி, லெட்சுமிபுரம் எனும் ஊர்ப்பெயர்கள் எவ்வித மாற்றமுமின்றி லகர ரகர எழுத்துக்கள் மொழி முதலில் வர உயர்வழக்கில் பயன்படுத்தப்படுகின்றன. தனிமனிதப் பெயர்களை உரிமையுடன் மாற்றி எழுதுகின்ற போக்கு காணப்படினும், ஊர்ப்பெயர்களை செம்மைப்படுத்தி எழுதத் தயங்கும் நிலையே எழுத்து வழக்கில் நிலவுகிறது.

சொல் நடுவில் வரும் தகர ஒற்று சகர ஒற்றாக பேச்சு வழக்கில் ஒலிக்கப்படுவதை படிச்சான் (படித்தான்), கச்சிப் போச்சி (கைற்று போதல்) போன்ற தொடர்களால் அறியலாம். இவ்வாறே ஆதித்த நல்லூர் எனும் ஊர்ப்பெயர் ஆதிச்ச நல்லூர் என்று வழங்கப் பெறுகிறது. சொல் நடுவில் வரும் றகர ஒற்று தகர ஒற்றாக வருவதை சுத்து (சுற்று), ஆத்துக்கு (ஆற்றுக்கு) எனும் பேச்சுவழக்குச் சொற்களால் அறியலாம். இவ்வாறே இடையாத்த நல்லூர் (இடையாற்ற நல்லூர்), கோயில்பத்து (கோயில் பற்று) ஆத்தூர், (ஆற்றூர்), விடையாத்தி மங்கலம் (விடையாற்றி மங்கலம்) போன்ற ஊர்ப் பெயர்களில் இத்தகைய பேச்சுவழக்கு ஒலிமாற்றத்தினைக் காணலாம். பேச்சு வழக்கில் ககர ஒலி வகரமாக மவன் (மகன்) என்ற சொல்லிலும், யகரமாக காயிதம் (காகிதம்) எனும் சொல்லிலும் வருவதைக் காணலாம். அவ்வாறே கோவூர் (கோகூர்), கடுவக்குடி (கடுகக்குடி), துயிலி (துகிலி) போன்ற இடப்பெயர்கள்

பேச்சுவழக்கில் வழங்கப்படுகின்றன. வகரம் மகரமாக பேச்சு வழக்கில் மாறுவதுபோல இடப்பெயர்களிலும் வானார்கோரை எனும் ஊர்ப்பெயர் மானாங்கோரை என்று மாறியிருப்பதைச் சான்று காட்டலாம். ஈரசைகளுக்கு மேற்பட்ட சொற்களின் நடுவில் வரும் வகர அசை பேச்சுவழக்கில் கெடுவது இயல்பு. கொத்தரங்காய் (கொத்தவரங்காய்); மணறை (மணவறை) போன்ற சொற்கள் சான்றுகளாகும். இடப்பெயர்களிலும் பூவைத்தேடி எனும் பெயர் பூத்தடி என்றும் அதிவீரராம பட்டினம் எனும் பெயர் அதிராம்பட்டினம் என்றும் வழங்கப் படுகின்றன. இவ்வாறே ககர அசை கெட்டு, மாதேவப்பட்டி னம் (மகாதேவப்பட்டினம்), சங்கரி (சங்ககிரி) போன்ற ஊர்ப் பெயர்கள் வழங்கப்படுகின்றன. பேச்சுவழக்கின் சொற்களின் நடுவில் காணும் மெய்க்கூட்டுகளிலுள்ள ஒற்றுகள் கெடுவதை பாத்து (பார்த்து), சேந்து (சேர்ந்து) போன்ற சொற்களில் காணலாம். துகிலி எனும் ஊர்ப்பெயர் திரைலோக்கிய மாதேவச் சதுர்வேதி மங்கலம் என்பதன் திரிபாகும். அதுபோல செய சிம்மகுலகாலபுரம் என்பது சேங்காலிபுரம் எனத் திரிந்துள்ளது. சீத்தாமூர் (சீத்தாய்மூர்), வாமேடு (வாய்மேடு), வாவாங்கரை (வார்வாங்கரை), சாந்தனூர் (சார்ந்தனூர்) எனும் ஊர்ப்பெயர் கள் பேச்சுவழக்கிற்கான ஒலிமாற்றங்களைப் பெற்று விளங்கு கின்றன. சொற்களிலுள்ள அசைகள் இடமாறி கதிர் என்பது கருது என்றும் குதிர் என்பது குருது என்றும் வழங்கப் படுவதைப் போல மதுரை, மருதை என்று வருவதை அனை வரும் அறிவர். சில சமயங்களில் பேச்சு வழக்கில் திரிந்த சொற்களை செம்மைப்படுத்துவதாக கருதி தவறான மாற்றங் களைச் செய்வதுமுண்டு. சான்றாக, ஒருத்தி நாடு எனும் ஊர்ப்பெயர் ஒரத்தநாடு என்று வழங்கப்படுகிறது. உயர் வழக்கின் உகர ஒலிகள் பேச்சு வழக்கில் ஒகர ஒலியாக வரு வது இயல்பு (உடம்பு/ஒடம்பு, குடை/கொட). ஆனால் பேச்சு வழக்கில் வரும் எல்லா ஒகர ஒலிகளும் உயர்வழக்கில் காணும் உகர ஒலிகளின் திரிபல்ல. இதனை உணராது ஒரத்தநாடு என் பதை உரத்தநாடு என்று செம்மைப்படுத்தி எழுதுகின்ற போக் கினையும் நாம் காணலாம். வடமொழியின் மொழிபெயர்ப்பாக சில ஊர்ப்பெயர்கள் அமைவதுமுண்டு. மத்யபுரி, நட்டூர், கொர்ப்

புரம், கருவூர், ஆதிபுரி-பேரூர், புஷ்பவனம்-பூவனம் என்றும் அமைந்திருப்பதைக் காணலாம். சமயச்சார்பினால் சிலுவை புரம், தாவூத்நகர் போன்ற ஊர்ப் பெயர்கள் அமைக்கப்பட் டிருப்பதைக் காணலாம்.

இடப்பெயர்கள் வட்டார வழக்கு பாதிப்புகளையும் பெற் றுள்ளன. தஞ்சாவூர் பகுதிகளில் ழகர ஒலி ளகரமாக ஒலிக்கப் படுகின்றன. இதனால் சோழகப்பட்டி எனும் ஊர் சோளகப் பட்டி என்றும் பழையனூர் என்பது பளையனூர் என்றும் திருக்கோழம்பியூர் என்பது திருக்கோளம்பியூர் என்றும் வட் டார வழக்கு பாதிப்புடன் தஞ்சை மாவட்டத்தில் வழங்கப் பட்டு வருகின்றன. பல்வேறு வட்டாரங்களுக்கும் பொதுவாக சில ஊர்ப்பெயர்கள் இடப்பெயர்கள் காணப்படும். நல்லூர், குளத்துமேடு முதலியன பொதுவாக எல்லா வட்டாரங்களிலும் காணும் பெயர்களாகும்.

இடப்பெயர்களில் பல கூட்டுச் சொற்களால் அமைந்துள் ளன. பேச்சு வழக்கில் பெரும்பாலும் பயின்றுவரும் சந்தி விதி கள் இக்கூட்டுச் சொற்களில் அமைந்துள்ளன. நெல்குப்பை எனும் ஊர்ப்பெயர் நெல்லுகுப்பை என்றும் மூங்கில் திடல் என்பது மூங்கித்திடல் என்றும் மேல்தெரு என்பது மேலத் தெரு என்றும் வழங்கப்படுவதை நாம் காணலாம். சில கூட்டுச் சொற்கள் மெய்யொற்று பெறாது பேச்சு வழக்கு நிலையில் அமைவதுண்டு. பாப்பாகுடி (பார்ப்பார்க்குடி) பருத்திகுடி (பருத்திக்குடி), மாணிக்கபங்கு (மாணிக்கப்பங்கு) செட்டிகுளம் (செட்டிக்குளம்) எனும் இடப்பெயர்ச் சொற்கள் மெய்யொற்றுகளின்றி வருவதைக் காணலாம்.

சில ஊர்களின் பெயர்களை தபால் நிலையத்தினர் ஒரு விதமாகவும், வருவாய்த்துறையினர் ஒருவிதமாகவும் பொது மக்கள் ஒருவிதமாகவும் வழங்கி வருகின்றனர். முழையூர் என் பது தஞ்சை மாவட்டத்திலுள்ள ஓர் ஊர்ப்பெயராகும். ழகரம் ளகரமாக ஒலிக்கப்படும் இவ்வட்டாரத்தில் முழையூர் என்பது முளையூர் என்றே திரியும். இப்பெயர் அவையல் கிளவி காரண மாக நுளையூர் என ஊர் மக்களால் வழங்கப்படுகிறது. வரு

வாய்த்துறையினர் நுழையூர் என்று இவ்வூர்ப் பெயரைக் குறிப் பிடுகின்றனர். இதுபோன்றே, இரயில்வே துறையினர் திருப் பாதிரிப்புலியூர் என்று குறிப்பிடும் தென்னார்காடு மாவட்டத்தி லுள்ள இவ்வூர் கடலூர் என்றே அனைவராலும் வழங்கப்படு வதை நாமறிவோம். சொல்லிறுதியில் வரும் லகர ஒலி பேச்சு வழக்கில் கெடுவதை விரல் என்ற சொல் விர என வருவதால் அறியலாம். ஆனால் சில சமயம் லகர ஈற்றுச்சொல் உகரம் பெற்று முடிவதுமுண்டு. கல் என்பது கல்லு என பேச்சுவழக்கில் வழங்கப்படும். புராண செய்தியின் அடிப்படையில் திரு சிக்கல் எனும் பெயர் கொண்டமைந்த ஊரொன்று உள்ளது. சிக்கல் என்பது பேச்சுவழக்கில் சிக்க என்று லகரம் கெட்டும் சிக்கலு என உகரம் சேர்ந்தும் இருவகையாக வழங்கப்படுமாதலால் திருச்சிக்க, திருச்சிக்கலு, என திருச்சிக்கல் திரிந்து வழங்கப்படு கிறது. இவ் உறழ்ச்சியால் சிலர் இவ்வூர்ப் பெயரை திருச்சிக்கல் என ஒலித்து புதிய பொருளை வழங்குவதையும் காணலாம். மொழியியலாளர்கள் இத்தகைய வேறுபாடுகளைக் கொண்ட இடப்பெயர் ஆய்வில் சற்று கவனமாக இருக்க வேண்டுமென் பதில் ஐயமில்லை.

இவ்வாறு பேச்சுவழக்கினையொட்டியே காலகாலமாய் வாழ்ந்து வளர்ந்து வரும் இடப்பெயர்கள் மொழியியல் மாற்றங் களைக் கண்டறியவும், சொல்லமைப்பு முறையினை ஆராயவும், பேச்சுவழக்குக் கூறுகளை ஆய்ந்தறியவும், உயர்வழக்கில் அவை இடம்பெறும் பாங்கினை உணரவும் இடப்பெயர்களைப் பயன் படுத்துவோரின் சமூக அரசியல் கூறுகளைக் கண்டுணரவும் பெருமளவு உதவுகின்றன.

துணை நூல்கள்

ஆரோக்கியநாதன், எஸ். 1984. 'பெயரைச் சொல்லலாமா', மொழியியல்

ஆளவந்தார், ஆர். 1984. இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

சந்திரசேகரன், மெய். 1983. தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

பரமசிவம், கோ. 1981. தஞ்சை மாவட்ட இடப்பெயர்கள், தில்லித் தமிழ்ப் பல்கலைக் கழகம். முதுமுனைவர் பட்ட ஆய்வேடு.

நாச்சிமுத்து, கி. 1983. தமிழ் இடப்பெயர் ஆய்வு, சோபிதம் பதிப்பகம், நாகர்கோவில்

R. Kothandaraman (ed.), 1985. **Working papers in Linguistics pp. 1.4.S. A Supplement on place name studies, ISDL, Pondicherry.**

அறிவியல் தமிழ்ப் பாடம்

செ. வை. சண்முகம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அறிவியல் தமிழ் என்பது தமிழ்மொழிக்கு ஒரு புதியதுறை என்பது எல்லோரும் அறிந்ததே. அதனால் முத்தமிழ் என்ற வழக்கை ஒட்டி இன்று சிலர் நால் (வகைத்) தமிழ், ஐந்தமிழ் என்றெல்லாம் புதிய வழக்கை ஏற்படுத்தி வருகிறார்கள். இத னுடைய உள்கிடை என்ன என்பது அறியத் தகுந்தது.

பொதுவாக ஒரு மொழி பல துறைகளில் பயன்படுத்து வதையும், அந்தத் துறைகளுக்கு இடையே மொழியைப் பயன் படுத்தும் முறையில் காணப்படும் மாறுபாட்டையும் ஒட்டித் துறைவழக்கு (register) என்ற புதிய கருத்தை மொழியியலார் கள் உருவாக்கியுள்ளார்கள். அதே சமயத்தில் மொழியைப் பயன்படுத்துவோரை ஒட்டிக் காணப்படும் மாறுபாட்டைக் கிளைமொழி என்றும் அவர்கள் குறிப்பிடுவார்கள்.

கிளைமொழி வழக்கு என்பது மொழியியல் ஆராய்ச்சியின் ஒரு கூறு என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் துறை

வழக்கு என்பது புதிய கருத்து ஆனதால் அது விளக்கத்துக்கு உரியது.

தமிழை முத்தமிழ் என்று குறிப்பிடுவது பழைய மரபுதான். ஆனாலும் அது பொருளை ஒட்டி இயல், இசை, நாடகம் என்று செய்யப்பட்டதாகவே கருத வேண்டியிருக்கிறது. இவைகளுக்கு இடையே மொழி அமைப்பிலோ, மொழி பயன்பாட்டிலோ உள்ள மாறுபாட்டை யாரும் விளக்கவில்லை. அதே சமயத்தில் தமிழில் மிகப் பழைய நூலான தொல்காப்பியத்தில் துறைவழக்கு பற்றிய குறிப்பு இலைமறை காயாக இருப்பதாகவே தோன்றுகிறது.

தொல்காப்பியர் இலக்கியத் தமிழுக்கு இலக்கணம் எழுதினாலும் இலக்கியத் தமிழுக்கும் இலக்கணத் தமிழுக்கும் உள்ள மாறுபாட்டை குறிப்பிட்டுள்ளார். இலக்கியம், இலக்கணம் என்பன இரண்டு வேறுபட்ட துறை வழக்காகக் கொள்ளத் தகுந்தது. அதற்கு ஏற்ப தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் சொல்லுக்கு முதலில் வரும் எழுத்துக்களைப் பட்டியல் போட்டுச் சொல்லிவிட்டு கடைசியாக

முதலா ஏன தம்பெயர் முதலும்

என்று (எழுத்து.66) ஒரு சூத்திரம் செய்துள்ளார். அதாவது சொல்லுக்கு முதலில் வராத எழுத்துக்கள் தம்முடைய பெயரைக் குறிப்பிடும்போது முதலில் வரும் என்பதே கருத்து. இங்குத் 'தம்பெயர் சொல்வது' என்பது இலக்கண வழக்கைக் குறிக்கும். அதனால்தான் இலக்கணத்தில்

ஞகாரை முன்னர் மகரங் குறுகும் (52)

டகார ணகார நுனிநா அண்ணம் (91)

என்றெல்லாம் இலக்கிய மொழியில் சொல்லுக்கு முதலில் வராத எழுத்துகளைச் சொற்களாக்கிப் பயன்படுத்தியுள்ளார். இங்கு கருவிமொழிக்கும் (metalanguage) இலக்கணமொழிக்கும் இலக்கணம் எழுதியது சிறப்பானது.

தொல்காப்பியர் இன்னொரு இடத்தில் இசைத்தமிழுக்கும் இலக்கணத் தமிழுக்கும் உள்ள மாறுபாட்டை விதந்து கூறியுள்ளார்.

> மொழிப்படுத்து இசைப்பினும் தெரிந்துவேறு இசைப்பினும்
> எழுத்தியல் திரியா என்மனார் புலவர்

என்ற (எழுத்து. 53) சூத்திரத்தால் எழுத்துகளைத் தனியே உச்சரித்தாலும் சொற்களில் வைத்து உச்சரித்தாலும் இவைகளுக்குரிய மாத்திரை மாறுபடாது என்று கூறியவர் இன்னொரு சூத்திரத்தில் (எழுத்து. 33)

> அளபு இறந்து உயிர்த்தலும் ஒற்றுஇசை நீடலும்
> உளவென மொழிப இசையொடு சிவணிய
> நரம்பின் மறைய என்மனார் புலவர்

என்று கூறியுள்ளார். அதாவது இசைத் தமிழில் எழுத்துகள் தங்களுக்கு உரிய மாத்திரையின் அளவிலிருந்து மாறுபட்டு அதாவது அதிகப்பட்டு உச்சரிக்கலாம் என்று பொருள். இங்கு இலக்கியத் தமிழுக்கும் இசைத் தமிழுக்கும் மொழி அமைப்பில் குறிப்பாக ஒலி அமைப்பில் உள்ள மாறுபாடு சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. இந்த மாறுபாடு மிகச் சாதாரணமானதாகவும் எல்லோருக்கும் தெரிந்தது ஆகவும் இருந்தாலும் மொழி பல துறைகளில் பயன்படுத்துவதற்கு ஏற்ப, மொழி அமைப்பு மாறுபடுகிறது. மாறுபடலாம் என்று தொல்காப்பியர் உணர்ந்ததையே இந்தச் சூத்திரம் புலப்படுத்துகிறது. எனவே இன்று நாம் அறிவியல் தமிழ் என்ற புதிய துறையை ஏற்படுத்தி அதற்கு ஏற்ப மொழியில் நெகிழ்ச்சி ஏற்படுத்திக் கொள்ளத் தயங்கக் கூடாது; சில புதிய மரபுகளை உண்டாக்கிக் கொள்ளத் தைரியமாய் முன்வரவேண்டும்.

அறிவியல் தமிழ் என்ற புதிய துறை வழக்கு இன்று 100 ஆண்டு காலப் பழமையை உடையது (சுந்தரம்,1983) என்றாலும் அது முழுமையாகவும் செழுமையாகவும் வளருவதற்கு எத்தனையோ தடைகள் இருக்கின்றன; பிரச்சனைகள் உள்ளன.

அவைகளை ஓரளவு முழுமையாக குழந்தைசாமி (1985) 'அறிவியல் தமிழ்' என்ற தலைப்பு இட்ட நூலில் எழுதி விளக்கியுள்ளார். கலைச் சொல்லாக்க முறை, எழுத்து சீரமைப்பு ஆகிய இரண்டு பிரச்சனைகளை அவர் விரிவாக ஆராய்ந்தாலும் அதிலுள்ள முழுமையான தேவைகளை உணர்ந்திருக்கிறார் என்பது கீழ்க்கண்ட வாக்கியத்தால் அறியலாம்.

"தமிழ் தலை சிறந்த இலக்கிய மொழி ...... ஆனால் புதினம் (novel) எனப்படும் இலக்கியப் பிரிவு முன்பு தமிழில் இல்லை ...... இலக்கிய மொழியான தமிழில் ஒரு புதிய இலக்கியத் துறை உருவாக்குவதற்கே அரை நூற்றாண்டு தேவைப்பட்டது. பலர் பல புதினங்கள் எழுதிய பின்னர்தான் அத்துறை உருப்பெற்றது.......

கணிதம், இயற்பியல், பொறியியல், மருத்துவம் போன்ற அறிவியல், தொழில்நுட்பத் துறைகட்குத் தனி நடை உண்டு. சொல்லமைப்பு உண்டு. எனவே அறிவியல் நூல்களைத் தமிழில் எழுதுவது என்பது தமிழில் அறிவியல் இலக்கியம் படைப்பதாகும். அதற்கான இலக்கணம் உருவாக வேண்டும். பாரம்பரியம் உருவாக வேண்டும்."

என்று குழந்தைசாமி (1986:6) இன்னொரு கட்டுரையில் கூறுவது நாம் மேலே குறிப்பிட்ட துறைவழக்கு பற்றிய பொது விளக்கமாகக் கொள்ளலாம். அறிவியல் தமிழ்ச் சரியான முறையில் உருவாக்கவும் வளர்க்கும் அறிவியலைப் பற்றிய சில பொது உண்மைகளை உணர்ந்து கொள்வதும் அறிவியல் தமிழ் வளர்ச்சிக்குச் சில வழிமுறைகளைப் புலப்படுத்தும். அறிவியலில் உரைப்பாங்கு (scientific discourse) என்ற கருத்து உண்டு.

அறிவியல் உரைப்பாங்கு உலகளாவியது என்பது நாம் அறிந்ததே. அதாவது அறிவியல் உரைப்பாங்கு இலக்கியம், இலக்கணம போல ஒவ்வொரு மொழியும் தனித்தனி மரபுகளைக் கொண்டதல்ல. அறிவியல் உலகப் பொதுமை ஆனதால் மொழி, பண்பாடு, நாகரீகம் ஆகியவை மாறுபட்ட மனிதர்கள் கூட விஞ்ஞானி என்ற முறையில் சில பொது பண்புகளையும் மரபுகளையும் கொண்டிருக்கிறார்கள். அறிவியலை

விளக்கும்போது காரண காரியத் தொடர்பு, கருதுகோள் அமைக்கும் முறை ஆகியவை எல்லா நாட்டினருக்கும் மொழியினருக்கும் பொதுவாக அமைந்துள்ளன.

அறிவியல் உரைப்பாங்கு ஒவ்வொரு மொழியிலும் அறிவியல் பாடமாக (text) ஆகும்போது பாடமாக்கம் ((textualisation) என்ற முறையும் உள்ளதாக மொழியியல் அறிஞர்கள் கருதுகிறார்கள் (உ. ம். widdowson). எனவே அவர்கள் கருத்துப்படி 1. உலகப் பொதுமையான அறிவியல் உரைப் பாங்கு (scientific discourse), 2. அந்த விளக்கத்தை பாடமாக்குமுறை (textualisation), 3. அறிவியல் பாடம் (scientific text) என்ற மூன்று நிலை உள்ளன (widdowson, p. 54). இங்கு அறிவியல் பாடம் குறிப்பாக **அறிவியல் தமிழ்ப் பாடம்** பற்றிய சில கருத்துகளை விளக்குகின்றன.

அறிவியல் உரைப்பாங்கிலும் இரண்டு வகை காணப்படுகிறது. ஒன்று: அறிவியல் ஒரு பாடம் (science as a subject) என்பது. அதுவே அறிவியல் பாட நூல்களைத் தயாரிப்பது பற்றியது. மற்றொன்று: அறிவியல் ஒரு துறை (science as a discipline] என்பது. இதுவே அறிவியல் ஆய்வுக் கட்டுரைகள் எழுதுவது. இரண்டும் இரண்டு துருவம் போன்றது என்றாலும், அவைகளுக்குள் தொடர்பு இல்லாமல் இல்லை. எப்படியென்றால் அறிவியல் ஒரு துறை என்பதுதான் பின்னால் அறிவியல் பாடமாக அமைகிறது என்று சுருக்கமாகச் சொல்லலாம். அதாவது அறிவியல் கண்டுபிடிப்புகள் எல்லோராலும் ஒத்துக் கொள்ளப்பட்ட பிறகு அறிவியல் பாடமாக ஆகிவிடுகிறது; அறிவியல் பாடத்தில் அது சேர்க்கப்பட்டு விடுகிறது.

பொதுவாக அறிவியல் பாடம் மொழிக்கு மொழி மாறுபட்டது என்று மேலே குறிப்பிட்டோம். ஆனாலும் அந்தப் பாடங்களில் உபயோகப்படுத்தப்படும் குறியீடுகள், சமன்பாடுகள் எல்லா மொழிக்கும் பொதுவானதாக இருக்கும். உதாரணமாக வேதியியல் பாடத்தில்

$$S + O_2 \rightarrow SO_2$$

என்றே வேதியியல் விதி குறிக்கப்பட்டிருக்கும். இதை வேதியியல் தெரிந்த பிற மொழியினரும் புரிந்து கொண்டுவிடுவார்கள். மேலும் இதை நிரூபிக்கப் பயன்படுத்தும் சோதனைகளை விளக்கும் போது கையாளும் வரைபடங்களும் அட்டவணைகளும் கூட எல்லா மொழியினருக்கும் பொதுவானதே. ஆகவே ஒவ்வொரு மொழிக்கும் சிறப்பானதாகக் கருதப்படும் அறிவியல் பாடத்திலும் பொதுமை உண்டு. அதாவது அறிவியல் பாடமொழி தெரியா விட்டாலும் அறிவியல் அறிஞர்கள், குறியீடுகள், சமன்பாடுகள் மூலம் அறிவியல் உண்மைகளை ஓரளவு உணர்ந்து கொள்ளமுடியும். எனவே அறிவியல்பாடம் என்பது மொழி வேறுபாடு உடையது ஆயினும் ஓரளவு பொதுமை உடையதாகவே இருக்கும். இதைத்தான் அறிவியல் தமிழ் பற்றி பேசும் பலரும் குறியீடுகள், சமன்பாடுகள் போன்றவைகள் எல்லாம் அனைத்துலக வழக்குகளையே தழுவிக் கொள்ள வேண்டும் என்று சொல்லி வருகிறார்கள். இதனுடைய உள்கிடை என்ன?

அனைத்துலக குறியீடுகளையும் சமன்பாடுகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்லும்போது அந்தக் குறியீடுகள் குறிக்கும் சொற்களையும் அனைத்துலக சொற்களாகவே ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகிறது. அப்படியே எடுத்துக் கொண்டால்தான் குறியீடுகளைச் சுலபமாகப் புரிந்து கொள்ள முடியும் என்ற நிலை ஏற்படும் என்று எண்ணத் தோன்றும். ஆனால் ஆங்கில மொழியில் கூட அறிவியல் துறைக்காகப் புதிய சொற்களைக் கற்றுக் கொள்ள வேண்டிய நிலை உள்ளது என்பது அறியத் தகுந்தது.

உதாரணமாக ஆங்கிலத்தில் 'இரும்பை'க் குறிப்பிட **Iron** என்ற சொல்லே பயன்படுகிறது. ஆனால் இதற்கு வேதியியலில் **Fe** என்பதே குறியீடு. இது **Ferrum** என்ற லத்தீன் மொழிச் சொல்லின் அடிப்படையில் உண்டானது. ஆனாலும் **ferriferrous, ferricyanide** போன்ற சொற்களும் ஆங்கிலத்தில் வழங்குவதால் ஆங்கில மாணவனுக்கு ஓரளவு கடினம் இருக்காது என்றே கருதவேண்டியிருக்கிறது. ஆயினும் அறிவியலை முதன் முதல் அறிமுகப்படுத்தும்போது பொது வழக்கில் இல்லாத புதிய சொல்லை அறிவியல் துறைக்காக மாணவன் கற்று

கொள்ளவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அப்படியே வெள்ளியைக்குறிக்க ஆங்கிலத்தில் சாதாரணமாக வழங்கும் silver என்றசொல்லுக்குரிய வேதியியல் குறியீடு Ag என்பது. இதுவும் **Argentum** என்ற லத்தீன் மொழிச்சொல் அடிப்படையில் அமைந்ததே. எனவே, ஆங்கிலமொழி தெரிந்தவரும் அறிவியல் துறையில் நுழையும்போது சில புதிய சொற்களைக் கற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே நாமும் எல்லாக் கலைச் சொற்களுக்கும் தமிழ்ப் பெயர்கள் உண்டாக்கிக் கொண்டு குறியீடுகளை மட்டும் அனைத்துலக வழக்குகளில் தக்க வைத்துக் கொள்ளலாம் என்று நினைக்கலாம். ஆனால் எல்லாக் கலைச்சொற்களுக்கும் குறிப்பாக வேதியியல் தனிமங்களுக்கும் தமிழ்ச்சொல் கண்டுபிடிப்பது இயலாத காரியம என்றே நினைக்கவேண்டியிருக்கிறது.

எப்படியானாலும் அறிவியல் தமிழ்ப்பாடம் முழுமையும் தனித் தமிழாக இருக்க முடியாது; ஏனெனில் குறியீடுகளையும் சமன்பாடுகளையும் அனைத்துலக வழக்கை ஏற்றுக் கொள்ளும் போது ரோம எழுத்துகளையும் பல குறியீடுகளையும் கொண்டிருக்கும்.

இந்தப் பொதுமையினால் ஏற்படக்கூடிய இரண்டு நன்மைகள் குறிப்பிடத் தகுந்தது. அவையாவன: 1. இலக்கியங்களை மொழி பெயர்ப்பதை விட அறிவியல் நூல்களை மொழி பெயர்ப்பது ஓரளவு எளிமையானது 2. அறிவியல் அறிவைப் பெருக்குவதற்குப் புதிய மொழியைக் கற்றுக் கொண்டு அந்த மொழியிலுள்ள அறிவியல் நூல்களைப் படித்து புரிந்து கொள்வது சுலபமானது.

இந்தக் கருத்துகளில் தமிழ் அறிவியல் புதிய துறைவழக்கு என்பதற்கு ஏற்ப அறிவியல் தமிழ்ப் பாடத்தின் சிறப்பு பண்புகளைப் பார்ப்போம்.

1. சொற்களஞ்சியத்தில் பல புதிய சொற்கள் சேர்க்கப் படுவது; அறிவியல் தமிழுக்காக புதிய சொற்கள் உருவாவது;

2. மொழியில் முன்னரே உள்ள சொற்கள் அறிவியல் தமிழில் புதிய பொருளைப் பெறுவது,

மின் - மின்னல் - மின்சாரம் – Electricity
வளி - wind – காற்றிலிருந்து வேறுபட்டது

3. சாதாரணமாகப் பயன்படுத்தப்படும் பொருளுக்கு அறிவியல் நோக்கில் புதிய பெயர்கள் அமைத்தல்; தாவரவியலில் அன்றாடம் நாம் வழங்கும் செடி கொடிகளுக்குப் புதிய பெயர்கள் வழங்குதல்; உப்பை சோடியம் குளோரைடு என்று வேதியியலில் குறிப்பிடுவது போன்றது.

4. சொல்லியல் நிலையில் புதிய விகுதிகள் ஏற்பட்டுள்ளது. -மம் என்ற புதிய விகுதி அறிவியல் தமிழில் பெருவாரியாக வழங்குகிறது. இதனுடைய மூலம் சரியாகத் தெரியவில்லை என்றாலும் வன்மம் என்ற சொல் பேச்சு வழக்கிலேயே உள்ளது மட்டும் சுட்டிக் காட்டத் தகுந்தது.

-மம் என்ற விகுதியை பெயரடையிலோ, வினையடையிலோ சேர்த்து பெயர்ச்சொற்கள் உண்டாக்குதல்.

* தனி – தனிமம் 'element'
சேர் – சேர்மம் 'compound'
திண் - திண்மம் 'solid'

பெயர்ச் சொல்லில் இந்த விகுதியைச் சேர்த்து பொதுப் பொருள் ஏற்படுத்துதல்.

கனி 'பழம்' -கனிமம் 'metal'
நீர் நீர்மம் 'liquid'

மொழியியலில் -அன் விகுதி சேர்த்து நுண்பொருள் (abstract) உணர்த்துதல்.

ஒலி - 'phone' ஒலியன் - 'phoneme'
உருபு - 'suffix' உருபன் – 'morpheme'
எழுத்து - 'letter' எழுத்தன் - 'grapheme'

இந்தப் புதிய சொற்கள் புதிய மொழிகளின் அடிப்படை தனிமங்களை அல்லது கூறுகளைக் குறிப்பவை.

இப்படி அறிவியல் கலைச் சொற்களை முன்னொட்டு, அடிச்சொல், பின்னொட்டு என்று பிரித்து வைத்துக் கொண்டு

கலைச் சொல்லாக்கத்தை எளிமைப் படுத்தவேண்டும். புதிய சொல்லை உண்டாக்கிக் கொள்ளவேண்டிய திறனை அதிகரிக்க வேண்டும். அதற்கு அடிப்படையாக ஒவ்வொரு அறிவியல் துறையிலும் உள்ள கலைச் சொற்களில் உள்ள அடிச் சொற்களையும் ஒட்டுகளையும் முடிந்த அளவு அதாவது பிற மொழி அகராதிகளில் உள்ளதையாவது எடுத்து வைத்துக் கொள்ளவேண்டும். உதாரணமாக மருத்துவக்கலை அகராதியில் சுமார் 30,000 சொற்கள் இருப்பதாகவும் அவை அனைத்தையும் 100 முன்னடைகளையும் 40 பின்னடைகளையும் உடல் உறுப்புகளின் பெயர்களையும் கொண்டது என்று கணக்கிடப் பட்டுள்ளது (கண்ணபிரான், 1986:33). இந்தத் துறையில் குழந்தைசாமியின் (1985) முயற்சியும் சிறப்பாகக் குறிப்பிடத் தகுந்தது.

5. பேச்சுத் தமிழில் தமிழ் சொல்லடையில் மாற்றம் ஏற் பட்டுள்ளது. அதாவது எதிர்மறை என்ற இலக்கணக் கூறு வினைச்சொல்லில் மட்டும் பின்னொட்டாக அமைந்திருந்தது. இன்று பெயர்ச்சொல்லில் முன்னொட்டாக அமைந்து எதிர் மறை உண்டாகி உள்ளது. நீதி - அநீதி; மானம் - அவமானம். அகரம் போன்ற ஒட்டுகள் பேச்சுத்தமிழில் மட்டும் பயன் படுத்தப்படுவதால் அறிவியல் தமிழிலும் அறிவியலார் கையாளத் தயங்குகின்றார்கள். துர்நாற்றம் என்று பேச்சுவழக்கில் 'துர்' கெட்ட என்ற பொருள்படும். அறிவியல் தமிழில் எதிர் மறை முன்னொட்டு அவசியம். ஆகவே பேச்சுத்தமிழிலுள்ள முன்னொட்டுகளை ஆராயவேண்டும்.

6. எழுத்தமைப்பில் புதிய மெய்மயக்கங்கள் அமைந் துள்ளன.

7. தமிழில் புதிய எழுத்துகள் அறிவியல்தமிழில் சேர்ந் துள்ளது. அதாவது குறியீடுகளும் சமன்பாடுகளும் ரோமன் எழுத்துகளால்தானே பயன்படுத்துகிறோம். எனவே அறிவி யல் தமிழ் நூல்களை மொழியியல் நோக்கில் ஆராய்கிறவர் அறிவியல் தமிழில் எழுத்துகளின் எண்ணிக்கையைக் கணக் கிடச் சொன்னால் அந்த பயன்படுத்த ரோமன் எழுத்துகளை

யும் சேர்த்துத்தான் கணக்கிடுவார். இன்று உள்ள நிலையை வருணனை நோக்கில் ஆராயும்போது வரலாற்று நோக்கு ஏற்றுக்கொள்ளப்படாது. இதைத்தான் குழந்தைசாமி (1985: 48) 'அறிவு வளர்ச்சியில் அன்னியம் என்பது இல்லை' என்று குறிப்பிடுவார். இந்த நோக்கில் பார்க்கும் போது அறிவியல் தமிழில் தீராத பிரச்சனையாகக் கருதப்படும் கிரந்த எழுத்துகள் என்றும், தவறாக வடமொழி எழுத்துகள் என்றும் நாம் எண்ணி மயங்கி கொண்டிருக்கிற சில எழுத்துகளைத் தேவைப் படும் போது சேர்த்துக் கொள்வதில் தயக்கம் காட்ட வேண்டிய தில்லை.

அறிவியல் தமிழ்ப் பாடநூல் தயாரிக்கும் போது இதுவரை ஏற்பட்ட மாற்றங்களைப் புரிந்து கொண்டு இன்னும் செய்ய வேண்டிய மாற்றங்களை ஏற்படுத்தி அறிவியல் தமிழ் இலக்கி யம் உருவாகவும் அதன் மூலம் அறிவியல் துறையில் முன்னே றவும் பாடுபடவேண்டும்.

துணை நூல்கள்

கண்ணபிரான், கே. 1986. 'அறிவியல் கலைச் சொல் லாக்கம் - வேதியற் துறை' களஞ்சியம், தொகுதி - 1, இதழ் - 1 பக். 28-34.

குழந்தைசாமி, வா. செ. 1985. அறிவியல் தமிழ், சென்னை.

——— ——— 1986. 'நமது பணி', களஞ்சியம், தொகுதி - 1, இதழ் – 1, பக். 3-6.

சுந்தரம், இராம. 1983. 'தமிழில் கலைச் சொல்லாக்கம்', தமிழ்க் கலை.

Widdowson, H. G. 1980 *Exploration in Applied Linguistics.*

தொல்காப்பியரின் இயற்பெயர் கோட்பாடு*

ஏ. ஆதித்தன்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

மனித வரலாற்றில் இயற்பெயர் (proper noun) மிக முக்கிய மான இடத்தினைப் பெற்றுள்ளது. இயற்பெயர் ஆய்வு (onomastics) இக்காலத்தில் இடப்பெயர் ஆய்வு (toponymy) எனவும் மனிதப்பெயர் ஆய்வு (anthroponomy) எனவும் இருநிலைகளில் அணுகப்பெறுகின்றது.

இயற்பெயர்கள் ஒரு மனிதனின் பெயரேயன்றி விலங்கு, மரம், செடி, ஊர், பொருள் ஆகியவற்றைக் குறிப்பனவாகவும் அமையும். இங்ஙனம் ஒரு குறிப்பிட்ட ஒருவர்க்கு அன்றி ஒன்றற்கு இயல்புடைமையாய் ஆகிவரும் பான்மை (uniqueness) இயற்பெயருக்கே உரியதாகும்.

இயற்பெயரினைத் தத்துவ அறிஞர்களும், மொழியியல் அறிஞர்களும் அடையாளக் குறியீடாகக் (identification mark)

* 1983 ஆம் ஆண்டு மதுரை காமராசர் பல்கலைக்கழக வியாழவட்டக் கருத்தரங்கில் படிக்கப்பெற்ற கட்டுரை

கருதுவர். இப்பெயர்கள் எப்போதும் ஒன்றனைப் பொருள் தொடர்பின்றிச் சுட்டுவனவாக (denotative) அமைய ஏனைய பெயர்கள் பலவும் பொருளினை உணர்த்துவனவாக (cannot-ative) அமைகின்றன.

இயற்பெயருக்கும் ஏனையபெயர்களுக்குமிடையே இலக்கண நிலையிலும், தொடரியல் நிலையிலும் பல வேறுபாடுகள் காணக்கிடைப்பினும் இவற்றினைத் தெளிவாக வேறுபடுத்த இயலாத நிலையே காணப்படுகின்றது.

இயற்பெயர் பற்றித் தொல்காப்பியர் தரும் செய்திகளின் வாயிலாக அவர்தம் இயற்பெயர் கோட்பாட்டினைக் கண்டறிதலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இயற்பெயர் பற்றிய செய்தி தொல்காப்பியம் புள்ளி மயங்கியல், கிளவியாக்கம், பெயரியல், இடையியல் ஆகியவற்றின் கண் காணக்கிடைக்கின்றது.

இயற்பெயரின் பண்புகளாகச் சிலவற்றினைச் சுட்டும் தொல்காப்பியர் இதன் விளக்கத்தினைத் (definition) தந்தாரில்லை. இயற்பெயருக்கு உரையாசிரியர்கள் தரும் சான்றுகளும், விளக்கங்களும்கூட இதன் பண்புகளை முழுமையாகக் கண்டறிய உதவுமாறில்லை.

தொல்காப்பியர் முதன்முதலில் எழுத்ததிகாரத்தில் 'ஆதன்', 'பூதன்', 'தான்', 'பேன்', 'கோன்', 'சாத்தன்' என்னும் னகர ஈற்று இயற்பெயர்களைச் (தொல். எழுத்து. 348,349,352) சுட்டுகின்றார். மேலும் இவர் சொல்லதிகாரத்தில் இயற்பெயரும், சுட்டுப்பெயரும் தொடரில் அமையும்போது இயற்பெயர் முதலில் அமையும் (தொல். சொல். 36) எனவும் செய்யுளின்கண் சுட்டுப் பெயரினை அடுத்தும் இயற்பெயர் அமைந்து வருதலுண்டு (தொல்.சொல்.37) எனவும் கூறுகின்றார்.

இயற்பெயரும் சிறப்புப் பெயரும் தொடரில் அமையுங்கால் இயற்பெயர் சிறப்புப் பெயருக்குப் பின்னிடத்ததாக அமையும் (தொல்.சொல்.39) எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

அஃறிணை இயற்பெயரின் ஒருமை, பன்மை வேறுபாடு இதன் அண்மை உறுப்பாக அமையும் வினையினைக் கொண்டு-தான் அறிதல் இயலுமெனவும் (தொல். சொல். 167), இவ்வியற் பெயர் 'கள்' விகுதி பெற்று வருங்கால் பலவின்பால் இயற் பெயராக மட்டுமே செயலாற்றும் (?) எனவும் (தொல். சொல். 165) தொல்காப்பியர் கூறுகின்றார்.

தொல்காப்பியர் இயற்பெயர்கள் விரவுப்பெயர்களாகச் செயல்படும் நிலையினைக் (தொல்.சொல். 170) கூறி, இவை நான்கு வகையின (தொல். சொல். 171) எனவும் அவை பெண்மை இயற்பெயர், ஆண்மை இயற்பெயர், ஒருமை இயற் பெயா, பன்மை இயற்பெயர் (தொல்.சொல்.172) என்பனவாகும் எனவும் சுட்டுகின்றார்.

பொது நிலையில் பெண்மை இயற்பெயர்கள் ஒன்றற்கும் ஒருத்திக்கும் பொருந்தி வருதலையும் (தொல். சொல். 176), ஆண்மை இயற்பெயர் ஒன்றற்கும், ஒருவனுக்கும் பொருந்தி வரு தலையும் (தொல், சொல்.177), பன்மை இயற்பெயர் ஒன்றற்கும். பலவற்றிற்கும், ஒருவருக்கும் பொருந்தி வருதலையும் (தொல், சொல். 179) தொல்காப்பிய செய்திகளினின்றும் உய்த்துணர முடிகின்றது.

விரவுப் பெயர்களில் இயற்பெயர்களின் வகைகளைக் கூறும் தொல்காப்பியர் அஃறிணைக்கு மட்டுமே உரியதாகும் இயற் பெயர்களையும் (தொல்.சொல். 190) சுட்டுகின்றார்.

இயற்பெயர்கள் 'ஆர்' விகுதி பெற்று வருங்கால் பலர்பால் பயனிலையினைக் கொண்டு முடியுமெனத் (தொல்.சொல். 649) தொல்காப்பியர் கூறுகின்றார்.

ஈண்டுக் கூறப்பெற்ற தொல்காப்பியச் செய்தியினை அடிப் படையாகக்கொண்டு உரையாசிரியர்கள் இயற்பெயருக்கு விளக்கம் தந்துள்ளார்கள்.

சேனாவரையர் நிமித்தமின்றிப் பொருளே பற்றி வரும் இடுபெயரே இயற்பெயரெனக் கூறுவார். இன்னமும் இயற் பெயரெனினும் விரவுப்பெயரெனினும் ஒக்குமாயின் அவற்றுள்

ஒருசாரனவற்றிற்கு அப்பெயர் கொடுத்தது என்னை எனின் அவற்றது சிறப்பு நோக்கி அப்பெயர் கொடுக்கப்பட்டது என இவர் மேலும் கூறுகின்றார்.

சேனாவரையரை அடியொற்றி நச்சினார்க்கினியர் வழங்குதற் பயத்தவாய் நிமித்தம் இன்றிப் பொருள் பற்றி வருவது இயற்பெயரெனச் சுட்டுகின்றார்.

தெய்வச்சிலையார் ஒரு பொருட்டு இடுகுறியாகி வழங்கும் பெயர் இயற்பெயராகும் எனக் கூறுகின்றார். இவர் மேலும் இயற்பெயரினை முதற்பெயர் என்றும் சுட்டுகின்றார்.

கல்லாடனார் இருதிணைக் கண்ணும் வாளாது இயன்று வருதலான் இயற்பெயர் என விளக்கம் தந்துள்ளார்.

இக்கால மொழியியல் அறிஞர்களான மோ. இசரயேல் (1976, ப. 97), ச. அகத்தியலிங்கம் (1979, ப. 77), கு. சுந்தரமூர்த்தி (1972, ப. 186), செ.வை. சண்முகம் (1983, பக். 5-14) ஆகியோர் இயற்பெயர் பற்றித் தத்தம் கருத்தினைத் தெரிவித்துள்ளனர்.

சொல் நிலையில் ஆக்க உருபின்றி அமையும் பெயர்களை மோ. இசரயேல் இயற்பெயர்களாகக் கருதுகின்றார்.

குறிப்பிட்ட ஒரு மனிதன் அல்லது இடம் அல்லது பொருளின் பெயரைக் குறித்து அமையும் பெயரே இயற்பெயரென ச. அகத்தியலிங்கம் விளக்கம் கூறுகின்றார். இயற்பெயரினை விரவுப்பெயராகக் கொண்டு தொல்காப்பியர் சுட்டும் இயற்பெயரினை மொழியியல் அறிஞர்கள் கூறும் இயற்பெயரோடு ஒப்புமைப்படுத்திக் காண்பார் செ. வை. சண்முகம்.

முதலில் தொல்காப்பியர் இயற்பெயரினை விரவுப்பெயராகக் கருதினாரா அன்றி இயற்பெயர் விரவுப் பெயராகவும் செயல்படும் எனக் கருதினாரா என்பது ஆய்வுக்குரியது.

தொல்காப்பியர் சொல்லதிகாரத்தில் அஃறிணை இயற்பெயர்களையும் (தொல். சொல். 167), இரு திணைக்குரிய இயற்பெயர்களையும் (தொல். சொல். 172) உயர்திணைக்கு அமைந்து

வாராது அஃறிணைக்கு மட்டுமே உரிய இயற்பெயர்களையும் (தொல். சொல். 190) குறிப்பிடுவதால் தொல்காப்பிய செய்திகளினின்றும் இயற்பெயர்கள் அஃறிணை இயற்பெயர்கள், இருதிணைக்குரிய இயற்பெயர்கள், உயர்திணைக்குரிய இயற்பெயர்கள் என மூன்று வகைப்படும் என்பதனை உய்த்துணர முடிகின்றது.

பெரும்பான்மையான இயற்பெயர்கள் இருதிணைக்கும் பொருந்தி வந்தமையால் தொல்காப்பியர் இயற்பெயர் பாகுபாட்டினை விரவுப்பெயரின் கீழ் அமைத்துள்ளார் எனக் கருதலாம்.

எனவே இயற்பெயரெல்லாம் விரவுப்பெயரே என்று கருதும் சில உரையாசிரியர்கள், இலக்கண அறிஞர்களின் கருத்துகள் மறு ஆய்விக்குரியதாக அமைகின்றது.

அடுத்து இயற்பெயரின் இலக்கணம் எவ்வாறு அமையப் பெறும் என்பதனைக் காணலாம்.

தொல்காப்பியர் பெயரியலில் பெயர்களை வகைப்படுத்திக் கூறும்போது இருபத்தைந்து வகையான பெயர்களைச் சுட்டுகின்றார். இயற்பெயருக்கெனத் தனியாக இலக்கணம் கூறாமையின் இயற்பெயரையும் ஏனைய பெயர்களையும் அவைகளின் பண்பு அடிப்படையில் ஒப்பிட்டுக் காணும் முயற்சி தேவையாகின்றது.

தொல்காப்பியர் குறிப்பிடும் இருபத்தைந்து பெயர்களுக்கிடையே மயக்கம் (overlapping) காணப்படுகின்றதெனினும் இவற்றை அடிப்படைநிலையில் இரண்டாக வகைப்படுத்துதல் இயலும்.

முதல்வகையில் இயற்பெயர், முதற்பெயர், சினைப்பெயர், சில ஆகுபெயர்கள், கிளைப்பெயர் அடங்கும். ஏனைய பெயர்கள் அனைத்தும் சொல்நிலையில் ஆக்கப்பெயர்களாக அமைந்து காணப்படுகின்றன. சொல்நிலையில் ஆக்கப்பெயர்களாக அமைந்துள்ள இவை இரண்டாவது வகையினைச் சாரும்.

இயற்பெயர், முதற்பெயர், சினைப்பெயர், ஆகுபெயர், கிளைப்பெயர் ஆகிய ஐந்தும் சொல்நிலையில் ஆக்கவுருபின்றி அமைந்துள்ளன. இவ்வைந்து பெயர்களுக்கிடையேயுள்ள வேறு பாட்டினைக் காணும் நிலையில் இயற்பெயரின் இலக்கணத் தினைக் கண்டறிதல் இயலும்,

முதற்பெயர்களைத் தெய்வச்சிலையார் இயற்பெயர்கள் எனச் சுட்டுகின்றார். பல இலக்கண மொழியியல் அறிஞர் களும் முதற்பெயர்களை இயற்பெயர்களாகக் கருதுகின்றனர். முதற்பெயர் என்பது சினைப்பெயர் என்பதன் எதிர்நிலையாக அமைந்துள்ளது. 'கை' என்பது ஒரு சினைப்பெயர்; பற்பல சினைகளைக் கொண்ட ஒரு மனிதன் முதற்பெயர் பாகுபாட்டில் அமையப்பெறுகின்றான்.

சினை, முதல் என்னும் கோணத்தில்தான் முதற்பெயர் என்ற பாகுபாடு அமையப்பெற்றுள்ளது. முதற்பெயர்களில் பல இயற்பெயர்களாக அமைந்துள்ளன, ஆதலின் இயற்பெயர்க ளெல்லாம் முதற்பெயர்களே என்று கூறுவது பொருந்து மாறில்லை. ஏனெனில் சில பொதுப் பெயர்களும் முதற் பெயர்களாகச் செயல்படுகின்றன.

இயற்பெயரையும் சினைப்பெயரையும் எடுத்துக்கொண்டால் இயற்பெயர்கள் அனைத்தும் மனிதன், விலங்கு, மரம், செடி போன்றவற்றின் முழுமை நிலையினைச் சுட்டும் பெயராக அமைய சினைப்பெயர்கள் மேலே குறிப்பிடப்பெற்றவைகளின் ஒரு பகுதி அல்லது உறுப்பினைச் சுட்டும் வகையில் அமைந் துள்ளன.

இனி, கிளைப் பெயர்களுக்கும் இயற்பெயர்களுக்குமிடையே காணப்பெறும் வேறுபாட்டினைக் காணலாம்.

இயற்பெயர்களெல்லாம் மனிதன், விலங்கு, மரம், செடி போன்றவற்றின் தனிப்பெயர்களாக அமைய கிளைப்பெயர்கள் அனைத்தும் ஒரு குழு அல்லது கூட்டத்தினைக் குறிக்கும் வகையில் அமைந்துள்ளன, கிளைப்பெயர்கள் என்ற ஒருவகைப் பாகுபாடு தொல்காப்பியர் பொதுப்பெயர்களை இயற்பெயர்க ளாகக் கருதவில்லை என்பதனை அரண்செய்யும் வகையில் அமைந்துள்ளது.

ஆகுபெயர்களுக்கும் இயற்பெயர்களுக்குமிடையே காணப் பெறும் வேறுபாடு பொருண்மை நிலையில் தான் அமையப் பெற்றுள்ளது. ஒரு பெயர் ஆகுபெயராகச் செயல்படும் நிலையில் அது பொதுப்பெயராகச் செயல்படுமேயொழிய இயற்பெயராகச் செயல்படுவதில்லை.

'காளை வந்தான்' என்னும் அமைப்பில் 'காளை' என்னும் வடிவம் காளை என்னும் விலங்கிற்குரிய பண்புகளைப் பெற்ற வனுக்கு உரித்தாகி வருகின்றது. இந்நிலையில் இச்சொல் பொருண்மை நிலையில் ஆக்கம் (semantically motivated) பெற்ற சொல்லாக மாறி விடுகின்றது. ஆகுபெயர் என்ற தொல்காப்பியரின் பெயர்ப் பாகுபாடு பொதுப் பெயர்களை இயற்பெயர்களாகக் கருதுதல் கூடாது என்பதற்கு அரண் செய் யும் வகையில் அமைந்துள்ளது.

இயற்பெயர்கள் உருவக நிலையிலும் ஆகுபெயர்களாக ஆக்கம் பெறும் நிலையிலும் பொதுப்பெயர்களாக மாற்றம் பெறுவதால் தொல்காப்பியர் ஆகுபெயர், அன்மொழித் தொகை வடிவங்களை இயற்பெயர்களாகக் கருதவில்லை.

விலங்கு, மரம், செடி போன்றவற்றின் பெயர்களையும் தொல்காப்பியர் இயற்பெயர்களாகக் கருதியுள்ளார் என் பதனை 'இறைச்சிப் பொருள்வயின் செய்புளுள் கிளக்கும் இயற்பெயர்க்கிளவி உயர்திணை சுட்டா நிலத்துவழி மருங்கின் தோன்றலான்' (தொல். சொல். 190) என்னும் நூற்பாவின் வாயிலாக உய்த்துணரமுடியும்.

மேற்கூறப்பெற்ற செய்திகளினின்றும் தொல்காப்பியரின் இயற்பெயர் கோட்பாட்டினைத் தெரிந்து கொள்ளுதல் இயலும்.

எவ்வித காரணமும் இன்றி இயல்பாக அமையும் பெயர் கள் இயற்பெயர்கள் எனப்படும். இவை பெரும்பான்மையும் சொல்நிலையில் ஆக்கவுருபின்றி அமையப்பெறும். மேலும் இவை ஒரு மனிதன், விலங்கு, மரம், செடி போன்றவற்றின் பெயரினைக் குறிக்கும் வகையில் அமையும்.

இவ்விலக்கணத்தினை அடிப்படையாகக் கொண்டு தொல்காப்பியர் குறிப்பிடும் செய்திகளை விரிவாக ஆய்ந்து காணலாம்.

தொல்காப்பியர் அஃறிணைப் பெயர்களைத் தொகுத்துக் கூறிய பின்றை 'கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயர்' (தொல். சொல். 165) எனச் சுட்டிக் 'கள்' விகுதியின் வருகையினைக் குறிக்கின்றார்.

இத் தொல்காப்பிய நூற்பாவிற்கு உரையாசிரியர்கள் அனைவரும் ஒருமித்த கருத்தினைக் கூறுகின்றனர். இளம்பூரணர் (தொல். சொல். 166), சேனாவரையர் (தொல். சொல். 169), நச்சினார்க்கினியர் (தொல். சொல். 171), தெய்வச்சிலையார் (தொல். சொல். 165) ஆகியோர் அஃறிணை இயற்பெயர்கள் கள்ளீற்றோடு பொருந்தி வருங்கால் பலவறி சொல்லாகும் எனக் கூறி, 'ஆ', 'குதிரை' என்பன பால்பகா அஃறிணை இயற்பெயர்கள் எனவும் 'ஆக்கள்', 'குதிரைகள்' என்பன அஃறிணைப் பன்மை இயற்பெயர்கள் எனவும் குறிப்பிடுகின்றனர்.

தொல்காப்பியர் இயற்பெயர்களை அறிமுகம் செய்யாத நிலையில் அஃறிணையில் இயற்பெயர்கள் 'கள்' விகுதியினைப் பெற்று வரும் பான்மையினைச் சுட்டியிருப்பாரா என்பது அடிப்படைப் பிரச்சினையாக அமைகின்றது. ஈண்டுக் குறிப்பிடப்பெற்றுள்ள நூற்பாவில் காணப்பெறும் 'கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயர்' என்னும் சொற்றொடரே இப்பிரச்சினைக்குக் காரணமாக அமைந்துள்ளது.

இதனை அடுத்த நூற்பா அஃறிணைப் பெயர்களுக்குப் புறனடை (தொல். சொல். 166) கூறும் வகையில் அமைந்துள்ளது. அஃறிணைப் பெயர்களைத் தொகுத்துக் கூறும் நூற்பாவிற்கும் அஃறிணைப் பெயர்களுக்குப் புறநடை கூறும் நூற்பாவிற்குமிடையே அஃறிணை இயற்பெயர் பற்றிய நூற்பா அமைந்துள்ளது என்னும் கருத்துப் பொருந்துமாறில்லை.

தொல்காப்பியர் குறிப்பிடும் 'அவ்வியற் பெயர்' என்பதற்கு 'அந்த இயற்பெயர்கள்' எனப் பொருள் கொண்டால் எந்த இயற்பெயர்கள், என்ற வினா எழும். இவ்வினாவிற்கு விடை

கூறும் வகையில் இந்நூற்பாவிற்கு முன்னர் அஃறிணை இயற் பெயர்கள் சுட்டப்பெற்றிருத்தல் வேண்டும். சுட்டடையினைப் பயன்படுத்துங்கால் அதற்கு முன்பாகச் சுட்டடையால் குறிக்கப் பெறும் பெயர்கள் சுட்டப்பெற்றிருத்தல் வேண்டும்.

'கள்' விகுதியினைக் குறிக்கும் நூற்பாவின் முன்னைய நூற்பா அஃறிணைப் பெயர்களையே குறிக்கின்றதேயன்றி இயற்பெயர்களைக் குறிக்கும் வகையில் அமையவில்லை. எனவே 'அவ்வியற்பெயர்' என்னும் சொற்றொடர் 'அந்த இயல்புடைய பெயர்' என்னும் பொருளில்தான் கையாளப்பட்டுள்ளது எனக் கருதலாம்.

அஃறிணை இயற்பெயரின் ஒருமை பன்மை வேறுபாடு அதுகொண்டு முடியும் வினையின் வாயிலாகவே தெரிதல் இயலும் (தொல்.சொல்.167) என்று தொல்காப்பியர் குறிப்பிடு கின்றார். இதனின்றும் அஃறிணை இயற்பெயர்கள் 'கள்' விகுதியினை ஏற்று வாரா எனவும் இவற்றின் ஒருமை பன்மை வேறுபாடு இவை கொண்டு முடியும் வினையினைப் பொறுத்தே அமையும் எனவும் உய்த்துணரமுடிகின்றது.

இன்னமும் தொல்காப்பியர் பன்மை இயற்பெயர்கள் அஃறிணை ஒன்றன்பாலுக்குப் பொருந்தி வருமெனக் (தொல். சொல்.178) குறிக்கின்றார். பன்மை இயற்பெயர்கள் அஃறிணை ஒன்றன்பாலுக்குப் பொருந்திவர வேண்டுமாயின் அவைபன்மை விகுதியாகிய 'கள்' இன்றியே அமைதல் வேண்டும்.

தொல்காப்பியர் பதினான்கு இடங்களில் 'இயற்பெயர்' என்னும் சொற்றொடரைப் பயன்படுத்தியுள்ளார். இவற்றுள் அடையொடுவரும் இடங்களிலெல்லாம் 'அத்தன்மையுடைய பெயர்' என்ற பொருளில்தான் இந்த சொற்றொடர் கையாளப் பட்டுள்ளது.

எனவே தொல்காப்பியர் 'கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயர்' என்னும் சொற்றொடர் வரப்பெறும் நூற்பாவில் இயற்பெயர்களைச் சுட்டவில்லை என்பது தெரியவருகின்றது.

தொல்காப்பியர் இயற்பெயர்களை ஆண்மை இயற்பெயர், பெண்மை இயற்பெயர், ஒருமை இயற்பெயர், பன்மை இயற் பெயர் (தொல.சொல.172) என நான்காகப் பகுத்துக் காண கிறார். இவற்றுள் ஒருமை, பன்மை இயற்பெயர் பாகுபாட்டில் சில சிக்கல்கள் காணப்படுகின்றன.

ஒருமை இயற்பெயர்கள் ஒன்றற்கும் ஒருவர்க்கும் ஒன்றிவரு மெனத் (தொல்.சொல். 179) தொல்காபபியர் குறிப்பிடுகின்றார். பன்மை சுட்டிய இயற்பெயர் ஒருமைக்கும் பொருந்தி வருமெ னவும் (தொல்.சொல்.178) தெரிநிலையுடைய அஃறிணை இயற பெயர் ஒருமையும் பன்மையும் வினையொடு வரினே (தொல். சொல்.167) எனவும் குறிப்பிட்ட தொல்காப்பியர் ஏன் ஒருமை இயற்பெயர்கள் பன்மை குறித்து வருமெனச் சுட்டவில்லை என்பது புரிந்து கொள்ளுமாறில்லை.

பன்மை இயற்பெயர்கள் ஒன்றே, பலவே, ஒருவரெனனும் பால்களுக்கு ஒன்றி வருமெனத் (தொல். சொல். 178) தொல் காப்பியர் குறிப்பிடுகின்றார். இந்நூற்பாவிற்கு அனைத்து உரையாசிரியர்களும் உயர்திணைப் பன்மை நீங்கலாக ஏனைய அனைத்துப் பால்களுக்கும் சான்றுகள் தருகின்றார்.

இடையியலின்கண் உயர்திணைப் பன்மை இயற்பெயர் களைக குறிப்பிடும் தெய்வச்சிலையார் (தொல். சொல். 267) கூட உயர்திணைப் பன்மை இயற்பெயருக்கு ஈண்டுச் சான்றுகள் தரவில்லை.

பன்மை இயற்பெயர்களுக்குச் சான்றுகள் தரும் நிலையில் உரையாசிரியர்களுக்கிடையே முரண்பாடு காணப்படுகின்றது.

தொல்காப்பியர் சுட்டும் இயற்பெயர்கள் பெரும்பான் மைக்கும் உரையாசிரியர்கள் பொதுப்பெயர்களையே (common nouns) எடுத்துக் காட்டுகளாகத் தருகின்றனர்.

பொதுப் பெயர்களைத் தொல்காப்பியர் இயற்பெயர்க ளாகக் கருதவில்லை எனின் பன்மை இயற்பெயர்கள மொழி யில் எங்ஙனம் அமையப்பெறும் என்ற வினா எழும். இன்ன மும் பொதுப்பெயர்களைத் தொல்காப்பியர் எவ்வாறு கருதி

யுள்ளார் எனவும் அவற்றைத் தனியொரு வகையாகக் கருதியுள்ளாரா அன்றி வேறுவகைப் பெயரொடு இணைத்துள்ளாரா எனவும் ஐயம் ஏற்படுகின்றது.

பன்மை இயற்பெயர்கள் மொழியில் அமையப் பெற்றமையால்தானே தொல்காப்பியர் பன்மை இயற்பெயர்கள் என்ற ஒரு பாகுபாட்டினை அமைத்துள்ளார்.

பன்மை இயற்பெயர்களில் உயர்திணைப் பன்மை இயற்பெயர்கள் உண்டு என்பதனைத் தெய்வச்சிலையார் சுட்டுகின்றார். 'சாத்தன்' என்பது பலருக்குப் பெயராக அமையும் நிலையில் 'சாத்தன்மார் வந்தனர்' என்னும் வாக்கியத்தில் இது உயர்திணைப் பன்மை இயற்பெயராகச் செயல்படுகின்றது. இந்நிலையில் 'சாத்தன்மார்' என்பது இயற்பெயரேயன்றிப் பொதுப்பெயர் அன்று.

அஃறிணைப் பன்மை இயற்பெயர்களுக்கு உரையாசிரியர்கள் அனைவருமே பொதுப் பெயர்களைச் சான்றுகளாகத் தருகின்றனர்.

உயர்திணையினைப் போன்று அஃறிணையில் மரம் அல்லது விலங்குகளுக்குப் பெயரிட்டு வழங்கும் முறை மிகக் குறைவு.

மனித இனத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்தனியே பெயர் அமையப்பெறுகின்றது. இதனைப் போன்ற விலங்குகளுக்கும் மரம், செடி, கொடி போன்றனவற்றிற்குத் தனித்தனிப் பெயர் அமையப் பெறுவதில்லை. இந்நிலையில் இவற்றைச் சுட்டும் பெயர்களைப் பொதுப் பெயர்களாகக் கருதலாமா என்பது ஆய்வுக்குரியது.

சான்றாக 'மரம்' என்பது ஒரு பொதுப்பெயர். இவ்வகையினைச் சார்ந்த 'கொன்றை' என்பது தனியொரு மரவகையாகும். எல்லா கொன்றை மரங்களையும் 'கொன்றை' என்ற பெயரால் அழைக்கின்றோம.

'கொன்றை மலர்ந்தன' என்னும் தொடரில் 'கொன்றை' என்னும் வடிவம் பன்மை இயற்பெயரே. இவ்வடிவத்தின் ஒருமை பன்மை வேறுபாடு இது கொண்டு முடியும் வினை

யினைப் பொறுத்து அமையப்பெறும். இந்த அடிப்படையில்தான் தொல்காப்பியர் பன்மை இயற்பெயர் என்ற பாகுபாட்டினை அமைத்திருக்க முடியும்.

'மரம்' என்பது பொதுப்பெயர்; 'கொன்றை' என்பது இயற்பெயரே. தனித்தனியாக எல்லா கொன்றை மரங்களும வேறுபடுத்த இயலா நிலையில் இதனையும் சிலர் பொதுப்பெய ராகக் கருதலாம். இது ஏற்புடைத்தாயின் தொல்காப்பியர் பொதுப்பெயர்களையும் இயற்பெயர்களாகக் கருதியுள்ளார் என்று கருத இடமுண்டு.

உயர்திணையிலும் பன்மை இயற்பெயர்கள் உண்டு. ஒரே பெயர் பலருக்கு அமையும் நிலையில் உயர்திணைப் பன்மை இயற்பெயர்கள் அமையப் பெறுகின்றன. இப்பாங்கினைத்தான் தொல்காப்பியர் கிளவியாக்கத்தில் சிறப்புப் பெயரும இயற் பெயரும் அமையும் நிலையினைச் (தொல்.சொல். 39) சுட்டுவதன் வாயிலாகக் கூறுகினறார்.

பொதுப் பெயர்களைத் தொல்காப்பியர் தனியொரு வகை யாகக் கருதவில்லை. இப்பெயர்களை வேறுபெயர் வகைகளுக் குள்ளே அமைத்திருக்கலாம். இயற்பெயரின் வகையாகக்கூட கருதியிருக்கலாம். இது மேலும் ஆய்தற்குரியது.

தொல்காப்பியர் இயற்பெயரின் பாகுபாட்டையும், திணை செயல் பாகுபாட்டையும் அமைப்பது இவ்வியற் பெயர்களின் வடிவ அமைப்பினை அடிப்படையாகக் கொண்டே என்று கருதலாம். இயற்பெயர்களில் பால்காட்டும் ஈறுகளின் தோற்றம் குழப்பத்தை விளைவித்திருக்கலாம்.

இயற்பெயர்கள் பொதுப்பெயராக மாறுவதும், பொதுப் பெயர்கள் இயற்பெயர்களாக மாறுவதும் உண்டு. இத்தகு மாற்றங்களைப் பற்றிய குறிப்புகள் தொல்காப்பியத்தில் காணப் பெறவில்லை.

ஈண்டுக்கூறப்பெற்ற செய்திகளிலிருந்து சிலவற்றை முடிபு களாகக் கருதலாம். அவையாவன:

1. எவ்வித காரணமும் இன்றி இயல்பாக அமையப்பெறும் பெயர்கள் இயற்பெயர்கள் எனப்படும்.

2. இப்பெயர்கள் பெரிதும் ஆக்க உருபின்றி அமைந்து வரும்.

3. மனிதன், விலங்கு, செடி, மரம் ஆகியவற்றின் தனிப் பெயர்களையே தொல்காப்பியர் இயற்பெயர்களாகக் கருதியுள்ளார்.

4. தொல்காப்பியர் ஆகுபெயரினை இயற்பெயராகக் கருத வில்லை.

5. பொதுப்பெயர்களைத் தொல்காப்பியர் இயற்பெயர் களாகக் கருதியுள்ளாரா என்பது மறு ஆய்விற்குரியது.

6. உரையாசிரியர்கள் தரும் சான்றுகள் அனைத்தையும் இயற்பெயர்களாகக் கருதுதல் இயலாது.

7. தொல்காப்பியர் குறிப்பிடும் இயற்பெயரும் மொழியியல் அறிஞர்கள் குறிப்பிடும் இயற்பெயரும் (proper nouns) முழுமையாக ஒத்து வருவதில்லை.

8. இயற்பெயர்கள் உயர்திணைக்குரியன, அஃறிணைக் குரியன, இருதிணைக்குரியன என்று மூவகைப்படும்.

மொழியில் பெரும்பான்மையும் இயற்பெயர்கள் இரு திணையிலும் செயல்பட்டமையால் இயற்பெயர் பாகு பாட்டினைத் தொல்காப்பியர் விரவுப் பெயரினை விளக்கும்போது குறிப்பிடுகின்றாரே அன்றி இவரது கோட்பாட்டின்படி இயற்பெயரெல்லாம் விரவுப் பெயர்கள் அல்ல.

9. 'கள்' விகுதியினைச் சுட்டும் தொல்காப்பிய நூற்பாவில் காணப்பெறும் 'இயற்பெயர்' என்னும் சொற்றொடர் 'இயல்புடைய பெயர்' என்ற பொருளில்தான் கையாளப்பட்டுள்ளது.

10. தொல்காப்பியரின் ஒருமை, பன்மை இயற்பெயர் பாகு பாட்டில் சில பிரச்சினைகள் காணக்கிடைக்கின்றன.

11. பன்மை இயற்பெயர்கள் மொழியில் காணப்படுவதனை அடியொற்றியே தொல்காப்பியர் பன்மை இயற்பெயர் என்ற பாகுபாட்டினை அமைத்துள்ளார்.

துணை நூல்கள்

அகத்தியலிங்கம், ச. முருகையன், க. 1973. தொல்காப்பிய மொழியியல், அண்ணாமலைப்பல் கலைக்கழகம், அண்ணாமலைநகர்.

ஆதித்தன், ஏ. 1984. 'கள்ளொடு சிவணும் அவ்வியற பெயர்', தமிழ்ப் பொழில், தஞ்சாவூர்.

இசரயேல், மோ. 1976. இலக்கண ஆய்வு பெயர்ச் சொற்கள், மதுரை.

சண்முகம், செ.வை. 1983. 'விரவுவினை', மொழியியல், தொகுதி 6, எண் 4, பக். 1-73.

தொல்காப்பியர், 1963. தொல்காப்பியம் - சொல்லதிகாரம், தெய்வச்சிலையார் உரை. கழக வெளியீடு, சென்னை.

Alau Gardiner, S. 1954. The Theory of proper Names, Oxford.

மொழியியல் 9.3 & 4 (1986)

பழந்தமிழில் கால எச்சங்கள்

ச. அகத்தியலிங்கம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

கால எச்சங்கள் காட்டும் காலம் ஒப்புமைக் காலமாகவே உள்ள பண்பினைத் தொல்காப்பியர்,

"செய்து என்எச்சத்து இறந்த காலம்
எய்து இடன் உடைத்தே வாராக் காலம்" நூற்பா. 724

என்ற சூத்திரத்தில் கூறுவதாகக் கருதுவர் உரையாசிரியர்கள். இது பற்றிக் கூறும் சேனாவரையர் "ஈண்டுச் செய்தெனெச் சத்திறந்தகால மென்றது முடிபாய் வரும் வினைச் சொல்லா லுணர்த்தப்படும் தொழிற்கு அவ்வெச்சத்தா லுணர்த்தப் படுந் தொழில் முன் நிகழ்தலை" (239) எனக் கூறுவார். இதனையே நச்சினார்க்கினியரும் "நீ உண்டு வருவாய், என்பது நாளை உண்டு வருவாய் என்னும் பொருள் உணர்த்தவும், வருதல் தொழிலுக்கு உண்டல் தொழில் முன் நிகழ்ந்து, ஆண்டும் தன் இறந்த காலமே உணர்த்திற்றாம்" என்பார் (241).

5.3 கால எச்ச அமைப்பு

எல்லாக் கால எச்சங்களும் கால இடைநிலைகளைக் கொண்டு வரும் நிலையில் இவற்றின் அமைப்பைக் கீழ்க்கண்ட வாறு அமைக்கலாம்.

வினை அடி + { இறந்த காலம் / எதிர் மறை } + எச்ச விகுதி

கால எச்ச விகுதிகளாக -உ, - ϕ, - ஊ (உ), -ஆ, –பு, -மை -மல் ஆகியவை பழந்தமிழில் காணக்கிடக்கின்றன.

— உ	செய் + த் + உ	> செய்து
	செய் + ஆத் + உ	> செய்யாது
— ϕ	ஆடு + இ + ϕ	> ஆடி
	அளை + இ + ϕ	> அளைஇ
	போ + ய் + ϕ	> போய்
	செய் + ஆ + ϕ	> செய்யா (எதிர்மறை)
— ஊ (உ)	செய் + ϕ + ஊ	> செய்யூ
— ஆ	செய் + ϕ + ஆ	> செய்யா (உடன்பாடு)
— பு	செய் + ϕ + பு	> செய்பு
— மை	செய் + ஆ + மை	> செய்யாமை
— மல்	செய் + ஆ + மல்	> செய்யாமல்

வினையெச்சங்கள் பற்றிப் பேச வந்த தொல்காப்பியர்

"செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
செய்யியர் செய்யிய செயின் செயச் செயற்கென
அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி" நூற்பா. 713

எனப் பல்வேறு வாய்பாடுகளைத் தந்து வினையெச்சங்களை விளக்குவார். இது போன்றே செய்யா எனும் வாய்பாட்டு எச்சத்தையும் உயிர் மயங்கியலில் (222) குறிப்பிட்டுள்ளார்.

பழந்தமிழ் இலக்கியங்களில் தொல்காப்பியம் கூறும் எல்லா விகுதிகளும் காணப்படுகின்றன. தொல்காப்பியர் இவற்றை வாய்பாட்டு அடிப்படையில் கூறிப் போந்தாலும் உரையாசிரியர்கள் இவ் வாய்பாடுகளின் இறுதியில் நிற்கும் இடைச் சொற்களே வினையெச்சம் எனக் காட்ட வல்லன என்பது போல் குறிப்பிடுவதும் இந்நிலையில் இவை ஒன்பதும்

ஈற்று இடைச்சொல்லால் வேறுபட்டன எனக் கூறுவதும் இங்குக் குறிப்பிடத்தக்கன. இது பற்றிப் பேசும் சேனா வரையர் "அவ்வகையொன்பது மென்றது இறுதி நின்ற இடைச்சொல்லான் வேறுபட்ட ஒன்பது மென்றவாறு. அவ்விடைச் சொல்லாவன உகரமும், ஊகாரமும், புகரமும், எனவும் இயரும், இயவும் இன்னும் அகரமும் குகரமுமாம்" (நூற்பா. 228) எனக் கூறிச் செல்லுவார். இதே நிலையினைத் தான் நச்சினார்க்கினியரிடமும் காணுகிறோம். ஆனால் தெய்வச் சிலையாரோ இது பற்றி எதுவும் கூறுவதில்லை. எனினும் உரை யாசிரியர்கள் இவ் வாய்பாட்டுச் சொற்களில் காணப்படும் இடைச்சொற்கள் அல்லது வினையெச்சம் காட்டும் விகுதிகள் எவை என எண்ணிப் பார்த்துள்ளனர் என்பது இதனால் விளங்கும். இந்நிலையினை ஓரளவுக்கு நன்னூலில் காண முடிகிறது. 'தொல்காப்பியர் குறிப்பிட்டுச் சென்ற வினை யெச்சங்களை அவர் குறிப்பிட்ட வாய்பாடுகளினாலேயே கூறி, புதிதாக எழுந்த வினையெச்சங்களை விகுதிகளால் குறிப் பிடுவது இங்கு உணரத்தக்கது.

"செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச் செயச் செயின் செய்யிய செய்யியர்
வான்பான் பாக்கென வினையெச் சம்பிற
ஐந்தொன் றாறுமுக் காலமு முறைதரும்" நூற்பா. 343

என்பது நன்னூல்.

5.4 -உ

பழந்தமிழில் காணப்படும் -உ, -ஒ, -ஊ (உ). -ஆ. -பு, -மை, -மல் ஆகிய ஏழு காலவெச்ச விகுதிகளில் உகர விகுதியே மிக அதிகமாகக் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக, பதிற்றுப் பத்தில் இது 402 இடங்களில் வர இதை அடுத்த -ஒ விகுதியோ 173 இடங்களில் மட்டுமே வருதல் இங்குக் குறிப்பிடத் தக்கது. இதே நிலையினைத்தான் எல்லா இலக்கியங்களிலும் காண்கிறோம் (காண்க, பட்டியல் - 1). இதற்குக் காரணம் இலக்கியங்களில் பயின்று வரும் வினைச் சொற்களே என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. ஆடு, ஓடு போன்ற -இன்- அல்லது

-இ. யகரத்தை இறந்தகால இடைநிலையாகக் கொண்டு வரும் சொற்களே சூனிய உருபையும், வா, தா, செய் போன்ற வினைச்சொற்களே (க, ட, த, ற ஒற்றுக்களை இறந்தகால இடைநிலையாக ஏற்பன) உகர உருபினையும் எடுத்து வருகின்றன. இந்நிலையில் இவ்வுருபுகள் அதிகமாக வருவதற்குக் காரணம் குறிப்பிட்ட வினைச் சொற்களின் ஆட்சியே என்பது தெரிய வரும்.

தொல்காப்பியர் வினையெச்ச வாய்பாடுகளைப் பற்றிக் குறிப்பிடும் சூத்திரத்தில் ஆடி, ஓடி வாய்பாட்டுக் காலவெச்சங்களைக் குறிப்பிடவில்லை. இதற்குக் காரணம் கூறப் போந்த உரையாசிரியர்கள் செய்து வாய்பாட்டுக் காலவெச்சம் க, ட, த, ற ஊர்ந்த வினைக்கண் வரும் எனவும், இகரம் ஓடு, ஆடு போன்ற வினைகளில் வரும் எனவும் கூறி இவை இரண்டும் ஒரே விகுதியே என்றும், ஒன்று மற்றொன்றின் திரிபே என்றும் இதனால் தொல்காப்பியர் இகரவிறுதி பற்றிக் கூறவில்லை என்றும் கருதுவர். சேனாவரையர் "உகரம் இயல்பாக இகரம் அதன் திரிபென்றலே முறைமை யென்க" (228) எனக் கூறுவார். இதிலிருந்து சேனாவரையர் உ, இ என்னும் விகுதிகளின் பகிர்வினை நன்கு உணர்ந்திருந்தார் என்பது தெரிய வரும். எனினும் இவர் இரண்டையும் ஒன்றாகக் கொண்டு உகரத்தை மூலமாகக் கொண்டு அதிலிருந்து இகரத்தை வருவிப்பது பொருந்துவதாக இல்லை. இவர் கூற்றுப்படி

செய் + த் + உ ⇒ செய்து

எனவும்

ஆடு + இ + உ ⇒ ஆடு + இ + இ = ஆடி

எனவும்

போய் + உ ⇒ போய்

என்றும் வரும் என எண்ண வேண்டும்.

இதற்குக் காரணம் ஒன்றை அடிப்படை உருபாகக் கொண்டு மற்றொன்றைப் புணர்ச்சி விகாரத்தால் வருவிக்கும் நிலையே. ஆனால் இது தமிழ்ப் புணர்ச்சி விதிகளுக்குப் பொருந்துவதாக இல்லை. இவ்வாறு ஒன்றிலிருந்து ஒன்றை

வருவிப்பதை விட வினைச்சொற்கள் க, ட, த, ற ஊர்ந்து நிற்கும் நிலையில் உகரத்தையும் இகர, யகரத்தை ஏற்கும்போது சூனிய உருபையும் காலவெச்ச விகுதிகளாக ஏற்று வருகின்றன என்று கூறுவதே பொருத்தமாக அமையும் என எண்ணலாம்.

பொதுவாகக் கால எச்சங்கள் அனைத்தையும் ஆராயின் வேறொரு உண்மையும் புலப்படும். எச்சங்களில் கால இடைநிலைகளை (-த்-, -ட்-, -ற்-) அடுத்துக் காணப்படும் -உ வல்லின மெய்களை அடுத்து ஓசை நிறைத்தற் பொருட்டு வருவதா அல்லது உண்மையில் வினையெச்சங் காட்டி நிற்கும் விகுதியா என்ற வினா எழுதல் உண்டு. தமிழ் ஒலியியல் அமைப்பில் சொல்லுக்கு இறுதியில் வல்லினங்கள் வருவதில்லை. அவ்வாறு வருமாயின் அதனை ஒட்டி உகரம் வந்து உகர இறுதியாக மாறிவிடும். இந்நிலையில் வந்து, கண்டு, சென்று, செய்பு போன்றவற்றில் காணப்படும் உகரம் வினையெச்ச விகுதியா அல்லது ஓசை நிறைக்க வந்த உகரமா என்ற எண்ணம் எழுவது இயற்கை. தொல்காப்பியர் வாய்பாடுகளை மட்டுமே தந்து நிற்கின்ற நிலையில் அவர் விகுதிகளைப் பிரிப்பது பற்றிச் சிந்திக்கவில்லை என எண்ணலாம். ஆனால் உரையாசிரியர்கள் பிரித்துக் கண்டுள்ளனர். சேனாவரையர் "அவ்வகை யொன்பது மென்றது இறுதி நின்ற இடைச் சொல்லான் வேறுபட்ட ஒன்பது மென்றவாறு, அவ்விடைச் சொல்லாவன உகரமும், ஊகாரமும், புகரமும் எனவும்" எனக் கூறுவார். எனவே இவர் கருத்துப்படி உகரம் விகுதியாகவே கருதப்படுகின்றது. இதே நிலையினைத்தான் நச்சினார்க்கினியரிடமும் காணுகிறோம். தெய்வச்சிலையார் இவற்றைப பிரித்துப் பார்த்து நிற்காமல் வாய்பாடுகளாகவே கூறிச் செல்லுவார்.

செய்து போன்றவற்றில் காணப்படும் உ ஓசை நிறைக்காக வந்தது என்று கூறினும் காணூ, காணூஉ போன்றவற்றில் வரும் ஊகாரங்களை விளக்க முடியாது. இந்நிலையில்தான் பலர் வினையெச்சங்களுக்குத் தனி விகுதி காண்கின்றனர். எனவேதான் இங்கும் -உ, -ϕ போன்றவை கால எச்ச விகுதிகளாகக் கொள்ளப்படுகின்றன.

5.4.1 சூழல்கள்

இவ்விகுதி

1. -க்- -ந்த்-, -த்-, -ட்-, -ற்- ஆகிய இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னரும்

2. எதிர்மறை காட்டும் -ஆத்- இடை நிலைக்குப் பின்னரும் வரும்.

5.4.1.1 பல்வேறு இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னர்

இச்சூழலிலேயே இவ்விகுதி அதிகமாகக் காணப்படுகிறது.

புக்கு	அடைந்து	பதி 68-10, அகம் 280-9, நற் 42-7, புறம் 67-10, பத்து 1-45, பரி 5-1, கலி 50-3, குறள் 835, சிலம்பு 3-172, மணி 16-46
அவித்து	சிதைத்து	பதி 30-15
உடைத்து	உடைத்து	ஐங் 81-1
அலைத்து	விரித்து	அகம் 180-6
கெடுத்து	தவறுண்டு	நற் 182-5
சுவைத்து	சுவைத்து	குறு 307-7
அறுத்து	உடைத்து	புறம் 331-3
அழித்து	அழிக்கப்பட்டு	பத்து 6-24
துடைத்து	தூயதாக்கி	பரி 4-1
அமைத்து	அமைத்து	கலி 94-16
கறுத்து	செற்றங் கொண்டு	குறள் 312
எடுத்து	எடுத்து	சிலம்பு 9-27
கொடுத்து	கொடுத்து	மணி 16-76

5.4.1.2 எதிர்மறை காட்டும் —ஆத்— இடைநிலைக்குப் பின்னர்

அறியாது	அறியாது	பதி 21-30
அகலாது	செல்லாது	ஐங் 499-3
அஞ்சாது	அஞ்சாமல்	அகம் 281-3
சினவாது	சினவாது	நற் 100-6
செல்லாது	அமையாது	குறு 265-1
ஈயாது	கொடுக்காது	புறம் 235-20
வீயாது	மாறாமல்	பத்து 10-76

பிரியாது	பிரியாது	பரி	18-56
அருளாது	அருளாதே	கலி	53-16
ஓவாது	இடைவிடாது	குறள்	933
காணாது	காணாமையின்	சிலம்பு	17-18
நீங்காது	போகாமல்	மணி	3-72

5.4.2 – ϕ

இவ்விகுதி ஆடி, அளைஇ, போய், செய்யா போன்ற எச்சங்களில் காணப்படுகிறது. உகர விகுதிக்கு அடுத்தபடியாகக் காணப்படும் விகுதி இதுவேயாகும். (பட்டியல்-1)

5.4.2.1 சூழல்கள்

இவ்வெச்சம்

1. இறந்தகாலம் காட்டும் இகர இடைநிலைக்குப் பின்னரும்
2. இறந்தகாலம் காட்டும் யகர இடைநிலைக்குப் பின்னரும்
3. எதிர்மறை காட்டும் –ஆ- இடைநிலைக்குப் பின்னரும்
4. -இ- அளபெடைக்குப் பின்னரும் வரும்.

5.4.2.1.1 இகர இடைநிலைக்குப் பின்னர்

இவ்வெச்சம் இச்சூழலிலேயே மிக அதிகமாகக் காணப்படுகிறது. பதிற்றுப்பத்தில் காணப்படும் 173 இடங்களில் 132 இடங்கள் இச்சூழலிலேயே உள்ளன. இதே நிலையினைத்தான் பிற நூல்களிலும் காண்கிறோம்.

அஞ்சி	அஞ்சி	பதி	31–18
இரங்கி	இரங்கி	ஐங்	118–4
அடங்கி	அமைந்து	அகம்	312-1
ஆற்றி	செலுத்துகை-யினால்	நற்	89-1
எண்ணி	நினைந்து	குறு	255-6
உதவி	உதவீ	புறம்	179-6
பொருந்தி	அணுகி	பத்து	8-168
ஆடி	ஆடி	பரி	10–103
எள்ளி	இகழ்ந்து	கலி	33-13
ஏங்கி	ஏங்கி	குறள்	1248

காட்டி	காட்டி	சிலம்பு	8-81
நோக்கி	நோக்கி	மணி	3-11

5.4.2.1.2 யகர இடைநிலைக்குப் பின்னர்

இச்சூழலிலும் இவ்விகுதி வரக் காண்கிறோம். குறிப்பாக, பழந்தமிழில் கூய், தாய், சாய், வினாய் போன்ற சொற்கள் அதிகமாக வருவது குறிப்பிடத்தக்கது. இவற்றைக் கூவி, தாவி, வினாவி போன்று வகர உடம்படுமெய்களை இட்டுக் கூற முடியும். சங்க இலக்கியங்கள் அனைத்தையும் எடுத்து நோக்கின் வகர உடம்படுமெய்ச் சொற்கள் மிகக் குறைவாகவே உள்ளன. எடுத்துக்காட்டாக, தாஅய் என்ற சொல் பழந்தமிழ் இலக்கியங்களில் 45 இடங்களில் காணப்பட, தாவி என்ற சொல் காணப்படாதது இங்குக் குறிப்பிடத்தக்கது. இது போன்றே கூய் என்ற சொல் 16 இடங்களில் காணப்பட, கூவி என்ற சொல் சிலம்பில் மட்டுமே ஒரு இடத்தில் (16-150) காணப்படுகிறது. இதே நிலைதான் பிற சொற்களிலும் காணக் கூடியதாக இருக்கிறது. இந்நிலையில் வகர உடம்படுமெய் ஏற்றுவருதலைப் பின்பழந் தமிழ்க் கூறாகக் கருதலாம்.

பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்திலும் பத்தொன்பது வினைகள் இத்தகைய வகர ஒற்றுப் பெற்று வருதல் காணத்தக்கது (Agesthialingom, *1979:171*)

5.4.2.1.3 எதிர்மறை காட்டும் -ஆ- இடைநிலைக்குப் பின்னர்

தொல்காப்பியம் பொதுவாக எதிர்மறை எச்ச வாய்பாட்டினைத் தருவதில்லை.

"பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியும்
எதிர்மறுத்து மொழியினும் பொருணிலை திரியா"
நூற்பா. 721

எனப் பொதுவாகக் குறிப்பிட்டுச் செல்லுகின்றதே ஒழிய அவற்றின் வாய்பாடு பற்றி வினையியலில் எதுவும் பேசுவதில்லை. எனினும்,

"செய்யா என்னும் வினையெஞ்சு கிளவியும்
அவ்வியல் திரியாது என்மனார் புலவர்" நூற்பா. 222

என எழுத்ததிகாரத்தில் உயிர்மயங்கியலில் இவ் வாய்பாடு பற்றிக் குறிப்பிடும். செய்யா எனும் வாய்பாட்டு எச்சம் எதிர் மறையிலும் உடன்பாட்டிலும் வரும் என்பது இங்கு நினைவு கூரத்தக்கது. எனினும் தொல்காப்பியரோ உரையாசிரியர் களோ எழுத்தியலில் காணப்படும் நூற்பா எதிர்மறையைக் குறிப்பிடுவதா அல்லது உடன்பாட்டினைக் குறிப்பிடுவதா எனச் சுட்டிச் செல்லவில்லை. புணர்ச்சியியலில் இவ்வாய் பாட்டு எச்சம் எவ்வாறு வரும் என்பதைக் குறித்து நிற்கும் நிலையில் அதன் பொருள் பற்றிக் கூறவேண்டிய தேவை யில்லை என்பதால்தான் போலும் அவர்கள் பொருள பற்றிப் பேசவில்லை என எண்ணலாம்.

இவ்வெச்சம் 34 இடங்களில் மட்டுமே இச் சூழலில் காணப்படுகிறது.

அமையா	அமையாமல்	அகம் 27-14
நிலைசெல்லா	நிலைகொள்ளாமல்	நற் 263-8
நில்லா	நில்லாமல்	குறு 256-6
கொடா	கைவிடாது	புறம் 272-7
குறையா	குறையாது	பரி 8-92
செல்லா	செல்லாது	கலி 93-33
அறியா	அறிய மாட்டாது	குறள் 1116

5.4.2.1.4 -இ- அளபெடைக்குப் பின்னர்

பழந்தமிழ் இலக்கியங்களில் தனி ஒருவகையான எச்சங் களையும் காண்கிறோம். இவற்றில் ஐகார, ஈகார ஈறுகளின் அளபெடைகள் காணப்படுகிறது.

உரைஇ	சென்று	பதி 40-9
ஓரீஇ	நீங்கி	பதி 13-27
உணீஇ	தின்று	ஐங் 268-2
மறைஇ	மறைந்து	ஐங் 115-3
கடைஇ	செலுத்தி	அகம் 74-11
குழீஇ	கூடி	அகம் 30-6
தகைஇ	பெற்று	நற் 124-9
குழீஇ	கூடி	நற் 90-11

செலீஇ	சென்று	நற் 54 1
சிதைஇ	சிதைத்து	குறு 349-1
உடீஇ	உடுத்திக் கொண்டு	குறு 167-2
தலைஇ	மேற்சென்று	புறம் 371-12
கொளீஇ	கொளுத்தி	புறம் 14-13
நிரைஇ	நிரைத்து	பத்து 4-120
இடீஇ	இட்டுக்கொண்டு	பரி 10-11
பிணைஇ	தழுவி	கலி 102-26
தழீஇ	அணைத்து	குறள் 544
படீஇ	படிவிதது	சிலம்பு 27-240
தழீஇ	பற்றிய வண்ணம்	மணி 4-56

5.4.3 -ஊ (உ)

இவ்விகுதி பழந்தமிழ் இலக்கியங்களில் குறுந்தொகை திருக்குறள் ஒழிந்த ஏனைய நூல்கள் அனைத்திலும் காண படுகிறது. சிலம்பு, மணிமேகலை ஆகியவற்றில் மிகக் குறை வாகவே இது உள்ளது. எனவே, இதனையும் முன்பழந்தமிழ் கூறாகவே கருதலாம். பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் கூர்ந்து நோக்கின் 40 வினைகளுடனேயே இது வந்துள்ளமை காணலாம்.

சேனாவரையர் செய்யா வாய்பாட்டு எச்சம் பற்றிக் கூறும் போது இவ் ஊகாரமே, ஆகாரமாய்த் திரிந்து வரும் என குறிப்பிடுவார். "அஃது உண்ணா என ஆகாரமாயும் வரும்" எனக் கூறுவார். உண்ணூ, உண்ணா ஆகிய இரண்டும் பதில் நிலை வழக்கில் இருப்பினும் ஒன்றிலிருந்து ஒன்றை வருவிப்பது பொருத்தமாக இல்லை. மேலும் இவ்விகுதி பற்றிக் குறிப் பிடும் சேனாவரையர் "ஊகாரம் உண்ணூ வந்தான் தின்னூ வந்தான் எனப் பின்வருந் தொழிற்கு இடையின்றி முன்வரும் தொழிலின்மேல் இறந்தகாலம் பற்றி வரும்" என கூறுவார். நச்சினார்க்கினியரும் "தொழிற்கு இடையின்றி வரும்" எனக் கூறுவதுடன் "விரைவு உணர்த்தி வரும்" என வும் குறிப்பிடுவார். தெய்வச்சிலையார் இவ்வெச்சம் இறந்த காலமும், நிகழ்காலமும் குறிக்கும் என்று கூறுவார்.

5.4.3.1 சூழல்

இவ்விதி

1. இறந்தகால இடைநிலை -ф- விற்குப் பின்னர் வரும்.

5.4.3.1.1 இறந்தகால இடைநிலை -ф- விற்குப் பின்னர்

செய்யூ வாய்பாட்டு விகுதி அளபெடை எடுத்தும் அளபெடை எடுக்காதும் வரும். சங்க இலக்கியங்களில் 58 இடங்கள் அளபெடையினைக் கொண்டும் ஐந்து இடங்கள் அளபெடையின்றியும் காணப்படுகின்றன.

அடூஉ	அடப்படும்	பதி 13-18
இடியூஉ	இடித்து	ஐங் 423-1
இடூஉ	இடப்பட்டு	அகம் 31-9
பயிரிடூஉ	அழைத்து	நற் 31-4
கழூஉ	கழுவுதல்	குறு 279-5
இடூஉ	குறிசெய்து	புறம் 158-24
உடையூஉ	உடைவதனால்	பத்து 6-305
அறையூஉ	ஒலிக்க	பரி 10-7
காணூஉ	கண்டு	கலி 86-11
விடூஉ	விட்டு	சிலம்பு 27-102
புகூஉ	ஓடி	மணி 18-77
புடையூ	புடைத்து	பதி 26-8
		பத்து 8-160

5.4.4 -ஆ

தொல்காப்பியர் கால எச்ச வாய்பாடுகள் பற்றிக் குறிப்பிடும்போது வினையியலில் இவ் வாய்பாட்டினைக் குறிப்பிடவில்லையெனினும் எழுத்ததிகாரத்தில்,

"செய்யா வென்னும் வினையெஞ்சு கிளவியும்
அவ்வியல் திரியா தென்மனார் புலவர்" நூற்பா. 222

என்ற நூற்பாவால் இதனைக் குறிப்பிட்டிருப்பது இங்கு நினைவுகூரத்தக்கது. முன்னர்க் குறிப்பிட்டது போலத் தொல்காப்பியர் இது உடன்பாடா, எதிர்மறையா எனக்குறிப்பிட

வில்லை. உரையாசிரியர்களும் வெளிப்படையாக இது பற்றி எதுவும் கூறவில்லை. ஆனால் செய்யூ வாய்பாடு பற்றிக் குறிப்பிடும் சேனாவரையர் "அஃது உண்ணா என ஆகாரமாயும் வரும்" எனக் குறிப்பிடுவதிலிருந்து அதனை உடன்பாடாகவே கொண்டமை நன்கு விளங்கும்.

5.4.4.1 சூழல்

இவ்விகுதி

1. இறந்தகால இடைநிலை -ம்- விற்குப் பின்னர் வரும்.

5.4.4.1.1 இறந்தகால இடைநிலை -ம்- விற்குப் பின்னர்

கூரா	மிகுந்து	பதி 71-22
மடாஅ	மடுத்து	ஐங் 128-2
கவியா	கவித்து	அகம் 9-21
அகலா	சென்று	நற் 242-9
எஞ்சா	எஞ்சி	குறு 211-3
அடா	அடக்கி	புறம் 212-4
தெறியா	தெறித்து	பத்து 7-165
புனையா	கோலஞ்செய்து	பரி 19-86
அஞ்சா	அஞ்சி	கலி 143-8
பறியா	பறித்து	குறள் 774
நீங்கா	நீங்கி	சிலம்பு 10-159
காவா	காத்து	மணி 21-168

5.5. -பு

பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் நோக்கின் கலித்தொகை ஒழிந்த ஏனையவற்றில் இவ்வாய்பாட்டு எச்சம் மிகமிகக் குறைவாகவே காணப்படுகிறது. இவ்வெச்சம் பற்றிப் பேசும் சேனாவரையர் "பகரவுகரம் நகுபு வந்தான் என நிகழ் காலம் பற்றி வரும். ஈண்டு நிகழ் காலமென்றது முடிக்குஞ் சொல்லால் உணரப்படும் தொழிலோடு உடனிகழ்தல்" என்று குறிப்பிடுவார். எனவே இவருடைய கருத்துப்படி இவ்வெச்சம் நிகழ்காலம் காட்டி வருமென்பதும், உடனிகழ்ச்சிப் பொருளைக்

காட்டிநிற்கும் என்பதும் விளங்கும். பகர ஒற்றினைக் காலங் காட்டும் இடைநிலையாகக் கொண்டு உகரத்தை விகுதியாகக் கொள்ளலாமோ என எண்ணலாம். பகரத்தைக் கால இடைநிலையாகக் கொள்ளின் இது இறப்பில் காலத்தை மட்டும் காட்டுவதாகக் கருத வேண்டும். அவ்வாறு கருதினால் இவ்வெச்சம் இறந்தகாலத்தில் பல இடங்களிலும் வருதல் இந்நிலைக்கு எதிராக அமையும். இதனால்தான் இது இங்கு புகர விகுதியாகக் கொள்ளப்படுகிறது.

5,5.1 சூழல்

இவ்விகுதி

1. -ф- இறந்தகால இடைநிலைக்குப் பின்னர் வரும்.

5.5.1.1 -ф- இறந்தகால இடைநிலைக்குப் பின்னர்

ஏர்பு	எழுந்து	பதி 24-27
இழிபு	இறங்கி	ஐங் 101-2
உளர்பு	பரப்பி	அகம் 98-9
அருந்துபு	அருந்தி	நற் 338-7
சேர்பு	சார்ந்து	குறு 82-1
இறுபு	ஒடிந்து	புறம் 373-20
திரள்பு	திரண்டு	பத்து 6-648
பொலிபு	பொலிந்து	பரி 13-32
முனிபு	வெறுத்து	கலி 144-42
சிந்துபு	சிந்தி	சிலம்பு 4-43
தொகுபு	கூடி	மணி 2-35

5.6 -மை

செய்யாமை வாய்பாட்டு எச்சம் பழந்தமிழ் இலக்கியங்களில் மிக அருகியே காணப்படுகிறது. இவ்விலக்கியங்களில் மொத்தம் 33 இடங்களில் (பதி. 1, அகம். 7, நற். 1, புறம். 2, பரி. 1, கலி. 9, குறள். 11, சிலம்பு. 1) மட்டுமே இதுவந்துள்ளது.

5.6.1 சூழல்

இவ்விகுதி

1. எதிர்மறை காட்டும் ஆகார இடைநிலைக்குப் பின்னர் வரும். -மல் விகுதியும் இதுவும் பதில்நிலை வழக்கில் உள்ளன.

5.6.1.1 எதிர்மறை காட்டும் ஆகார இடைநிலைக்குப் பின்னர்

எஞ்சாமை	குறைவுபடாது	பதி90-4
கழியாமை	தாழ்க்காது	அகம் 255-8
வெளிப்படாமை	வெளியிலே தெரியாதபடி	நற் 16-6
அறியாமை	அறிந்துகொள்ளா வண்ணம்	புறம் 386 8
காணாமை	காணாது	பரி 19-61
கேளாமை	கேளாமல்	கலி 108-91
இகவாமை	தப்பாமல்	குறள் 779
வாழாமை	வாழாமல்	சிலம்பு 28-212

5.7 -மல்

இவ்வெச்சமும் பழந்தமிழ் இலக்கியங்களில் மிகவும் அருகியே காணப்படுகிறது. பத்துப்பாட்டு ஒழிந்த பிற முன்பழந்தமிழ் இலக்கியங்கள் எதிலும் இவ்வாய்பாட்டு எச்சம் காணப்படுவதில்லை. ஆனால் பின் பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்திலும் இது காணப்படுவதோடு இடைக்காலத் தமிழிலும் அதிகமாக வருவது இங்குக் குறிப்பிடத்தக்கது. எனவே இவ்விகுதியின் வரவைப் பின்பழந்தமிழ்க் கூறாகக் கருதலாம். எனினும் தொல்காப்பியத்தில் ஒரு இடத்தில் இவ்வெச்சம் வருவது (அறியாமல் பொருள் 534-1) குறிப்பிடத்தக்கது.

5.7.1 சூழல்

இவ்விகுதி

1. எதிர்மறை காட்டும் ஆகார இடைநிலைக்குப் பின்னர் வரும்.

5.7.1.1 -ஆ- எதிர்மறைக்குப் பின்னர்

தொய்படாமல்	நனையாதபடி	பத்து 10-365
நாணாமல்	நாணமின்றி	பரி 20-74
காணாமல்	காணாமல்	கலி 39-41
சிதையாமல்	அழியாமல்	குறள் 578

வழாமல்	வழுவாமல்	சிலம்பு 3-146
புகாமல்	புகாமல்	மணி 24-68

6. கால எச்சங்கள் காட்டும் பொருள்கள்

கால எச்சங்கள் வரிசைப்பொருள் (sequential), துணை நிகழ்ச்சிப்பொருள் (part of an action), உடனிகழ்ச்சிப்பொருள் (simultaneous), நிலைமைப்பொருள் (stative), காரணப்பொருள் (causal), தாக்கப்பொருள் (effective), வினையடைப்பொருள் (adverbial) ஆகிய பொருள்களில் வரக் காண்கிறோம். மட்டுமின்றி, துணைவினைகளின் நிலைக்களனாக அதாவது தனலமை வினையாகவும், ஒரு சில இடங்களில் தொழில் பெயராகவும் இவை செயல்படுகின்றன. இப்பொருள்களில் இவற்றின் வரவு எண்ணிக்கையை பட்டியல்கள் 2, 3, 4, 5, 6 ஆகியவற்றில் காணலாம்.

6.1 வரிசைப் பொருள்

பொதுவாகக் கால எச்சங்கள் ஒன்றன் பின் ஒன்றாக நடக்கும் நிகழ்ச்சிகளையே குறித்து நிற்கும். உடனிகழ்ச்சிப் பொருள், தாக்கப்பொருள் ஆகியவற்றில் இந்நிலைமை இல்லையாயினும் பிற பொருள்களில் இப்பண்பினை நன்குக் காண முடியும்.

பொதுவாக வினையெச்சங்களைப் பற்றிக் குறிப்பிடும் அறிஞர்கள் பலர் வரிசைப்பொருள் பற்றிக் குறிப்பிடுவதைக் காணலாம். கால்டுவெல் (1956:488), ஆர்டன் (1969:200) போன்ற மேனாட்டு அறிஞர்களும் இதுபற்றிக் கூறியுள்ளனர்.

நான் சென்னை போய் மதுரை போவேன்

என்ற வாக்கியத்தில் சென்னைக்குப் போகும் தொழில் நடந்த பின்னரே மதுரைக்குப் போகும் தொழில் நடைபெறுகிறது. இவ்விரு நிகழ்ச்சிகளும் ஒன்றன் பின் ஒன்றாக வரிசையாக நடக்கின்றன. எனினும் இரு நிகழ்ச்சிகளுக்கும் இடையே தொடர்பு எதுவுமில்லை. பின்னர் நடக்கும் நிகழ்ச்சி முன்னர் நடந்த நிகழ்ச்சியைச் சார்ந்திராமல் தனியே நடைபெறுகிறது. இவை இரண்டிறதும உள்ள தொடர்பு இ. ப வரிசையாக நடை

பெறுதல் மட்டுமே. பழந்தமிழ் இலக்கியங்களில் பல்வேறு இடங்களில் கால எச்சங்கள் இப்பொருளில் வந்துள்ளன.

எடுத்துக்காட்டாக, பதிற்றுப்பத்தில்

"பகைவர் நாடுங் கண்டுவந் திசினே" பதி. 15-1

(பகைவர் நாடுகளையும் பார்த்து இங்கே வந்தேன்) எனவும்,

"அவலெறிந்த வுலக்கை வாழைச் சேர்த்தி
வளைக்கை மகளிர் வள்ளை கொய்யும்" பதி. 29-1

(அவலிடித்த உலக்கையை வாழை மரத்தில் சார்த்திவிட்டு வளையணிந்த இளமகளிர் வள்ளையினது பூவைப் பறிக்கும்) எனவும்,

"...... பூசலிற் புகன்ற வாயம்
முழவிமிழ் மூதூர் விழவுக் காணூஉப் பெயரும்" பதி. 30-20

(ஆரவாரத்தில் விருப்புற்ற மக்கட் கூட்டம் முழவு முழங்கும் பழைதாகிய ஊரிடத்து நிகழும் திருவிழாக் கண்டு மீண்டு செல்லும்) எனவும்,

அகநானூற்றில்

"........ காலிற் சிதையா
நில்லாது பெயர்ந்த பல்லோருள்ளும்" அகம். 110-19

(எம் சிற்றில் சிறு சோறுகளைக் காலாற் சிதைத்துவிட்டு அங்கு நில்லாது போய பலருள்ளும்) எனவும்,

பதிற்றுப்பத்தில்

"அழல் விடுபு............
தொழில் புகல் யானை நல்குவன் பலவே" பதி. 40-30

(காட்டுத் தீ போலும் சினமாகிய தீயைக் கைவிட்டு வேண்டுந் தொழில்களைச் செய்வதற்கு விருப்பத்தினையுடைய யானைகள் பலவற்றை வழங்குவன்)

எனவும், வரும் இடங்களில் எல்லாம் இவ்வெச்சங்கள் வரிசைப் பொருள் உணர்த்தி வந்துள்ளன. இதுபோன்றே ஐங்குறு நூற்றில்

''சென்றனர் மன்றவென் மகளே
பந்தும் பாவையுங் கழங்குமெமக் கொழித்தே'' ஐங். 377-3

(என் அரும் பெறற் செல்வி பந்தும் பாவையும் கழங்குமாகிய இவற்றை எம்பால் விட்டு வைத்து...... போயினள்) எனவும்,

''கடுவிரன் மந்திக் கல்லா வன்பற
ழுருவரைத் தீந்தே னெடுப்பி யயல
துருகெழு நெடுஞ்சினைப் பாயு நாட'' ஐங். 272-1

(......... ஈக்களை அலைத்து எழுப்பிவிட்டுப் பின் அந்த ஈக்களுக்கு அஞ்சிப் பக்கத்தே உள்ள அச்சம் பொருந்திய மரக்கிளையில் பாயும்) எனவும்,

அகநானூற்றில்

''களிறு தொடூஉக் கடக்குங் கான்யாற்று அத்தம்''
அகம். 137-1

(களிறுகள் தொட்டுப் பார்த்துக் கடந்து செல்லும் காட்டாற் றினையுடைய அச்சுர நெறியில்) எனவும்,

நற்றிணையில்

''.................. மந்தி
கல்லென் சுற்றங் கைகவியாக் குறுகி'' நற். 57-3

(மந்தி கல்லென ஒலிக்கும் தன் சுற்றத்தை அவை ஒலியாவாறு தன் கையால் அமர்த்திவிட்டு அருகிலே சென்று) எனவும்,

'' .... இரையெழுந் தருந்துபு
.... தோடுமடல் ஏறி
... ...
பயிர்தல் ஆனா பைதலங் குருகே'' நற். 338-7

எனவும் வரும் இடங்களிலும் இவ்வெச்சங்கள் வரிசைப் பொருளையே உணர்த்தி வந்துள்ளமை தெளிவு.

6.2 துணை நிகழ்ச்சிப் பொருள்

இரண்டு அல்லது மூன்று நிகழ்ச்சிகள் வரிசையாக நிகழும் போது ஒரு சில இடங்களில் முன்னர் நிகழ்ந்த நிகழ்ச்சி பின்னர் நிகழ்ந்த நிகழ்ச்சிக்கு அடிகோலுவதாக அமையலாம் எடுத்துக்காட்டாக,

வீட்டுக்குப் போய் சாப்பிட்டான்

என்ற வாக்கியத்தில் முதல் நிகழ்ச்சி இரண்டாவது நிகழ்ச்சிக்கு வழி வகுக்கிறது அல்லது துணை நிற்கிறது. இதைக் கருத்தில் கொண்டுதான் ஆர்டன் "leading up to the action of the principal verb" எனக் குறிப்பிடுவார். மேலும் இவ்வாக்கியத்தில் காணப்படும் இரு நிகழ்ச்சிகளையும் ஒரு நிகழ்ச்சியாகக் கொண்டு அது இரண்டாவது வினைச்சொல்லால் காட்டப்படுகிறது என்றும் அதனுடைய ஒரு பகுதியாகவே எச்சத்தால் காட்டப்படும் நிகழ்ச்சி காணப்படுகிறது என்றும் கருதலாம். இதனால்தான் இவற்றைப்பற்றிப் பேசும் போது ஆர்டன் "forming part of or leading upto the action of the main verb" எனக் குறிப்பிடுவார். பழந்தமிழ் இலக்கியங்களில் கால எச்சங்கள் இப்பொருளிலும் ஏராளமான இடங்களில் வந்துள்ளன. எடுத்துக்காட்டாக குறுந்தொகையில்

"நீயளந் தறிவை நின் புரைமை" குறு. 256-6

(நீயே நினது உயர்வினை அளவிட்டறியும் தகுதியுடையை) எனவும், பதிற்றுப்பத்தில்

"துறை நணி மருத மேறித் தெறுமார்
எல்வளை மகளிர் தெள்விளி யிசைப்பின்" பதி. 27-7

(விளங்குகின்ற வளையினையுடைய இள மகளிர் நீர்த்துறைக்கண் நிற்கும் மருத மரத்தின் மேல் ஏறி நெற்கதிர்களை மேயும் புட்களை ஓப்புதற்காகத் தெளிந்த தம் விளிக்குரலை எடுத்து இசைப்பாராயின்) எனவும்,

அகநானூற்றில்

"கவைக்கதிர் இரும்புறங் கதூஉ உண்ட
... ... நெடுமாத் தோகை" அகம. 194-10

(கவைத்த கதிர்களின் கரிய புறத்தினைப் பற்றி உண்ட நீண்ட கரிய மயில்) எனவும்,

ஐங்குறுநூற்றில்

" ... ...வறுமுலை மடாஅ
உண்ணாப் பாவையை யூட்டு வோளே" ஐங். 128-2

(வறிய தன் முலையை (பாவையின்) வாயின்கண் வைத்து உண்ணுமியல்பில்லாத பாவையைப் பாலூட்டுவாள்) எனவும், பதிற்றுப்பத்தில்

"... ... வலனேர் பிரங்கும்
... ... கமஞ்சூன் மாமழை" பதி. 24-27

(வலமாக எழுந்து முழங்கும், சூல் கொண்ட கருமுகிற் கூட்டம்) எனவும் வரும் இடங்கள் பழந்தமிழ், இலக்கியங்களில் பல்வேறு கால எச்சங்களும் துணைநிகழ்ச்சிப் பொருளை உணர்த்தி வருவதைக் காட்டும்.

6.3 காரணப்பொருள்

கால எச்சங்கள் குறை எச்சங்களைப் போன்று காரணப் பொருளிலும் வருதல் உண்டு. பொதுவாகக் குறை எச்சங்களே காரணப்பொருளில் வருவன.

மழை பெய்யக் குளம் நிறைந்தது

போன்ற எடுத்துக்காட்டுக்கள் இதனைக்காட்டும். கால எச்சங் களும் சில இடங்களில் இப்பொருளை உணர்த்தி காரணப் பொருட்டாய்வரும்.

நீ சொல்லித்தான் நான் போனேன்

என்ற வாக்கியத்தில் சொல்லி என்னும் எச்சம் காரணப்பொருட் டாய் வந்துள்ளமையைக் காண்கிறோம். பழந்தமிழ் நூல்களில் பல்வேறு இடங்களில் இதனைக் காணக்கூடியதாக உள்ளது. எடுத்துக்காட்டாக, பதிற்றுப்பத்தில்,

"நனந்தலை வேந்தர் தாரழிந் தலற" பதி. 55-17

(அகன்ற இடத்தையுடைய வேந்தர் நாடோறும் தமது தூசிப் படை கெடுதலால் ஆற்றாது புலம்ப) எனவும், புறநானூற்றில்

"பொறைமலிந்து நிலனெளிய
வந்தோர் பலரே..." புறம். 345-6

(சுமை மிகுவதால் நிலமும் சுளியும்படியாக வந்தவர் பலராவர்). எனவும், ஐங்குறுநூற்றில்

"புதுப்புன லாடி யமர்த்த கண்ணள்" ஐங். 79

(புதிய நீரிலே நெடிது ஆடியமையாலே மாறுபட்ட கண்ணை யுடைய இவள்) எனவும்,

பத்துப்பாட்டில்

"கண்விடு புடையூத் தட்டை கவினழிந்து" பத்து. 6-305

(மூங்கிலின் கணுக்கள் திறக்கப்பட்டு உடைவதனால் முழக்க முண்டாகும்படி தட்டை அழகு அழிகையினாலே) எனவும்,

குறுந்தொகையில்

"...... எஞ்சாத்
தீய்ந்த மராஅத்து..." குறு. 211-3

(எஞ்சி நின்ற வேனிலால் வெம்பிய மராமரத்தினது) எனவும்,

பத்துப்பாட்டில்.

"...... நிலாவிரிபு
பகலுரு வுற்ற இரவு ..." பத்து. 6-548

(நிலாப் பரக்கையினாலே பகலின் வடிவை ஒத்த இராக் காலம்) எனவும் வந்துள்ள இடங்கள் இவ்வெச்சங்கள் காரணப் பொருட்டாய் வந்துள்ளமையை நன்குக் காட்டி நிற்கும்.

6.4 உடனிகழ்ச்சிப் பொருள்

கால எச்சம் காட்டும் பொருள்களில் உடனிகழ்ச்சிப் பொருளும் ஒன்றாகும். எச்சத்தால் காட்டப்படும் செயலும்,

அது கொண்டு முடியும் வினையால் காட்டப்படும் செயலும் உடனிகழுமாயின் அதனை உடனிகழ்ச்சிப் பொருள் எனக் கருதலாம்.

அவர்கள் ஆடிப் பாடினர்

போன்ற எடுத்துக்காட்டுக்கள் இப்பொருளினைக் காட்டும். இங்கு ஆடுதலும், பாடுதலும் ஒருங்கே நிகழ்கின்றன. இத்தகைய பல எடுத்துக்காட்டுக்களை பழந்தமிழ் இலக்கியங்களிலும் காணமுடியும். எடுத்துக்காட்டாக, அகநானூற்றில்,

"...... ஆர்த்துவரல் அருவியில்" அகம். 138-8

(ஆரவாரித்து வருதலையுடைய அருவி போல) எனவும்,

பத்துப்பாட்டில்

"சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடிச்
சூரர மகளிர் ஆடுஞ் சோலை" பத்து. 1-40

(சீர்மை விளங்குகின்ற மலையிடமெல்லாம் எதிரொலி செய்யுமாறு பாடி கொடுமையுடைய தெய்வமகளிர்கள் ஆடாநிற்குஞ் சோலை) எனவும்,

பதிற்றுப்பத்தில்

"கருங்கட் பேய்மகள் கைபுடையூஉ நடுங்க"
பதி. 30-35

(பெரிய கண்களையுடைய பேய்மகள் தீண்டுதற் கஞ்சிக் கைகளைப் புடைத்துக்கொண்டு நடுங்க) எனவும்,

அகநானூற்றில்

"......நிலங் கிளையா
நாணி நின்றோள்......" அகம். 16-15

(நிலத்தைக் கால் விரலாற் கீறி நாணி நின்ற அவள்) எனவும்,
நற்றிணையில்

"கையூன்றுபு இழிதரு களிறு..." நற். 144-12

(தனது துதிக்கையை ஊன்றி இறங்குகின்ற களிறு) எனவும் வரும் இடங்களில் எல்லாம் கால எச்சங்கள் உடனிகழ்ச்சிப் பொருளை உணர்த்தி நிற்கின்றன.

6.5 நிலைமைப்பொருள்

கால எச்சங்கள் நிலைமைப்பொருள் காட்டி நிற்றலும் உண்டு. அதாவது கால எச்சங்கள் கொண்டு முடியும் வினைகள் நடைபெறும்போது அவ்வினையைச் செய்வோன் போன்றவர்கள் என்ன நிலையில் இருந்தனர் என்பதைக் காட்டுவதே நிலைமைப்பொருள்.

அவன் மாலையணிந்து வந்தான்
அவள் பொட்டு இட்டு வந்தாள்

போன்றவற்றில் வரும் அணிந்து, இட்டு ஆகிய எச்சங்கள் இப்பொருளில் வரக் காண்கிறோம். பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்திலும் இப்பொருளில் கால எச்சங்கள் வந்துள்ளன. எடுத்துக்காட்டாக, குறுந்தொகையில்

''இழையணிந் தியல்வருங் கொடுஞ்சி
நெடுந்தேர்'' குறு. 345-1

(பொற்படைகளால் ஒப்பனை செய்யப்பட்டு இயங்குதலைச் செய்யும் கொடுஞ்சியையுடைய நெடிய தேரினை) எனவும், பதிற்றுப்பத்தில்

''உவலை சூடி யுருத்துவரு மலிர்நிறை'' பதி. 28-12

(தழைகளைச் சுமந்து சினமுற்று வருவது போல ஓலமிட்டு மிக்குவரும் பேரியாற்று வெள்ளம்) எனவும்,

பத்துப்பாட்டில்

'' ... ... இழை புனையூஉ
நன்னெடுங் கூந்தல் ... ... பத்து. 6-552

(அணிகளை அணிந்து நன்றாகிய கூந்தல்) எனவும், கலித்தொகையில்

"... ... அடி தளரா
... ... ஒருத்தி வந்து ... கலி. 90-9

(ஒருத்தி அடி தளர்ந்து வந்து) எனவும்,

அகநானூற்றில்

"புறந்தாழ்பு இருளிய பிறங்குகுரல் ஐம்பால்"
அகம். 126-20

(முதுகில் தாழ்ந்து இருண்டு விளங்கும் கொத்தாய் ஐந்து பகுப்புடைய கூந்தலையும்) எனவும் வருமிடங்கள் கால எச்சங்கள் நிலைமைப்பொருளை உணர்த்தும் பண்பினைக் காட்டும்.

6.6 தாக்கப்பொருள்

கால எச்சங்கள் தாக்கப்பொருளிலும் வருதல் காணலாம். பொதுவாக இன்றைய தமிழில் குறை எச்சங்களே தாக்கப் பொருளில் வருகின்றன. ஒரு செய்கையின் தாக்கம் இன்னொரு செய்கையில் காணப்படுமாயின் அப்பொருளையே தாக்கப் பொருள் என்கிறோம்.

அவன் விழத் தள்ளினேன்

என்பதில் இப்பொருளைக் காண்கிறோம். பழந்தமிழில் கால எச்சங்களும் இப்பொருள் தந்துநிற்கக் காண்கிறோம். இன்றைய தமிழிலும் எதிர்மறைக் கால எச்சங்கள் இப்பொருள் காட்டிநிற்கின்றன.

காற்று புகாமல் அடை

போன்றவை இப்பொருள் காட்டும். பழந்தமிழ் இலக்கியங்களில் கால எச்சங்கள் இப்பொருளில் வந்துள்ளமையைக் கீழ்வரும் எடுத்துக்காட்டுக்களில் காணலாம். பதிற்றுப்பத்தில்,

"கோடுறழ்ந் தெடுத்த கொடுங்க ணிஞ்சி" பதி. 16-1

(மலைச்சிகரங்களுடன் மாறாட எடுத்த வளைந்த இடத்தையுடைய புற மதில்) எனவும்,

ஐங்குறுநூற்றில்

"... .. நீரலைக் கலங்கி
நின்னொடு தண்புன லாடுதும்" ஐங். 77-2

(நீர் அலையினாலே கலங்கும்படி குளிர்ந்த நீரிலே விளையாட்டயரா நிற்பேம்) எனவும்,

பதிற்றுப்பத்தில்

"நிலம் பொறை யொராஅநீர் ஞெமரவந் தீண்டி"
பதி. 72-9

(நிலமகள் சுமை நீங்க நீர் பரந்து வந்து பெருகுதலால்), எனவும்,

"... கவரு நெய்வழி புராலின்
பாண்டில் விளக்கின் பரூஉச்சுட ரழல" பதி. 47-5

(எரிக்கப்படும் நெய் வழியுமாறு பெய்து நிரப்புதலால் கால் விளக்கினது பருத்த திரியானது பேரொளி காட்டி யெரிய) எனவும் வரும் இடங்கள் இப்பண்பினைக் காட்டும்.

6.7 நோக்கப்பொருள்

இன்றைய தமிழில் குறை எச்சங்களே நோக்கப் பொருளையும் உணர்த்துகின்றன.

அவனைக் காணச் சென்றேன்

என்பதில் காண என்பது நோக்கப்பொருள் உணர்த்தும் எச்சமே. பழந்தமிழில் குறை எச்சங்கள் மட்டுமின்றிக் கால எச்சங்களும் இப்பொருளை உணர்த்தி நிற்றலைக் காண்கிறோம். எடுத்துக்காட்டாக, சிலம்பில்

"பொலந்தெரி மாக்கள் கலங்கஞ ரொழித்தாங்கு
இலங்குகொடி யெடுக்கும் நலங்கிளர் வீதி" சிலம்பு. 14-203

(பொன்னின் வேற்றுமையைப் பகுத்தறியும் பொன்வாணிகர், கொள்வோர் எவ்விடத்து எப்பொன் உளதென்று ஐயுறுந் துன்பத்தை ஒழிப்ப, அவ்விடங்களில் இவ்விடத்து இப்பொன் உளதென விளக்கக் கொடியெடுக்கும் நன்மை மிக்க பொற் கடைத் தெரு) எனவும்,

பரிபாடலில்

"அயலய லணிநோக்கி ஆங்காங்கு வருபவர்" பரி. 20-32

(பிறர் பிறர் அணிந்துள்ள ஆடை அணிகலன்களை பார்க்கும் பொருட்டு அவ்வவ் விடங்களிலே சுற்றி வருபவர்கள்) எனவும்,

பதிற்றுப்பத்தில்

"......விசும்பு துடையூ
வான்றோய் வெல் கொடி .." பதி. 44-1

(வானத்தைத் தடவுதற்கென வானளாவ உயர்ந்த வெற்றிக் கொடி) எனவும்,

நற்றிணையில்

"சேரி சேரா வருவோர்க்கு ..." நற். 342-4
(சேரியைச் சார வருபவர்க்கு) எனவும்,

புறநானூற்றில்

"...நிலங்கவர்பு
விரைந்துவந்து சமந்தாங்கிய
வல்வேன் மலையன்..." புறம். 125-12

(போர்க்களத்தைக் கைக்கொள்ள வேண்டி விரைந்து வந்து போரைத் தடுத்த வலிய வேலினையுடைய மலையன்) எனவும் வரும் இடங்களில் பல்வேறு கால எச்சங்களும் நோக்கப் பொருளை உணர்த்தி நிற்றல் காண்க.

6.8 தலைமை வினை

துணைவினைகளின் நிலைக்களனாக, அதாவது தலைமை வினையாகவும் கால எச்சங்கள் வருகின்றன.

வந்து விட்டான்
வந்திருந்தான்

போன்ற இடங்களில் இப்பண்பினைக் காணலாம். பழந்தமிழ் இலக்கியங்களில் கால எச்சங்கள் தலைமை வினையாக வரும் பண்பினைக் காணமுடிகிறது. செய்து வாய்பாட்டுக் கால எச்சமே பெரும்பான்மையும் தலைமை வினையாக வரினும், -ф ஈற்றுக் கால எச்சமும் ஒரு சில இடங்களில் தலைமை

வினையாக வந்திருத்தலைக் காண முடிகிறது. கண்டருளி (அகம். 98-26), களைந்தருள (நற். 312-4), நயந்தருளி (புறம். 208-3) பாய்ந்தருளி (கலி. 39-3), பாய்ந்திட்ட (அகம். 227-8), புனைந் திடுமின் (பத்து. 10-393), அமைந்திரா (அகம். 219-11), காத் திருந்த (நற். 153-10), பார்த்திருக்கும் (குறு. 283-7) கரைந்தீமே (ஐங் 391-6), சென்றீ (அகம். 46-16) அயர்ந்தொழிவாய் (மணி. 21-2112), முகந்துகொண்டு (அகம். 328-107), உக்குவிடும் (கலி. 138-17), நீங்கிடில் (மணி. 16-97), வாரிக்கொள்ளா (பத்து. 10-572) எண்ணிக் கொண்டற்று (குறள். 22), மாறிவிடின் (கலி. 61-24) காட்டிவிடும் (குறள். 28) ஆகியவை பழந்தமிழ் நூல் களில் காணக்கிடக்கும் ஒரு சில எடுத்துக்காட்டுக்கள். இவை 175க்கும் மேலான இடங்களில் பழந்தமிழ் இலக்கியங்களில் வந்துள்ளன.

மேலும் செய்யா வாய்பாட்டு எச்சமும், செய்பு வாய் பாட்டு எச்சமும் ஓரொரு இடங்களில் தலைமை வினையாக வரக் காண்கிறோம்.

புறநானூற்றில் படாஅச் செலீஇயர் (புறம். 24-26) என வரும் தொடரில் படாஅ என்னும் முழுவினை செலீஇயர் என் னும் துணைவினையைக் கொண்டு வந்துள்ளது. இன்றைய தமிழில்

செத்துப் போனான்

என்பதில் வரும் 'போ' என்னும் துணைவினையைப் போன்று 'செல்' என்னும் துணைவினை இங்கு வந்திருக்கக் காண் கிறோம். உரையாசிரியரும் இதற்கு "பட்டுப்போவதாக" என்று உரை எழுதுதல் குறிப்பிடத்தக்கது.

இதுபோன்றே நற்றிணையில்

'முதிர்பு இருந்த' நற். 368-5

என வரும் இடத்தில் செய்பு வாய்பாட்டு எச்சம் தலைமை வினையாக வந்துள்ளமையைக் காணலாம். இதற்கு உரை எழு தும் ஆசிரியர் "முதிர்ந்திருந்த" என எழுதுதல் காண்க.

6.9 காலம்

கால எச்சங்கள் பொதுவாக இறந்தகாலம் காட்டும் பல் வேறு இடை நிலைகளைக் கொண்டிருப்பினும் இறந்தகாலம் அல்லாத பிற காலங்களையும் காட்டக் கூடியது.

அவள் மாலை அணிந்து வந்தாள்

என்ற தொடரில் இறந்தகாலம் தோன்றுகிறது.

அவள் ஆடிப் பாடினாள்

என்ற தொடரில் 'ஆடி' என்பதில் கால எச்சம் காட்டும் தொழிலும், அது கொண்டு முடியும் வினை (பாடினாள்) காட்டும் தொழிலும் ஒரே நேரத்தில் நடைபெறுகின்றன. இந்நிலையில் இவ்வெச்சங்கள் நிகழ்காலம் காட்டுவனவாகக் கருதலாம். நச்சினார்க்கினியர் (241) கொடி ஆடித் தோன்றும் என்பதைத் தந்து "தோற்றமும் ஆட்டமும் உடன் நிகழ்தலின், செய்து என்பது நிகழ்காலத்திற்கும் உரித்து"... என எழுதுதல் காண்க.

எதிர்காலத்திலும் இவ்வெச்சங்கள் பயன்படக் காண்கிறோம்.

"சாந்து புலர்பு வண்ணம் நீவி" பதி. 50-16

"... ... கானம் வெம்பி
விசும்பு கண் அழிய வேனில் நீடிக்
கயங்கண் அற்ற கல்லோங்கு வைப்பின்"

அகம். 189-1,3

போன்ற இடங்களில் புலர்பு, வெம்பி ஆகிய எச்சங்கள் எதிர் காலம் காட்டுகின்றன. இவற்றிற்கு உரை எழுதும் உரையாசிரியர்கள் "சாந்து புலர, வண்ணங்கள் நீங்க" எனவும் "கானம் வெதும்ப" எனவும் எழுதுதல் இங்குக் குறிப்பிடத் தக்கது.

6.10 பொருளும் காலமும்

பொதுவாகக் கால எச்சங்கள் முன்னர் குறிப்பிட்டபடி இறந்த காலத்தைக் காட்டினும் அவை காட்டும் காலத்திற்கும் அவை தரும் பொருள்கட்கும் இடையே ஒருவகையான தொடர்பு இருப்பதைக் காணலாம்.

வரிசைப் பொருள், துணை நிகழ்ச்சிப் பொருள், காரணப் பொருள் போன்றவற்றில் வரும் கால எச்சம் இறந்த காலத்தையே (காண்க. பட்டியல்-2,5) காட்டி நிற்கும். எந்நிலையிலும் இது வேறு காலங்கள் காட்டுவதில்லை.

அவன் உண்டு வந்தான்
அவள் கண்டு களித்தாள்

போன்றவற்றில் இறந்தகாலத்தில் வருவது காணத்தக்கது.

இதுபோன்றே

அவன் உண்டு வருவான்
அவள் கண்டு களிப்பாள்

போன்றவற்றிலும் ஒப்புமை இறந்த காலத்தைக் காண்கிறோம். உண்ட பின்னரே வருதல் தொழில் நடைபெறுகிறது. ஒன்றன் பின் ஒன்றாக வரிசையாகத் தொழில் நடப்பதைக் குறிக்கும் நிலையில் வினையெச்சங்கள் வரும்போது நிச்சயமாகக் கொண்டு முடியும் வினை காட்டும் தொழிலுக்கு முன்னே எச்சம் காட்டும் தொழில் நடைபெற்றாக வேண்டும். இல்லையெனில் இது வரிசைப் பொருளைக் காட்டுவதாக அமையாது. இந்நிலையில் வரிசைப் பொருளில் வரும்போது வினையெச்சம் இறந்தகாலத்தையோ அல்லது ஒப்புமை இறந்த காலத்தையோதான் காட்டியாக வேண்டும்.

இதுபோன்றே கால எச்சங்கள் துணைநிகழ்ச்சிப் பொருளில் வரும்போதும் இறந்த காலத்தைக் காட்டுவனவாக உள்ளன.

அவன் வீட்டுக்குப் போய் உண்டான்
அவன் வீட்டுக்குப் போய் உண்பான்

போன்றவற்றிலும் வினையெச்சங்கள் இறந்தகாலத்தையே காட்டும். ஒரு நிகழ்ச்சி நடைபெறுவதற்கு இன்னொரு நிகழ்ச்சி நடந்தாக வேண்டிய நிலையில் அது முன்னர் நடந்திருத்தல் அவசியம். இந்நிலையில் அந்நிகழ்ச்சியைக் குறிக்கும் கால எச்சம் நிச்சயமாக இறந்த காலத்தையே குறித்தாக வேண்டும்

இதுபோன்றே காரணப்பொருளில் வரும் கால எச்சங்களும் இறந்த காலத்தையே காட்டுவனவாக உள்ளன.

மழைபெய்து குளம் நிறைந்தது
நீ சொல்லித்தான் நான் போவேன்

போன்ற வாக்கியங்களில் கால எச்சங்கள் காரணப்பொருளில் வரக்காணலாம். ஒரு செயலுக்குக் காரணமாக முன்னால் நடக்கும் செயலைக் குறிக்கும் கால எச்சங்கள் இறந்த காலத்தையே காட்டும். காரணமாக அமையும் செயல்கள் யாவும் முன்னால்தான நடக்கவேண்டும் என்றிலை.

நீ நாளை பணம் தருவதால்தான் இன்று நான் வருகிறேன்

போன்றவற்றில் காரணச்செயல் பின்னால் நடக்கலாம். ஆனால் காரணப்பொருள் கால எச்சங்களால் காட்டப்படும் நிலையில் அதில் கூறப்படும் செயல்கள் முன்னர் நடப்பதாகவே அமையும். இந்நிலையில் இவ்வெச்சங்கள் இறந்த காலம் காட்டுவது இயற்கையே ஆகும்.

எனவே இதுகாறும் கூறியவற்றால் வரிசைப்பொருள், துணை நிகழ்ச்சிப்பொருள், காரணப்பொருள் ஆகியவற்றில் கால எச்சங்கள் இறந்த காலத்தையே காட்டி நிற்கும் என்பது தெளிவு.

நிலைமைப் பொருளிலும் இது இறந்த காலத்தையே காட்டும்.

மாலை அணிந்து வந்தாள்
மாலை அணிந்து வருவாள்

போன்றவற்றில் மாலை அணிதல் வருவதற்கு முன்பே நடந்திருக்கக் காண்கிறோம்.

ஆனால் உடனிகழ்ச்சிப் பொருளில் (சித்திரபுத்திரன், 1978: 104-106) கால எச்சங்கள் வரும்போது கால எச்சம் காட்டும் தொழிலும் கொண்டுமுடியும் வினை காட்டும் தொழிலும் ஒரே நேரத்தில் நடப்பனவாகும். எனவே கால எச்சம் நிகழ்காலம் காட்டுவதாகக் கருதலாம்.

அவள் ஆடிப் பாடினாள்
அவள் ஆடிப் பாடுவாள்

போன்றவற்றில் ஆடுதலும் பாடுதலும் ஒரே நேரத்தில் நடைபெறுதல் கண்கூடு. எனவே இதனை நிகழ்காலம் எனக் கருதலாம். உரையாசிரியர்களும் உடனிகழ்ச்சிப் பொருளில் வரும்போது நிகழ்காலம் என்றே குறிப்பிடுகின்றனர் (சேனாவரையர் 228, நச்சினார்க்கினியர், 241).

தாக்கப்பொருளிலும் இவ்வெச்சங்கள் வரும் எனக் கண்டோம். இப்பொருளில் வரும்போது இவை எதிர்காலத்தையே காட்டி நிற்கும்.

அவன் ஓடுபு அடித்தேன்
(அவன் ஓடுமாறு அடித்தேன்)

போன்றவற்றில் இந்நிலையைக் காண்கிறோம். கொண்டு முடியும் வினையின் தொழிலின் தாக்கத்தைக் கால எச்சம் காட்டும் நிலையில் அவை எதிர்காலத்தையே கொண்டிருத்தல் வேண்டும்.

எனவே கால எச்சம் காட்டும் பொருள்களுக்கும் அவை காட்டும் காலத்திற்கும் இடையே ஒருவிதமான தொடர்பு இருக்கக் காண்கிறோம். கால எச்சங்களின் பொருள்களுக் கேற்பவே இவை காட்டும் காலங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன.

வரிசைப்பொருள், துணைநிகழ்ச்சிப்பொருள், காரணப் பொருள், நிலைமைப்பொருள் ஆகியவற்றை இவை தருமாயின் இவை காட்டும் காலம் இறந்தகாலம் என்றும், உடனிகழ்ச்சிப் பொருளாயின் நிகழ்காலம் என்றும், தாக்கப் பொருளாயின் எதிர்காலம் என்றும் நிர்ணயித்து விடலாம். எல்லா கால எச்சங்களிலும் இறந்தகால இடை நிலைகள் இருப்பினும் அவை காட்டும பொருளுக்கேற்ப வெவ்வேறு காலங்களைக் காட்டி நிற்கின்றன.

6.11 கால எச்சமும் எழுவாயும்

கால எச்சங்களும் அவை கொண்டு முடியும் வினையும் ஒரே எழுவாயைக் கொண்டு முடியுமா அல்லது வெவ்வேறு

எழுவாய்களைக் கொண்டு முடியுமா என்பது ஆராய்ச்சிக்குரிய தாகும். பொதுவாகக் கால எச்சங்கள் ஒரே எழுவாயைக் கொண்டு முடியும் என்பது இலக்கணிகள் பலர் கருத்தாகும். இதுபற்றித் தொல்காப்பியர்

''அவற்றுள்
முதல்நிலை மூன்றும் வினைமுதல் முடிபின'' (715)

என்று குறிப்பிடுதல் காணலாம். செய்து, செய்யூ, செய்பு ஆகிய மூன்று வாய்பாட்டு வினையெச்சங்களும் அவைகொண்டு முடியும் வினையின் எழுவாய்களையே தம் எழுவாய்களாய்க் கொண்டு வரும் என்பதே இதன் பொருளாகும்.

இந்நூற்பாவிற்குப் பொருளெழுதப் போந்த சேனாவரையர் ''மேற்சொல்லப்பட்ட பதினைந்து வினையெச்சத்துள், முதற்கணின்ற செய்து, செய்யூ, செய்பு என்னும் மூன்றும் தம் வினைமுதல் வினையான் முடியும்'' எனப் பொருள் எழுதுவார். இதே நிலையினைத்தான் பிற உரையாசிரியர்களிடமும் காணுகிறோம். இதற்கு உதாரணம் தரப்போந்த உரையாசிரியர்

உண்டு வந்தான்
உண்ணூ வந்தான்
உண்குபு வந்தான்
கற்று வல்லனாயினான்
கல்லூ வல்லனாயினான்
கற்புகு வல்லனாயினான்

ஆகியவற்றைத் தருவார். இவ்வகையான எடுத்துக்காட்டுகளையே பிற உரையாசிரியர்களும் தந்து சென்றுள்ளனர்.

பொதுவாக, இத்தகைய வினை எச்சங்கள் கொண்டு முடியும் வினைகளின் வினை முதல்களையே பெருவாரியாகக் கொண்டு முடிதல் காணலாம்.

பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் ஆராயின் இவ்வுண்மை நன்கு விளங்கும். எல்லா வாய்பாட்டுக் கால எச்சங்களும் இந்நிலையிலேயே உள்ளன. எடுத்துக்காட்டாக, செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சம் பதிற்றுப்பத்தில் நானூற்று

இரண்டு இடங்களில் வருவதும், அவற்றுள முன்னூற்று அறுபத்தெட்டு இடங்களில் வினையெச்சமும் அவை கொண்டு முடியும் சொற்களும் ஒரே எழுவாயை எடுத்து வருவதும் முப்பத்து நான்கு இடங்களில் வெவ்வேறு எழுவாய்களை எடுத்து வருவதும் கவனிக்கற் பாலன. இதே நிலையினைத்தான் பிற நூல்களிலும் காணுகிறோம் (காண்க. பட்டியல்-2).

உரையாசிரியர்களும் இந்நிலையை நன்கு உணர்ந்துள்ளனர். இளம்பூரணர், சேனாவரையர் போன்ற உரையாசிரியர்கள் எல்லாம் வேறு வினை கொண்டு முடியும் இடங்களை எடுத்துக் காட்டியிருத்தல் இங்கு நினைவு கூரத்தக்கது.

'வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய'

என்ற நூற்பாவின் கீழ் இப்பண்பினைக் கொண்டு வருவார். இளம்பூரணர் (450).

ஞாயிறு பட்டு வந்தான்
கோழி கூவிப் புலர்ந்தது

ஆகிய உதாரணங்களைத் தருவதும் சேனாவரையர் (230)

"உரற்கால் யானை யொடித்துண் டெஞ்சிய
யாஅவிரி நிழற்றுஞ்சும்" குறு. 232

என்னும் அடிகளை எடுத்துக்காட்டி நிற்பதும் உணரத்தக்கன.

இளையபெருமாள் (1974) தமது கட்டுரையில் இதுபற்றிக் குறிப்பிடுதல் காணத்தக்கது. அவர் இவ்வெச்சங்கள் பிற வினை கொண்டு முடிவதைக் கீழ் வரும் எடுத்துக்காட்டுகளுடன் விளக்குவார்.

"நீ பாசறை மரீஇ நாள் கழியுமோ" பதி. 50
"சான்றோர் பல்கி ... நாடு புலத்தது" புறம். 117
"மறவர் கடந்து புரவி ஊர்ந்த நீ" பதி. 41
"படிவம் ஒடியாது ... வேள்வி வேட்டனை" பதி. 74

மேலும் அவர் இக்கால எச்சங்கள் செயவென் வாய்பாட்டு வினையெச்சங்களாகத் திரிக்கப் படுகின்றன என்றும் காட்டு

வார். இந்நிலையை செய்பு, செய்யூ ஆகிய வாய்பாட்டு எச்சங்களிலும் காணலாம். செய்பு வாய்பாட்டிற்கும் அவர் கீழ்க் கண்ட உதாரணங்களைத் தந்து நிற்பார்.

"தூங்குபு தகைத்த ... ஐயவி"	பதி. 22
"நிலன் அதிர்பு ... பனைமு ழங்கும்"	பதி. 31
"சாந்து புலர்பு ... நீ வதிந்து"	பதி. 50
"நிலங் கவர்பு ... வீரைந்து"	புறம். 125

செய்யூ வாய்பாட்டு வினையெச்சததிலும் இந்நிலையைக் காண லாம். நான்கு இடங்களில் (பத்து. 2, பரி. 2) மட்டுமே இது காணப்படுகிறது. பரிபாடலில்

ஆயத்துடனில்லாள் ஆங்கவன் பின்றொடரூஉத்
தாயத் திறமறியாள் ... ... பரி. 11 - 111

என வரும் அடிகளில் வினையெச்சமும் அது கொண்டு முடியும் வினையும் இரு வேறு எழுவாய்களைக் கொண்டு வருதலும் உரையாசிரியர் "அப்பெண் ... ஆய மகளிரோடே நில்லாமல் அவன் பின்னே தொடரா நிற்ப அவள் அங்ஙனம் செல்லு தற்குக் காரணமான அன்பின் தன்மையை அவள் தாய் அறி யாதவளாய் ..." என்று எழுதுவதும் கவனிக்கற்பாலன.

பழந்தமிழில் கால எச்சங்கள் காட்டும் பொருள், காலம் அவை ஏற்கும் எழுவாய்கள் பற்றிய விரிவான ஆய்வை சங்கத் தமிழ், பகுதி IV (அகத்தியலிங்கம், 1986) என்ற நூலில் காண்க.

பட்டியல் —1

கால எச்ச விகுதிகள்

	-உ		- φ				-ஊ (உ)	-ஆ	-பு	-மை	-மல்
	இ.கா இடை நிலை	-ஆ.த்- எதிர் மறை	-இ-	-ய்-	எதிர் மறை -ஆ-	-இ- அள பெடை	-φ- இ.கா இ.நி	-φ- இ.கா இ.நி	-φ- இ.கா இ.நி	-ஆ- எதிர் மறை	-ஆ- எதிர் மறை
பதி	354	48	132	5	—	36	9	3	30	1	—
ஐங்	189	26	109	31	—	34	3	1	9	—	—
அகம்	975	136	805	61	8	192	13	36	115	7	—
நற்	515	72	502	31	2	95	4	16	53	1	—
குறு	285	45	156	27	3	41	1	4	22	—	—
புறம்	739	115	558	18	2	80	7	23	26	2	—
பத்து	586	71	495	24	—	123	15	16	63	—	1
பரி	234	75	142	19	1	17	5	8	52	1	2
கலி	966	115	405	55	2	64	2	31	123	9	11
குறள்	438	46	203	12	16	16	—	5	—	11	4
சிலம்பு	933	68	579	34	—	39	2	9	7	1	6
மணி	880	90	383	24	—	18	2	5	8	—	4

இ.கா. இ.நி.- இறந்தகால இடைநிலை.

பட்டியல்-2 — உ (செய்து போன்றவை)

	வரிசைப் பொருள்		துணை நிகழ்ச்சிப் பொருள்		உடன் நிகழ்ச்சிப் பொருள்		நிலைமைப் பொருள்		காரணப் பொருள்		தாக்கப் பொருள்		வினையடைப் பொருள்		நோக்கப் பொருள்		தலைமை வினை	வேற்றுமை	கூட்டுவினை
	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ.எ			
பஃறு	31	—	217	—	36	8	33	—	1	22	—	4	2	—	—	—	—	2	—
ஐங்	30	1	117	—	13	—	5	1	2	5	—	1	11	—	—	—	1	3	—
அகம்	103	—	672	—	70	3	69	—	11	12	—	5	15	—	—	—	12	2	3
நற்	39	—	377	5	39	1	18	1	—	11	—	3	5	—	—	—	11	—	2
குறு	25	1	197	—	16	—	12	—	17	11	—	—	1	—	—	—	3	13	1
புறம்	40	—	559	1	45	—	35	1	1	8	—	2	19	—	—	—	14	6	—
பத்து	41	1	422	2	33	—	39	3	2	12	—	2	15	—	—	—	8	2	1
பரி	15	—	170	—	15	5	10	1	—	7	—	3	3	—	—	—	2	1	—
கலி	104	—	598	—	126	2	74	—	—	2	—	1	25	—	1	—	32	1	—
குறள்	29	—	340	—	35	3	1	—	4	3	—	2	10	—	—	—	10	2	—
சிலம்பு	66	—	653	3	96	13	44	2	4	13	—	2	8	—	1	—	23	—	3
மணி	93	—	649	—	58	11	18	5	5	6	—	—	8	—	—	—	22	—	5

ஒ.எ. — ஒரே எழுவாய் இ.எ. — இரு எழுவாய்

பட்டியல்-3 — ϕ (ஆடி, அசைஇ, போய் போன்றவை)

	வரிசைப் பொருள்		துணை நிகழ்ச்சிப் பொருள்		உடன் நிகழ்ச்சிப் பொருள்		நிலைமைப் பொருள்		காரணப் பொருள்		தாக்கப் பொருள்		வினை யடைப் பொருள்		நோக்கப் பொருள்		தலைமை வினை	கூட்டுவினை
	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ எ	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ.எ		
பதி	35	—	78	—	22	4	20	—	3	7	—	3	1	—	—	—	—	—
ஐங்	24	—	90	—	26	—	15	—	7	11	—	1	—	—	—	—	—	—
அகம்	109	—	605	—	146	22	125	—	36	11	—	3	1	—	—	—	—	—
நற்	50	—	465	1	56	2	34	3	10	4	—	1	1	—	—	—	1	—
குறு	24	1	101	—	48	—	25	3	9	9	2	2	—	—	—	—	—	—
புறம்	40	—	465	1	60	3	62	2	12	8	—	3	—	—	—	—	—	—
பத்து	70	1	413	2	60	9	46	10	9	15	—	—	—	—	2	—	3	2
பரி	18	—	103	1	20	4	14	—	6	7	—	—	—	—	4	—	1	—
கலி	78	—	201	—	118	—	95	—	14	7	—	2	—	—	—	—	9	—
குறள்	40	—	113	—	36	—	14	—	3	3	—	4	2	—	—	—	16	—
சிலம்பு	57	—	421	2	96	14	42	—	1	12	—	2	3	—	—	—	1	1
மணி	38	—	327	—	32	4	5	3	4	7	—	2	—	—	—	—	2	1

பட்டியல் — 4 — ஊ (உ)

	வரிசைப் பொருள்		துணை நிகழ்ச்சிப் பொருள்		உடன் நிகழ்ச்சிப் பொருள்		நிலைமைப் பொருள்		காரணப் பொருள்		தாக்கப் பொருள்		வினையடைப் பொருள்		நோக்கப் பொருள்		தொழிற் பெயர்
	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ.எ	
பதி	1	—	3	—	4	—	—	—	—	—	—	—	—	—	1	...	...
ஐங்	—	—	2	—	1	—	—	—	—	—	—	—	—	—	—	...	...
அகம்	5	—	4	—	3	—	—	1	—	—	—	—	—	—	—	...	...
நற்	—	—	3	—	1	—	—	—	—	—	—	—	—	—	—	...	...
குறு	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	...	1
புறம்	1	—	4	1	1	—	—	—	—	—	—	—	—	—	—	...	...
பத்து	1	—	8	—	3	1	—	1	—	1	—	—	—	—	—	...	...
பரி	—	—	—	—	3	2	—	—	—	—	—	—	—	—	—	...	...
கலி	—	—	2	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	...	...
குறள்	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	...	...
சிலம்பு	1	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	...	1
மணி	1	—	1	—	—	—	...	—	—	—	—	—	—	—	...	...	...

பட்டியல்-5 —ஆ (செய்யா உடன்பாட்டு எச்சம்)

	வரிசைப் பொருள்		துணை நிகழ்ச்சிப் பொருள்		உடன் நிகழ்ச்சிப் பொருள்		நிலைமைப் பொருள்		காரணப் பொருள்		தாக்கப் பொருள்		வினை யடைப் பொருள்		நோக்கப் பொருள்		தலைமை வினை
	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ.எ	
பதி	—	—	1	—	—	—	1	—	—	—	—	1	—	—	—	—	—
ஐங்	—	—	1	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—
அகம்	6	—	18	—	11	—	—	—	—	1	—	—	—	—	—	—	—
நற்	2	—	9	—	2	—	—	—	—	—	...	2	—	—	1	—	—
குறு	2	—	—	—	—	—	1	—	—	1	—	...	—	—	—	—	—
புறம்	4	—	13	—	5	—	—	—	—	—	—	—	—	—	—	—	1
பத்து	3	—	—	—	11	—	2	—	—	—	—	—	—	—	—	—	—
பரி	—	—	7	—	1	—	—	—	—	—	—	—	—	—	—	—	—
கலி	12	—	5	—	12	—	2	—	—	—	—	—	—	—	—	—	—
குறள்	—	—	2	—	3	—	—	—	—	—	—	—	—	—	—	—	—
சிலம்பு	3	—	6	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—
மணி	—	—	4	—	1	—	—	—	—	—	—	—	—	—	—	—	—

பட்டியல்-6

— ௪

	வரிசைப் பொருள்		துணை நிகழ்ச்சிப் பொருள்		உடன் நிகழ்ச்சிப் பொருள்		நிலைமைப் பொருள்		காரணப் பொருள்		தாக்கப் பொருள்		வினையடைப் பொருள்		நோக்கப் பொருள்		தலைமை வினை	தொழிற் பெயர்
	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ.எ	ஒ.எ	இ.எ		
பதி	1	—	6	—	7	1	3	...	1	...	...	5	—	—	...	...	-	6
பத்து	2	—	3	—	-	...	2	...	—	...	...	1	...	...	...	...	—	1
அகம்	12	—	69	—	14	2	11	...	...	2		1	1	—	...	...	...	3
நற்	1	—	37	—	—	4	4	...	...	1	...	2	...	—	...	...	1	3
குறு	3	—	19	—	4	...	...	...	...	3	—	1	1	...	...	...	...	1
புறம்	—	—	22	—	—	...	2	—	...	...	...	...	1	...	1	...	—	—
பத்து	2	—	55	—	1	1	2	1	...	1	...	...	...	...	...	...	...	—
பரி	3	—	32	—	3	...	...	...	—	1	...	6	2	...	...	...	—	5
கலி	—	—	68	—	36	...	9	...	—	—	...	...	9	...	...	...	...	1
குறள்	—	—	—	—	—	...	...	...	—	...	...	—	...	...	...	...	—	—
சிலம்பு	—	—	4	—	1	...	—	...	...	...	—	1	...	...	1	4	—	—
மணி	—	—	7	—	—	...	...	...	—	...	...	1	—	...	...	...	—	—

துணைநூல்கள்

அகத்தியலிங்கம், ச. 1972. "வினையெச்சம் பற்றித் தொல்காப்பியர்," தொல்காப்பிய மொழியியல், அண்ணாமலைநகர்.

———— 1982. சொல்லியல்-2 வினையியல் -1, அனைத்திந்திய மொழியியற் கழகம், அண்ணாமலைநகர்.

———— 1983. சங்கத்தமிழ், பகுதி-1, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர்.

———— 1983. சங்கத்தமிழ் பகுதி-2, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர்.

———— 1984. சங்கத்தமிழ் பகுதி-3, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர்.

———— 1985. தொல்காப்பியச் சிந்தனைகள் - 1, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர்.

———— 1985, 1986. "பழந்தமிழில் கால எச்சங்கள்".

இசரயேல், மோ. 1965. 'துணை வினைகள், தென்மொழி'

———— 1976. இலக்கண ஆய்வு - வினைச்சொல், மதுரை பப்ளிஷிங் ஹவுஸ், மதுரை.

இளையபெருமாள், மா. 1974. "சங்க இலக்கியங்களில் வினையெச்சத் திரிபுகள்" இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், ஆறாவது கருத்தரங்கு, ஆய்வுக்கோவை, பாண்டிச்சேரி.

சண்முகம், செ.வை. 1978, "தொல்காப்பியரின் சொல்லியல் கோட்பாடு" மொழியியல் - 2.1.

——— 1984. சொல்லிலக்கணக் கோட்பாடு, அனைத்திந்தியத் தமிழ்மொழியியற் கழகம், அண்ணாமலைநகர்.

மாதையன், பெ. 1978. 'வினையெச்ச வாய்பாடுகள்' மொழியியல் - 2.2.

——— 1978. 'வினையெச்சங்களில் காலம்' இந்தியப் பல்கலைத் தமிழாசிரியர் மன்றம், பத்தாவது கருத்தரங்கு, ஆய்வுக் கோவை, தொகுதி - 2.

Agesthialingom. S, 1968. "On verbal participles in Tamil,' *Indian Linguistics - Vol.* 52, Deccan college, poona.

——— 1970. "On vinai-y-eccam", *Seminar on Tolkappiyam*, Annamalai University, Annamalai Nagar.

Andronov, M. 1959. "On the uses of participles and participal nouns in Tamil" *Tamil culture-VIII*, Madras.

——— 1969. *The standard grammar of modern and classical Tamil*, New century Book House, Pvt. Ltd., Madras.

Annamalai, E. 1968. *The so-called adverbs in Tamil*, M. A. Dissertation, Dept. of Linguistics, University of chicago.

Balasubramaniyan, K. 1981. *A descriptive grammar of Tolkappiyam*, Ph.D. Dissertation, Dept. of Lingustics, Annamalai University, Annamalai Nagar.

Chithiraputhira pillai, H. 1983. 'Historical study of verbal suffixes from Early to Middle Tamil', Ph. D. Dissertation, Dept. of Linguistics, Annamalai University, Annamalai Nagar.

Kamatchinathan, A. 1964. *Grammatical study of Natṟṟinai with Translation, Translation and Index*, Ph.D. Dissertation, University of Kerala, Trivandrum.

Shanmugam, S.V. 1972. "Compound verbal participles in Tamil," - *An insight* into Tamilology, Comibatore.

Sundaram, R.M. 1967. *Grammatical study of pattuppa:ṭṭu with Index and Translation*, Ph.D. Dissertation, University of Kerala, Trivandrum.

Venugopal, S. 1984. *The syntactic study of the various verbal participles in Tamil*, Ph.D. Dissertation, Dept. of Linguistics, Annamalai University.

மொழியியல் 9. 3 & 4 (1986)

திராவிட மொழிகளின் கால அட்டவணை: ஒரு புள்ளியியல் - அகராதி ரீதியான ஆய்வு

தெ.மீ. காமேசுவரி
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

வரலாற்று மொழியியல் கால அட்டவணை மூலம் காலங்களைக் கணிப்பது, வரலாற்று நிகழ்ச்சிகளை தொடர்பு படுத்தி காலங்களை கணிப்பது என்று இரு முறைகள் உள்ளன. இரண்டாவதாக கூறப்பட்ட முறை எத்தகைய கால அட்டவணையையும் தருவதில்லை; அது ஒப்பீட்டு முறையைப் போல் எந்த நிகழ்ச்சி முன்னால் நடந்தது, எந்த நிகழ்ச்சி பின்னால் நடந்தது என்றுரைக்கிறது. இதற்கு தமிழில் இரண்டு எடுத்துக்காட்டுகள் காணக்கிடைக்கின்றன. முதலாவது முதலெழுத்து *ச-வின் இழப்பும் அண்ண விதியும் (*க > ச) உள்ளன. அண்ணவிதியின் காரணமாக முதலெழுத்து ச-வின் இழப்பு ஏற்படவில்லை என்ற காரணத்தினால், ச-வின் இழப்பு அண்ண விதி முதலாவதாக வருகிறது என்பதை அறிய ஒப்பீட்டு முறை உதவுகிறது. அதே சமயம் முதலில் கூறப்பட்ட கால அட்டவணை முறை இரு நிகழ்ச்சிகளுக்கு இடைப்பட்ட நேரத்தைக் கணிக்க உதவுகிறது.

சொற்கோவைப் புள்ளியியல்

க்ளோட்டோ க்ரோனாலஜி என்னும் புதுமுறை ஓர் அளவிற்கு சரியாக இருக்கக்கூடிய கால அளவை தருகிறது. வேறு வகையில் கூறினால் தோராயமான கால அளவை இம்முறை தருகிறது. மோரிஸ் ஸ்வதேஷ் கருத்துப்படி மொழியியல் தொடர்புகளால் காண்பிக்கப்பட்ட இனத் தொடர்புகளின் கால பரிமாணமாக இம்முறை உள்ளது. இம்முறை இக்கட்டுரையில் தமிழ், மலையாளம், கன்னடம், துளு, தெலுங்கு ஆகிய திராவிட மொழிகளில் பயன்படுத்தப் பட்டுள்ளது. இம்முறைகளை பயன்படுத்துவதால் நிகழ்ச்சிகள் நடந்த காலத்தை ஓரளவிற்கு சரியாகக் கணிக்க முடிகிறது. நம்முடைய முக்கிய நோக்கம் ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழி பிரியும் காலத்தைக் கணிப்பதேயாம். இக்காலத்தை மேற்கூறிய ஐந்து மொழிகளை தற்போதைய நிலையை ஒப்பிட்டு பார்ப்பதன்மூலம் அறியலாம். இவ்வாறு காலத்தை கணிக்கும் முறை, நம்பகமான முறையாகும்.

க்ளோட்டோ க்ரோனாலஜி என்று கூறப்படும் இம்முறையானது மூன்று அடிப்படை 'மாறி' களை கொண்டுள்ளது. அவைகளாவன தக்கவைத்துக்கொள்ளும் தன்மை, கால அளவு, பரிசோதனை (வரிசை) அட்டவணையின் பகுதி என்பன. அகராதியோடு தொடர்புறும் இம்முறைக்கு 'அடிப்படை' என்று பெயர். இவ்வடிப்படை அகராதியில் இருக்கும் ஒவ்வொரு பொருளுக்கும் ஒப்பிடப்படும் மொழியில் உள்ள இணையான பொருள் தேர்ந்தெடுக்கப்பெறுகிறது. இவ்வாறு அகராதியிலுள்ள விஷயங்கள் இடமாற்றம் செய்யப்படும் விகிதத்தை கணக்கிடுவது சாத்தியமா என்பது கண்டுபிடிக்கப்படுகிறது. அதேபோல் நமக்கு இரு மொழிகளில் தக்கவைத்துக் கொள்ளும் சதவிகிதத்தை பற்றித் தெரிந்தால் அவ்வாறு தக்கவைத்துக் கொள்வதற்கு எடுத்துக் கொண்ட காலத்தை இம்முறையினால் அறியலாம். மறுபடியும் பழையவற்றை நோக்குங்கால் ஒரு சூத்திரம் நமக்குக் கிடைக்கிறது. இச்சூத்திரத்தில் இரண்டு வகையான சாத்தியங்கள் உள்ளன. நாம் ஒரு மொழியின் இரு நிலைகளை ஒப்பிடும் போது ஒரே நேர் மரபுவழி சார்ந்த பிரச்சினைகளில் குறிப்பிட்ட கால அளவு நமக்குக் கிடைக்கிறது.

இந்த கால அளவை நமக்குத் தெரிந்த கால அட்டவணையின் மூலம் பரிசோதிக்கலாம். அத்தகைய ஒரு சாத்தியத்தில் தக்க வைத்துக்கொள்ளும் சதவிகிதத்தின் கால சதவிகிதத்தை அறியலாம். அதன் மூலம் கால அளவையும் பரிசோதனை அட்டவணையில் உள்ள இணையான பொருள்களின் ஒரு பகுதியையும் அறியலாம். ஓராயிரம் ஆண்டு காலத்திற்கு தக்கவைத்துக் கொள்ளும் விகிதாசாரத்தை நாம் கண்டு பிடிக்க வேண்டும். ஒரு மொழியிலிருந்து தோன்றும் இரண்டு மொழிகளை ஒப்பிடும் போது நாம் இதை பிரிவினையின் பிரச்சினையாக அல்லது நடைமுறையில் உள்ள சிக்கலாக கருதுகிறோம். கால ஆழமுள்ள அறிவின் கூடுதலான இம்மொழி' மொழிக் குடும்பத்தில் உப பகுதிகள் ஏற்பட வழி வகுக்கிறது. இது வரை கிடைத்த முடிவுகள் தொல்பொருள் ஆராய்ச்சி, பண்பாட்டு வரலாறு, இனங்களியல் ஏற்படுத்திய தடயங்களுடன் பொருந்துகிறது.

ஆராய்ச்சி முறையியல்

மொழியியல் காலக் கணிப்பு முறையில் பரிசோதனை விவாதத்திற்குரிய பொருட்குழுவிலிருந்து நூறு பொருட்கள பயன்படுத்தப்படுகிறது. இதற்கு அடிப்படை சொல்லகராதி என்று பெயர். இந்தக் குழுப்பொருட்கள் சுலபமான ஆங்கில மொழியில் விளக்கக் கூடியவை. பெயர்க்கப்படும் மொழியில் உள்ள சொற்பொருளியலுக்கு கட்டுப்படாத பொருள்களிடம் எவையெவை எதிர்பார்க்கப்படுகிறது என்பன புரிந்து கொள்ளப்பட வேண்டும். எடுத்துக்காட்டிற்கு பாதம் என்ற சொல் உடலின் ஒரு பகுதியை குறிக்கிறதே தவிர அது கணித அளவை (அடி)யை குறிக்கவில்லை. ஒவ்வொரு பரிசோதனை பொருளுக்கும் (சொல்) அன்றாட வாழ்க்கையில் உள்ள இணையான பொருளுடைய சொல் குறிக்கப்படவேண்டும். மேற்கூறிய உதாரணத்தை இதற்கு எடுத்துக்காட்டாக கொள்ளலாம். மேலும் தலை என்ற தமிழ் சொல்லுக்கு இணையாக மலையாளம், கன்னடம், துளு, தெலுங்கு ஆகியமொழிகளில் தலா, தலெ, தரெ, தலா என்ற சொற்கள் உண்டு. அகராதியில் உள்ள ஒவ்வொரு பொருளுக்கும் இணையான ஒரு சொல் ஒவ்வொரு மொழியி

லிருந்தும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. பொருள்களுக்கு சொற்களை தேர்ந்தெடுக்கும்போது மூன்று அடிப்படை காரணிகளாக சொற்களின்!அடுக்கு, விரைவெண் பொதுத்தன்மை, வேறு சொற்களை பயன்படுத்துவதை எதிர்க்கும் சக்தி' ஆகியன அமையும். அனைத்து மொழிகளுக்குமுள்ள சொல் வரிசைகள் ஓரே இனமாக அல்லது மாற்று இனமாக உள்ளவைகளுக்கு இணையாக அமையும். எந்த மொழியிலும் உள்ள இனச் சொற்கள் அம்மொழியோடு தொடர்புடைய வேறு மொழியிலிருந்து சுதந்திரமாக பெற்றவையா என அறிதல் அவசியம். இச்சொல் மூல மொழியிலிருந்து பெற்றவையா என்று அறிவது சொற்கோவைப் புள்ளியலுக்கு அவசியம். இவ்வாறு சொற்களை கடன் வாங்குதல், அது ஒரே மொழிக் குடும்பத்தில் உள்ள இன்னொரு மொழியிடமிருந்து பெற்றாலோ அல்லது வேறு ஒரு மொழிக் குடும்பத்திலுள்ள மொழியிடமிருந்து பெற்றாலோ அது வேற்றினத்தைச் சார்ந்ததாக கருதப்படும். தலை என்ற பொருளுக்கு அனைத்து மொழியிலு (திராவிட) முள்ள சொற்கள் ஓரினமாகவும் (கூடுதல்) நாக்கு என்ற பொருளுக்கு தெலுங்கில் உள்ள சொல் (கழித்தல்) வேற்றினமாகவும் கருதப்படுகிறது. ஓரினச்சொற்கள் யாவும் கணக்கிடப்பட்டு அவற்றின் சதவீதம், மொத்த ஓரின மாற்றின ஜோடிச் சொற்களை கணக்கில் வைத்து கணக்கிடப்படுகிறது. பரிசோதனைப்பொருட்கள் அட்டவணையில் உள்ள பொருள்கள் அனைத்தையுமோ அல்லது மொழிகளில் கிடைத்திருக்கும் அனைத்து பொருள்களையோ, மொத்த பொருள்கள் என்று கருதப்படுகிறது. மலையாளம், கன்னடம், துளு, தெலுங்கு ஆகிய மொழிகளை தமிழோடு ஒப்பிடும் போது தமிழில் கிடைத்திருக்கும் மொத்தப் பொருட்களின் எண்ணிக்கை தொண்ணூறாகவும் இவற்றில் ஓரினச்சொற்கள் மலையாளத்தில் அறுபத்தைந்தாகவும் கன்னடத்தில் நாற்பத்தியொன்பதாகவும் (49) துளுவில் நாற்பத்தியெட்டாகவும் (48) தெலுங்கில் முப்பத்தியெட்டாகவும் (38) பொருள்கள் உள்ளன. இவற்றின் சதவீதம் 72. 2%, 54. 4%, 53.3%, 42. 2% என முறையே அமைந்துள்ளது. கீழ்க்காணும் அட்டவணையில் திராவிட மொழியிலுள்ள சதவீதம் ஜோடியாகவும் பிரிவினையின் காலம் சாத்தியத்தின் அடிப்படையிலும் அமைந்துள்ளது.

ஐந்து மொழியிலுள்ள புள்ளியியல் - அகராதி முடிவுகளின் எண்ணிக்கை

மொழிகள்	பொ. அட்டவணை யின் தக்க வைத்துக் கொண்ட சதவீதம்	பிரிவினையின் தோராயமான காலம்.
தமிழ்×மலையாளம்	74.4%	1100-1500 (கி.பி)
தமிழ்×கன்னடம்	60.0%	400-1000 கி.பி
தமிழ்×துளு	52.0%	200-800 கி.பி
தமிழ்×தெலுங்கு	42.2%	400 கி.மு-400 கி.பி
மலையாளம்×கன்னடம்	61.1%	500 கி.பி-1100 கி.பி
மலையாளம்×துளு	51.1%	1 கி.பி-800 கி.பி
மலையாளம்×தெலுங்கு	37.8%	800 கி.மு-100 கி.பி
கன்னடம்×துளு	57.6%	300 கி.பி-1000 கி.பி
கன்னடம்×தெலுங்கு	49.9%	300 கி.மு-500 கி.பி
துளு×தெலுங்கு	37.5%	800 கி.மு-1000 கி.பி

திராவிடமொழிகளின் உட்குழு

அகராதி தொகுப்பு முறையை பயன்படுத்துவதன் மூலம் தமிழும் மலையாளமும், கன்னடமும் துளுவும் ஜோடிகள் என் பதனை காண்கிறோம். தெலுங்கு மொழி, தமிழ், மலையாளம், கன்னடம், துளு ஆகிய மொழிகளிடமிருந்து தள்ளி உள்ளது. இம்மொழிகளுக்கிடையேயுள்ள தொடர்பு மேலிருந்து கீழ் வரிசையாக தமிழ், மலையாளம், துளு, தெலுங்கு என்று குறிக்கப்பெறுகிறது. ஸ்வதேஷைப் பின்பற்றி திராவிடமொழியி லுள்ள உட்குழுப் பகுப்பு மொழியியல் இடைவெளியின் வாயி லாக ஏற்படுத்தப்படுகிறது. மொழியியல் இடை-வெளியின் அலகாக ஆயிரம் ஆண்டுகள் கருதப்படுகிறது. மொழியியல் இடைவெளியின் கால நீளம் ஒரு அலகில் ஐந்தில் பத்து பங் காக இருந்ததெனில் ஒப்பிடப்பட்ட இரு மொழிகளும் இரண்டு வெவ்வேறு மொழிகள் என்பதனை அறியலாம். எடுத்துக் காட்டிற்கு தமிழ், மலையாளம், கன்னடம், துளு, தெலுங்கு ஆகியவை வெவ்வேறு மொழிகளாகும். மேலும் மொழியியல் இடைவெளி இரண்டுக்கும் மேற்பட்ட அலகுகளாக இருந்தால் அவை கிளைகளாகவும் உபபிரிவுகளாகவும் இணைக்கப்பட்டு

அவற்றின் தொடர்புகளை வைத்து மொத்தமான ஒன்றாகக் கருதப்படலாம். தெலுங்கிற்கும் மற்ற நான்கு மொழிகளுக்கும் உள்ள இடைவெளி இரண்டு அலகுகளுக்கும் மேற்பட்டதாகும். கன்னடத்தைப் பொறுத்தவரை மொழியியல் இடைவெளி 1.9 அலகாகும். விஜயநகரப் பேரரசு காலத்தில் கன்னடத்திற்கும் தெலுங்கிற்கும் இடையேயிருந்த தொடர்பே நான்கு மொழிகளும் சாராத தனிப் பிரிவினை சார்ந்துள்ளது.

அகராதிப் புள்ளியியலின் திறம்

அடிப்படை அகராதி பற்றிய கருத்து அனைத்து மொழியியல் வல்லுனர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். இதைப்பற்றி அறியாதிருந்தாலும் பலரால் இக்கருத்து வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. பொதுவான பரிசோதனை அட்டவணை வைத்திருக்க வேண்டும் என்ற கருத்து சொற்பொருட் கோவை முறை எந்த எண்ணத்தில் ஏற்படுத்தப்பட்டதோ அந்த எண்ணத்திற்கு மாறுபாடாய் உள்ளது. க்ரோபர் கருதியபடி, தனித்தனிக் குடும்பங்களுக்கு தனித்தனி அட்டவணைகள் இருந்தால்தான் நாம் திட்டமான முடிவுகளைப் பெறமுடியும். அதன் மூலம் நாம் நம்முடைய கோட்பாடுகளையும், விளக்கங்களையும் விரிவாக்கிக் கொள்ள முடியும். அதன் காரணமாக பலவற்றை நாம் ஆராய முடியும். குட்ஷிங்கியின் கருத்துப்படி அதற்காக நாம் அதிகப்படியானவற்றை சேர்த்துக் கொள்ளவாம். தொடர்பில்லாத, நிலப்பரப்பின் காரணமாக பிரிக்கப்பட்ட மொழிகளில் நாம் இவற்றை பயன்படுத்த முடிந்தால் நம் முடிவுகள் மதிப்புள்ளவையாக இருக்கும்.

இரண்டு இடைவெளியுள்ள மொழிகளுக்கு இடையே ஒரு தொடர்பு திடீரென்று பிரஸ்தாபிக்கப்பட்டால் நாம் உருவாக்கிய சூத்திரத்திற்கு அவை கட்டுப்படாமல் போய்விடும். அல்லது பழையச் சொற்களில் புதுச்சொற்களை விலக்குதல் காரணமாக புதுப்பிக்க நேர்ந்தாலோ மானிடவியல் காரணமாக பழஞ்சொற்களை புதுப்பிக்க நேர்ந்தாலோ அது நாம் உண்டாக்கிய சூத்திரத்திற்கு கட்டுப்படாமல் போய்விடும். இதற்கு உதாரணமாக ஒரு காலத்தில் கன்னட மொழியிடமிருந்து தெலுங்கு விலகியிருந்து பின்னர் தொடர்பு ஏற்பட்டதைக்கூறலாம்.

நூறு பொருள்களைத் தவிர சென்னைப்பல்கலைக்கழகம் திராவிட இனச்சொற்கள்-I என்ற நூலை பயன்படுத்தியுள்ளது இது இரண்டாயிரம் பொருள்களுடன் தொடங்குகையில் 1962 பொருள்கள் தமிழிலும், 1961 பொருள்கள் மலையாளத்திலும், 1368 பொருள்கள் கன்னடத்திலும், 1145 பொருள்கள் தெலுங்கிலும், 948 பொருள்கள் துளுவிலும் இருந்தன. இவை முறையே 98.10%, 84,55%, 57.25%, 47.40% என தக்கவைத்துக் கொள்ளும் சதவிகிதமாக உள்ளது. இதைப் பொறுத்தமட்டில் தென்திராவிட மொழியாகிய துளு விலகியும் தெலுங்கு மொழி நெருங்கியும் உள்ளது. இந்த விதிவிலக்கு தெலுங்கு மொழியின் தொடர்பைக் கூறுகிறது. திராவிடமொழி ஓரினச் சொற்கள் அடிப்படை பொருள்களோடு நின்றுவிடாது வழிபாடு, பண்பாடு, கட்டுதல் போன்ற பண்பாட்டு பொருளையும் குறித்து மொழி தொடர்பின் செயல்பாட்டை தெரியப்படுத்துகிறது.

இந்த விதிவிலக்குகளையெல்லாம் அகற்றிவிட்டு பார்த்தோமேயானால் இம்முறை தோராயமான கால அளவைத் தருகிறது. இந்த முறை மொழியின் வளர்ச்சியை காலக் கணிப்போடு உரைப்பதால் இது மானிடவியல் வல்லுனருக்கு பெரும் உபயோகத்தைத் தருகிறது.

"அகராதி - புள்ளியியல் ஒரு குறுக்கு வழியல்ல; அது மற்ற முறைகளையோ செய்திகளையோ அகற்றாது. ஆனால் அவற்றுடன் இணைந்தியங்கி அறிவின் நிலையான பகுதியைத் தருகிறது."

துணை நூல்கள்

Gudschinsky, S. 1956. The ABC of Lexicostatistics, Word, 12, p. 175-210.

Krober, A,L. 1597. Romance History and Glottochronology, Language, 34, P.456-57.

——— 1958. Semantic Contribution of Lexico-statistics, IJAL, 27.

Swadesh, M. 1955. Towards Greater Accuracy in Lexico-statistics Dating, IJAL, 21, P. 121-37,

மொழியியல் 9.3 & 4 (1986)

பேச்சுத்தமிழில் ஆங்கிலச் சொற்களின் ஆதிக்கம்

மு. சிவக்குமார்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

தமிழில் ஆங்கிலச் சொற்கள் எவ்வாறு பேச்சுவழக்கில் கை யாளப்படுகின்றன என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். பொதுவாக நாம் எழுத்து முறையில் ஒரு கருத்தை விளக்கும் சிறப்புத்தன்மை, பேசும்பொழுது உபயோகிப்பதில்லை. மேலும் இருவர் ஒரு கருத்தைப்பற்றி உரையாடிக்கொண்டிருக்கும் பொழுது, அவர்கள் கற்றவர்களா, இல்லையா என்று அறிந்து கொள்ளமுடியும். கல்வி கற்ற ஒருவன் தன் சக நண்பர்களுடன் பேசும்பொழுது ஆங்கிலச் சொற்களை பயன்படுத்தும் விதத்தை நாம் அறியலாம். இந்த தாக்கம் மொழிப்பற்று மூலமாக வருவ தில்லை. மாறாக அவனுடைய கல்வித்தகுதியை மற்றவர்களிடம் உயர்த்திக் காட்டவே அவ்வாறு பேசுகிறான். இதன் விளை வாக அவனுடைய தாய்மொழி செல்வாக்கு வெகுவாக குறை கின்றன. எடுத்துக்காட்டாக ஒருவன் எழுதும்பொழுது பின் பற்றும் முறையை பேசும் பொழுது கடைபிடிப்பதில்லை.

நான் கல்லூரிக்கு சென்றேன்

என்ற இந்த வாக்கியம் பேசும்பொழுது அதன் அமைப்பு திருத்தமாக, மற்றவர்களுக்கு புரியும்வண்ணம் அமைகின்றன.

எ.கா.

நான் காலேஜ்க்கு (college) போனேன்

கல்லூரி என்ற வார்த்தை தமிழ்மொழியில் புழங்கி வந்தாலும் காலேஜ் என்ற வார்த்தைத்தான் பெரும்வாரியாக பேசப் படுகின்றன. மாறாக 'நான் கல்லூரிக்கு சென்றேன்' என்றால் நம்மை சுற்றியுள்ளவர்கள் ஆச்சிரியத்துடன் வினவு கின்றனர். உனக்கு தமிழ்ப்பற்று மிகவும் அதிகரித்து விட்டதோ என்று!

தமிழ்மொழி எப்படி சீர்கெட்டு போகின்றன என்றால் அதற்த தமிழ்மக்களே முழுபொறுப்பு. கல்விகற்றவர்களும், கல்லாதவர்களும் பிறரிடம் பேசும்பொழுது ஆங்கிலச்சொற்களை திணிப்பதில் ஆர்வமாக உள்ளனர். கல்வியறிவு பெறாத ஒருவன் சூழ்நிலைக்காரணமாக சில ஆங்கிலச் சொற்களை பயன்படுத்து கிறான்.

எ.கா.

நான் சைக்கிளை (cycle) எடுத்துக்கொண்டு
பஸ்ஸ்டாண்டுக்கு (bus stand) போனேன்

இந்த வாக்கியத்தில் பிறர் புரிந்து கொள்ளும் வகையில் பொருள் அமைந்துள்ளது. மேலே கூறப்பட்ட வாக்கியத்தை கீழ்க்கண்ட வாறு கூறினால்

நான் மிதிவண்டியை எடுத்துக்கொண்டு
பேருந்து நிலையத்திற்கு சென்றேன்

இந்தவாக்கியம் தமிழ்மொழித்தான் என்றாலும் எளிதில் புரிந்து கொள்ளுமாறு அமையவில்லை.

மிதிவண்டி, புகைவண்டிநிலையம், பேருந்து நிலையம் போன்ற சொற்கள் எழுத்தளவில் மட்டுமே உபயோகப்படு கின்றன. பேச்சுமொழியில் அதற்கு ஈடாக ஆங்கிலச் சொற்களை கடன் (borrowing) பெறுகிறார்கள். இதற்குக்காரணம் அரசியல முறையே தவிர மக்களின் கவனக்குறைவு என்று கூறமுடியாது.

ஆங்கிலச்சொற்கள் எந்த விதத்தில் மக்களை கவருகின்றன என்பதை கீழ்வரும் சொல்லின் மூலமாக மக்களின் விருப்பத்தைக் காணலாம். தொலைக்காட்சி என்ற ஒரு வார்த்தையை டெலிவிஷன்(telivision) என்ற ஆங்கிலவார்த்தைக்கு ஈடாக அறிமுகப் படுத்தினார்கள். அதன் விளைவு டெலிவிஷன் என்ற சொல்லையே மக்கள் அதிகமாக பேசுகின்றனரே ஒழிய யாரும்தொலைக்காட்சி என்று கூறுவதில்லை. இதற்கு காரணம் டெலிவிஷன் என்ற சொல் இயல்பாகவும், எளிதில் பேசக்கூடியதாகவும் உள்ளன. மேலும் ஆங்கில வார்த்தைகளை பேசுவதில் மக்கள் அதிகஆர்வம் காட்டுகின்றனர். ஒரு மொழி பிறரிடம் கூறும் பொழுதும் அதனுடைய தனிச்சிறப்பு பிறர் ஏற்கும் வண்ணம் இருக்கவேண்டும். இல்லையெனில் அம்மொழியின் தனித்தன்மை குறைந்து பிறமொழிச் சொற்கள் கலக்க வாய்ப்பு உண்டு.

பேச்சுத் தமிழில் ஆங்கிலச்சொற்கள் அதிக அளவில் பயன் படுத்துவதற்கு கல்வியறிவு பெற்றவர்களே மிகுந்த அளவு பங்கு பெறுகின்றனர். இவர்கள் பேசும் ஒவ்வொரு வாக்கியத்திலும் ஆங்கிலச் சொற்களின் ஆக்கிரமிப்பு அதிகம் காணப்படுகின்றன. இந்த பழக்கம் மேலைநாட்டு நாகரிகம், பண்பாடு போன்றவைகளை நாம் பின்பற்றுவதால் வரும் விளைவுதான். ஆங்கிலச் சொற்களின் ஊடுருவல் நாளுக்குநாள் உயர்ந்து கொண்டே போகிறதேயொழிய குறைந்த பாடில்லை.

கல்வி கற்றவர்களின் பேச்சிலிருந்து சில வாக்கியங்கள்

நான் ஹோட்டலுக்கு (hotel) போனேன்
நான் ஹாஷ்டலுக்கு (hostel) போனேன்

அவர்கள் போஸ்ட் ஆபீஸ்க்கு (post office) போய் லட்டர் (letter) வாங்கி வந்தார்கள்

எந்த ஒரு தமிழ்மகனும் சிற்றுண்டிச்சாலை, விடுதி, அஞ்சல் நிலையம் என்று பேச்சுத் தமிழில் கூறுவதில்லை.

மொழிதாவல் (code switching) பெரும்பாலும் கல்வியறிவு உள்ளவர்களிடம் மிகுந்து காணப்படுகிறது. கல்வியறிவற்றவர்

கள் தன்னையறியாமல் சில ஆங்கிலச் சொற்களை பயன்படுத்து கிறார்கள். இந்நிலைக்கு அவர்கள் தங்கியுள்ள இடம் மற்றும் சூழ்நிலையே காரணமாகும். தமிழ் மொழியை இரண்டாக பிரித்து செந்தமிழ் என்றும், கொச்சைத்தமிழ் என்றும் முன்னோர்கள் கூறியுள்ளார்கள். செந்தமிழ் சொற்களை (இலக்கியமொழி) பெரும்பாலும் வானொலி, இலக்கியமன்றம், கருத்தரங்கு, செய்திதாள்கள் போன்றவற்றில் மட்டுமே நாம் காணமுடியும். கொச்சைமொழி கல்வியற்றவர்கள் பேசக்கூடிய மொழியாகக் கருதப்படுகிறது.

நாகரிகமும், பண்பாடும் பிறமொழிகள் மக்களிடையே பரவ ஒரு கருவியாக இருக்கின்றன என்று சமூகவியலாரும், மானிடவியலாரும் எண்ணுகிறார்கள். இறுதியாக மொழி தாவலின் மூலம் ஒருவன் தன்னுடைய தாய்மொழியில் அதிக சொற்கள் அறிய வாய்ப்பில்லாமல் போகிறது. அதுபோல அடுத்தமொழியிலும் குறைந்த சொற்களே கையாளப்படு கின்றன. இந்நிலைமை தனிமொழியாளருக்கு ஏற்படுவதில்லை.

துணை நூல்கள்

சீனிவாசவர்மா, கோ. 1980. இருமொழியம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

கருணாகரன், கி. 1975. சமுதாய மொழியியல் அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

Weinreich, U. 1954. Languages in contact Mouton: The Hague.

PHONETICS SOCIETY OF INDIA

(Registered No. 106/86-87, under Societies Act)

716, 16th Main, Saraswathipuram

MYSORE-570 009

INDIA

Dear Sir,

With a view to exchange ideas, share research results for mutual benefit and to promote phonetic studies of Indian languages, Phonetics Society of India (PSI) has been organised and got registered at Mysore (Regd. No. 106/86-87) under the Societies Act. The Linguists, Scientists and Engineers interested in phonetics can enroll themselves as members of the PSI.

The PSI has the following objectives

1. To promote indepth phonetic studies of Indian languages and to discuss theoretical issues

2. To promote friendly and fruitful relations among phoneticians of India and other countries

3. To arrange seminars, workshops and conference, to undertake research projects and to conduct training programmers

4. To bring out a journal "Phonetic Studies" annually in July of every year

Membership of the PSI: Donors: Rs. 500 (for Indians), US$ 125 (or equivalent for foreigners).

Life Members: Rs. 200 (for Indians to be paid in lumpsum or in 2, 3, or 4 instalments to be completed in a year) or US $ 50 (or equivalent for foreigners).

Ordinary Members: Rs. 20 per year or US $ 10 (or equivalent) for foreigners.

The Donors and Life members would receive the Journal free throughout their life and the ordinary members would receive only for the year of their subscription. The members would also get concessions during scholarly meets and while buying the publications of the PSI.

Subscription rates for the non-members

Institutions: Rs. 50 or US $ 25 (or equivalentrpe) year
Individuals: Rs. 20 or US $ 10 (or equivalent) per year

Booksellers and subscription agents will get 20% commission on the Institutional subscriptions.

The Inaugural Volume of the Journal: "PHONETIC STUDIES" will be published in July 1987 with papers from national and international scholars.

Those who are interested in the membership or subscription may contact the Secretary, Phonetics Society of India, 716,16th Main, Saraswathipuram, Mysore - 570 009.

உறுப்பினர்களுக்கு

தமிழ் இலக்கணம், மொழியியல் தொடர்பான ஆய்வுக் டுரைகள் மொழியியலில் வெளியிடுவதற்கு அனுப்ப வேண்டு றோம். கட்டுரையாளர்களுக்கு இருபத்தைந்து படிகள் prints) இலவசமாக வழங்கப்பெறும். கட்டுரைகளைத் ளிவாகத் தட்டச்சு (type) செய்து இரண்டுபடிகள் அனுப் தல் வேண்டும். தங்கள் நண்பர்களையும் மொழியியல் கழக றுப்பினர்களாக்கி மொழியியல் வளர்ச்சிக்கு உதவ வேண்டு றோம். கட்டுரைகள் மொழியியல் இதழில் இருபத்தைந்து க்கங்களுக்கு மிகாமலிருக்கும்படி அனுப்பக் கேட்டுக்கொள் றோம்.

மொழியியல் இதழ் வெளியீடு பற்றிய குறிப்பு

வெளியீட்டாளர் & ஆசிரியர்	டாக்டர் ச. அகத்தியலிங்கம், செயலாளர், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், மொழியியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர் - 608 002.
சிட்டோர்	சிவகாமி அச்சகம், அண்ணாமலைநகர் - 608 002.

மொழியியல்

தொகுதி 9 ஜனவரி - ஜுன் எண் 3 & 4

1986

உள்ளுறை

இக்காலத் தமிழில் கூட்டுவினைகள் 1—42

முத்துச்சண்முகன்

மொழியும் ஒலியும்: உயிரல்லா ஒலிகள் 43—53

க. முருகையன்

தமிழ்த் தொடரனில் உள்வினைகள் 55—63

இரா. கோதண்டராமன்

விவசாயத் தொழில் கலைச்சொற்கள் – ஓர் ஒப்பாய்வு 65—77

மு. முருகேசன்

மொழியியலும் மொழிப்பொதுமைகளும் 79—90

கி அரங்கன்

தமிழில் புதுச்சொல்லாக்கம் 91—116

கி. கருணாகரன் & திருமதி வ. ஜெயா

மொழியியலும் இடப்பெயர் ஆய்வும் 117—129

எஸ். ஆரோக்கிய நாதன்

அறிவியல் தமிழ்ப் பாடம் 131—14

செ. வை. சண்முகம்

தொல்காப்பியரின் இயற்பெயர் கோட்பாடு 141—1

ஏ. ஆதித்தன்

பழந்தமிழில் கால எச்சங்கள் 155—1

ச. அகத்தியலிங்கம்

திராவிட மொழிகளின் கால அட்டவணை:
ஒரு புள்ளியியல் - அகராதி ரீதியான ஆய்வு 197—2

தெ. மீ. காமேசுவரி

பேச்சுத் தமிழில் ஆங்கிலச் சொற்களின் ஆதிக்கம் 205—20

மு. சிவக்குமார்